
நான் உனை
நீங்க மாட்டேன்
த்யா இராஜ்குமார்
நான் உனை நீங்க மாட்டேன் * சத்யா இராஜ்குமார்
நான் உனை
நீங்க மாட்டேன்
சத்யா இராஜ்குமார்

# நான் உனை நீங்க மாட்டேன்



## 1

''பாட்டி!''

''வாடா தங்கம், என்ன இன்னும் காணமே, தாத்தாவ பஸ் ஸ்டேண்ட் வரைக்கும் வந்து பாக்கச் சொல்ல லாமான்னு இப்பத்தான் நினைச்சேன்.''

''ஏன், நானென்ன குட்டிப் பாப்பாவா? எனக்கே வரத் தெரியாதா?''

''அது தெரியும்மா. ஆனாலும் ஒரு கலக்கம் தான்.''

''ஆமாம், போங்க பாட்டி.''

''சரி. போய் கைகால் முகம் கழுவிட்டு சாப்பிட வா.''

''ம்கூம், பஸ் நெரிசல்ல அடிச்சு புடிச்சு வந்ததுக்கு ஒரே வேர்வ. நான் போய்க் குளிச்சுட்டே வந்துட்றேன்.''

''சரிதான். சீக்கிரம் வா.''

''இன்னைக்கென்ன ஸ்பெஷல்?''

''கோதுமை அடையும், வெங்காயச் சட்னியும்.''

''வாவ், இப்பவே சாப்புட்றேன் பாட்டி. அப்புறமா வேணும்னா குளிச்சுக்கறேன்.''

''ம் உத, முதல்ல போய்க் குளிச்சுட்டு வா.''

''ம்க்கும், எங்க அப்பா கூடவே இருந்திருப்பேன். அத விட்டுட்டு இங்க வந்து அதுவும் உங்ககிட்ட கஷ்டப் பட்டுட்டிருக்...''

''என்னடி, என்ன முனகிட்டிருக்க?''

''இல்ல, ரொம்ப நல்ல பாட்டி நமக்குக் கிடைச்சிருக் காங்க, நான் ரொம்ப லக்கின்னு சொன்னேன்.''

''நீதான? சொல்லியிருப்ப. சும்மாவே ஒண்ணு கூட சாப்புட மாட்ட. இனி இந்த வேர்வையோட உக்காந்தா அதயும் சாப்புடாம ஓடிடுவேன்னு குளிச்சுட்டு வரச் சொன்னா...''

''சரி பாட்டி, விடுங்க. இருந்திருந்து நீங்க ஏதாவது தப்பா சொல்லுவீங்களா, அது எனக்குத் தெரியாதா?''

''இப்ப எதுக்குடி காக்கா புடிக்கற?''

''பாட்டி...''

''ம்.''

''அது வந்து...''

''என்ன வந்து? சொல்லு ரதி, எவ்வளவு நேரம் என் வாயையே பாத்துட்டிருக்கறது? எனக்குச் செய்ய வேல நிறைய இருக்கு...''

''நான் அம்சவள்ளி கூடப் படத்துக்குப் போய்ட்டு வரட்டுமா?''



''படத்துக்கா?''

''ம், ப்ளீஸ் பாட்டி ப்ளீஸ்...''

''ஏய் இரு, எங்க அந்த டெண்ட்டு கொட்டாய்க்கா?''

''ம், வேறெங்க போகப் போறேன்? அதுவும் இங்க பக்கத்துல தான இருக்கு...''

''நீ போற போக்கே ஒண்ணும் எனக்குச் சரியாப் படல ரதி.''

''ஏன், இந்தப் பட்டிக்காட்டுல இருந்துட்டு நானும் தான் வேற எங்க போறேனாம்? அஞ்சு நிமிஷ வாக்கிங்ல இருக்கற தியேட்டருக்கு...''

''அத தியேட்டர்னு சொல்லாத.''

''ம், பின்ன என்னன்னு சொல்றது?''

''அதுதான் சொன்னேனே, டெண்ட் கொ...''

''இப்ப அதுதான் ரொம்ப முக்கியமா பாட்டி?''

''ஆமா, எனக்கு அதுதான் முக்கியம்.''

''அங்கெல்லாம் பொறுக்கிப் பசங்க தான் வருவாங்க, பீடியப் பத்த வெச்சுக்கிட்டு கண்ட வார்த்தையப் பேசிக் கிட்டு...''

''ஏன் சிட்டிக்குப் போனா மட்டும் அந்த மாதிரி ஆளுங்க வர மாட்டாங்களாக்கும்? அங்க சென்னை லயும் தான்...''

''போகக் கூடாதுன்னா போகக் கூடாது. அவ்வளவு தான்.''

பாட்டி மங்களம் ஒரேயடியாகச் சொல்லி விட்டிருந்த தில் மிகவும் ஆசையாக இருந்த ரதியின் முகம் வாடி விட்டிருந்தது.

''என்ன, இப்ப ஏன் முகத்தத் தூக்கி வெச்சுட்டிருக்க?''

''அதெல்லாமில்லையே.''

''சரி, இன்னைக்கு ஒரு நாளைக்கு வேணும்னாப் போய்ட்டு வா. ஆனா இனிமேல் கூடாது.''

''ம்கூம், மாட்டேன்.''

''சரிசரி, வந்து சாப்புடு. போய்ட்டு வருவியாம்.''

''வாவ், தேங்க்யூ பாட்டி.''

''ஏய் மெதுவாடி மெதுவா, எதுக்கு இப்படித் துள்ளிக் குதிக்கற? பொம்பளப் புள்ளைக்கு அடக்...''

''போதும் பாட்டி.''

''அச்சச்சோ! அதுக்குள்ள என் ரதிக் குட்டிக்குக் கோபம் வந்துடுச்சா?''

''நீங்க பேசாதீங்க.''

''ஏம்மா?''

''என்ன பேர் வெச்சிருக்கீங்க? பெரிய ரதி தேவின்னு நினைப்பான்னு என் ஃப்ரண்ட்ஸ் எல்லாரும் என்னக் கிண்டல் பண்றாங்க.''

''ஏன் உன் பேருக்கு என்ன குறைவு?''

''ம், பட்டிக்காடு மாதிரியிருக்கு. சரிதான். நீங்க உங்க லெவலுக்குத் தான வெப்பீங்க?''

சரியாக அதே நேரம் வீட்டிற்குள் வந்த தாத்தா கருணாகரன், ''என்ன மங்களம், ஏன் என் பேத்திகிட்ட சண்டைக்கு நிக்கற?'' என்று கேட்டார்.

''யாரு, நானா?''



பாட்டி மங்களம் கேட்க, ''பின்ன யாரு, நானா?'' என்று ஆதங்கத்துடன் கேட்டாள் ரதி.

''என்னடா தங்கம் சொல்லு?''

தாத்தாவின் கம்பீரமான குரலில் தெரிந்த கனிவு ரதியைப் புன்னகைக்க வைத்திருந்தது.

''தாத்தா.''

''ம், சொல்லுமா.''

''இந்தப் பாட்டி மேல எனக்குக் கோபம் தாத்தா.''

''ம், நீ அதிர்ஷ்டக்காரி. வெளிய சொல்ற.''

அப்படிச் சொன்ன கணவனை மங்களம் பார்க்க, ''என்ன பேரு தாத்தா இந்தப் பாட்டி எனக்கு வெச்சிருக்காங்க?'' என்றாள். ''நீங்களாவது வேண்டாம்னு சொல்லியிருக்க வேண்டாமா?''

''ஏம்மா, பேருக்கென்ன? அப்படியே உன் அழகுக்குப் பொருத்தமா தேடினாலும் கிடைக்குமா இப்படியொரு பேரு?''

''நீங்களுமா தாத்தா?''

''உன் தாத்தான்னு இல்லடாம்மா, நீ யார் கிட்டப் போய்க் கேட்டாலும் உன் பேரப் பிரமாதம்னு தான் சொல்லுவாங்க.''

''ஆமாம் போங்க.''

''அட ஆமாம் கண்ணம்மா!'' என்று பாட்டி மங்களமும் சொல்ல, ''க்கும். இதுக்கெல்லாம் ஒண்ணும் குறைவில்ல போங்க!'' என்றாள் ரதி.

''அட ஆமாம், ரதிக்குட்டி, நீ பொறந்தப்ப வெள்ள வெளேர்னு தல நிறைய முடியோட அப்பிடியே ரதி மாதிரியே இருந்தியா...''

''அதனால ரதின்னு பேர் வெச்சுட்டிங்கன்னு நீங்க ரெண்டு பேரும் குறைஞ்சது பல நூறு தடவ சொல்லிட்டிங்க, எனக்கும் ஞாபகமிருக்கு. விடுங்க.''

''அப்ப சரிதான்,'' என்று கருணாகரன் சிரிக்க, ''அப்புறம் இவ சொல்றதக் கேட்டிங்களா?'' என்று கணவனைப் பார்த்தார் மங்களம்.

''என்ன?'' என்று அவர் மனைவியைப் பார்க்க, ''ஒண்ணுமில்ல தாத்தா. சினிமாவுக்குப் போகப் போறேன். பாட்டி அதத்தான் சொல்றாங்க!'' என்றாள் ரதி.

''எங்க?''

''நம்மூரு தியேட்டருக்குத் தான்.''

''ஓ, அந்தக் கொட்டா...''

''என்ன தாத்தா நீங்களும்?''

''இருக்கறதைத் தானம்மா சொல்ல முடியும்?''

''இல்ல, ரொம்பவும் குறைச்சுக் கேவலமா சொல்றீங்க?''

''சரி. தியேட்டர் தான். ஒத்துக்கறேன். உங்கப்பாவுக்கு முதல்லயே நீ இங்கிருக்கறது புடிக்கல, எப்படா வந்து கூட்டிட்டுப் போயிடலாம்னு காத்துட்டிருக்கான். இனி நீ இப்படியெல்லாம் செய்யறது தெரிஞ்சா சும்மா இருப்பானா? இல்ல, எங்களத் தான் சும்மா விடுவானா?''

''டாடிக்கு இதையெல்லாம் போய் யார் தாத்தா சொல்லப் போறாங்க?''

''ஏன் ஊர்ல நாலு பேர் பாப்பாங்கதான? சொல்ல மாட்டாங்களா?''



''அதெல்லாம் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. பாட்டி, பயப்படாதீங்க. அவங்கவங்களுக்கு அவங்கவங்க வேல. எந்நேரமும் மத்தவங்களப் பத்தியேவா நினைச்சுட்டிருக்கப் போறாங்க?''

''பின்ன நீ நம்ம ஊர் ஜனங்களப் பத்தி என்ன நினைச்சுட்டிருக்க?'' என்று தொண்டை வரை வந்து விட்டிருந்த வார்த்தைகளை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டார் மங்களம்.

ஏற்கெனவே பேத்தியின் அழகிற்கு ஊரில் அவளைப் பற்றிப் பேசாதவர்கள் குறைவு. அப்படியிருக்கும் போது வெறும் வாய்க்கு அவலும் கிடைத்து விட்டால் சும்மா விடுவார்களா என்ன?

''என்ன பாட்டி இவ்வளவு யோசன?''

''ஒண்ணுமில்லடியம்மா.''

''அப்புறம் ரதிம்மா...''

''என்ன தாத்தா?''

''வர்ற ஞாயித்துக் கிழம உங்க அப்பா வர்றதா போன் பண்ணினார்.''

''அப்படியா!''

''ஆமாம்மா, காலைலதான் பேசினான்.''

''ஐ, ஜாலி.''

பேத்தியின் சந்தோஷத்தை முதியவர்கள் இருவரும் ஏக்கத்துடன் பார்க்க, அதைக் கவனித்து விட்டிருந்த ரதி என்னவென்று விசாரித்தாள்.

''அப்ப நீ படிப்ப முடிச்சதும் ஊருக்கே போயிடுவ தான ரதிம்மா?''

பாட்டி மங்களம் கேட்க, ''ஆமாம். பின்ன இங்கயா இருப்பேன்?'' என்றாள்.

''அது சரிதான். உங்கப்பாவோட ஒப்பிடும்போது என்னதான் இருந்தாலும் நாங்கெல்லாம் மூணாவது மனுஷங்க தான?''

தாத்தாவின் ஆதங்கத்தைப் பார்த்த ரதிக்கு மிகவும் சங்கடமாகி விட்டிருந்தது.

''என்ன தாத்தா நீங்க?'' என்று சமாதானப் படுத்தி னாள். பாட்டியையும்.

''முடிஞ்ச அளவுக்கு இங்க இருக்கத்தான் பாப்பேன், அதுக்கும் மேல அப்பா கம்பல் பண்ணிக் கூட்டிட்டுப் போய்ட்டாலும் வாரத்துக்கு ஒரு முறை வந்துட மாட் டேன்?''

''சரிதான் ரதிம்மா. அப்படியே செய். அப்பதான் உங் கப்பன் இதென்னடா வம்பாப் போச்சு. பிஸினஸ விட் டுட்டு வாராவாரம் இதொரு தலைவலின்னு இங்கியே விட்டுடுவான்!'' என்றார் கருணாகரன்.

''வாவ் தாத்தா! நீங்க இருந்தாலும் பெரிய ஆளுதான்.''

''பின்ன உங்கப்பனையே பெத்தவனாச்சே.''

தாத்தாவின் கோபத்தை ரதியால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

பாவம், தாத்தாவுக்கும், பாட்டிக்கும் தான் வேறு யார் இருக்கிறார்கள் என்று பாவமாகத்தான் இருந்தது.

ஆனாலும் அவள் அதை வெளிக்காட்டிக் கொள்ள வில்லை.

ஏனென்றால் தாத்தாவின் குணம் அப்படி.



அப்படியெல்லாம் யாருடைய தயவும் எனக்குத் தேவையில்லையென்று திருப்பிக் கொள்வார்.

ஆனாலும் அன்பே உருவானவர்.

கோபமுள்ள இடத்தில் தான் குணமும் இருக்கு மென்று பழமொழியே இருக்கிறதே.

ஆனாலும் தந்தையிடம் தாத்தாவின் வார்த்தைகள் அவ்வளவாக எடுபடுவதில்லையே ஏன் என்றும் ரதியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

வேறென்ன, தந்தை குணத்தில் தாத்தாவையும் மிஞ்சி விடுபவராயிற்றே என்றும்.

''சரி பாட்டி. நான் போய்க் குளிச்சுட்டு வந்துட்றேன்.''

''சீக்கிரம் வா, டிஃபனத் தயாரா வெக்கறேன்.''

''வேண்டாம் பாட்டி, காபி மட்டும் போதும், டிபன் நைட்டு வந்து சாப்புட்டுக்கறேன்.''

''அது சரி, மதியமும் பேருக்குக் கொறிச்சுட்டு வந் திருப்ப...''

''பசிச்சா கேக்க மாட்டேனா பாட்டி? காபி மட்டும் போதும். அவ்வளவுதான். பத்து நிமிஷத்துல வந்துடு வேன். ரெடியா வைங்க.''

''சரி சரி போ, லேட்டாயிடுச்சுன்னு அப்புறம் அதை யும் வேண்டாம்னு சொல்லிடாத.''

''சரி பாட்டி,'' என்று விட்டுக் குளிப்பதற்காகச் சென் றாள் ரதி.

மங்களம், கருணாகரனுக்கு மூன்று பிள்ளைகள்.

மூவரும் ஆண்கள்.

அதில் இளையவர்கள் இருவரும் குடும்பத்துடன் வெளிநாடுகளில் செட்டிலாகி விட்டிருக்க, மூத்தவர் ரகுநாத்துடன் அவரைப் பெற்றவர்கள் இருவரும் வசித்து வந்தார்கள்.

ரகுநாத் தம்பதிக்குத் திருமணமாகியும் பத்து வருடங்கள் வரை குழந்தை பாக்கியம் கிடைத்திருக்கவில்லை.

பத்து வருடங்களுக்குப் பிறகு ஆண் பிள்ளை. பெயர் ரகுநந்தன். அதற்குப் பிறகு ஐந்து வருடங்கள் கழித்துப் பெண் குழந்தை ரதி.

ஆனால் ரதி தாயின் வயிற்றிலிருந்து இந்த உலகத்திற்கு வந்த பொழுது அவளுடைய தாய் இந்த உலகத்தை விட்டே சென்று விட்டிருந்தாள்.

பிரசவத்தில் ஏதோ கோளாறு.

அப்பொழுது பேத்தியை எடுத்துக் கொண்டு பெரியவர்கள் இருவரும் அதாவது ரகுநாத்தின் தாயும், தந்தையும் அவர்களுடைய சொந்தக் கிராமத்திற்கு வந்து விட்டவர்கள் தான்.

இருபது வருடங்கள் ஓடிப்போய் விட்டிருந்தன.

ரதியும் வளர்ந்து பெரியவளானாள்.

அதே சமயம் ரகுநாத் தனது பிள்ளை ரகுநந்தனுடன் சென்னையில் வசித்து வந்தார்.

ரகுநந்தன் பெரும்பாலும் தங்கிப் படித்தது அனைத்துமே விடுதியில் என்பதால் ரகுநாத் மட்டும் மாதத்திற்கொரு முறை பெற்றவர்களையும், மகள் ரதியையும் பார்க்கக் கிராமத்திற்கு வந்து செல்வார்.



அவருடையது சொந்தத் தொழில்.

மிகவும் நன்றாகப் போய்க் கொண்டிருந்தது.

அந்த அளவிற்கு அரும் பாடுபட்டு அவர் தொழிலை நன்கு வளர்த்திருந்தார்.

அதனால் பணத்திற்குப் பிரச்சனையில்லை.

பெற்றவர்களுக்கும், மகளுக்கும் கிராமத்திற்கு வந்து போகும் போதெல்லாம் கணக்குப் பார்க்காமல் நிறையச் செய்வார்.

ஆனால் அவருக்கும் மனதிற்குள் ஒரு குறை. அதுவும் கடந்த சில வருடங்களாகச் சற்று அதிகமாகவே.

மகனும் பெரும்பாலும் ஹாஸ்டல், வெளியூர் என்று சென்று தங்கி விட்டிருக்க, நாம் மட்டும் ஏன் இப்படித் தனியாகச் சிரமப்பட வேண்டும் என்பதே அது.

பேசாமல் பெற்றவர்களையும், மகளையும் உடன் அழைத்து வந்து வைத்துக் கொண்டால் என்னவென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

அந்த எண்ணமே இப்பொழுது நாளுக்கு நாள் வலுப் பெற்று விட்டிருக்க, மகளின் கல்லூரிப் படிப்பு முடிவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்.

மீதமிருக்கும் மகளின் ஒரு வருடக் கல்லூரிப் படிப்பும் முடியும் தருவாய்க்கு வந்து விட்டிருந்தது.

இன்னும் சில மாதங்களே என்னும் நிலையில், தனது விருப்பத்தைப் பெற்றவர்களிடம் தெரிவித்தார் ரகுநாத்.

ஆனால் மகனின் மனதை அறிந்து கொண்ட பெரியவர்களோ ஆரம்பத்திலேயே அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டிருந்தனர்.

இனி இந்த வயதான காலத்தில் நகரத்தில் வந்து வசிப்பது சிரமமென்று விட்டிருந்தனர்.

ஏன் அப்படியொரு எண்ணம் இன்னும் உன் மனதிற்குள் இருந்தால், அதை அடியோடு விட்டு விடு என்றும்.

அதோடு எங்களுக்கும் கிராமத்தில் விவசாயத் தொழில் இருக்கிறது. அதை அப்படி அப்படியே போட்டு விட்டு எங்களால் வாரக் கணக்கில் கூட வந்து தங்க முடியாது என்றும்.

அப்படியிருக்கும்போது நாங்கள் நிரந்தரமாக வந்து தங்குவோமென்று நினைத்துக் கூடப் பார்க்காதே என்று விட்டிருந்தனர்.

பெற்றவர்கள் அப்படி ஒரேயடியாகச் சொல்லி விட்டிருந்தது ரகுநாத்திற்கு மிகுந்த கோபத்தை வரவழைத்து விட்டிருந்தது.

நீங்கள் சொல்வதும் சரிதான். அவரவர்கள் அவரவர்களுடைய இடத்தில் தான் இருக்க வேண்டும். நானும் எனது மகளை என்னுடனே அழைத்துச் சென்று விடுகிறேன் என்று விட்டிருந்தார்.

இப்படி இவர்கள் இருவருக்கும் மத்தியில் கடைசியில் சிக்கித் தவித்துக் கொண்டிருப்பது ரதி மட்டுமே.

நன்கு யோசித்துப் பார்த்ததில் ரதிக்கும் தந்தையின் விருப்பத்தில் நியாயமிருப்பதாகத் தான் தோன்றியது.

பாவம், எத்தனை வருடங்களைத் தனிமையிலேயே கழித்து விட்டிருக்கிறார் தந்தை என்றிருந்தது.

தனது தந்தையைப் பொறுத்தவரை அவர் எப்பொழுதுமே பொறுப்புகளைத் தட்டிக் கழித்து விடவோ, மற்றவர்கள் தலையில் கட்டி விட்டுத் தான் நிம்மதியாக இருந்து விடலாமென்றோ நினைத்தவரல்ல என்பதும்.



தந்தையும் ஒரு தவறைச் செய்து விட்டிருக்கிறார் என்றால், அவர் தனது பெரும்பான்மை நேரத்தை எப்பொழுதுமே தொழிலில் கழித்து விட்டிருக்கிறார் என்பது மட்டுமே.

அப்படியிருந்திருக்காமல் இடையிடையே தன்னையும் வருடக் கணக்கில் ஊருக்கு அழைத்துப் போய் வைத்துக் கொண்டிருந்திருந்தால் இந்தத் தாத்தா பாட்டிக்கும் கொஞ்சமாவது தந்தையின் அருமை புரிந்திருக்கும் என்பதும்.

அந்த மாதிரி செய்யாமல் பாவம் அவருடைய பெற்றவர்கள் என்று தந்தை பார்த்ததற்குக் கடைசியில் இப்படி வந்து முடிந்திருக்கிறதே என்றும்.

இப்படியெல்லாம் யோசித்து யோசித்துத் தன்னைத் தானே குழப்பிக் கொண்ட பின் கடைசியில், சரிதான் பெரியவர்கள் அவர்களுடைய நிலையிலிருந்து யோசித்து எதையாவது செய்யட்டும், நமக்கென்ன என்று விட்டு விட்டிருந்தாள்.

ஆனாலும் பாவம் தந்தை, முன்னைக்கு இப்பொழுது சற்று மெலிந்து கூடப் போய் விட்டாரோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.



## 2

"வா ரகு."

மகன் ரகுநாத் காரிலிருந்து இறங்க, பெற்றவர்கள் இருவரும் வாசல் வரை வந்து சந்தோஷமாக வரவேற்றனர்.

''எப்படியிருக்கீங்கமா?''

''ரொம்ப நல்லார்க்கோம்பா. நீ எப்படியிருக்க?''

கருணாகரன் கேட்க, ''நல்லார்க்கேன்பா!'' என்றார் ரகுநாத்.

''ரதி எங்க?''

''இந்நேர வரைக்கும் உனக்காக வாசல்லையே காத்துட்டிருந்துட்டு இப்பதான் பின்னாடி எங்கயோ போனா. அப்புறம் நந்து எப்ப வந்தான்? நல்லார்க்கானா?''

''ஆமாம்மா. அடுத்த வாரம் சென்னைக்கு வர்றான். எல்லாரையும் பாத்து எவ்வளவு நாளாச்சுப்பான்னு சொல்லிட்டே இருந்தான்.''

''எங்களுக்கும் அவன் கண்ணுக்குள்ளேயே தான் இருக்கான். அப்படித்தான் வந்து இந்தக் கிழங்கள ஒரு முறை அவனையும் பாத்துட்டுப் போகச் சொல்றது.''

''என்னப்பா நீங்க, வருவான்!'' என்றவர், ''அப்புறம் விவசாயமெல்லாம் பரவாயில்லையா?'' என்றார்.

''ம், அதெல்லாம் போகுது...''

''வாவ் டாடி!''

''வாடா செல்லம், எப்படியிருக்க?''

''நான் ஃபைன் டாடி. நீங்க எப்படியிருக்கீங்க? ஏன் இப்படி மெலிஞ்சுட்டிங்க? உடம்புக்கெல்லாம் ஒன்னும் பிரச்சனையில்லையே?''



''ஒவ்வொன்னாக் கேட்டா பதில் சொல்லலாம் தான். இத்தன கேள்விகளையும் ஒன்னாக் கேட்டா டாடிக்கு மறந்து போயிடாதா?''

அதற்குள் தந்தையின் அருகில் அமர்ந்திருந்த ரதி, ''காலையிலிருந்து எவ்வளவு நேரம் உங்களுக்காக வாசல்லையே உக்காந்துட்டிருந்தேன் தெரியுமா டாடி?'' என்று செல்லம் கொண்டாடினாள்.

''அப்படியா செல்லம். எனக்கும் வழியெல்லாம் உன்னோட ஞாபகம் தான். இன்னும் கொஞ்சம் நேரத்துலயே கிளம்பாமப் போனோமேன்னு இருந்தது.''

''பாவம் டாடி நீங்க. பேசாம நம்ம கம்பெனி டிரைவர கார ஓட்டச் சொல்லி நீங்க ஜாலியா உக்காந்துட்டு வந்திருக்கலாமே.''

''சும்மா உக்காந்துட்டு வர்றது தாம்மா கஷ்டம். அப்புறம் உன் படிப்பெல்லாம் எப்படிப் போய்ட்டிருக்கு?''

''நல்லாப் போகுது டாடி. உங்க பிஸினஸ்?''

''அதுக்கென்ன கண்ணம்மா? அப்புறம் சாப்டியா?''

''ம், நீங்க?''

''இல்ல, உங்க பாட்டி கையால சாப்புட்லாம்னு வந்துட்டேன்.''

''அச்சச்சோ! இன்னுமா நீங்க சாப்புட்ல?''

அதே நேரம், ''இதோ டிஃபன் தயார்!'' என்று பாட்டி அனைத்தையும் கொண்டு வந்து முன்னறையில் டேபிளின் மீது வைக்க, தந்தையை அமர வைத்து ஆசையாகப் பரிமாறினாள் ரதி.

''என்ன டாடி சாப்புட்றீங்க? இன்னும் கொஞ்சம் வெச்சுக்கோங்க.''

தந்தையும், மகளும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்ட அன்பைப் பார்த்த பெரியவர்களுக்கும் மனம் உருகிப் போய் விட்டிருந்தது.

பேத்தியே சொன்னதைப் போல மகன் ஒரு சுற்று மெலிந் திருந்ததும் அவர்களுடைய கண்களில் படத் தவறி யிருக்கவில்லை.

பாவம் இத்தனை பேரும் இருந்தும் கூட அருகில் சொந் தங்களென்று யாருமில்லாமல் தனிமையில் வாடுகிறானே என்றும்.

''ரதி சொல்ற மாதிரி என்னத்தப்பா சாப்புட்ற? இன் னும் கொஞ்சம் வெச்சுக்கோ!'' என்று பாட்டியும் வந்து தனது தந்தைக்குப் பரிமாற, ''அதான, விடாதீங்க பாட்டி!'' என்றாள் ரதி.

''ரொம்ப தூரம் ட்ராவல் பண்ணிட்டு வந்ததுல ஒரு மாதிரியா இருக்குமா. விடுங்க. மதியம் ஒரு புடி புடிச் சுட்றேன்!'' என்று ரகுநாத் எழுந்து விட்டிருக்க, ''சொல் லுங்க டாடி. உடம்புக்கென்ன?'' என்று மீண்டுமொரு முறையும் கேட்டாள் ரதி.

''ஒண்ணுமில்லமா. விடு.''

''ம்கூம். அப்படியெல்லாம் விட முடியாது. நீங்க உண் மையைச் சொல்லுங்க.''

''வேறென்ன, வேலைக்காரங்க சமைக்கறத. அதுவும் தனியா நான் ஒருத்தனே சாப்பிட வேண்டியிருக்கறதுல சாப்பாடே கொஞ்சம் குறைஞ்சு போச்சு. அவ்வளவு தான்,'' என்றார்.

அதைச் சொல்லும் போது அவருடைய வார்த்தைகளில் தெரிந்த ஒருவித வலி ரதிக்கு எப்படியோ, மகனைப் பெற்றவர்களுக்கு நன்றாகவே புரிந்தது.



''சொந்த பந்தம் எல்லாம் கூட இருக்கணுங்கறது தான் என்னோட ஆசை. ஆனா நானொருத்தன் ஆசைப்பட்டு என்ன பலன்? அவனுங்க ரெண்டு பேர் மாதிரியும் மனசக் கல்லாக்கிக்க முடியாம தவிச்சுட்டிருக்கேன்.''

மகன் கட்டாயப்படுத்திக் கேட்டிருந்தார். எப்படியோ, ஆனால் அவன் விரக்தியுடன் சொன்ன அந்த வார்த்தை களில் நெஞ்சிலேயே அடி வாங்கியதைப் போலப் பெற்ற வர்கள் இருவரும் துடித்துப் போனார்கள்.

முக்கியமாகக் கருணாகரன்.

''பேத்தி படிப்பு முடியட்டும் ரகு. நாங்க மூணு பேரும் அங்க சென்னைக்கே வந்துட்றோம்,'' என்று சொல்லியே விட்டிருந்தார்.

அப்படிச் சொன்னவரை மங்களமும், ரதியும் நம்ப முடியாத ஆச்சரியத்துடன் பார்க்க, தானும் நிமிர்ந்து தந்தையைப் பார்த்தார் ரகுநாத்.

''என்னப்பா நம்ப முடியலையா? நீ எங்களுக்காக எவ்வளவோ தியாகம் பண்ணியிருக்கும்போது நாங்க இதக்கூட செய்யலேன்னா அப்புறம் மனு...''

''பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்கப்பா.''

''அப்ப நீங்க உண்மையாதான் சொல்றீங்களா? என்னால நம்பவே முடியலயே...'' என்று கணவனைப் பார்த்துக் கேட்டார் மங்களம்.

''அட என்ன பாட்டி நீங்க? இன்னுமா சந்தேகம் உங்களுக்கு?''

''ஆமாம்மா. ஒண்ணும் புரியாத முட்டாளா இருந்த எனக்குச் செருப்பாலடிச்ச மாதிரி புரிய வெச்ச உம் மக

னுக்கு நான் நன்றிகூடச் சொல்லக் கடமைப்பட்டிருக்கேன்...''

''போதும்பா!'' என்ற ரகுநாத், ''ஆனாலும் ஒண்ணும் அவசரமில்ல. ஒரு தடவைக்கு நாலு தடவ கூட யோசிச்சுக்கங்க. ஏன் சொல்றேன்னா எனனால யாரும் சிரமப் படக் கூடாது. அதுல எனக்குச் சம்மதமில்ல.''

''அட என்ன ரகு நீ, இப்பவாவது உங்கப்பா இந்த அளவுக்கு யோசிச்சு இறங்கி வந்திருக்காரேன்னு நான் சந்தோஷப்பட்டுட்டிருக்கேன்...''

''இல்லமா. ரதியோட படிப்பு முடிய இன்னும் ஒரு மாசமிருக்கு. அது வரைக்கும் அப்பாவும் யோசிக்கட்டும். அதுக்கப்புறமும் இதே முடிவுல இருந்தார்னா அதவிட எனக்கு சந்தோஷம் வேறென்ன இருக்கு?'' என்றார்.



## 3

ஒரு மாதம் சென்றிருந்தது.

ரதியின் கல்லூரிப் படிப்பும் செவ்வனே முடிந்திருந்தது.

பெரியவர் கருணாகரன் அனைவரையும் முந்திக் கொண்டு, சென்னை செல்வதற்குத் தயாராகி விட்டிருந்தார்.

பெரிய பிரச்சனையொன்று சுமுகமாக முடிந்ததில், மற்றவர்களுக்கு எப்படியோ, ரதிக்கு மிகுந்த நிம்மதி, கூடவே சந்தோஷமும்.



ஏற்கெனவே ஊருக்குக் கிளம்ப அனைத்தையும் தயாராக எடுத்து வைத்து விட்டிருந்ததால், கிளம்பும் பொழுது பரபரப்பு எதுவும் இருக்கவில்லை.

மூவரும் ரயிலில் சென்னை வந்து இறங்கியிருக்க, அதற்கு முன்னரே ரயில் நிலையத்திற்குத் தயாராக வந்து காத்திருந்த ரகுநாத் அவர்களை அழைத்துக் கொண்டார்.

மற்றவர்களுக்கு எப்படியோ, ரதி சந்தோஷத்தின் உச்சியில் இருந்தாள்.

ஏன் பாட்டி, தாத்தாவுடைய சந்தோஷத்தையும் ஆர்வத்தையும் சேர்த்துப் பார்க்க நேர்ந்தவளுக்குத் தன்னுடைய கண்களையே நம்ப முடிந்திருக்கவில்லை.

இப்படியெல்லாம் நடக்குமென்று கனவில் கூட எதிர்பார்த்திருக்காதவளாயிற்றே.

இப்பொழுது சென்னை வந்து இறங்கிய பிறகு தான் நடப்பது கனவல்ல, நிஜம் தான் என்பதை முழுமையாக உணர்ந்து கொண்டாள்.

''பயணம் எப்படியிருந்ததுப்பா?'' என்று மகன் கேட்க, ''நல்லா இருந்ததுப்பா. கொஞ்சமும் சிரமமாத் தெரியல!'' என்றார் கருணாகரன்.

தந்தைக்குப் பதில் சொல்லிக் கொண்டே தாத்தா முன் பக்கமாக ஏறி அமர, தான் பாட்டியுடன் காரின் பின் ஸீட்டில் அமர்ந்து கொண்டாள் ரதி.

''அப்புறம் என் ரதிக்குட்டி ஏன் பேச மாட்டேங்கறா?'' என்று கேட்டுக் கொண்டே ரகுநாத் காரை ஸ்டார்ட் செய்ய, ''நான் பேச ஆரம்பிச்சா வாய மூட மாட்டேன்னு நீங்க தான் டாடி சொல்லுவீங்க. அதனால முதல்ல நீங்க எல்லாரும் பேசிடட்டுமேன்னு பாத்தேன்!'' என்றாள்.

''ஓ, நீ இந்த அளவுக்கெல்லாம் கூட யோசிக்க ஆரம்பிச்சுட்டயா?''

''பின்ன நானென்ன குட்டிப் பாப்பாவா?''

''அப்புறம் கண்ணம்மா...''

''என்ன டாடி?''

''அங்க வீட்டுக்குப் போனதும் பாட்டி கூட பக்கத்து வீடுகளுக்கு ஒரு முறை போயிட்டு வந்துடுமா. நீ எப்ப வருவேன்னு கேட்டுக்கிட்டே இருக்காங்க.''

''ஆமாம் டாடி. எனக்கும் தான் சுசீலா ஆன்ட்டி, வினிதாக்கா வீட்டுக்கெல்லாம் போகணும், அவங்களை யெல்லாம் பாக்கணும்னு ரொம்ப ஆசையா இருக்கு.''

''சரிதான் கண்ணம்மா. ஆனா போனதும் பாட்டிய டிஸ்டர்ப் பண்ணாத. ரெஸ்ட் எடுத்துட்டு வரட்டும்.''

''சரிதான் டாடி.''

''அப்புறம் ரகு...''

''என்னப்பா?''

''ரதி படிப்ப முடிச்சுட்டா. இனி அவளுக்கு மாப்பிள்ள...''

''தாத்தா, வேண்டாம்!'' என்று ரதி சொல்ல, ''என்னடி வேண்டாம்?'' என்று அதட்டினார் மங்களம்.

''அவள உடனே கல்யாணம் பண்ணிக் குடுக்கற துக்கா உங்களையெல்லாம் இந்தப் பாடு படுத்திட்டிருக் கேன். குறைஞ்சது இன்னும் ரெண்டு வருஷத்துக்காவது அந்தப் பேச்சையே யாரும் எடுக்கக் கூடாது!'' என்றார் ரகுநாத்.

மகனே அந்தக் குரலில் சொல்லிவிட்ட பிறகு, அதற்கு மேல் பெரியவர்கள் இருவரும் அந்தப் பேச்சை மீண்டும் எடுத்திருக்கவில்லை.



சரிதான், மகளுடன் இருக்க வேண்டுமென்று தான் அவன் உடன் அழைத்ததே. அப்படியிருக்க நாம் இப்படி யோசிக்காமல் சொல்லி விட்டோமே என்று தங்களைத் தாங்களே நொந்து கொள்ளவும் செய்தனர்.

வருடத்திற்கு நான்கைந்து முறை தனது தந்தையுடன் ரதியும் சென்னைக்கு வந்து சென்றவள் என்பதால், அவளுக்கும் இங்கு ஓரளவு அனைவரையும் தெரியும்.

ஓரளவிற்கு மட்டுமே.

ஏனென்றால் என்னதான் விடுமுறையே என்றாலும் அதிகபட்சம் பதினைந்து நாட்களுக்கு மேல் அவள் சென்னையில் தொடர்ந்து தங்கியது கிடையாது.

அப்படி வந்து தங்கிய நாட்களிலும் கூட அவள் பெரும்பாலும் அடைந்து கிடந்தது வீட்டிற்குள் தான்.

அதற்கு மேல் இருக்கும் நாட்களில் தந்தையுடன் வெளியே பர்ச்சேஸ், பிக்னிக், டூர் என்று எங்காவது சென்று விடுவாள் என்பதால் அவ்வளவாக யாரிடமும் பேசிப் பழகும் வாய்ப்புக் கிடைத்திருக்கவில்லை.

ரகுநாத்துடையது சென்னையில் பெரிய வீடு.

வீட்டு உறுப்பினர்கள் அனைவருக்குமே தனித்தனி அறையோடு கூடிய மற்ற அனைத்து வசதிகளுமே அந்த வீட்டில் இருந்தன.

ஆனால் அவை எல்லாவற்றையும் விட அனைவருட னும் ஒன்றாக இருக்கிறோமென்ற எண்ணமே ரதியைத் தரையில் கால் பாவாமல் பறக்கச் செய்திருந்தது.

முக்கியமாகத் தந்தையுடன்.

அப்படியே மகளின் நிலைதான் ரகுநாத்திற்கும்.

என்ன மகள் அளவுக்கு அவர் தன்னுடைய சந்தோஷத்தை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. அவ்வளவே.

என்னதான் தனக்கு ஓய்வு தேவையிருக்கா விட்டாலும் வயதில் மூத்தவர்கள் ஓய்வெடுக்கட்டுமென்று முதல் நாள் ரதி யாரையும் வெளியே அழைத்துத் தொந்தரவு செய்திருக்கவில்லை.

''என்னப்பா, தூங்கினீர்களா?''

மகன் ரகுநாத் கேட்க, ''அதெல்லாம்!'' என்றார் கருணாகரன்.

''நானும் அப்படித்தான் அடிச்சுப் போட்ட மாதிரி தூங்கினேன் டாடி.''

''இந்த வயசுல உனக்கென்ன அவ்வளவு அசதி?''

''ம், ஊருக்குப் போகப் போறோங்கற சந்தோஷத்துல நான் போன வாரம் முழுக்கவுமே நல்லாத் தூங்கல டாடி. ம்கூம். தூக்கம் வரல.''

''ஓ, எங்களுக்கெல்லாம் காபி கிடைக்குமா கண்ணம்மா?''

''இதோ நானே கொண்டு வந்துட்டேன்!'' என்று பாட்டி ட்ரேயில் காபி கப்களுடன் வர, தான் வாங்கி அனைவருக்கும் கொடுத்துவிட்டுப் பிறகு தானும் ஒன்றை எடுத்துக் கொண்டாள் ரதி.

''எனக்கிந்த கப்பு மூடி இதெல்லாம் வேண்டாம்மா. வழக்கம் போல டம்ளர்லயே குடு!'' என்று தாத்தா கேட்க, ''சரிதான் தாத்தா. இனிமேல் அப்படியே பண்ணிக்கலாம்.'' என்றாள்.



''எங்க பண்றது, இங்க ஸ்டீல் டம்ளர் ஒன்னக்கூடக் காணல.''

''ஆமாம் பாட்டி. இனிமேல் தான் வாங்கணும். ஏன்னா இங்க கப் அண்ட் ஸாஸர்ஸ் தான் இருக்கு.''

''என்னவோடியம்மா, நாங்க என்னவெல்லாம் அந்தக் கிராமத்துல பயன்படுத்திக்கிட்டிருந்தோம்னு தெரியுமல்ல, அந்த மாதிரி ஓரளவுக்கு இங்கயும் எங்களுக்குப் பண்ணிக் குடுத்துரு!'' என்று பாட்டி மங்களம் சொல்ல, ''சரிதான் பாட்டி. நாளைக்கு பர்ச்சேஸ் போயிட்லாம். விடுங்க!'' என்றாள் ரதி.

''அதுக்காகப் போய் தாம்தூம்னு செலவு பண்ணிட்டிருக்காத!'' என்று தனது தாய் சொல்ல,

''அவசியத்துக்கு வாங்கறத வாங்கித்தாம்மா ஆகணும். அதோட இன்னும் உங்க எல்லாருக்கும் எதெதெல்லாம் வாங்கணுமோ இன்னைக்கே டிரைவரக் கூட்டிட்டுப் போய் வாங்கிட்டு வந்துடுங்க!'' என்றார் ரகுநாத்.

''சரிதான் டாடி.''

''அப்படியே துணி, நகை எதுவானாலும் உனக்கும், தாத்தா பாட்டிக்கும் யோசிக்காம வாங்கிடு ரதி.''

''சரி டாடி.''

''பணம் என் ரூம்ல பீரோல இருக்கு. இல்லன்னாலும் கார்ட் எடுத்துட்டுப் போய் யூஸ் பண்ணிக்கோ.''

''டிரைவர் எதுக்கு டாடி? நானே கார எடுத்துட்டுத் தாத்தா பாட்டி கூடப் போய்ட்டு வந்துடட்டுமா...?''

அவள் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை.

''அதெல்லாம் உடனே வேண்டாம்மா!'' என்று தாத்தாவும் பாட்டியும் மறுத்து விட்டிருந்தனர்.

''அது சரிதான் கண்ணம்மா. இன்னும் கொஞ்ச நாளைக்கு நான் இருக்கும்போது, எங்கூட ஒட்டு, அதுக்கப்புறம் பாக்கலாம்.''

''ஓ.கே. டாடி.''

''அப்படியே ஸ்வீட் எடுத்துட்டுப் போய்ப் பக்கத்து வீடுகளுக்குக் குடுத்து நலம் விசாரிச்சுப் பேசிட்டு வந்துடு ரதி.''

''நீங்களும் வாங்க பாட்டி.''

''இன்னொரு நாளைக்குப் பாக்கலாம்மா. நீ அவங்கள நம்ம வீட்டுக்கு வரச்சொல்லி அழைச்சுட்டு வா. அப்பப் பாத்துப் பேசிக்கறேன்.''

''பாட்டி ரெஸ்ட் எடுத்துக்கட்டுமா. நீ மட்டும் ஏதோ ஒரு நேரத்துக்குப் போய்ட்டு வந்துடு. முக்கியமா சுசீலா ஆன்ட்டி வீட்டுக்குப் போய்ட்டு வா. நீ எப்ப வருவேன்னு கேக்காத நாளிருக்காது.''

''சரிதான் டாடி.''



# 4

என்னதான் சுசீலா ஆன்ட்டியின் வீட்டிற்கு நிறைய முறை சென்றிருக்கிறாள் என்றாலும், அப்பொழுது தான்



முதன் முறையாகச் செல்வது போல மனம் படபடவென்று அடித்துக் கொண்டது ரதிக்கு.

அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை.

அந்த ஆன்ட்டியின் பெரிய மகன் தான் அந்தப் பயத்திற்கான காரணம்.

இதற்கும் ஒருமுறை கூட ரதி அவனை நேரில் பார்த்தது கிடையாது.

மிகவும் கடுமையாக நடந்து கொள்வான், யாரிடமும் அவ்வளவு விரைவில் பேசிவிட மாட்டான் என்றெல்லாம் அவனைப் பற்றி மற்றவர்கள் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறாள். அவ்வளவே.

இப்பொழுது அவன் - இல்லை யில்லை, அது தப்பு - அந்த மகா கனம் பொருந்திய பெரிய மனிதர் வீட்டில் இருப்பாரோ என்னவோ தெரியவில்லையே.

சரிதான். இருந்தாலும் இல்லா விட்டாலும் அதைப் பற்றி நமக்கென்ன?

தந்தையே மிகவும் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு முறை சென்று சில வார்த்தைகள் பேசிவிட்டு வரப் போகிறோம். அவ்வளவே.

அதுவும் அந்த ஆன்ட்டியிடம்.

இந்தப் பாட்டி மட்டும் உடன் வந்திருந்தால் எவ்வளவோ பரவாயில்லாமல் இருந்திருக்கும்.

கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே சென்றவள், காலிங் பெல்லை அழுத்தி விட்டு வீட்டினரின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

அடுத்த சில வினாடிகளிலேயே கதவு திறக்கப்பட, உள்ளே இருந்து வந்த சுசீலா ஆன்ட்டியைப் பார்த்த பிறகு தான் நிம்மதியாக இருந்தது ரதிக்கு.

''ஆன்ட்டி, எப்படியிருக்கீங்க?''

''அட ரதி! வாடா வா வா வா!''

''என்ன ஆன்ட்டி, என்ன மறந்துட்டீங்களா?''

''உன்ன மறக்க முடியுமாடா தங்கம், ஆறு மாசத்துக்கு முன்னாடி பாத்தப்பக் கொஞ்சம் உடம்பு இருந்ததுன்னு நினைக்கறேன். இல்லியா? வாடா. வீட்டுக்குள் வா.''

''அது சரிதான் ஆன்ட்டி!'' என்று சொல்லிக் கொண்டே அவருடன் வீட்டிற்குள் வந்திருந்த ரதி, ''ஆனா அது ஆறு மாசத்துக்கு முன்னாடியில்ல. ஒரு வருஷத்துக்கு முன்னாடி ஆன்ட்டி!'' என்றாள்.

புரியாமல் பார்த்தவரிடம், ''ஏன்னா நான் லாஸ்ட் டூ டைம்ஸ் வந்தப்பவும் உங்கள யாரையுமே பாக்க முடியல. வெளியூர் போயிருந்தீங்க!'' என்றாள்.

''அட ஆமாம் ரதி, இப்பதன் ஞாபகம் வருது.''

''பாத்தீங்களா, என்னக் கடைசியா எப்பப் பாத்தீங்கன்றதக் கூட நீங்க மறந்துட்டிங்க.''

''மறந்துட்டேனா. ம்கூம் தப்பு. பாத்து ரொம்ப நாளான மாதிரியே தெரியலன்னு சொல்றேன்.

''உக்காரு ரதி, அப்புறம் பாட்டி, தாத்தா எல்லாரும் எப்படியிருக்காங்க?''

''நல்லாக்காங்க ஆன்ட்டி. அவங்களும் வந்திருக்காங்க.''

''உங்க டாடி சொல்லிட்டிருந்தார்மா. அங்கிள் கூட வந்து உங்க டாடி பேசிட்டிருக்கும்போது கேட்டேன். ஆனா சரியா எப்ப வருவீங்கன்றத மறந்துட்டேன். வா ரதி. கிச்சன்ல பாவக்காய் முறுகலா வரணும்னு தீய சிம்ல வெச்சுட்டு வந்தேன்,'' என்று சுசீலா ஆன்ட்டி கிச்சனுக்குச் செல்ல, தானும் அவரைப் பின் தொடர்ந்து சென்றாள் ரதி.



''அப்புறம் பாக்க ரொம்ப அழகா ஆயிட்ட ரதி. என் கண்ணே பட்டுடும் போல இருக்க.''

''அப்ப இதுக்கு முன்னாடி நான் அசிங்கமா இருந்தேனா ஆன்ட்டி?''

''அச்சச்சோ, உன்னைப் போய் யாராவது அப்படிச் சொல்லுவாங்களாடா தங்கம்?''

''நான் உங்களக் கேக்கறேன் ஆன்ட்டி.''

''முன்னாடியெல்லாம் பேசவே காசு கேப்ப. ஆனா இப்ப நல்லா சரிக்குச் சரி பேசற ரதி.''

''ஸாரி ஆன்ட்டி.''

''எதுக்கு?''

''இல்ல, எனக்கு வாய் கொஞ்சம் நீளம்னு தான் எல்லாருமே சொல்லுவாங்க. அதனால உங்ககிட்டயும் அப்படி ஏதாவது...''

''பைத்தியம், உன்ன மாதிரிப் பேசினா தான் எனக்குப் பிடிக்கும். என்னப் பொறுத்த வரைக்கும் முசுடு மாதிரி இருக்கறவங்களத் தான் புடிக்காது.''

''அப்ப முன்னாடி உங்களுக்கு என்னப் பிடிச்சிருக்காது. இல்ல ஆன்ட்டி. ஏன் ஆன்ட்டி சிரிக்கிறீங்க?''

''உண்மைய சொல்லணுமா?''

''பின்ன...''

''உங்கூட என்னால பேச முடியலமா. நீயும் பெரிய வாயாடியாத்தான் இருக்க. நானும் கூட என்னவோன்னு நினைச்சேன்.''

''சரி, விடுங்க ஆன்ட்டி. உண்மைய சொல்றீங்க. இனி என்ன பண்ண முடியும்?''

''அப்புறம் உக்காருடாம்மா. ஏன் நின்னுட்டே இருக்க?'' என்று சுசீலா டைனிங் டேபிள் சேரை இழுத்துப் போட, கையிலிருந்த பாலிதீன் கவர்களை டேபிளின் மீது வைத்தபடியே அமர்ந்தாள் ரதி.

''அது என்னடாம்மா?''

''ஸ்வீட், காரம் ஆன்ட்டி. நானும் பாட்டியும் செஞ்சது.''

''அப்படியா? சந்தோஷம். சரி, இந்த ஸ்வீட் காரத்த எடுத்துக்கோ.''

சுசீலா ஆன்ட்டி டிஃபன் ப்ளேட்டுகளைக் கொண்டு வந்து வைக்க, ''இதெல்லாம் எதுக்கு ஆன்ட்டி?'' என்று கேட்டாள் ரதி.

''ஓ, அப்ப நீ கொண்டு வந்து குடுத்தா மட்டும் நாங்க வாங்கிக்கணுமாக்கும்?''

''நான் கேட்டது இப்ப, அதுவும் இவ்வளவு எதுக்குன்னு தான்...''

''அது சரி. நல்லாப் பேசற. சரி, எடுத்துக்கோ ரதி.''

''அப்புறம் ஆன்ட்டி...''

''என்னடா?'' என்றவர், ''ஒரு நிமிஷம் கண்ணா!'' என்று விட்டு கீழே மாடிப்படிகளுக்கு அருகில் நின்று முதல் தளத்தில் இருப்பவர் யாரையோ சாப்பிட



அழைத்து விட்டு வர, ''அது யார் ஆன்ட்டி?'' என்று கேட்டாள் ரதி.

''யாரக் கேக்கற, குணாவையா?''

''ம், ஏன் ஆன்ட்டி உங்களுக்கு இவ்வளவு ஆச்சரியம்? நான் என்ன நம்ம நாட்டு பிரைம் மினிஸ்டரையா யாருன்னு கேட்டேன்?''

ரதியின் கேலி புரிய, சிரிப்பை விடவும் பயம் அதிகம் வந்திருந்தது சுசீலாவுக்கு.

ஆனாலும் அதை அவள் அறியாமல் மறைத்துக் கொண்டு, ''குணசீலன் என் மகன் கண்ணா!'' என்றார்.

''ஓ, அவரா?''

''ஏன், உனக்கு முன்னாடியே தெரியுமா?''

''கேள்விப்பட்டிருக்கேன்.''

''என்னன்னு?''

''வேண்டாம் ஆன்ட்டி.''

''என்ன வேண்டாம்.''

''இல்ல, அத சொன்னா நல்லார்க்காது.''

''அதான் ஏன்?''

''ஏன்னா நான் கேள்விப்பட்டது அந்த மாதிரி.''

சரியாக அதே நேரம் யாரோ ஒரு ஆடவன் மாடியிலிருந்து கீழே இறங்கி வர, அது ஆன்ட்டி சொன்ன அவருடைய மகன் குணசீலனாகத் தான் இருக்க வேண்டுமென்று நினைத்தாள்.

''வா கண்ணா!'' என்று சுசீலா மகனை வரவேற்க, ''என்னமா, டிபன் ரெடியா?'' என்று கேட்டுக் கொண்டே

டைனிங் டேபிளுக்கு அருகிலேயே வந்திருந்தான் அவன்.

ஆன்ட்டி சாப்பிட அழைத்ததற்கும், அவன் டிபன் ரெடியா என்று கேட்டதற்கும் அவன் தான் குணசீலன் அதாவது ஆன்ட்டியுடைய மகன் என்பது தெளிவானது.

ஆராய்ச்சிப் பார்வையுடன் தன்னைப் பார்த்துக் கொண்டே அமர்ந்த அந்த குணசீலனைப் பார்த்த ரதிக்கு அப்படித்தான் வீட்டிற்கு வந்திருப்பவளிடம் இரண்டு வார்த்தைகள் பேசினால் குறைந்தா போய் விடுவா னென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் அந்தக் கேள்வியை அவனுடைய பார்வை கேட்டதை அதற்குப் பிறகு தான் கண்டாள்.

சரிதான்.

தான் கேள்விப்பட்டது நூற்றுக்கு நூறு சரியே.

இவன் முசுடு தான்.

சரியாக அதே நேரம், ''குணா, இது யாருன்னு தெரி யுதா?'' என்று கேட்டுக் கொண்டே சுசீலா அருகில் வர, ''யாருன்னு தெரியலமா. அதே சமயம் நம்ம நாட்டு சீஃப் மினிஸ்டரோ, ப்ரைம் மினிஸ்டரோ இல்லேங்கறதும் நல்லாத் தெரியுது!'' என்றான்.

''என்னப்பா, நீயுமா?'' என்றவர் உடனே அப்படிச் சொன்னதற்காகத் தன்னையே நொந்து கொண்டபடி, ''ரதி கண்ணா. நம்ம ரகுநாத் அங்கிளோட பொண்ணு. நீயும் பாத்திருப்ப!'' என்றார்.

''ஓ!'' என்று தாய்க்காக அதையும் பட்டும் படாமல் சொல்லிவிட்டு அவர் பரிமாறிய சூடான இட்லிகளை



அந்த குணசீலன் ஒரு கை பார்த்துக் கொண்டிருக்க, அவ்வளவு நேரமும் எப்படியோ இப்பொழுது அந்த இடத்தில் தன்னை அதிகப்படியாக உணர்ந்து நெளியத் தொடங்கி விட்டிருந்தாள் ரதி.

அதை உணர்ந்து கொண்டதாலோ என்னவோ பேச்சை மாற்ற முயன்ற சுசீலா ஆன்ட்டியை முயன்று வர வழைத்த புன்னகையுடன் பார்த்தாள்.

''நீயும் சாப்பிடு ரதி!'' என்று சுசீலா ஆன்ட்டி தனக்கும் ஒரு ப்ளேட் வைத்திருக்க, ''வேண்டாமே ஆன்ட்டி. நான் ஸ்வீட்டே எடுத்துக்கறேன்!'' என்றாள்.

மகனின் மௌனம் அவருக்கும் சற்று ஒரு மாதிரி யாகத் தோன்றியதோ என்னவோ, ''என்ன கண்ணா, ரதியப் பாத்த ஞாபகம் வருதா?'' என்று கேட்டார்.

''ஏற்கெனவே பதில் சொன்னதா ஞாபகம். இன்னும் ரெண்டு இட்லி வைங்கம்மா.''

மகன் கேட்க, உடனே பரிமாறிய சுசீலா, ''பொங்கலும் தயிர் சேமியாவும் கூட இருக்குப்பா!'' என்றார்.

''எதுக்குமா அவ்வளவு செய்யறீங்க? நான் காலைல டிஃபன் லைட்டாதான் சாப்பிடுவேன்னு தெரியாதா உங்களுக்கு? நீங்க கஷ்டப்பட்டுச் செஞ்சதுமில்லாம, இனி வேஸ்ட்டாப் போகுதுன்னு வேற நான் சாப்பிட் டாகணுமா?''

''எனக்கு என்னவோ பொங்கல் சாப்பிடணும்னு தோணுச்சு, தயிர் சேமியா சும்மா வேணும்னா இருக்கட்டு மேன்னு...''

''ஓ, அப்ப இட்லிய எனக்காக இப்பதான் பண்ணி யிருக்கீங்கன்னு சொல்லுங்க.''

''அப்படியெல்லாம்...''

என்ன இந்த ஆன்ட்டி தன்னுடைய மகனைப் பார்த்து இவ்வளவு பயப்படுகிறார் என்று ரதியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''அப்ப எனக்கும் அதையே வெச்சிருக்காலாமே, எதுக் குமா தனியா எனக்காக வேற செஞ்சு கஷ்டப்பட்றீங்க?''

ஏதோ இந்த அளவு ஞானோதயம் இருக்கிறதே, பரவா யில்லை என்று ஏளனத்துடன் நினைத்தாள் ரதி.

அவனைப் பார்த்துக் கொண்டிருந்த ரதி, சரியாக அதே நேரம் அவனும் தன்னை நிமிர்ந்து பார்த்ததில் மனதிற் குள் பயந்து கூடப் போய் விட்டிருந்தாள்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்,

பிறகு நான் எதற்காகப் பயப்பட வேண்டும், அதுவும் உன்னைப் பார்த்து என்பதைப் போல நிமிர்ந்து அமர்ந் தாள்.

''நீயும் சாப்புடு. அப்புறம் எனக்கு வயிறு வலிக்கும்!'' என்று அந்த குணசீலன் சொல்ல,

அப்பாடா, இதாவது கடைசிக்குப் பேசினானே என் றிருந்தது.

''இல்ல எனக்கு... ம்கூம். நான் சாப்டுட்டு வந்துட் டேன்.''

அவனுடைய பார்வையில் வேர்த்து விறுவிறுத்துப் போய் விட்டிருந்தாலும், வெளியே கொஞ்சம் இயல் பாகக் காட்ட முயன்று ஓரளவு தான் நினைத்ததைச் செயல் படுத்தவும் செய்தாள்.

''என்னப்பா, ரதி கூடப் பேச மாட்டியா?''



''அவங்க லெவலே வேறமா. நம்ம கூடவெல்லாம் பேசுவாங்களா? பேசி அப்புறம் மூக்க உடைச்சுக்கச் சொல்றீங்களா?''

''என்னப்பா, ஏன் இப்படிச் சொல்ற?''

''பின்ன அவங்கெல்லாம் ரொம்பப் பெரிய லெவலுக் குத் திங்க் பண்றவங்க. உதாரணத்துக்குப் பிரைம் மினிஸ்டர் மாதிரி.''

''என்ன கண்ணா நீ?''

ஓ, சற்று முன் கூட இந்த மாதிரி அர்த்தத்தில் எதையோ சொன்னானே!

கடவுளே! அப்படியானால் தான் சொன்னதைக் கேட்டு விட்டானா?

அதனால் தான் ஐயா கோபம் போலக் காட்டிக் கொண் டிருக்கிறாராக்கும்.

''ம் சொல்லு, அப்புறம் என்னப் பத்தி அப்படியென்ன கேள்விப்பட்ட நீ?''

இப்பொழுது குணசீலன் தன்னிடம் நேரடியாகவே ஒரு கேள்வியைக் கேட்டு விட்டிருக்க, அதைத் துளியும் எதிர்பார்த்திருக்காத ரதி திகைத்துத் தான் போனாள்.

''என்ன கேட்டிங்...''

''இல்ல, கொஞ்சம் முன்னாடி அம்மாகிட்ட என்னப் பத்தி நீ ஏதோ கேள்விப்பட்டதா சொல்லிட்டிருந்தியே. கேள்விப்பட்டத அப்படியே சொன்னா நல்லாக்காது. ஏன்னா அந்த மாதிரியானதுன்னு கூட ஏதோ...''

கடவுளே! இப்படி வசமாக மாட்டிக் கொண்டோமே!

''இல்லையே. நான் அந்த மாதிரியெல்லாம் ஒண்ணும் சொல்...''

''இவ்வளவு பயமிருக்கறவ அப்படிச் சொல்றதுக்கு முன்னாடி யோசிச்சிருக்கணும்.''

என்னது பயமா, அதுவும் இவனைப் பார்த்து!

பிறகு இல்லையா?

இல்லையென்றால் அவன் கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல்ல வேண்டியது தானே.

தன் மனமே தன்னைக் கேள்வி கேட்க, தயக்கத்துடன் நிமிர்ந்து குணசீலனைப் பார்த்தாள் ரதி.

''நான் அப்படியொன்னும் உன்னைக் கடிச்சுத் தின்னுட மாட்டேன். சொல்லு.''

மீண்டும் அந்த குணசீலன் கேட்க, ''ஏம்பா, சும்மா விளையாட்டுக்கு அதுவும் நான் அவள சீண்டினதுக்கு ஏதோ சொன்னா விடேன்!'' என்றார் சுசீலா.

''ம், அதெப்படி முடியும்?''

...........

''அதோட நீங்களும் தான் பேசச் சொல்றீங்களே. இப்படியே பேச்ச ஆரம்பிச்சுட்டுப் போறேன்.''

அடடா! அப்படியே தாய் சொல்லைத் தட்டாத பிள்ளை. ரதி நினைத்துக் கொண்டிருக்க, சுசீலாவும் அப்பொழுது அதையே கேட்டார்.

''என்னவோ அம்மா சொல்றதையெல்லாம் அப்படியே செய்யற மாதிரி இதென்னப்பா இப்படியொரு பில்டப்?''



அவருடைய கேள்வியில் என்ன முயன்றும் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் ரதி சிரித்து விட்டிருக்க, ''பரவாயில்ல. சிரிச்சா இன்னும் கூட கொஞ்சம் நல்லாத் தான் இருக்க!'' என்றான்.

திடீரென்று அதுவும் குணசீலன் இந்த மாதிரி சொல்வானென்று ரதி சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

முன்னைக்கு இப்பொழுது இன்னும் சற்று அதிகமாகவே நெளியத் தொடங்கி விட்டிருந்தாள்.

''சொல்லு. அப்படியென்ன கேள்விப்பட்ட என்னப் பத்தி?''

''வேண்டாமே. விடுங்க.''

''அதெப்படி விட முடியும்? நானும் என்ன நீ ஊர்ல இருக்கறவங்களப் பத்திக் கேள்விப்பட்டதயா கேக்கறேன்.''

''அப்படித்தான் சொல்லிடேன் ரதிம்மா!'' என்று சுசீலாவும் மகனுக்குத் தயிர் சேமியாவைப் பரிமாறிக் கொண்டே சொல்ல, குணசீலனை ஒருவிதத் தயக்கம் கலந்த புன்னகையுடன் பார்த்தாள் ரதி.

''ம். என்ன?''

''நீங்க முசுடுன்னு கேள்விப்பட்டேன்.''

ஏதோ ஒரு வேகத்தில் சொல்லி விட்டிருந்தவளுக்கு அதற்குப் பிறகு பயம் வந்து விட்டிருந்தது.

சுசீலா ஆன்ட்டிக்கும் அதே நிலை தான் என்பதும், ஆனால் அவர் முயன்று வெளியே காட்டிக் கொள்ளாமல் இருந்ததும் புரிந்தது.

கடவுளே! இப்படிச் சொல்லி விட்டிருக்கிறோமே, ஏதாவது பிரச்சனை செய்து விடுவானோ என்று கூடத் தோன்றி விட்டிருந்தது ரதிக்கு.

ஆனால் அவர்கள் இருவரும் நினைத்துப் பயந்ததற்கு எதிர் மாறாகத் தான் நடந்தது இருந்தது.

குணசீலன் தானும் முகத்தில் கோபத்தை வரவழைக்க வேண்டுமென்று எவ்வளவோ முயன்றான் தான். ஆனாலும் கடைசியில் சிரிப்பு வந்து விட்டிருந்தது.

மகனின் முகத்தில் சிரிப்பைப் பார்த்த பிறகு தான் சுசீலாவிற்கும் சற்று மனம் நிம்மதியடைந்திருந்தது.

ஆனால் ரதிக்கோ எல்லையற்ற ஆச்சரியம்.

அது அவளுடைய முகத்தில் அப்படியே பிரதிபலித்தது.

அனைத்திற்கும் மேலாக மேலும் ஒரு தவறையும் கூடச் சேர்த்துச் செய்து விட்டிருந்தாள் ரதி.

அதுவும் மிகப் பெரிய தவறை.

குணசீலனின் புன்னகையை அவளையறியாமல் மெய்ம்மறந்து பார்த்துக் கொண்டு இருந்து விட்டிருந்தாள்.

ஆனால் நல்லதிலும் ஒரு கெட்டதாக அதைச் சுசீலா ஆன்ட்டி கவனித்திருக்கவில்லை.

ஆனால் குணசீலன் கவனித்து விட்டானே.

கவனித்து விட்டிருந்தது மட்டுமா?

அந்த நேரத்தில் அவனும் தன்னையே அல்லவா பார்த்துக் கொண்டிருந்தான்.

கடவுளே! சும்மாவே இவனுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை.



இனி சொல்லவே வேண்டாம்.

இவ்வளவு நேரமும் கொடுத்த மரியாதையையும் கூட இனி கொடுக்க மாட்டானோ?

அதற்குப் பிறகு முதலில் பேசியதும் குணசீலனே.

''என்ன தைரியம் இருந்திருந்தா நீ இதச் சொல்லியிருப்ப?''

குணசீலன் கேட்க, ''நானெங்க சொன்னேன். நீங்க தான திரும்பத் திரும்பக் கேட்டிங்க!'' என்று தயக்கத்துடன் மெல்லிய குரலில் என்றாலும் சொல்லியே விட்டிருந்தாள் ரதி.

''ஓ! அப்பக் கேட்டா என்ன வேணும்னாலும் சொல்லிடுவியா?''

''ம்கூம், கேள்விப்பட்டத மட்டும் தான்...''

''திரும்பவும் பாருடா...''

''ஆமாம். கண்லயே நான் இப்ப தான் உன்ன முதல் தடவையாப் பாக்கறேன். ஆனா நீ எப்படி என்னப் பத்தி இந்த அளவுக்குக் கேள்விப்பட்ட?''

''என்ன பண்றது? பெரிய ஆளுங்களப் பத்தித்தான நாலு பேர் பேசுவாங்க. நாமளும் கேள்விப்பட முடியும்.''

அப்படிச் சொன்ன தன்னைக் குணசீலன் மெச்சுவதைப் போலப் பார்க்க, ''ம்... அப்படிச் சொல்லு ரதிம்மா!'' என்று காபி கப்களுடன் வந்தார் சுசீலா.

ஒன்றை மகனிடம் கொடுத்து விட்டு, மற்றொன்றை ரதிக்குக் கொடுத்தவர், ''அடப் போதும்பா. சும்மா சும்மா கேள்வி மேல கேள்வி கேட்டுக்கிட்டே இருக்காத!'' என்றார்.

''ஆனாலும் உனக்குத் தைரியம் கொஞ்சம் அதிகம் தான்!'' என்று தன்னைப் பார்த்துச் சொல்லி விட்டு குணசீலன் மீண்டும் அவனுடைய அறைக்குச் செல்ல, அவனுடைய பார்வையில் உடலும் மனமும் ஒரு சேரப் பரபரத்துப் போயிற்று ரதிக்கு.

''காபி எடுத்துக்கோ ரதி. ஆறிடும்.''

''எடுத்துக்கறேன் ஆன்ட்டி. அப்புறம் உங்க மகன் எப்பவுமே இப்படித்தானா?''

''எப்படி?''

''சட்டுசட்டுன்னு கோபப்பட்ற டைப்பான்னு கேக்கறேன் ஆன்ட்டி.''

''இல்லடாம்மா. அதுக்காக கோபமே பட மாட்டான்னும் சொல்ல முடியாது. அவன் நல்ல மூட்ல இருக்கும் போது பேசிப் பழகறதுக்கு இனியவன். அவன யாரும் மிஞ்சிட முடியாது.''

''அப்ப அடிக்கடி கோபப்படுவான்னு சொல்லுங்க. அதோட ஸார் எப்பவெல்லாம் நல்ல மூட்ல இருப்பான்னு வேற பாத்து அதுக்கப்புறம் தான் பேசவே செய்யணும்னு சொல்றீங்க.''

''ஆமாம் வாயாடி. அப்படின்னே வெச்சுக்கோயேன். இந்த மாதிரி ஒரு கலகலன்னு பேசற அழகான பொண்ண விட்டுட்டு எப்படித்தான் உங்கப்பா இத்தன நாளும் இருந்தாரோ, தனியா இருக்கறது ரொம்பவும் கொடுமை ரதி. இனி எப்பவுமே நீ உங்க அப்பா கூடவே இரு. சரியா?''

''சரிதான் ஆன்ட்டி.''



''இங்க நம்ம வீட்டுக்கெல்லாம் கூட இப்ப சில வருஷங் களா தான் வர்றார். மேக்ஸிமம் அங்கிள்தான் டைம் கிடைக்கறப்ப கொஞ்சம் போய் உக்காந்து பேசிட்டு வருவார். உங்க டாடி, நேருக்கு நேரா பாத்துட்டா சில வார்த்தைகள் பேசுவார். அவ்வளவுதான்.''

''உங்க ஃபேமிலில எல்லாருமே ரொம்ப நல்ல டைப், நல்லாப் பழகுவீங்கன்னு டாடி சொல்லிட்டே இருப்பார் ஆன்ட்டி.''

''அப்படியா, ஆனா எங்க உங்க டாடி மேக்ஸிமம் பிஸினஸ் பிஸினஸ்னு வீட்ல இருக்கறதே ரொம்ப ரேர்னு சொல்லுவாங்க.''

''அது சரிதான் ஆன்ட்டி. அப்புறம் உங்க அருமை மகன் திரும்பவும் எப்ப வந்து எல்லார்க்கும் தரிசனம் குடுப்பார்?''

''கடந்த மூணு நாளா ராத்திரி பகல்னு பாக்காம கம் பெனில வேலமா. ஏதோ ஒரு முக்கியமான மெஷின் பிரேக் டவுனாயிடுச்சாம். குணா வீட்டுக்கே வரல...''

''லாஸ்ட் த்ரீ டேஸாவே வரலியா?''

''ஆமாம்மா. அது ரெடி பண்ணிட்டு தான் வேற வேலைன்னு உக்காந்துட்டானாம். அவன் வேலைன்னு வந்துட்டா எப்பவுமே அப்பிடித்தான். இது ஒண்ணும் புதுசு கிடையாது. ஆனாலும் மூணு நாள் தொடர்ந்து கம்பெனிலயே இருக்க நேர்ந்தது இதுதான் முதல் தடவ.''

''அங்க கம்பெனிலயே குளிச்சுட்டு அப்பப்ப கொஞ் சம் குட்டித் தூக்கம், வேளா வேளைக்குச் சாப்பாட்டக் குடுத்தனுப்பிட்டு நான் போன் பண்ணிட்டே இருப் பேன் சாப்பிடச் சொல்லி.''

''அதுக்கும் நானென்ன சின்னக் குழந்தையா, என் வயித்துக்கு சாப்பிட்றதுக்கு எனக்குத் தெரியாதான்னு டென்ஷனாயிடுவான்.

''எப்படியோ நேத்து நைட்டு ஒரு மணிக்கு மெஷின் ரெடியாயிடுச்சாம். அதுக்கப்புறமும் ஒரு மணி நேரம் கூட இருந்து இப்படி இப்படிச் செய்ங்கன்னு சொல்லிட்டு தான் வீட்டுக்கு வந்து குளிச்சுட்டுத் தூங்கப் போயிருக்கான்.''

''ஓ.''

''காலைல தான் குணா அப்பா இவன் வந்துட்டதயே எங்கிட்ட சொன்னார். மூணு மணிக்கு மேல தான் தூங்கவே போனான் எதுக்கும் எழுப்பாத, அவனாவே எழுந்து வரட்டும்னு கம்பெனிக்கு அவர் கிளம்பிப் போனார்.''

''ஓ அதான்...''

''இரு. இன்னும் நடந்ததக் கேளேன். நிலம இப்படியிருக்க நைட் மூணு மணிக்கு மெஷின்ல திரும்பவும் பிரச்சனையாம் இப்பதான வீட்டுக்குக் கிளம்பினார், எப்படிக் கூப்புட்றது, அதுவும் தூங்கிட்டு இருந்தார்னா அப்புறம் சொல்லவே வேண்டாம்னு பேசாம இருந்துட்டுக் காலைல ஆறரைக்குக் கூப்புட்டிருக்காங்க. நல்ல தூக்கத்துல இருந்தவன எழுப்பி அவங்க பிரச்சனய சொல்ல, குணாவுக்குப் பயங்கரமான கோபம்.''

''ஏன் ஆன்ட்டி திரும்பவும் பிரச்சன வந்ததுக்கு அவங்கென்ன பண்ணுவாங்க?''

''அது சரிதான். ஆனா குணா ஏற்கெனவே இந்தப் பிரச்சன வந்தாலும் வரும், அதுக்கு இதுதான் ஷொல்யூஷன்னு சொல்லிட்டுதான் வந்தானாம்.''



''தான் சொன்னத காதுல வாங்கிக்காம தன்னை எழுப்பினதுமில்லாம, நைட்ல இருந்து ப்ரொடக்ஷன் வேற நின்னுடுச்சேன்னு அவனுக்குக் கண்மண் தெரியாத அளவுக்குக் கோபம். இது எல்லாத்துக்கும் மேல இந்த விஷயமெல்லாம் ஒண்ணுமே தெரியாம நான் வேற குணா எழுந்துட்டாம் போலிருக்கு, பேசற சத்தமே கேக்குதேன்னு காபி எடுத்துட்டுப் போய்ட்டேன்.''

''ம்...''

''இனி இது ஒண்ணுதான் குறைவு. ஏற்கெனவே பாதி தூக்கத்துல எழுந்து உக்காந்துட்டிருக்கேன். எல்லாத்தையும் எடுத்துட்டுப் போங்க, நான் தூங்கணும்னு டென்ஷனாயிட்டான்.''

''நீங்களும் ஏன் ஆன்ட்டி தூங்கறதுக்குக் கூட விடாம அப்படி காபி எடுத்துட்டுப் போனீங்க?''

''அப்ப எனக்கு நடந்தது எதுவுமே தெரியாதேம்மா. அதுக்கப்புறம் தான் அங்கிள் எங்கிட்ட எல்லாத்தையும் சொன்னார்.''

''ஓ, அப்புறம் அந்த மெஷின்ல ப்ராப்ளம் சரியாயிடுச்சா இல்ல...''

''அத போன்லயே சொல்லிச் சரி பண்ணிட்டு தான் திரும்பவும் தூங்கியிருக்கான்.''

''அப்ப அந்த அளவுக்குச் சின்னப் பிரச்சனைக்காகத் தான் போன் பண்ணியிருக்காங்களா? அதுவும் இந்தப் பிரச்சன வந்தாலும் வரும்னு சொல்லிட்டு வேற வந்து படுத்தவங்கள பாதித் தூக்கத்துல எழுப்பினா யாருக்குத் தான் கோபம் வராது. உங்க மகன் குணாவோட கோபம் நூத்துக்கு நூறு நியாயமானது தான் ஆன்ட்டி.''

''அப்பாடி! எப்படியோ மேடம் ஒரு வழியா ஒத்துகிட்டீங்க. ரொம்ப சந்தோஷம்!'' என்ற சுசீலாவைப் புன்னகையுடன் பார்த்தாள் ரதி.



# 5

சென்னை வாழ்க்கைக்குப் பாட்டியும் தாத்தாவும் கூட நன்கு பழகி விட்டிருந்ததில் ரதிக்கு ஒரே சந்தோஷம்.

என்னதான் ஆசையுடன் கிளம்பி வந்து விட்டிருக்கிறார்களென்றாலும், இங்கிருக்கும் வெயில், புது மனிதர்கள், பழக்க வழக்கங்கள் என அனைத்தும் அவர்களுக்குப் பிடிக்க வேண்டுமே என்று மனதிற்குள் அஞ்சிக் கொண்டிருந்தவள் என்பதால், அப்படியெல்லாம் எந்தப் பிரச்சனையும் இல்லை யென்றாகி விட்டதில் எவ்வளவோ நிம்மதியாக உணர்ந்தாள்.

என்னதான் வெளியே காட்டிக் கொள்ளா விட்டாலும் ரதியும் சென்னை வாழ்க்கையைத் தான் மிகவும் விரும்பினாள்.

அதற்காகக் கிராம வாசம் பிடிக்காதென்றும் சொல்லி விடுவதற்கில்லை. இத்தனை நாளும் கிராமத்தில் இருந்தது சரி. இனி சென்னையில் அதுவும் தந்தையுடன் இருக்க வேண்டுமென்று மிகவும் விரும்பியவளுக்குத் தான் ஆசைப்பட்டது போலவே அனைத்தும் நடந்து விட்டிருந்ததில் எல்லையற்ற ஆனந்தம்.



''ரதி!''

''என்ன டாடி?''

''நாளைக்கு நாம எல்லாரும் குலதெய்வக் கோவிலுக்குப் போய்ட்டு வரலாம்மா. தாத்தாவும் பாட்டியும் ஆசப்பட்றாங்க.''

''சரிதான் டாடி. எத்தன மணிக்குக் கிளம்பணும்?''

''காலைல அஞ்சு மணிக்கு.''

''ஓ.கே. டாடி. இன்னைக்கே எல்லாத்தையும் தயாரா எடுத்து வெச்சுட்றேன்.''

''காலைல டிபன், மதியச் சாப்பாடும் பாட்டியே செஞ்சுட்றேன்னு சொன்னாங்க. அவங்களுக்கு ஏதாவது உதவி வேணும்னா கேட்டுச் செஞ்சு குடு.''

''சரி டாடி.''

''அப்புறம் ரதி...''

''என்ன டாடி?''

''உன்ன சுசீலா ஆன்ட்டி கூப்டாங்கமா.''

''எதுக்கு?''

''தெரியல. இப்பதான் அதுவும் போன்ல பேசினாங்க. கொஞ்சம் முன்னாடி வந்தேன். வீட்ல யாரையுமே காணோம். எங்க வெளிய போயிட்டீங்களான்னு கேட்டாங்க. நைட் டின்னருக்குக் கூப்புடுவாங்கன்னு நினைக்கறேன். எதுவா இருந்தாலும் போய் ஒரு எட்டு பாத்துட்டு வந்துடு.''

''சரி டாடி. இதோ போறேன்.''

''அப்புறம் ரதி...''

''என்ன பாட்டி?''

''இதெல்லாம் அந்த ஆன்ட்டியோட பாத்திரம்மா. கொண்டு போய்க் குடுத்துடு.''

''இது எப்ப வந்தது?''

''அதான் நேத்து ஸ்வீட்டும், காரமும் கொண்டு வந்து குடுத்துட்டுப் போனாங்களே.''

''ஓ, சரி. குடுங்க.''

''ஏய், மெதுவாடி மெதுவா. இப்படி ஓடாத. கீழ விழுந் துடுவ.''

தாயின் அதட்டலையும், சரிதான் பாட்டி என்று அலுத் துக் கொண்டே போன மகளையும் புன்னகையுடன் பார்த்த ரகுநாத், மீண்டும் கையிலிருக்கும் புத்தகத்தில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தார்.

''ஹாய் ஆன்ட்டி.''

''வா ரதி.''

''என்ன ஆன்ட்டி பிஸியா இருப்பீங்க போலிருக்கு.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லமா. உக்காரு.''

''உக்காரலாம் ஆன்ட்டி. நீங்க கூப்டதா டாடி சொன்னாரா, அதான் பாத்துட்டுப் போலாம்னு வந்தேன்.''

''ஆமாம்மா. கொஞ்சம் முன்னாடி வந்தேன். யாரை யுமே காணல. அதான் உங்க டாடிக்குக் கூப்புட வேண் டியதாயிடுச்சு. தேவையில்லாம டிஸ்டர்ப் பண்ணிட் டேன்.''

''அட என்ன ஆன்ட்டி நீங்க, இதெல்லாம் தொந்தரவா? அதுவும் எதுக்காக கூப்டிங்களோன்னு நாந்தான் ஃபீல் பண்ணணும்.''



''அதெல்லாம் ஒண்ணுமில்ல. உங்கள எல்லாரையும் நைட் டின்னருக்கு இன்வைட் பண்ணலாமேன்னு தான் கூப்புட்டேன். வந்துடுங்க கண்ணா...''

''சரிதான் ஆன்ட்டி. வீட்ல சொல்றேன்.''

''அதெப்படி, பெரியவங்கள நான் வந்து கூப்புட வேண்டாமா?'' என்றவர், ''வா, உங்க வீட்டுக்குப் போய் எல்லாரையும் இன்வைட் பண்ணிட்டு வந்துடலாம்,'' என்றவரை வேண்டாம் நானே சொல்லி விடுகிறேனென்று எவ்வளவோ தடுத்துப் பார்த்தாள் ரதி.

ஆனால் அவர் அதற்கு ஒத்துக் கொள்ளாமல் தன் வீட்டிற்கு நேரிலேயே வந்து அனைவரையும் இரவு உண வுக்கு வருமாறு அழைத்து விட்டு வந்திருக்க, தானும் அவருடன் கூடவே மீண்டும் அவருடைய வீட்டிற்கு வந்திருந்தாள்.

''சொல்லுங்க ஆன்ட்டி, எனக்கென்ன வேலை?''

''ஒண்ணும் வேண்டாம். நீ பேசாம உக்காந்து எங் கூடப் பேசிட்டிரு.''

''ம்கூம். அதெப்படி பெரியவங்க நீங்க வேல செஞ்சுட் டிருக்கும்போது நான் உக்காந்து பேசிட்டிருந்தா அது நல்லா இருக்குமா ஆன்ட்டி?''

''இல்லாம என்ன? சரி. இந்தா, இந்தக் கறிவேப்பிலைய சுத்தம் பண்ணிக் குடு.''

''அப்புறம் உங்க சன்ஸ் ரெண்டு பேரும் எங்க ஆன்ட்டி?''

''குணா கம்பெனிக்குப் போயிருக்கான். வர ஆறு மணிக்கு மேல ஆகும், வினய் வெளியூர்ல படிக்கறாம்மா. மாசத்துக்கொரு முறை தான் வருவான்.''

''ஓ, மேக்ஸிமம் வீட்ல நீங்க மட்டும் தான் இருப் பீங்கன்னு சொல்லுங்க.''

''ஆமாம்மா. அதுலயும் நீ வந்து பேசிட்டிருக்கறது வீடே நிறைஞ்சிருக்கற மாதிரி எவ்வளவு நல்லா இருக்கு தெரியுமா?''

''நிஜமாவா ஆன்ட்டி சொல்றீங்க? நான் ஏதோ உங்களுக் குத் தலைவலி கொடுத்துட்டிருக்கேன்னல்ல நினைச்சுட் டிருக்கேன்.''

''அச்சச்சோ! என்...!''

''என்னமா நேத்து நைட் அப்படிதான சொல்லிப் புலம்பிட்டிருந்தீங்க. இப்ப ஆமான்னு சொல்றதுக்கென்ன?''

திடீரென்று கேட்ட குணசீலனின் குரலில் பெண்கள் இருவருமே திரும்பிப் பார்த்தனர்.

''வா கண்ணா, ஏன் இன்னைக்கு நேரத்துலயே வந்துட்ட?''

''ம், டைம் பாருங்க.''

''அட ஆறாச்சா, வேல பிஸில நேரம் போனதே தெரியல.''

''அதுவும் இந்த வாயாடி வேற பத்தாதுக்கு.''

''ஆமா, இப்ப எதுக்கு வந்த?'' என்று ரதியைப் பார்த்துக் கேட்க, ''என்னப்பா இப்படி கேக்கற? என்னவோ இவ நல்ல பொண்ணுங்கறதுனால பரவாயில்ல. விளை யாட்டுக்கும் ஒரு அளவிருக்கல்ல...'' என்று மகனைக் கடிந்து கொண்டார் சுசீலா.

ஆனால் ரதியோ, ''அட விடுங்க ஆன்ட்டி. இவரு என்ன சொன்னாலும் நான் ஆப்போஸிட்டா தான் எடுத்துக்கு வேன்!'' என்று கூலாகப் பதில் சொன்னாள்.



''ம், பாருங்க. என்ன மாதிரி பதில்?'' என்று குணசீலன் தாயைப் பார்க்க, ''அதான, நீ ரொம்ப நல்ல பொண் ணாச்சே!'' என்று ரதியை மெச்சிக் கொண்டார் சுசீலா.

''சிலருக்கு என்னப் பாத்தா பொறாம ஆன்ட்டி.''

''அப்ப உங்கூடப் பழகறவங்கெல்லாம் அந்த அள வுக்குக் கீழதான் இருப்பாங்களா?''

அப்படிக் கேட்டவனை ரதி புரியாமல் பார்க்க, ''இல்ல. இருந்திருந்து அதுவும் உன்னப் பாத்துக்கூடப் பொறாமைப் பட்றாங்கன்னு சொன்னியே, அதான் கேட்டேன்!'' என் றான்.

''ஹலோ, நான் சொன்னதே உங்களத்தான். அதோட எங்கூடப் பேசினால்லாம் யாருக்கும் தலைவலி வராது. உலகத்துல சிலர் ஏனோ தன்னைப் போலவே மத்த வங்களையும் நினைச்சுக்கறாங்க. அதுதான் பிரச் சனையே.''

''பின்ன உன்ன மாதிரி மத்தவங்க சொல்றதையெல் லாம் எதிர்ப்பதமா எடுத்துக்கற பைத்தியமா இருக்கணுங் கறியா?''

''பாருங்க ஆன்ட்டி, நான் பைத்தியமாம்.''

''நீங்களும் எதுக்கும் கொஞ்சம் பாத்துப் பழகுங்கமா. அப்புறம் கடைசில வருத்தப்பட வேண்டியதாயிடும்.''

அப்படிச் சொல்லிவிட்டு குணசீலன் மாடியை நோக்கிச் செல்ல, ''குணா, எங்க போற? டீ கலக்கறேன்!'' என்றார் சுசீலா.

''மேல கொண்டு வாங்க.''

''சரிதான். அவன் கை கால் முகம் கழுவாம எடுத்துக்க மாட்டாம்மா!'' என்றவர், ''அப்படியே உனக்கும் குடிக்க ஏதாவது குடுக்கட்டுமா ரதி?'' என்று கேட்டார்.

''வேண்டாம் ஆன்ட்டி. நான் மானிங், ஈவினிங் ரெண்டு தடவ மட்டும் தான் குடிப்பேன். அதையே கூட விட்டுடலாம்னு இருக்கேன்.''

''நல்ல பழக்கம் தான். இந்தாம்மா, அப்படியே இந்த மல்லித் தழையையும் கொஞ்சம் சுத்தம் பண்ணிக் குடுத்துடேன்.''

''குடுங்க ஆன்ட்டி.''

சில நிமிடங்களில் டீயைக் கலக்கியிருந்த சுசீலா, ''ரதி, இந்தாமா, நீ கொண்டு போய் குணாவுக்குக் குடுத்துட்டு வந்துடு!'' என்று வேலை மும்முரத்தில் சொல்ல, சரிதானென்று மறுக்க முடியாமல் வாங்கிக் கொண்டு சென்றாள்.

ரதி டீ கப்புடன் மேலே வருவதற்கும், முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டே குணசீலன் குளியலறையிலிருந்து வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

''டீ எடுத்துக்கோங்க.''

''உன்னை யாரு எடுத்துட்டு வரச் சொன்னாங்க?''

''ஆன்ட்டி சொன்னாங்க. அதான் எடுத்துட்டு வந்தேன்.''

''குடிக்கலாமா, இல்ல...''

ஏதோ கேட்க வந்து விட்டுப் பிறகு பாதியில் நிறுத்தி விட்டுத் தன்னைப் பார்த்தவனை என்னவென்பதைப் போலப் பார்த்தாள் ரதி.



''ம், சொல்லுங்க.''

''ஒண்ணுமில்ல. விடு. அம்மா தான குடுத்தனுப்பினாங்க. அதனால தைரியமாக் குடிக்கலாம்.''

ஓ, இனி இது வேறாக்கும்...''

''என்ன பாக்கற?''

''எதுக்கும் கொஞ்சம் யோசிச்சுட்டே குடிங்க. ஏன்னா கொண்டு வந்தது நானாக்கும்.''

ஆனால் அதற்குள் டீயை எடுத்து ஒருவாய் குடித்திருந்தவன், ''ஆமா, உம் பேரு என்ன சொன்ன?'' என்று கேட்டான்.

''நானொன்னும் சொல்லவே இல்லையே.''

''ஏதோ அழகின்னு என்னவோ...''

''ஹலோ, எம் பேரு ரதி.''

''ம் கரெக்ட், ஆமா, இதென்ன இப்படியொரு பேரு?''

''என்ன பண்றது, பொருத்தமா நல்ல பேர் வைக்கணும்னுதான் பெத்தவங்க பாத்துப் பாத்துப் பேரு வைக்கறாங்க. ஆனா பாவம். உங்க பெத்தவங்க ஏமாந்து போயிருப்பாங்க.''

''ஏன் ஏமாந்...''

''பின்ன? உங்க பேருக்கும் உங்க குணத்துக்கும் எதிர்ப்பதமா இருக்கே.''

''அப்ப நீ உண்மையிலயே ரதி தான்னு நீயே சொல்ற!''

''நானொன்னும் அந்த...''

''அப்புறம் ரதியோட மன்மதன் யாரோ?''

''கண்டிப்பா நீங்க கிடையாது.''

''ஓஹோ, இனி அப்படி வேற நினைப்பிருக்கா உனக்கு.''

கடவுளே! இவனிடம் வாயைக் கொடுக்காமலே இருந்திருக்கலாம். முடிந்த அளவு இனிமேல் பேசும்போதாவது கொஞ்சம் யோசித்துப் பேச வேண்டும்.

''எப்படியோ உம் மனசுல இந்த மாதிரி கூட ஒரு எண்ணம் இருந்திருக்கில்ல?''

ரதியும் தொடர்ந்து எதையும் பேசி விடாமல் கீழே இறங்கிச் சென்று விட வேண்டுமென்று தான் மனதிற்குள் நினைத்தாள்.

ஏன், எவ்வளவோ முயன்றாள் என்றும் கூடச் சொல்லலாம்.

ஆனால் அதற்குள் குணசீலன் விட்டிருக்கவில்லை.

ஒருவேளை தன் வாயிலிருந்தே அதை வரவழைக்க வேண்டுமென்று தான் மீண்டும் மீண்டும் தன்னைச் சீண்டிக் கொண்டே இருந்தானோ என்றும் கூட பிறகு யோசிக்க நேர்ந்ததில் புரிந்தது.

''இருந்திருந்து உனக்கு இப்படியொரு நினைப்பு...''

''ஆமாம் மிஸ்டர் குணசீலன். அப்படித்தான்னே வெச்சுக்கோங்களேன். அதென்ன உங்களுக்கு அப்படியொரு நினைப்பு? நீங்க மகாப் பெரியவர், நான் ஒண்ணுமே இல்லாதவங்கற மாதிரி?'' என்று கோபத்துடன் கேட்டிருந்தாள்.

அத்துடனாவது போதுமென்று விட்டுவிட்டு அவள் கீழே இறங்கிச் சென்றிருக்கலாம், ஆனால் குணசீலனின்



அந்தப் புன்னகை அவளை மேலும் சீண்டி விட்டிருந்ததென்று தான் சொல்ல வேண்டும்.

''ஆமாம், எனக்கு உங்க மேல ஆச. நான் உங்கள வளைக்கத் திட்டம் போட்டு தான் அப்படிச் சொன்னேன். ஏன் அதுக்காக இன்னும் கூட என்ன வேணும்னாலும் செய்வேன்!'' என்று விட்டு அதற்கு மேல் ஒரு வினாடி கூட நிற்காமல் கடகடவென்று கீழே இறங்கி வந்து விட்டிருந்தாள்.

மிகுந்த கோபத்தில் அப்படியெல்லாம் பேசி விட்டு வந்திருந்தவளுக்கு அதற்குப் பிறகு சை என்றாகி விட்டிருந்தது.

இருந்திருந்து அதுவும் தான் எப்படி இப்படியெல்லாம் பேசினோமென்று அவளுக்கே ஆச்சரியமாகவும்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

பிறகு அவன் அந்த குணசீலன் மட்டும் தன்னை அந்த மாதிரி நினைத்துப் பேசியிருக்கலாமாக்கும் என்று மீண்டும் மனம் கொதிக்கத் தொடங்கி விட்டிருந்தது.

''என்ன ரதிம்மா, என்ன இவ்வளவு யோசனை?''

''அதெல்லாமில்லையே ஆன்ட்டி.''

''சரிதான். நம்பிக்கறேன். ஏன், குணா ஏதாவது சொல்லிட்டானா? சொல்லு. அவன நான் ஒரு கை பாக்...''

''அச்சச்சோ! அதெல்லாம் ஒண்ணுமில்லயே ஆன்ட்டி.''

''சரிதான், இங்க வாடாம்மா. நான் குடுக்கறதயெல்லாம் அப்படியே ஒவ்வொன்னாக் கொண்டு போய் டேபிள் மேல வெச்சுட்டு வந்துட்றியா?''

சுசீலா அழைக்கச், சென்று உதவினாள் ரதி.

ஆனால் அவளுடைய மனம் மட்டும் குணசீலனையே சுற்றிக் கொண்டிருந்தது.

தன்னையெப்படி அவன் அப்படியெல்லாம் எண்ணிக் கேட்கலாமென்று நினைக்க நினைக்க மனம் ஆற மறுத்தது.

''இரு. குணாவைப் புடிச்சு நல்லாக் கேக்கறேன். அவன் கீழே வரட்டும்...''

''ஐயோ! ஏன் ஆன்ட்டி, அவரெல்லாம் ஒண்ணும் சொல்லல.''

''அப்ப நீ சொல்றத நான் நம்பலாம்.''

''நிச்சயமா ஆன்ட்டி.''

''சரிதான். வாடாம்மா. இத மட்டும் கொண்டு வந்து டேபிள் மேல வெச்சுடு.''

''டிபனெல்லாம் ஆயிடுச்சு போலிருக்கு ஆன்ட்டி?''

''ஆமாம் ரதிம்மா. இனி சாப்பிட உக்கார்றது தான் மீதி.''

''வேலைக்கு யாரும் இல்லையா ஆன்ட்டி?''

''இல்லமா. நான் செஞ்சுக்கறேன். அப்படியாவது ஏதாவது வேலைய செஞ்சுட்டிருக்கலாமேன்னு தான், எல்லா வேலைகளையும் வேலைக்காரங்கள செய்யச் சொல்லிட்டு அப்புறம் சுகர், பிரஸர்னு நாம எதுக்கு டாக்டர் கிட்டப் போயிட்டிருக்கணும், சொல்லு.''

''ஆனாலும் கஷ்டந்தான ஆன்ட்டி?''

''இதுல என்னமா கஷ்டமிருக்கு. ப்ளேன் பண்ணிக்கிட்டு அப்புறமா வேல செய்யறதுனால சமையல் வேலை



ஜாலியா இன்ட்ரஸ்டிங்கா தான் இருக்கு. அதோட பொழுதும் போகாம பகல்ல தூங்கறது, வெட்டி நியாய மடிக்கறதுன்னு மத்த பிரச்சனைகளுக்கும் கூட வழியில்ல பாரு.''

''அது சரிதான். ஆனாலும் வேலைக்காரங்களே இருந்தாலும் கூட நீங்க அதையெல்லாம் செய்ய மாட்டிங்க ஆன்ட்டி.''

''ஓ, சர்ட்டிபிகேட்டா. எனிவே தேங்க்ஸ்.''

''ஆனா, சரியா சொல்லணும்னா நாம செஞ்சா உப்பு, காரம் எண்ணெயெல்லாம் குறைவா சேர்ப்போம். அதே சமயம் டேஸ்ட்டாவும் இருக்கும்.''

''நாமளே செஞ்சு பரிமாறுறதுல இருக்கற திருப்தியே தனிதான் ரதிம்மா.''

''அது சரிதான் ஆன்ட்டி.

''ஆனாலும் நீங்க கிரேட் ஆன்ட்டி, கிராமத்துலயெல்லாம் கூட வேலைக்கு ஆள் வெச்சுக்கறாங்க. ஆனா நீங்க இவ்வளவு பெரிய வீட்ட மெயின்டெய்ன் பண்றதோட சமைக்கற வரைக்கும் எல்லாத்தையுமே நீங்களே செய்யறீங்கன்னா, பிரமிப்பா இருக்கு ஆன்ட்டி.''

''பின்ன, ஐம்பத்தஞ்சு வயசாகியும் கூட உடம்பக் கச்சிதமா எந்தவொரு நோயுமில்லாம வெச்சிருக்கறதுக்கு வேற என்ன ரகசியம் இருக்க முடியும்னு நினைக்கற?''

வளத்திலும் குணசீலனின் குடும்பம் தங்களை விடப் பல மடங்கு உயர்ந்ததென்று தான் விளையாட்டாக ஏதோ பேசி விட்டிருந்ததற்கு நேற்று தந்தை சொன்னது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது ரதிக்கு.

''அப்ப அங்க ஊர்ல வீட்டு வேலைக்கு ஆள் இருக் காங்களா?''

''இல்ல ஆன்ட்டி, ஆனா வெளிய வாசல் கூட்டிப் பெருக்கி சாணம் போட்டு வழிக்கறதுக்கு மட்டும் தின மும் ஒரு அம்மா வந்து செஞ்சு குடுத்துட்டுப் போவாங்க.''

''அதுக்கு வேணும் தான. அதோட பாட்டிக்கும் வய சாச்சல்ல. செய்ய முடியணுமே.''

''அச்சச்சோ, அவங்களும் அப்படியே உங்கள மாதி ரியே தான்னு வெச்சுக்கோங்களேன். எல்லாத்துக்கும் மேல யாராவது வயசாயிடுச்சுன்னு சொல்லிடுவாங்க ளோன்னு பயந்துட்டே எல்லா வேலையும் இழுத்துப் போட்டுத் தானே செஞ்சுடுவாங்க ஆன்ட்டி.''

''அப்ப உனக்கு எந்த வேலையும் குடுக்க மாட்டாங் கன்னு சொல்லு.''

''அப்பிடியும் சொல்லிட முடியாது ஆன்ட்டி. சமை யல் எல்லாம் எனக்கும் முழுக்கக் கத்துக் குடுத்துட் டாங்க. அப்பப்ப நான் கத்துக்கிட்டத மறந்துடக் கூடா துன்னு பக்கத்துல நின்னுட்டு என்ன செய்யச் சொல்லு வாங்க.''

''அப்ப, சமைக்க வேற செய்வியா நீ?''

''ஓ, ஆனா சாப்புட்றவங்க தான் பாவம்.''

''அதுக்கென்னமா செய்ய முடியும், எல்லாமே அனு பவத்துல வர்றது தான. அதோட நீ நிச்சயம் நல்லாத் தான் செய்வ.''

''சரிதான் ஆன்ட்டி. ஒரு நாளைக்கு என் கையால சமைக்கறேன். சாப்டுட்டு அதுக்கப்புறமா சொல்லுங்க.''



''அதுக்கென்ன, சந்தோஷமா செய்யலாம். அப்புறம் ரதிம்மா, இந்தா இந்தத் தண்ணி ஜக்கையும் டம்ளர்களை யும் கொண்டு போய் டேபிள் மேல வை.''

''சுசீ...''

''வாங்க, இப்பதான் வர்றீங்களா? என்ன இன்னைக்கு ரொம்ப நேரமாயிடுச்சு போல?''

''அது சரிதாம்மா!'' என்றவர் புன்னகையுடன் ரதியைப் பார்க்க, தானும் பதிலுக்குப் புன்னகை செய்தாள் ரதி.

''ம், அப்புறம் இவ ரதி, ரகுநாத் அண்ணாவோட பொண்ணு.''

மனைவி சொல்ல, ''நினைச்சேன்!'' என்றவர், ''எப்படிமா இருக்க?'' என்று கேட்டார்.

''நான் நல்லார்க்கேன் அங்கிள். நீங்க எப்படியிருக் கீங்க?''

''எனக்கென்னமா நல்லார்க்கேன். நீ சொன்னப்ப நானும் கூட என்னவோன்னு நினைச்சேன் சுசீ. 'அந்த வானத்துத் தேவதையே அப்படியே பூமிக்கு இறங்கி வந்துட்ட மாதிரி தான் இருக்கா ரகுநாத் பொண்ணு!'' என்று முதல் நாள் மனைவி சொல்லியிருந்ததைத் தானும் ஒப்புக் கொண்டார் சுந்தரமூர்த்தி.

''அச்சச்சோ! நிஜமாவே, அப்படியா ஆன்ட்டி சொன் னீங்க?''

ரதி கேட்க, ''இன்னும் கூட ஏதேதோ சொன்னாம்மா. ஆனா எம் மனசுல இது மட்டும் தான் பதிஞ்சது!'' என்றார் அவர்.

''இருந்தாலும் இது உங்களுக்கே கொஞ்சம் ஓவரா இல்லையா ஆன்ட்டி?''

''நிச்சயமா இல்லமா. உன் ஆன்ட்டி எதையுமே கொஞ்சம் மிகைப்படுத்திச் சொல்லித் தான் நான் பாத்திருக்கேன். ஆனா உன் விஷயத்துல ரொம்பவும் குறைச்சு தான் சொல்லியிருக்கா.''

''ஐயோ! அங்கிள், நீங்களுமா?''

''அப்புறம் தாத்தா, பாட்டி எல்லாரும் நல்லாக்காங்களாம்மா?''

''நல்லாக்காங்க அங்கிள்...''

''போய் எல்லாரும் என்ன பண்ணிட்டிருக்காங்கன்னு ஒரு கண் பாத்துட்டு, அப்படியே சாப்பிடவும் அழைச்சுட்டு வந்துட்றயா ரதி?''

''சரி ஆன்ட்டி.''

''ஓ ஆரம்பிச்சுட்டயா?'' என்ற கணவனைப் புரியாமல் பார்த்தார் சுசீலா.

''இல்ல, அவங்க வந்தே ரெண்டு நாள் தான ஆச்சு. அதுக்குள்ள ஏன் ஊருக்கு அனுப்ப ட்ரை பண்ற?''

''ஏன், நானெப்ப அவங்கள...''

''பின்ன அவங்கள சாப்பிடத் தான அழைச்சுட்டு வரச் சொன்ன?''

கணவனின் கேலி புரிய, ''வேண்டாங்க. அப்புறம் நல்லாக்காது!'' என்றார் சுசீலா.

''அடடா, என் சுசீக்கு அதுக்குள்ள என்ன கோபம்...''

''ம்கூம். இனி என்ன தாஜாப் பண்ணினாலும் வேலையாகாது. உங்களுக்கு இன்னைக்கு சாப்பாடு கட். அவ்வளவுதான்.''



''இப்படி ஒரேயடியா சொன்னா என்னமா பண்ணுவேன். கொஞ்சம் கன்ஸிடர் பண்ணு.''

''ஆமாம் ஆன்ட்டி. அங்கிள் பாவம்! உண்மைய சொன்ன ஒரே காரணத்துக்காக அவரக் கோவிச்சுக்காதீங்க.''

''அப்படிப் போடு ரதிம்மா. ஆமாம், உங்க ஆன்ட்டியோட சமயலப் பத்தி உனக்கும் தெரிஞ்சு போச்சா?''

சுசீலா விளையாட்டுக்கு இருவரையும் முறைக்க, ''எதுக்கும் கொஞ்சம் பின் விளைவுகளை யோசிக்கலாமே அங்கிள். அவசரப்பட்டுப் பேசிட்டுக் கடைசில புவ்வாவுக்கு...''

''அதுக்காக நானும் பாவமில்லையாம்மா! எத்தன நாளைக்கு தான் என்னோட ஆதங்கத்த மனசுக்குள்ளேயே வெச்சுட்டிருக்க முடியும் சொல்லு?''

''பாவம், நீங்க கேக்கறதுலயும் நியாயமிருக்கற மாதிரி தான் அங்கிள் படுது. ஆனாலும்...''

''ஏதோ போனாப் போகுது, உனக்குச் சாப்பாடு குடுக்கலாம்னு தான் இருந்தேன் ரதி. ஆனா நீ அவர் கூட சேந்து பேசினதுக்கப்புறம் இனி உனக்கும்...''

''ஐயோ, ஆன்ட்டி! அவசரப்பட்டு எதயும் சொல்லிடாதீங்க. நான் வேணும்னா என்னோட எதிர்ப்ப வாபஸ் வாங்கிக்கறேன்.''

''ம்கூம், டூ லேட்...''

''ப்ளீஸ் ஆன்ட்டி, எதுக்கும் கன்ஸிடர் பண்ணுங்களேன்.''

''சரி. பாக்கலாம்.''

''நிச்சயமா இல்லமா. உன் ஆன்ட்டி எதையுமே கொஞ்சம் மிகைப்படுத்திச் சொல்லித் தான் நான் பாத்திருக்கேன். ஆனா உன் விஷயத்துல ரொம்பவும் குறைச்சு தான் சொல்லியிருக்கா.''

''ஐயோ! அங்கிள், நீங்களுமா?''

''அப்புறம் தாத்தா, பாட்டி எல்லாரும் நல்லாக்காங்களாம்மா?''

''நல்லாக்காங்க அங்கிள்...''

''போய் எல்லாரும் என்ன பண்ணிட்டிருக்காங்கன்னு ஒரு கண் பாத்துட்டு, அப்படியே சாப்பிடவும் அழைச்சுட்டு வந்துட்றயா ரதி?''

''சரி ஆன்ட்டி.''

''ஓ ஆரம்பிச்சுட்டயா?'' என்ற கணவனைப் புரியாமல் பார்த்தார் சுசீலா.

''இல்ல, அவங்க வந்தே ரெண்டு நாள் தான ஆச்சு. அதுக்குள்ள ஏன் ஊருக்கு அனுப்ப ட்ரை பண்ற?''

''ஏன், நானெப்ப அவங்கள...''

''பின்ன அவங்கள சாப்பிடத் தான அழைச்சுட்டு வரச் சொன்ன?''

கணவனின் கேலி புரிய, ''வேண்டாங்க. அப்புறம் நல்லாக்காது!'' என்றார் சுசீலா.

''அடடா, என் சுசீக்கு அதுக்குள்ள என்ன கோபம்...''

''ம்கூம். இனி என்ன தாஜாப் பண்ணினாலும் வேலையாகாது. உங்களுக்கு இன்னைக்கு சாப்பாடு கட். அவ்வளவுதான்.''



''இப்படி ஒரேயடியா சொன்னா என்னமா பண்ணுவேன். கொஞ்சம் கன்ஸிடர் பண்ணு.''

''ஆமாம் ஆன்ட்டி. அங்கிள் பாவம்! உண்மைய சொன்ன ஒரே காரணத்துக்காக அவரக் கோவிச்சுக்காதீங்க.''

''அப்படிப் போடு ரதிம்மா. ஆமாம், உங்க ஆன்ட்டியோட சமயலப் பத்தி உனக்கும் தெரிஞ்சு போச்சா?''

சுசீலா விளையாட்டுக்கு இருவரையும் முறைக்க, ''எதுக்கும் கொஞ்சம் பின் விளைவுகளை யோசிக்கலாமே அங்கிள். அவசரப்பட்டுப் பேசிட்டுக் கடைசில புவ்வாவுக்கு...''

''அதுக்காக நானும் பாவமில்லையாம்மா! எத்தன நாளைக்கு தான் என்னோட ஆதங்கத்த மனசுக்குள்ளேயே வெச்சுட்டிருக்க முடியும் சொல்லு?''

''பாவம், நீங்க கேக்கறதுலயும் நியாயமிருக்கற மாதிரி தான் அங்கிள் படுது. ஆனாலும்...''

''ஏதோ போனாப் போகுது, உனக்குச் சாப்பாடு குடுக்கலாம்னு தான் இருந்தேன் ரதி. ஆனா நீ அவர் கூட சேந்து பேசினதுக்கப்புறம் இனி உனக்கும்...''

''ஐயோ, ஆன்ட்டி! அவசரப்பட்டு எதயும் சொல்லிடாதீங்க. நான் வேணும்னா என்னோட எதிர்ப்ப வாபஸ் வாங்கிக்கறேன்.''

''ம்கூம், டூ லேட்...''

''ப்ளீஸ் ஆன்ட்டி, எதுக்கும் கன்ஸிடர் பண்ணுங்களேன்.''

''சரி. பாக்கலாம்.''

''அடடா! ஆதரவு குறைஞ்சுடுச்சே. அப்ப நானும் பேசினதயெல்லாம் வாபஸ் வாங்கிக்கறேனேம்மா!'' என்று சுந்தரமூர்த்தி தனது மனைவியைப் பார்த்துச் சொல்ல, ''ம்கூம். நீங்க இவ்வளவு பேசினதுக்கு உங்களுக்குக் குறைஞ்சது ஒரு வாரத்துக்காவது சாப்பாடு கட் தான். அதுல மாற்றமே இல்ல!'' என்றார்.

''பாவம் ஆன்ட்டி, அங்கிள்! அப்படித்தான் கொஞ்சம் கன்ஸிடர் பண்ணுங்களேன்.''

''அப்படிங்கற?''

''ம்.''

''சரி விடு. போனாப் போகுது. சாப்பாடு போட்றேன்.''

''ஏதோ என்னால முடிஞ்ச அளவுக்குப் பேசி இறங்கி வர வெச்சுட்டேன். இனி பாத்து நடந்துக்கோங்க அங்கிள்.''

புன்னகையுடன் ரதி சொல்ல, ''அது சரிதான். என் சுசீயோட சமையல் பிரமாதமா தான் இருக்கும். விளையாட்டுக்குன்னாலும் குறை சொன்னது என்னோட தப்புதான்!'' என்று ஒப்புக் கொண்டார் சுந்தரமூர்த்தி.

''என்ன அங்கிள் நீங்க? உங்களுக்காக அதுவும் நீங்க சொல்றதையெல்லாம் உண்மைன்னு நினைச்சுட்டு நான் என்னவெல்லாம் பேசிட்டேன்...''

''என்ன ரதிம்மா பண்றது, உன் ஆன்ட்டியோட பார்வைல முப்பது வருஷத்துக்கு முன்னாடியே கவுந்துட்டேன். சரி, ஒரு நாளாவது கொஞ்சம் மாத்திப் பேசிப் பாக்கலாமேன்னு ஒரு சின்ன முயற்சி எடுத்தேன். ஆனா உன் ஆன்ட்டிகிட்ட ஒண்ணும் வேலையாகல. வழக்கம் போல அவ ஜெயிச்சுட்டா!'' என்ற கணவனின்



பார்வையில் சுசீலாவின் முகம் லேசாகச் சிவந்து விட்டிருக்க,

''ஓஹோ! அப்படியா அங்கிள் சேதி!'' என்று நன்றாகவே சிரிக்கத் தொடங்கி விட்டிருந்தாள் ரதி.

ரதியின் புன்னகையில் மற்ற இருவரும் கூட சிரித்து விட்டிருக்க, சில வினாடிகளில் முயன்று புன்னகையைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொண்டு, ''பாவம் ஆன்ட்டி! அப்படித்தான் அங்கிளக் கொஞ்சம் கன்ஸிடர் பண்ணுங்களேன்!'' என்று பணிவுடன் விளையாட்டாகக் கேட்டுக் கொண்டாள்.

''சரிதான் வாயாடி. நீ போய் எல்லாரையும் சாப்பிட அழைச்சுட்டு வா.''

''இதோ போறேன். இதுதான் சாக்குன்னு நான் இல்லேன்னாலும் அங்கிளத் திட்டக் கூடாது ஆன்ட்டி. சொல்லிட்டேன்,'' என்று சொன்ன ரதி, ''அப்படி ஏதாவது சொன்னாலும் எங்கிட்ட சொல்லுங்க அங்கிள்!'' என்று விட்டுப். புன்னகையுடன் அங்கிருந்து ஓடியே விட்டிருந்தாள்.

''இப்படி சிரிச்சு ரொம்ப நாளாச்சுமா!'' என்று சுந்தரமூர்த்தி மனைவியைப் பார்த்துச் சொல்ல, ''அது சரிதான்!'' என்று தானும் ஒப்புக் கொண்டார் சுசீலா.

''ஆனாலும் அந்தச் சின்னப் பொண்ணுக்கு முன்னாடி நீங்க என்னவெல்லாம்...''

''ம்... என்ன?''

''இருங்க. உங்கள கவனிச்சுக்கறேன்!'' என்று மனைவி புன்னகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு சொல்ல,

''அது சரிதாம்மா. அப்படியே மத்த விஷயத்துலயும் கூட நீ கொஞ்சம் என்ன கவனிச்சுக்கிட்டா நல்லாத் தான் இருக்கும்!'' என்ற கணவனின் பார்வையில் சுசீலாவின் முகம் மீண்டுமொரு முறையும் சிவந்து போயிற்று.



# 6

''வாங்க, வாங்கமா.''

ரகுநாத்தும், அவரைத் தொடர்ந்து அவரது பெற்றவர்களும் வர, சுசீலாவும் சுந்தரமூர்த்தியும் அவர்களைப் புன்னகையுடன் வரவேற்றனர்.

''வாங்க. உக்காருங்க.''

ரகுநாத்தும், கருணாகரனும் சுந்தரமூர்த்தியுடன் ஹாலில் அமர்ந்து விட்டிருக்க, மங்களத்தைத் தன்னுடன் உள்ளே அழைத்து வந்திருந்தார் சுசீலா.

''உக்காருங்கம்மா. அப்புறம் உங்களுக்குச் சென்னை பிடிச்சிருக்கா?''

சுசீலா கேட்க, ''அதெல்லாம்மா. ஏன் ரதி பொறக்கறதுக்கு முன்னாடி வரைக்கும் நாங்களும் சென்னைல தான இருந்தோம்!'' என்றார் அவர்.

''அது சரிதாம்மா, அவரு சொல்லியிருக்காரு.''

''நீயே தனியே எல்லா வேலையும் செஞ்சியாமே சுசீலா. இப்பதான் ரதி சொன்னா. தெரிஞ்சிருந்தா நானும் உதவிக்கு வந்திருப்பேன்.''



''அதெல்லாம் ஒண்ணுமில்லமா. எவ்வளவு வேலைகள் இருந்தாலும் தனியாவே செஞ்சு, பழகிடுச்சு.''

''பரவாயில்ல. பாராட்ட வேண்டிய விஷயம் தான்.''

''இதுல என்னமா இருக்கு? அதோட வீட்டு வேலைகளும் இல்லேன்னா பொழுது போறதுக்கு வழியில்லாமப் போயிடும்.''

''அது சரிதான். அப்புறம் உனக்கு ரெண்டு பசங்க தானம்மா?''

''ஆமாம்மா.''

''பெரிய தம்பிக்குக் கல்யாணமாயிருக்கும்னு நினைக்கறேன்.''

''இன்னும் இல்லமா.''

''பாத்துட்டிருக்கீங்களா?''

''ஒரு விதத்துல அப்படிக் கூட எடுத்துக்கலாம்.''

''நீ என்ன சொல்ற, எனக்குப் புரியல?''

''அவனுக்கு ஏனோ யாரையும் புடிக்க மாட்டேங்கிது! நாங்களும எப்ப நேரம் வரும்னு காத்துக்கிட்டிருக்கோம்மா.''

''என்ன இப்படிச் சொல்ற? நீங்க எடுத்துச் சொல்ல வேண்டியது தான?''

மங்களம் அம்மா கேட்க, என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் பார்த்தார் சுசீலா.

பூனைக்கு யார் மணி கட்டுவது?

அவனிடம் அப்படியெல்லாம் இலகுவாகப் பேச முடிந்தால்தான் பரவாயில்லையே.

சரியாக அதே நேரம் ரதியும் உள்ளே வர, ''வாடாம்மா. வந்து உக்காரு!'' என்று அழைத்தார் அவர்.

''அவங்கப்பா சொன்னாக் கூடவா கேக்க மாட்டார்?''

''சொல்லிக் கேக்கலேன்னா அப்புறம் நம்ம வார்த்தைகளுக்கு என்ன மதிப்பிருக்குன்னு சில விஷயங்கள்ள அவரும் எதுவும் சொல்லிக்க மாட்டார்மா.''

''வயசென்ன?''

''முப்பது நடந்துட்டிருக்குமா.''

''எப்படியோ சீக்கிரம் நல்ல நேரம் வரட்டும்.''

''உங்க வாய் முகூர்த்தம் பலிக்கட்டும்மா.''

குணசீலனைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருக்கிறார்களென்பது புரிய, ஏனோ ஒருவித இனம் புரியாத படபடப்பு வந்து ரதியை அலைக்கழிக்கச் செய்து கொண்டிருந்தது.

''ரதிக்கும் நீங்க பாக்கணும். படிப்ப முடிச்சுட்டா. இல்லையாம்மா?'' என்று எதையும் யோசிக்காமல் கேட்டிருந்த சுசீலாவிற்கு அதற்குப் பிறகோ இப்பொழுது ஏன் இந்தப் பேச்சை எடுத்தோம். தங்களுடைய மகனை மனதில் வைத்துக் கொண்டு தான் இதைக் கேட்டதாக அவர்கள் ஏதாவது தவறாக எண்ணி விடப் போகிறார்களென்று ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

''அது சரிதாம்மா. ஆனா அவங்கப்பாவுக்கு குறைஞ்சது இன்னும் ரெண்டு வருஷத்துக்காவது மகளக் கூடவே வெச்சுப் பாக்கணும்னு ஆச. பாக்கலாம்.''

சிறிது நேரத்தில் அனைவரும் சாப்பிட வந்து அமர்ந்திருக்க, பரிமாறினார் சுசீலா.



''குணா எங்கமா?''

ரகுநாத் கேட்க, ''கம்பெனி வரைக்கும் போயிருக்காண்ணா. ஒரு ஆடர் டெஸ்பேட்சாம். பக்கத்துல இருந்து அனுப்பிட்டு உடனே வந்துட்றேன்னு போய் ஒரு மணி நேரமாச்சு. இப்ப வந்துடுவான்!'' என்றார்.

''ஓ அப்ப இன்னும் வரலையா?''

கணவன் கேட்க, ''ஆறு மணிக்கே வந்துட்டுத் திரும்பவும் போயிருக்கான்,'' என்றார்.

''அது தெரியும்மா. போகும்போது சொல்லிட்டுத் தான் போனான்.''

ஆண்கள் மூவரும் பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருக்க, தனது பாட்டியைப் போலத் தானும் பேசாமல் சாப்பிடுவதில் கவனத்தைச் செலுத்தினாள் ரதி.

''நீங்களும் வாங்க ஆன்ட்டி.''

ரதி அழைக்க, ''நீங்க எல்லாரும் சாப்டுட்டு எழுந்தா தான் எனக்குச் சாப்பாடே இறங்கும்!'' என்று விட்டிருந்தார் சுசீலா.

''சாப்பிட்ட வரைக்கும் எல்லாமே ரொம்பப் பிரமாதமா இருக்குமா!'' என்று பாட்டி மங்களம் சொல்ல, தானும் அதையே ஆமோதித்தாள் ரதி.

சரியாக அதே நேரம் உள்ளே வந்த குணசீலன் அனைவரையும் வரவேற்றுப் பேசினான்.

முக்கியமாகப் பெரியவர்கள் இருவரிடமும் மிகவும் நன்றாகப் பேசினான்.

''நீயும் சாப்பிட வா குணா.''

சுசீலா ஆன்ட்டி அழைத்ததில் தனக்கு எதிரே இருந்த இருக்கையில் வந்து குணசீலன் அமர்ந்திருக்க, ரதிக்குத் தான் மனதிற்குள் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

''அப்புறம் சென்னை பழகிடுச்சா தாத்தா?''

''ம். ஓரளவுக்குப்பா. பேச்சுத் துணைக்குத் தான் இங்க அவ்வளவா ஆளில்ல!'' என்றார் கருணாகரன்.

''அது சரி. விட்டா உங்ககூட எந்நேரமும் யாராவது பேசிக்கிட்டே இருக்கணும்னு எதிர்பார்ப்பீங்க, நடக்குமா?''

''ஏன் பாட்டி, நீங்க இருக்கீங்க தான. பேசலாமே.''

''யாரு நானா? சென்னைக்கு வந்தாவது தப்பிச்சுக்க லாம்னு பாத்தா விட மாட்டியாப்பா?''

''என்ன தாத்தா, பாட்டி இப்படிச் சொல்றாங்க?''

''கேட்டுட்டு தான்ப்பா இருக்கேன். வீட்டுக்குப் போன துக்கப்புறம் ஏதாவது வந்து பேசட்டும். அப்புறம் பாத் துக்கறேன்.''

அனைவரும் சிரிக்க, ''என்னப்பா நீ, டின்னருக்குக் கூப்புட்டுக் கடைசில தாத்தாவுக்கும் பாட்டிக்குமிடையே சண்டைய வர வெச்சுடுவ போலிருக்கு!'' என்று மகனைப் பார்த்துக் கேட்டார் சுசீலா.

''அச்சச்சோ! நானென்னமா செஞ்சேன். ஆல்ரெடி அங்க பிரச்சன இருக்கும் போலிருக்கே!'' என்று பயந்தவன் போல குணசீலன் சொன்ன பாவனையில் மற்றவர்களுக்கு எப்படியோ, ரதிக்கு நன்றாகவே சிரிப்பு வந்து விட் டிருந்தது.



சரியாக அதே நேரம் ரகுநாத்தும் தன்னைப் பார்க்க, ''என்ன அங்கிள். அப்படியா?'' என்று கேட்டான்.

''நீங்க சொல்றது ஒரு விதத்துல சரிதான் குணா. சென்னை லைஃப்க்கு அவங்கின்னும் முழுமையா செட்டாகல. அதனால கொஞ்சம் கோபமா தான் இருக் காங்க.''

''பாவம் தாத்தா, பாட்டி ஏதோ ஒரு கோபத்துல தெரி யாம ஏதாவது சொல்லிட்டாக் கூடப் பாவம்னு விட்டுக் குடுத்துடுங்க. அதே மாதிரி நீங்களும் தான் பாட்டி...''

''அவங்களுக்குள்ள பிரச்சனையே இல்ல. ஆனா நீ புதுசா ஒரு பிரச்சனையக் கொண்டு வந்து, சமாதானமும் பண்ணி வெச்சுட்டயாப்பா?'' என்று சிரித்தார் சுசீலா.

''ஆமாம் ஆன்ட்டி, நீங்க சொல்றது சரிதான்!'' என்று வாய்வரை வந்திருந்த வார்த்தைகளை முயன்று கட்டுப் படுத்திக் கொண்டாள் ரதி.

''தம்பதின்னா சண்டையும், சமாதானமும் சகஜந் தானப்பா. ஆமா. நீ ஏன் கல்யாணமே பண்ணிக்க மாட் டேங்கறியாம்?''

மங்களம் கேட்க, ''அப்படின்னு யார் சொன்னாங்க பாட்டி?'' என்று கேட்டான் குணசீலன்.

''இத மத்தவங்க சொல்லணுமா, நானாத்தான் கேக்கறேன்.''

''நான் ஆசப்பட்டு என்ன பாட்டி பண்றது, பொண்ணு வேண்டாமா? அத வெளிய சொல்ல முடியுமா? அதான் கொஞ்சம் மாத்தி பில்டப் குடுத்துட்டிருக்கேன்.''

''சும்மா சமாளிக்கக் கூடாது.''

கருணாகரன் சொல்ல, "என்ன தாத்தா, நீங்களும் நம்ப மாட்டீங்களா?" என்றான்.

"அப்ப பொண்ணு தான் பிரச்சன, நீங்க கல்யாணத் துக்கு ரெடி?"

ரகுநாத்தும் கேட்க, "பின்ன நம்புங்க அங்கிள்!" என் றான்.

குணசீலனின் புன்னகையில் அவன் வேண்டுமென்றே தான் சொல்கிறான் என்பது நன்றாகவே புரிந்தது.

அதற்குள், "அப்ப எங்க வீட்டுப் பொண்ணு ரதியே இருக்கா. நீ என்ன சொல்ற?" என்று கேட்டிருந்தார் கருணா கரன்.

தாத்தா கேட்டு விட்டிருக்க, அங்கிருந்த அனைவருமே ஒரு சேர நிமிர்ந்து பார்த்தனர்.

அதே சமயம் கிட்டத்தட்ட அனைவரின் முகங்களுமே ஒருவித சந்தோஷத்தில் மலர்ந்திருந்தன, ரதியையும் குணசீலனையும் தவிர.

தாத்தாவைத் தொடர்ந்து அனைவருமே தன்னைப் பார்க்க, குணசீலனுக்கும் உடனே என்ன பதில் சொல்வ தென்று புரியாத நிலை.

அதெல்லாம் சில வினாடிகள் தான்.

ஆனால் அதுவரை தங்களது மகனின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சுசீலாவும், சுந்தரமூர்த்தியும் அதுக்கு நாங்க குடுத்து வெச்சிருக்கணுமே என்று சந் தோஷமாகச் சொல்லி விட்டிருந்தனர்.

உடனே கருணாகரன் நிமிர்ந்து மகனைப் பார்க்க, அந்தப் பார்வை என்னை மன்னித்து விடு என்று கேட் காமல் கேட்பதைப் போலிருந்தது.



ஆனால் அதெல்லாம் ரகுநாத்தின் பார்வையில் கூடப் பட்டிருக்கவில்லை.

கிட்டத்தட்ட அனைவருமே தங்களுடைய சம்மதத் தைத் தெரிவித்து விட்ட பிறகும், தான் பேசாமல் இருப்பது சரியல்ல என்று தோன்றி விட்டிருக்க, "குணா மாதிரி ஒரு மாப்பிள்ளைய யாராவது வேண்டாம்னு சொல்லுவாங்களா? எனக்குப் பரிபூர்ண சம்மதம்!" என்று சந்தோஷமாகச் சொல்லி விட்டிருந்தார்.

ரகுநாத்தும் தனது சம்மதத்தைத் தெரிவித்து விட் டிருக்க, அனைவருடைய முகங்களிலுமே அளவு கடந்த ஆனந்தம்.

இப்பொழுது ஒட்டு மொத்தப் பார்வையும் குணசீல னின் மேலிருக்க, "எனக்கும் சம்மதம்!" என்றான் அவன்.

இப்படி அனைவருமே மிகுந்த சந்தோஷத்திலிருக்க, ரதியின் உள்ளம் மட்டும் ஒரு வித வேதனையில் கொதித்துக் கொண்டிருந்தது.

சம்மதமா என்று தன்னிடமும் ஒரு வார்த்தை கேட்க வேண்டுமென்று யாருக்குமே தோன்றவில்லையே என்று அவளுடைய உள்ளம் கலங்கி விட்டிருந்தது.

இடையில் சுசீலா ஆன்ட்டியும், சுந்தரமூர்த்தி அங்கிளும் அதைக் கேட்க எத்தனையோ முறை முயன்றும், தனது வீட்டுப் பெரியவர்கள் அதைக் காதில் கூட வாங்கிக் கொள்ளாமல் வேறு பேசுவது தெரிந்தது.

இப்படி மனப் போராட்டத்தில் இருந்தவளுக்குத் திடீரென்று, "ரதிக்குச் சம்மதமான்னு தெரிஞ்சுக்கணுமே!" என்ற குணசீலனின் குரல் கேட்டது.

அதற்குள் தனது தந்தை வேறு எதையோ பேசிப் பேச்சை மாற்றி விட்டிருக்க, அவர் வேண்டுமென்றே அப்படிச் செய்ததை ஏனோ ரதியால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாது போயிற்று.

தனது தந்தை எப்பொழுது இந்த மாதிரி மாறிப் போனார், சிறு சிறு விஷயங்களில் கூடத் தன்னுடைய விருப்பம் கேட்டு அதன்படி அனைத்தையும் செய்வாரே என்று நெஞ்சம் கலங்கி விட்டிருந்தது.



# 7

என்ன முயன்றும் ரதியால் நடப்பைச் சுத்தமாக ஜீரணித்துக் கொள்ளவே முடியாது போயிற்று.

தனது தந்தை ஏன் இப்படி மாறிப் போனாரென்ற எண்ணமே அவளைச் சற்றும் நிம்மதியில்லாமல் தவிக்கச் செய்து கொண்டே இருந்தது.

எப்படியோ மற்றவர்கள் பார்க்கத் தனது முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டு தன்னுடைய அறைக்கு வந்து சேர்ந்திருந்தாள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு இல்லாத தாயின் நினைவில் மனம் மீண்டும் வேதனையடைந்திருக்க, இதோ இதோ என்று தயாராகிக் கொண்டிருந்த அழுகையை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.



வேகமாகச் சென்று தன்னுடைய அறையைத் தாழிட்டு விட்டு வந்தவள், ஆதங்கத்துடன் வந்து படுக்கையில் விழுந்திருந்தாள்.

சரியாக அதே நேரம் யாரோ வெளியே கதவைத் தட்ட, சில பெரிய மூச்சுக்களை எடுத்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டு சென்று கதவைத் திறந்தாள்.

வெளியே தந்தை நின்றிருக்க, இவர் ஏன் இப்பொழுது வந்தாரென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''வாங்கப்பா.''

''என்னடா தூங்கப் போய்ட்டயா?''

''ம்.''

''என்ன மன்னிச்சுடுமா.''

திடீரென்று தந்தை அப்படியொரு வார்த்தை சொல்வாரென்று அவள் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

''சொல்லுமா, என்ன மன்னிப்பியா?''

''எதுக்குப்பா?''

''உன்னோட சம்மதத்தக் கேக்காம நானே சரின்னு சொன்னதுக்கு.''

................

''என்ன கண்ணம்மா?''

தந்தையின் கரிசனத்தில் அவ்வளவு நேரம் மனதிற்குள் அடைத்து வைத்திருந்ததெல்லாம் வெளியே வந்திருக்க, தனது கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழத் தொடங்கி விட்டிருந்தாள்.

மகளின் அழுகையில் ரகுநாத் ஒரேயடியாக அதிர்ந்து போய் விட்டிருந்தார் என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

கடவுளே! பெரிய தவறைச் செய்து விட்டேனோ?

அங்கேயே மகளையும் ஒரு வார்த்தை கேட்டிருக்க வேண்டுமோ?

பாவம்! அவளுக்கும் தனியாக உணர்ச்சிகள் இருக்கும் தானே.

அதிலும் மற்றவர்கள் பார்க்கத் தான் மகளை மதிக்காமல் போனது தான் அவளுடைய இந்த ஆதங்கத்திற்கான காரணமோ?

சில வினாடிகளில் ஓரளவு அழுகை குறைந்து நிமிர்ந்த மகளைக் கலக்கத்தை மனதிற்குள் மறைத்துக் கொண்டு பார்த்தார் ரகுநாத்.

''மம்மி இல்லேன்னு நான் இன்னைக்கு வரைக்கும் ஒரு நாள் கூட ஃபீல் பண்ணினதே கிடையாதே டாடி! ஆனா இப்ப...''

''ரதி...''

''அவங்க இருந்திருந்தா ஒருவேள எம் மனசப் பத்தி யோசிச்சிருப்பாங்க. இல்லையா டாடி? ஆனா நீங்க யாருமே...''

''வேண்டாம் கண்ணம்மா.''

''மத்தவங்க மேல எனக்கு எந்த ஆதங்கமும் இல்ல. ஆனா நீங்க எப்படி டாடி...''

மகளின் அழுகையையும், ஆதங்கத்தையும் ஏனோ ரகுநாத்தால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாது போயிற்று.



அவளுடைய கண்களும் கலங்கி விட்டிருந்தன.

ஆனாலும் சில வினாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்டு மகளைப் பார்த்தார்.

''இந்த அப்பாவ மன்னிக்கவே முடியாதாடா?''

''பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க டாடி.''

''நான் செஞ்சதும் தப்பு தா...''

''ஒரு அப்பாவா மகளுக்கு என்ன செய்யணுமோ, அதத்தான நீங்க எனக்குச் செஞ்சிருக்கீங்க. விடுங்க...''

''இல்லமா, என்ன இருந்தாலும் நான் அப்படிச் செஞ்சிருக்கக் கூடாது.''

........

''ஆனாலும் தெரிஞ்சே தான் அப்படிச் செஞ்சேன்மா.''

அப்படிச் சொன்ன தந்தையை உடனே நிமிர்ந்து பார்த்தாள் ரதி.

''என்னடா இந்த அப்பான்னு பாக்கறையாம்மா. ஏன்னா குணா மாதிரி ஒரு மாப்பிள்ளையை எங்க தேடினாலும் கண்டு பிடிக்க முடியாதுமா...

''ஆமாம் கண்ணம்மா. நானும் எத்தனையோ வருஷமாத் தொடர்ந்து அந்தக் குடும்பத்தப் பாத்துட்டிருக்கேன். குணா மாதிரியே, அவரப் பெத்தவங்களும் பிரமாதமான மனுஷங்கமா.''

தந்தை ஏதோ சப்பைக் கட்டுகளைக் கட்டுவது போலிருந்தது ரதிக்கு.

தன்னிடம் விருப்பமா என்று வார்த்தை கேட்காமல் விட்டு விட்டு, இப்பொழுது அதற்காக ஏதேதோ செய்கிறாரோ என்றிருந்தது.

''கேட்டிருப்பேம்மா. ஆனா அந்த நேரத்துல அப்படி யொரு பேச்சு வந்தது. உனக்கு ரொம்பப் பெரிய அதிர்ச்சிங்கறது உம் முகத்தப் பாத்ததுல தெரிஞ்சது. அதோட நீ ரொம்பவும் பதட்டமா வேற இருந்த.''

..............

''அதுலயும் இந்த மாதிரி முடிவுகளையெல்லாம் கொஞ்சம் பொறுமையா யோசிச்சு தான் எடுக்கணும். ஆனா அந்த நேரத்துல உனக்கு அதுக்கு வழியில்லாமலும் போயிடுச்சு.

''அதோட அப்ப நீ இருந்த நிலமைல சம்மதமான்னு உங்கிட்ட கேட்டிருந்தாலும் நிச்சயம் உன்னால எந்தப் பதிலையும் சொல்லியிருக்க முடியாது. முக்கியமா நல்ல பதில சொல்லியிருக்கவே மாட்ட.''

''குணாவப் பெத்தவங்களும் சம்மதம்னு அவங்க மகனோட வாயிலிருந்து வர்ற ஒரு வார்த்தைக்காக எவ்வளவு வருஷங்களா அதுவும் எவ்வளவு ஆவலாக் காத்துட்டிருக்காங்க தெரியுமா?

''அப்படியிருக்கும்போது நான் அப்ப உங்கிட்ட கேட்டு திடீர்னு அப்படியொரு பேச்சு வந்த அதிர்ச்சியில நீ அபசகுனமா எதையாவது சொல்லிட்டா என்ன பண்றதுன்னு ஒரே யோசனையாயிடுச்சுமா.

''உன் குணத்துக்கும் உனக்கும் குணா நூறு சதவிகிதம் பொருத்தமானவர் கண்ணம்மா. டாடி உனக்குக் கெடுதல் செய்வேனா, சொல்லு?''

''அதனால தான் உங்கிட்ட பொறுமையா இந்த மாதிரி எடுத்துச் சொல்லிக்கலாம்னு அப்ப எதுவும் கேக்கலமா.



''என்னடாம்மா...''

''நீங்க சொன்னா சரிதான் டாடி.''

''அப்ப உனக்குச் சம்மதமா?''

''சொல்லத் தெரியல டாடி.''

''ஒருவேளை நான் அவசரப்பட்டுட்டேனோ? எதுக்கும் இன்னும் நல்லா யோ....''

''ப்ளீஸ் டாடி விட்டுடுங்க.''

''எதமா?''

''உங்க கவலைய.''

''அப்ப உனக்குச் சம்ம...''

''அதான் சொன்னேனே டாடி. எனக்குத் தெரியலேன்னா, தெரியாத விஷயத்துக்குக் கருத்து எப்படிச் சொல்ல முடியும் சொல்லுங்க?''

''நான் சொல்றத இப்ப உன்னால முழுசாப் புரிஞ்சுக்க முடியாதுமா. ஆனா நீ அந்தக் குடும்பத்துக்கு மருமகளாகப் போறத நினைச்சா எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?''

..................

''குணத்துலயும் சரி, வளத்துலயும் சரி, அவங்க பக்கத்துல நாம நிக்கக் கூட முடியாதுமா. அதுலயும் அவங்க எளிமை...''

''சரிதான் டாடி, எனக்காக நீங்க இனி கவலைப்படாதீங்க. பெரியவங்க நீங்க எல்லாரும் சொல்லும்போது அதுக்கு மேல எனக்கு என்ன...''

''அப்ப எம்மேல உனக்கு வருத்தமில்லையேம்மா?''

''இல்ல டாடி.''

''எனக்காக....''

''என்ன டாடி, சொல்லுங்க?''

''இல்ல, குணா வீட்ல எல்லாரும் ரொம்ப சந்தோஷமா இருக்காங்கமா. நீயும் அவங்க கூட நல்ல விதமாப் பேசணும்மா...''

''நிச்சயமா டாடி.''

''சரிடாம்மா. தேவையில்லாம மனசப் போட்டுக் குழப்பிக்காம நல்லபடியா படுத்துத் தூங்கு. எல்லாம் நல்லபடியா நடக்கும்.''

தந்தை சொல்ல, சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் ரதி.

ஒரு அடி எடுத்து வைத்திருந்த தந்தையின் நடையில் தெரிந்த அந்தத் தளர்வு தான் ஏதோ மிகப் பெரிய தவறைச் செய்து விட்டதைப் போல அவர் இன்னும் மனதிற்குள் வருந்துவதைக் காட்டிக் கொடுத்திருந்தது.

''எனக்கு இப்ப எல்லாக் குழப்பமும் தீர்ந்துடுச்சு. நீங்களும் போய்க் கவலைப்படாமப் படுத்துத் தூங்குங்க டாடி!'' என்று விட்டிருந்தாள்.

''சரிதான் கண்ணம்மா.''

''எங்க சிரிங்க பார்க்கலாம்...'' என்று ஏதேதோ சொல்லித் தந்தையைச் சிரிக்க வைத்திருந்த ரதி,

''ம். இப்பதான் குட் டாட்!'' என்று தந்தையின் கையில் முத்தமிட்டிருந்தாள்.

''இனி சந்தோஷத்துக்கு என்னமா குறைவு? அதுதான் பிரமாதமான மாப்பிள்ளை கிடைச்சுட்டாரே. அதுலயும்



நீ எப்பவும் என் பக்கத்துலயே வேற இருக்கப் போறியே! அதுக்கும் மேல இனி வேறென்ன வேணும்?'' என்று விட்டு சந்தோஷமாகத் தந்தை செல்ல, அவர் சென்ற திசையையே பார்த்தபடி அப்படியே சிறிது நேரம் நின்று விட்டிருந்தாள் ரதி.



# 8

''ரதி!''

''என்ன பாட்டி?''

''வாடாம்மா, உக்காரு. வா.''

''என்ன பாட்டி, சொல்லுங்க?''

''நீ ரொம்பவும் அதிர்ஷ்டக்காரி, தெரியுமா?''

''ஏன் பாட்டி?''

''மாப்ள ராஜா மாதிரி ஜம்முன்னு இருக்காரும்மா. அவரப் பெத்தவங்களுக்கோ அவர விடவும் பிரமாதமான குணம். எல்லாத்துக்கும் மேல உங்கப்பா ஆசப்பட்ட மாதிரியே நீ எப்பவும் உங்கப்பா பக்கத்துலயே வேற இருக்கப் போற...''

''ஏன் எங்க எல்லார் கூடவும்னு சேத்தே சொல்லுங்களேன்.''

''அது சரிதான் பாப்பா. அப்புறம் இனிமேல் நீ உன் விளையாட்டுத் தனத்தை யெல்லாம் கொஞ்சம் மூட்ட

கட்டி வெச்சுடணும். சின்னப் பொண்ணு மாதிரி தாம் தூம்னு குதிக்கக் கூடாது. சத்தம் போடக்கூடாது. முக்கிய மாப் பெரியவங்களுக்கு...''

தாயின் இவ்வளவு அறிவுரைகளுக்கு இப்பொழுது அவசியமே இல்லையோ என்று ரகுநாத்தால் நினைக் காமல் இருக்க முடியவில்லை.

எதுவும் வித்தியாசமாகத் தெரிந்து விடாதபடி, ''ரதி! கொஞ்சம் குடிக்கத் தண்ணி குடுக்க முடியுமாம்மா?'' என்று மகளை அங்கிருந்து அனுப்பி விட்டிருந்தார்.

மகள் உள்ளே சென்றிருக்க, திரும்பித் தாயைப் பார்த்தார்.

''அப்புறம் அம்மா...''

''என்னப்பா?''

''ரதிக்கு நீங்க சொல்லிக் குடுக்கற அறிவுரைகள் எல்லாமே ரொம்பவும் அவசியமானது தாம்மா. ஆனாலும் இப்ப எதுவும் சொல்ல வேண்டாமே.''

''ஏம்பா, அப்படியென்ன நான் தப்பாப் பேசிட்டேன்?''

''என்னமா நீங்க, ஏற்கெனவே அவ இப்பக் கல்யாணம் வேண்டாம்னு சொல்லாத குறை. அப்படியிருக்கும் போது நீங்க நல்லதுக்காகவேன்னாலும் எதையாவது சொல்லி...''

''ஏன் நீ கூட உன் மகளுக்கு இப்பக் கல்யாணம் வேண்டாம்னு தான் சொல்லிட்டிருந்த! ஆனா எப்படி இப்படி திடீர்னு மனசு மாறின?''

''அதத்தான் நான் ஏற்கெனவே சொன்னேனேம்மா. இதவிட எல்லா விதத்துலயும் பிரமாதமான ஒரு



சம்பந்தத்த ரதிக்குக் கொண்டு வர முடியுங்கற நம்பிக்கை எனக்கில்ல...''

''சரியா புரியுது. விடு. குழந்த வர்றா.''

''டாடி, இந்தாங்க தண்ணி.''

மகள் கொடுத்த தண்ணீர் சொம்பை வாங்கித் தாகத் தைத் தீர்த்துக் கொண்டு மீண்டும் அதை மகளிடம் கொடுத்தவர், ''அப்புறம் ரதிம்மா...'' என்று எதையோ சொல்ல வந்தார்.

''என்ன டாடி, சொல்லுங்க?''

''காலைல மாப்பிள்ளை வீட்டுக்குப் போய்ப் பேசிட்டு தான் வர்றேம்மா.''

''சொல்லுங்கப்பா.''

''நிச்சயதார்த்தத்தை இந்த வாரப் புதன்கிழமை வெச்சுக் கலாம்னு சொல்றாங்க. எங்க எல்லாருக்குமே சம்மதம். நீ என்ன சொல்ற?''

''இத ரதிகிட்ட கேட்டா அவ என்ன பதில் சொல் லுவா?'' என்ற மங்களத்தைத் தொடர்ந்து, தானும் அதையே தான் சொன்னாள் ரதி.

''இதுல நான் சொல்ல என்ன இருக்கு டாடி. பெரிய வங்க நீங்க எப்படிச் செஞ்சாலும் சரிதான்.''

ஏற்கெனவே முடிவு செய்தது போல திருமண நிச்சயம் அந்த வாரத்தில் குறிக்கப்பட்ட நாளில் இரு வீட்டு முக்கிய சொந்தங்களுடன் விமரிசையாக நடந்து முடிந்தது.

ரதியால் தான் இன்னும் கூட நடப்பை முழுமையாக நம்ப முடிந்திருக்கவில்லை.

மற்றவர்களுக்காக இயல்பாக இருப்பதைப் போலக் காட்டிக் கொண்டாள்.

சொந்தங்கள் ஏதேதோ சொல்லச் சொல்ல அவர்களுடைய விருப்பத்திற்குத் தக்கவாறு இன்முகத்துடன் நடந்து கொண்டாள்.

விசேஷம் கேள்விப்பட்டு இடையில் ஒரு முறை தனது அண்ணன் ரகுநந்தன் வந்து தன்னைப் பார்த்து விட்டுச் செல்ல, அது மட்டும் மனதிற்குக் கொஞ்சம் ஆறுதல் அளிக்கக் கூடிய ஒன்றாக இருந்தது.

தந்தை பிறந்த வீட்டுச் சீர் என்று கணக்கு வழக்கில்லாமல் எதையெதையோ வாங்கிக் குவித்துக் கொண்டே இருக்க, போதாக் குறைக்குப் பாட்டியும் தாத்தாவும் வேறு தங்களுடைய பேத்திக்கென்று செய்த நகைகளை அமைதியாகப் பார்த்த வண்ணம் இருந்தாள் ரதி.

''உனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்ல போல?''

பாட்டி கேட்க, பதறிப் போனாள் ரதி.

கடவுளே! அவ்வளவாக எதையுமே பெரிதாக எடுத்துக் கொள்ளாத பாட்டியே இப்படிக் கவனித்துக் கேட்கிறார் என்றால், இனி மற்றவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா என்றிருந்தது.

இத்தனை நாட்களும் எப்படியோ, இனி கண்டிப்பாகத் தான் சற்றுக் கவனத்துடன் தான் நடந்து கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

''இஷ்டமில்லேன்னா அத ஒரே வார்த்தைல சொல்லியிருக்க மாட்டேனா பாட்டி? ஆனா என்ன திடீர்னு இவ்



வளவு சீக்கிரம் கல்யாணம் முடிவாகும்னு நான் நினைச்சுக் கூடப் பார்த்திருக்காததால் ஒரு சின்ன அதிர்ச்சி. அவ்வளவுதான்!'' என்றாள்.

மேலும் ஒரு வாரமும் சென்றிருந்தது.

திருமணத்திற்கு இன்னும் பத்து நாட்களே இருந்தன.

திருமண அழைப்பும் கூட கிட்டத்தட்ட முடியும் தருவாயில் இருந்தது தெரிந்தது.

இடையில் இரண்டு முறை மட்டுமே ரதி குணசீலனைப் பார்க்க நேர்ந்திருந்தது. அதுவும் மற்றவர்களுக்கு முன்னிலையில்.

தன் வயதையொத்தவர்களென்று யாரும் இல்லாததால் தான் கேலி கிண்டலுக்கும் இடமில்லாது போயிற்றோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

திருமணப் பெண்ணிற்குரிய ஆவல், கனவுகள் என எதுவுமே இல்லாமல் சாதாரண நாட்களில் இருப்பது போலத் தான் இப்பொழுதும் இருப்பது அவளுக்குமே கொஞ்சம் ஒரு மாதிரியாகத் தான் இருந்தது.

என்ன மற்றவர்கள் பார்க்கக் கொஞ்சம் புன்னகையை முகத்தில் பூசிக் கொண்டாள். அவ்வளவே.

அதுவும் கூட அவசியப்படும்போது மட்டுமே.

''ரதி!''

சமையலறையில் வேலையாக இருந்தவள் தந்தையின் குரல் கேட்டு வெளியே வந்தாள்.

''என்ன டாடி, சொல்லுங்க?''

''ஒரு சின்ன உதவி செய்ய முடியுமா கண்ணம்மா?''

"சொல்லுங்க டாடி."

"கொஞ்சம் இந்த கவரக் கொண்டு போய் மாப்பிள்ள வீட்ல குடுத்துட்டு வர முடியுமாம்மா?"

................

"உனக்குக் கஷ்டமா இருந்தா வேண்டாம். என்ன நான் கொஞ்சம் அவசரமா வெளிய கிளம்பணும். அதான் போனா உடனே வர முடியாதுன்னு பாத்தேன். பரவா யில்ல. விடுமா. நானே குடுத்துட்டுக் கிளம்பிக்கறேன்."

"பரவாயில்ல. குடுங்க டாடி. நான் கொண்டு போய்க் குடுத்துட்றேன்."

"உனக்குக் கஷ்டமா இருந்தா வேண்டாம்மா."

"அச்சச்சோ! அதெல்லாம் ஒண்ணுமில்ல டாடி. கிச்சன்ல வேலையா இருந்தேன். பாட்டி வர்றதுக்குள்ள சமைச்சுட லாம்னு பாத்தேன். பரவாயில்ல. குடுங்க. சமையல் வேலையப் பாட்டி வந்து பாத்துக்கட்டும்."

"சரி கண்ணம்மா. இந்தா, இதக் கொண்டு போய் உங்க அத்தையோ, மாமாவோ யார் முன்னாடி இருக்காங் களோ அவங்ககிட்ட குடுத்துட்டு ஒரு ரெண்டு வார்த்த பேசிட்டு வந்துடு. அவங்களும் ரெண்டு நாளா உன்னப் பாக்க முடியலன்னு கேட்டுட்டே இருந்தாங்க."

மகளிடம் கவரைக் கொடுத்துவிட்டு, ரகுநாத் ஒரு திருமண வேலையாக உடனே கிளம்பி விட்டிருக்க, தானும் கவரைக் கொடுத்துவிட்டு வந்து விடலாமென்று கிளம்பினாள் ரதி.

ஆனால் சரியாக அதே நேரம் ஹாலில் இருக்கும் டெலிபோன் அழைக்க, சென்று எடுத்துப் பேசினாள்.



தன்னுடன் படித்த உயிர்த் தோழி அழைத்திருக்க, நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்து விட்டு அதற்குப் பிறகும் மனமே இல்லாமல் ரிஸீவரை வைத் திருந்தாள்.

இந்த மாதிரி குறிப்பிட்ட சிலர் பேசும்போது மட்டுமே திருமணம் எனும் எண்ணம் தனக்கு வருகிறதோ என்று ரதியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஏதோ யோசனையாக நிமிர்ந்தவள் அதற்குப் பிறகு தான் தந்தை கொடுத்து விட்டுச் சென்றிருந்த கவரைப் பார்த்தாள்.

அடடா! இதை மறந்தே போனோமே என்று உடனே எடுத்துக் கொண்டு ஓடினாள்.

கேட் திறந்தே இருக்க, வராண்டாவில் ஒற்றைக் கார் மட்டுமே நின்றிருக்கக் கண்டாள்.

இந்தக் கார் குணசீலனுடையதாயிற்றே.

அப்படியானால் அத்தையும், மாமாவும் இப்பொழுது வீட்டில் இல்லையோ?

ஒருவேளை அவர்... குணசீலன் தான் காரை மாற்றி எடுத்துச் சென்று விட்டானோ?

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, தயக்கத் துடன் வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தாள்.

ஹாலில் யாரையும் காணாமல் போக, ஆன்ட்டி என்று குரல் கொடுத்துப் பார்த்தாள்.

ம்கூம். இனி அத்தை என்று தான் அழைக்க வேண்டு மென்று பாட்டி சொன்னது நினைவிற்கு வந்தது.

மீண்டும் ஒரு முறையும் அழைத்துப் பார்த்தவள் இப்பொழுது என்ன செய்வது என்று புரியாமல் அப்படியே நின்று விட்டிருந்தாள்.

''யாரு?'' என்று கேட்டுக் கொண்டே மேலே தனது அறையிலிருந்து குணசீலன் எட்டிப் பார்க்க, ரதியின் நிலை இப்பொழுது மிகவும் பரிதாபத்திற்குரியதாகி விட்டிருந்தது.

கடவுளே! இப்பொழுது என்ன செய்வது, முக்கியமாக என்ன பேசுவதென்று தெரியாமல் விழித்தாள்.

அதே நேரம் குணசீலன் கீழே இறங்கி வந்து கொண்டிருப்பது தெரிய, அங்கிருந்து ஓடிவிடத் துடித்த கால்களை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தாள்.

''இந்தக் கவர டாடி குடுத்துட்டு வரச் சொன்னார்!'' என்று மெல்லிய குரலில் என்றாலும் ஒரு வழியாகச் சொல்லியே விட்டிருந்தாள்.

''எங்கிட்ட குடுக்கச் சொன்னாரா?''

''ம்கூம். அத்தையோ, மாமாவோ யாராவது இருப்பாங்க, குடுத்துட்டு வந்துடுன்னு...''

''அதான கேட்டேன்.''

குணசீலனின் குரலில் தெரிந்த ஏளனம் உடனே அவளை நிமிர்ந்து பார்க்கச் செய்திருந்தது.

''நம்ம கல்யாணப் பேச்சு நடந்த அந்த வாரமே நான் வெளியூர் போக வேண்டியதாயிடுச்சு. அதான் உங்கிட்ட பேச முடியல.''

அப்படிச் சொன்ன குணசீலனை இனியும் என்ன சொல்லப் போகிறானோ என்பதைப் போலப் பார்த்தாள் ரதி.



''அன்னைக்கு உங்கிட்ட விருப்பத்தக் கேக்காம விட்டுட்டாங்கன்னு நினைக்கறேன்.''

அப்பாடா! இப்போதாவது ஐயாவுக்கு அந்த நினைவு வந்ததே.

ஆனால் இப்போது வந்து என்ன பலன்? ஒருவேளை எனக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமில்லையென்று. இப்பொழுது தான் சொன்னால் உடனே திருமணத்தை நிறுத்தி விடுவானாமா?

தான் மனதிற்குள் நினைத்ததை அப்படியே படித்து விட்டவன் போல, ''அதுக்காகச் சம்மதமில்லேன்னு நீ சொன்னாக்கூட இப்ப இருக்கற நிலைமைல எதையும் செய்யறதுக்கில்ல!'' என்று விட்டிருந்தான்.

அதுதானே.

மற்றவர்களைப் போலவே தன்னுடைய மனதைப் பற்றி இவனுக்கும் தான் என்ன அக்கறை?

''ஏதோ உன் சம்மதத்தக் கேட்டுக்கலாம்னு தோணுச்சு. அவ்வளவுதான்.''

ஓ, தான் அவனைப் பிடித்திருப்பதாகச் சொல்வோமென்று எதிர்பார்த்தானோ?

''ஒருவேள ரொம்பவும் முக்கியமான காரணம் ஏதாவது இருந்தா வேணும்னா, உனக்காக நான் எதையாவது செய்ய முடியுமான்னு பாக்கறேன்.''

அப்படி எதை முக்கியமான காரணமாக எடுத்துக் கொள்வானென்று தெரியவில்லையே!

அப்படி ஏதாவதொரு காரணத்தைத் தான் சொல்லி விட்டால்...

எது எப்படியோ அவன் இந்த அளவிற்கு இறங்கி வந்து பேசுவது அவளுக்கு உள்ளுக்குள் மிகப் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது.

''ஆனாலும் அன்னைக்கு வீட்டுக்குப் போனதுக்கப்புறம் அங்கிள் உங்கிட்ட சம்மதத்தக் கேட்டிருப்பார்னு நினைக்கறேன்.''

''சரி. உண்மையச் சொல்றேன். எனக்கு இந்தக் கல்யாணத்துல விருப்பமில்ல. உங்களால எனக்கு என்ன உதவி பண்ண முடியும்?'' என்று கேட்டே விட்டிருந்தாள் ரதி.

''காரணம் வேணும்.''

''புரியல?''

''எதனால கல்யாணத்த வேண்டாம்னு சொல்றேங்கறது எனக்குத் தெரியணும்.''

''தெரிஞ்சுட்டா, ஹெல்ப் பண்ணுவீங்களா?''

அப்படிச் சொன்ன தன்னைக் குணசீலன் பார்க்க, ''கல்யாணத்த நிறுத்திடுவீங்களான்னு கேக்கறேன்!'' என்றாள்.

என்னதான் எதையுமே யோசிக்காமல் வெகு சாதாரணமாகக் கேட்டிருந்தாலும் இந்தத் திருமணத்தில் எத்தனை பேருடைய உழைப்பும் சந்தோஷமும் கலந்திருக்கிறதென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''வாய்ப்பே இல்லை.''

குணசீலனின் பதிலில் இப்பொழுது அவனை ஏளனத்துடன் பார்த்தது ரதி.

சரிதான். இவனுக்கு ஆரம்பத்திலிருந்து அனைத்துமே விளையாட்டாக இருக்கிறது.



சொல்கிற மாதிரி தன்னுடைய மனம் படும் பாடு பற்றி இவனுக்கென்ன?

எல்லாமே சரிதான். ஆனால் இந்த அளவிற்கு விளக்கமாக அனைத்தையும் கேட்டு விட்டுக் கடைசியில் ஏன் இப்படியொரு பதிலைச் சொல்ல வேண்டும்.

அதற்கு எதையும் கேட்காமலே இருந்திருக்கலாமே!

''எல்லாத்த விடவும் உன் சந்தோஷம் எனக்கு முக்கியம்தான். ஆனா அதுக்குன்னு கல்யாணத்தையெல்லாம் நிறுத்த முடியாது.''

சரிதான். அதை இந்த அளவிற்கு விளக்கமாகக் கேட்டுக் கொண்ட பின் தான் சொல்ல வேண்டுமாக்கும்.

''உனக்கு வேற எந்த விதத்துலயாவது என்னால உதவ முடியும்னா சொல்லு. முடிஞ்சத செய்யறேன்.''

அப்படிச் சொல்லிவிட்டு குணசீலன் தனது முகத்தைப் பார்க்க, விரக்தியுடன் சிரித்தாள் ரதி.

..............

''நான் கேட்டது காதுல விழுந்திருக்கும்னு நினைக்கறேன்.''

''திவ்யமா விழுந்தது.''

''அப்ப உனக்கும் முழுக்கச் சம்மதம். அப்படித்தான...''

''இல்ல. எனக்குச் சம்மதமில்ல.

''எனக்கு உங்களப் புடிக்கல.''

அப்படிச் சொன்ன தன்னைக் குணசீலன் பார்க்க, சொல்லு, இப்பொழுது உன்னால் எனக்கு எந்த விதத்தில் உதவ முடியும் என்பதைப் போலத் தானும் அவனைப் பார்த்தாள்.

''உனக்கு எல்லாமே விளையாட்டா இருக்கும்னு நினைக்கறேன். அதோட உனக்குப் பக்குவமும் பத்தல..''

''அடடா! இருந்திருந்து அந்த மாதிரியொரு பெண்ணையா நீங்க கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சிருக்கீங்க?''

எப்படியோ குணசீலனை மட்டம் தட்டி அவனை அசடு வழியச் செய்து விட வேண்டுமென்ற வேகம் ரதிக்கு.

ஆனால் அவனோ கூலாக, ''கிராமத்துல வளர்ந்திருக்க இல்லையா, போகப்போகப் பக்குவம் வந்துடும். கவலைப் படாத!'' என்று தனக்கே அறிவுரை சொன்னதை எரிச்சலைத் தனக்குள் மறைத்தபடி பார்த்துக் கொண்டு பேசாமல் நின்றிருக்க மட்டுமே அவளால் முடிந்தது.

''நம்பிக்கை ரொம்பவும் அதிகம் போலிருக்கு.''

''சரிதான், அப்படியொன்னு வந்துடவே கூடாதுங்கறதுல நீ ஷ்யூரா இருக்கும்போது அது எப்படி வரலாம் இல்லையா?''

''பிரமாதமாப் பேசறீங்க. உங்க லெவலுக்கு நானெல்லாம் ம்கூம் தலைகீழா நின்னாலும் கஷ்டந்தான்.''

''கடைசியா என்னதான் சொல்ல வர்ற?''

''ஏதோ நீங்க ரொம்பவும் அக்கறையாக் கேட்டதால நானும் ஆவலா ஏதேதோ எதிர்பார்த்துட்டேன். சரிதான் விடுங்க!'' என்று கையிலிருந்த கவரை டேபிளின் மீது வைத்திருந்த ரதி, நான் வர்றேன் என்று அவனுடைய பதிலுக்காகக் காத்திருக்காமல் உடனே வெளியே வந்து விட்டிருந்தாள்.



அங்கிருந்து வந்தவள் நேராகச் சென்றது தன்னுடைய அறைக்கு. சற்று அதிகப்படியாகத் தான் பேசிவிட்டு வந்து விட்டோமோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்,

உடனே தான் அப்படிப் பேசியதில் என்ன தவறு இருக்கிறதென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

அதிலும் குணசீலன் பேசாமல் இருந்திருந்தாலும் கூட இனி எப்படியோ?

ஆனால் என்னைத் திருமணம் செய்து கொள்ள நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்பதைப் போல அவன் பேசியதைத் தான் அவளால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாது போயிற்று.

அனைத்தும் சும்மா,

வெறும் சப்பைக் கட்டுகள்!

அவனுடைய காலடியில் விழத் தயாராக இருப்பாளென்று தன்னைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டிருப்பானாக இருக்கும்.

அதிலும் தனது சம்மதத்தைப் பற்றிப் பேசிய போது, அவனுடைய குரலில் தெரிந்த ஏளனத்தைத் தான் ஏனோ ரதியால் இன்னும் ஜீரணித்துக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை,

எப்படித் தன் மீது அவனுக்கு இந்த மாதிரியொரு மட்டமான எண்ணம் வரலாமென்று யோசித்து யோசித்தே மேலும் மனதை வருத்திக் கொண்டாள்.



# 9

சிறிது நேரத்தில் பாட்டி தாத்தாவின் பேச்சுக் குரல் கேட்க, வெளியே வந்து இயல்பாகப் பேசினாள்.

''என்னமா, என்னாச்சு?''

''என்ன தாத்தா?''

''டல்லாத் தெரியற?''

''என்னவோ தெரியல தாத்தா, சளிபுடிச்சு காய்ச்சல் வர்ற மாதிரியே இருக்கு.''

''என்னமா இப்படிச் சொல்ற?''

''ஏன் தாத்தா?''

''கல்யாணத்துக்கு இன்னும் ஒரு வாரம் கூட இல்ல, அதுக்குள்ள உடம்புக்கு ஏதாவது வந்துடப் போகுது.''

சரியாக அதே நேரம் ஒரு பெரிய கண்ணாடி டம்ளர் நிறையப் பழச்சாற்றைக் கொண்டு வந்து, ''குடி!'' என்று பேத்தியின் கையில் திணித்திருந்தார் மங்களம்.

''எதுக்கு பாட்டி இது?''

''ம், குடிக்கறதுக்கு.''

''இப்ப நான் கேட்டனா?''

''நீதான, ரொம்ப நல்லாக் கேப்ப. எனக்குக் கோபத்த வர வைக்காத ரதி. முதல்ல குடி.''



''வேண்டாம்.''

''என்னடி நீ? ஆள் பாக்கக் கல்யாணக் களை வந்து பிரமாதமா இருப்பேன்னு எதிர்பார்த்துட்டிருந்தா, நீ நாளுக்கு நாள் சோர்ந்து போயில்ல உக்காந்துக்கற...''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல.''

''முதல்ல குடி ரதிம்மா. தாத்தா சொல்ற மாதிரி இந்த சமயத்துல உடம்புக்கு ஏதாவது வந்துடப் போகுது.

''உங்க அப்பா வேற நான் உன்ன கவனிக்கறதே இல்லன்னு புலம்பிட்டே இருக்கான். பத்தாதத்துக்கு நீயும் படுத்தாத.''

குடிக்காமல் பாட்டி விடப் போவதில்லையென்பது தெரிந்து விட்டிருக்க, கண்ணை மூடிக் கொண்டு அந்தப் பழச்சாறு முழுவதையும் குடித்து முடித்திருந்தாள்.

''இப்ப என்ன ஆயிடுச்சு, இத முதல்லையே செஞ்சிருக்க வேண்டியது தான?'' என்று காலி டம்ளரை வாங்கிக் கொண்டு பாட்டி சென்ற திசையையே பார்த்த படி அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள் ரதி.

மனதிற்குப் பிடிக்காமல் அனைத்தையுமே கட்டாயத்தின் பேரில் செய்து கொண்டு, இது என்ன வாழ்க்கை என்று ஏற்கெனவே அவளுக்கிருந்த எரிச்சல் இப்பொழுது இன்னும் சற்று அதிகம் தான் ஆகியிருந்தது.

மேலும் ஐந்து நாட்களும் சென்றிருந்தன.

விடிந்தால் திருமணம்.

பாட்டியே சொன்னது போல முன்பை விடவும் உடலும் மனமும் இப்பொழுதெல்லாம் அதிகம் சோர்ந்து போவதை ரதியால் நன்றாகவே உணர்ந்து கொள்ள முடிந்தது.

உள்ளூர், வெளியூர் எனத் திருமணத்திற்காக நெருங்கிய சொந்தங்கள் நிறைய வந்திருந்ததில் வீடு கல்யாணக் களை கட்டிக் காட்சியளித்தது.

'நாளை இந்த நேரம்' என்று நினைத்துப் பார்த்த ரதிக்கு ஏனோ ஒரு இனம் புரியாத பயமும் படபடப்பும் வந்து நெஞ்சை அடைத்துக் கொண்டு விட்டாற் போலிருந்தது.

பேசாமல் தன்னுடைய அறைக்குச் சென்று கதவை உள்பக்கமாகத் தாழிட்டுக் கொண்டு படுக்கையில் விழுந்தாள்.

என்னவோ இனி அவ்வளவுதான் வாழ்க்கையே முடிந்து விடப் போகிறது என்ற எண்ணமே மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டே இருந்ததில், ஒரேயடியாகக் கலங்கிப் போனாள்.

கண்ணோரம் கரித்துக் கொண்டு வர, வேண்டாம் கண்கள் சிவந்து நாலு பேர் என்னவென்று விசாரிக்கும் படி வைத்துக் கொள்ளக் கூடாதென்று முயன்று கட்டுப் படுத்திக் கொண்டாள்.

தனது தாயின் போட்டோவை எடுத்து அதில் முகத்தை வைத்தபடி சிறிது நேரம் படுத்து விட்டிருந்தாள்.

இப்பொழுது மனம் முன்னைக்குச் சற்று அமைதியடைந்தாற் போலிருந்தது.

தன்னைக் காணாமல் யாராவது தேடி வந்து விடுவார்களோ என்ற எண்ணம் தோன்றியதில், உடனே எழுந்து சென்று கதவைத் திறந்து விட்டாள்.

பிறகு சென்று கைகால் முகம் சுத்தம் செய்து கொண்டு குளியலறையிலிருந்து வெளியே வந்தாள்.



அதே நேரம் தந்தை உள்ளே வந்திருக்க, ''வாங்கப்பா!'' என்றாள்.

தந்தையின் பார்வை தன்னை அளவிடுகிறதோ என்ற எண்ணத்தைத் தோற்றுவித்திருந்தது.

''என்ன டாடி?''

''என்னடா, என்ன பண்ணிட்டிருக்க?''

''ஃபேஸ் வாஷ் பண்ணிட்டு வந்தேன். உக்காருங்க டாடி. என்ன டாடி?''

''அது ஒண்ணுமில்லமா...''

''என்ன டாடி, சொல்லுங்க?''

''இல்ல, நீ ஏனோ கல்யாணக் களையே இல்லாமடல்லாவே இருக்கறதா எல்லாரும் பேசிக்கறாங்கமா. அதான் அப்படியான்...''

''அச்சச்சோ, என்ன டாடி நீங்க?''

மகளின் சிரிப்பில் தெரிந்த வித்யாசம் ரகுநாத்தின் கண்களில் படத் தவறவில்லை.

''நல்லது செய்ய நினைச்சு, நான் உனக்குப்...''

''ப்ளீஸ் டாடி, நான் நல்லா சந்தோஷமா தான் இருக்கேன்.''

''ஆனா பாத்தா எனக்குமே அப்படித் தெரியலையேம்மா.''

''என்னவோ தெரியல, இன்னைக்கு ரொம்பவும் அம்மா ஞாபகம் வந்துட்டே இருக்கு!'', என்றவளின் கண்கள் கலங்கி விட்டிருக்க, அதே நேரம் ரகுநாத்தின் கவனமும்

மகளின் படுக்கையிலிருந்த அவளுடைய தாயின் போட்டோவில் வந்து நிலைத்திருந்தது.

அதை ரதி தானும் கவனித்து விட்டுச் சென்று தனது தாயின் போட்டோவை எடுத்துப் பழையபடி அதனிடத்தில் வைத்தாள்.

''ஏம்மா, ஏன் திடீர்னு...''

''என்னவோ தெரியல டாடி. மனசுக்கு என்னவோ கஷ்டமா இருந்தது.''

''என்ன கண்ணம்மா?''

''அச்சச்சோ! நீங்க கவலைப்படற மாதிரியெல்லாம் ஒண்ணும் கிடையாது டாடி. வந்திருக்கறவங்க எல்லாரும் அம்மாவப் பத்தியே பேசிட்டிருந்தாங்களா...''

''புரியுது கண்ணம்மா.''

...............

''இந்நேரம் உன் அம்மா மட்டும் இருந்திருந்தா நமக்கெல்லாம் எவ்வளவு ஆறுதலாகவும், சந்தோஷமாகவும் இருந்திருக்கும். அதுக்கு நாம குடுத்து வெக்காமப் போய்ட்டோமே.''

''அதுக்கு மட்டும் தானா டாடி? அதுலயும் நான் அம்மாவோட முகத்த ஒரு தடவ கூடப் பாக்க முடியாத பாவியாயிட்டேனே...''

இந்த மாதிரியொரு கண்ணோட்டத்தில் தான் பார்த்ததே இல்லையே என்று நினைத்த ரகுநாத்திற்கு மகளின் வேதனை நெஞ்சை அறுப்பதாய் இருந்தது.

சில வினாடிகளில் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்த ரதி, தந்தையின் கண்களும் கலங்கியிருப்பதைக் கண்டாள்.



கடவுளே! தந்தையையும் சேர்த்து வேதனைப்பட வைத்து விட்டோமே என்று தன்னையே நொந்து கொண்டவளாய், வேண்டாம் டாடி விட்டுடுங்க என்றாள்.

சில வினாடிகளில் தானும் முயன்று நடப்பிற்கு வந்திருந்த ரகுநாத், ''நீ சந்தோஷமா சிரிச்சுக்கிட்டே இருக்கணும் கண்ணம்மா. இல்லன்னா இந்த அப்பா மன சொடிஞ்சு போயிடுவேன்!'' என்றார்.

தந்தையைச் சமாதானப்படுத்துவதற்காக, ''சரிதான்பா. இனிமேல் எனக்கும் தான் சந்தோஷத்துக்கு என்ன குறைவு?'' என்றாள்.

ஆனால் உள்ளுக்குள் மனமோ சரிதான் இனிமேல் துக்கத்திற்கு என்ன குறைவு என்று கேட்பதைப் போலிருந்தது.

''நீ எனக்காகச் சொல்லாதமா.''

''என்ன டாடி நீங்க...''

''பின்ன உன் முகம் வேற சொல்லுதே.''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல டாடி. நீங்க சந்தோஷமா நிம்மதியா இருக்கணும். அப்பதான என்னாலயும் சிரிச்சுக்கிட்டே இருக்க முடியும்!'' என்றாள்.

அதைத் தொடர்ந்து சில வினாடிகள் அமைதியாகக் கழிந்தன.

''மாப்பிள்ள நேத்து உன்னக் கேட்டார்மா. அவர் கடைசியா உன்ன எப்பப் பாத்தார்?''

''நாலு நாள் இருக்கும்பா.''

''சரிதான்மா. நேரத்துலயே சாப்டுட்டு மேல வந்து ரெஸ்ட் எடு. முடிஞ்ச அளவு சீக்கிரமாப் படுத்துக்கோ. காலைல நேரத்துல எழணுமில்லயா?''

''சரி டாடி.''

''அதோட கீழே இருந்தா யாராவது ஏதோ ஒண்ணு கேட்டுட்டே தான் இருப்பாங்க. அவங்களும் தான் என்ன செய்வாங்க பாவம். நாலு பேர் சேர்ந்தா எதையாவது பேசியாகணுமே.''

''சரிதான். நீங்க சொல்ற மாதிரியே செய்யறேன். அதே சமயம் நீங்களும் போய்ச் சாப்டுட்டு நேரத்துல தூங்கப் போற வழியப் பாருங்க. கல்யாண வேலைகள் எத்தனையிருக்கு. காலைல சுறுசுறுப்பா எழுந்து பாக்க வேண்டாமா?'' என்று கரிசனத்தில் தொடங்கி அதட்டலில் முடித்தாள்.

மகளின் பாவனையில் சிரித்து விட்டிருந்த ரகுநாத், ''சரி தான். இன்னைக்கு ஒரு நாளைக்கு தான, மிரட்டிக்கோ!'' என்றார்.

''ஏன் அப்ப நாளையிலிருந்து மிரட்ட மாட்டேனாக்கும்?''

''யாருக்குத் தெரியும், மாப்பிள்ள பக்கத்துல நாங்கெல்லாம் உன் ஞாபகத்துக்குக் கூட வருவமோ என்னவோ?''

''போங்க டாடி. நானொன்னும் அந்த மாதிரியெல்லாம் கிடையாது.''

''சரிதான். அதயும் பாத்துடலாம். விடு.''

''திவ்யமாப் பாருங்க.''

''மாப்பிள்ள சொன்னது கூட ஒரு விதத்துல சரிதான்.''

''என்ன சொன்னாரு?''

படபடப்பைத் தனக்குள் மறைத்துக் கொண்டு கேட்டாள் ரதி.



''உன்னப் பாத்த வினாடியே அப்படியே தல சுத்திப் போய்ட்டாராம். தாத்தாவுக்குத் தான் நன்றி சொல்லணும். இல்லன்னா இவ்வளவு சீக்கிரம் இப்படியொரு நல்லது நடக்குமான்னு சந்தோஷமா சொல்லிக்கிட்டார்.''

அது சரி. மிகவும் நன்றாகத் தான் தலை சுற்றிப் போனான். அதையும் தான் பார்த்தோமே.

ஒரு வார்த்தை பேசக்கூடக் காசு கேட்டதைத் தான் அவ்வளவு விரைவில் மறந்து போய் விட முடியுமா என்ன!

''என்னடாம்மா?''

''சரிதான், நாளைக்கு அத நான் அவர்கிட்டயே கேட்டு கன்ஃபார்ம் பண்ணிக்கறேன். விடுங்க.''

அதுவும் சரிதான் என்றவர், ''அதோட இன்னொன்னும் சொன்னாருமா!'' என்றார்.

ஆனால் இந்த முறை அதை என்னவென்று கேட்க ரதிக்குத் தோன்றியிருக்கவில்லை.

அது நிச்சயம் நல்லதாக இருக்காதென்று உள் மனம் அச்சுறுத்தியது.

''என்னமா, என்னன்னு கேக்க மாட்டியா?''

''சொல்லுங்க டாடி.''

''கிராமத்துலயே இருந்து வளந்ததால இந்தக் காலத்து நகரத்துப் பொண்ணுங்க மாதிரியெல்லாம் இல்லாம நீ ரெம்பவும் வெகுளியா இருக்கியாம். அந்த வெகுளித்தனமும், வெளிப்படையாப் பேசற குணமும் தான் அவர முதல்ல ஈர்த்ததாம்.''

ஏன் நாகரிகம் தெரியாத பட்டிக்காடு என்று வெளிப் படையாகவே சொல்ல வேண்டியதுதானே.

சரிதான். இந்த அப்பா தன்னிடம் புலம்புவதைப் போலவே, அவனிடமும் சென்று எதையாவது புலம்பி யிருக்கலாம். உடனே அவனும் இவருடைய குண மறிந்து இப்படியெல்லாம் சொல்லி விட்டிருக்கிறான்...

''என்னமா?''

தந்தையின் குரலில் நடப்பிற்கு வந்திருந்தவள், ''சரி தான் டாடி. இதயும் நாளைக்குக் கன்ஃபார்ம் பண்ணிட் றேன். விடுங்க,'' என்று சிரித்தாள்.

''அடடா, நான் சொன்னேன்னு கேள்வி மேல கேள்வி கேட்டு மாப்பிள்ளைய ஒரு வழி பண்ணிடாதமா. அப்புறம் என்ன இந்த மாமனார்னு எங்கூடப் பேசாமலே விட் டுடப் போறார்.''

தந்தை கேலியாகச் சொல்லிச் சிரிக்க, அந்த அள விற்கு அவனிடம் பேச முடிந்தால் தான் பரவாயில் லையே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''அது மட்டுமில்லமா. நீங்க நிம்மதியா சந்தோஷமா இருக்கணும். ரதியக் கண்ணுக்குள்ள வெச்சு நான் காப்பாத்துவேன்னு சொன்னாருமா.''

தந்தையின் குரலில் தெரிந்த பெருமிதம், ஏனோ உள் ளுக்குள் எரிச்சலையே வரவழைத்திருந்தது ரதிக்கு.

முதலில் அவன் இந்த மாதிரியெல்லாம், அதுவும் இந்த அளவிற்கு இறங்கி வந்து பேசக் கூடியவன் தானா என்று சந்தேகமாக இருந்தது.

ஆனாலும் தந்தையும் பொய் சொல்ல மாட்டாரே.



சரிதான். பொய் தான் சொல்ல மாட்டார். ஆனால் அவருடைய மரியாதைக்குரிய மாப்பிள்ளை சொல்வதை மிகைப்படுத்திச் சொல்லக் கூடியவர் தான்.

''மாப்பிள்ளையப் பத்தி எனக்கு நல்லாவே தெரி யும்மா. அவர் சொல்லாததையே செய்யறவர். அப்படி யிருக்கும்போது வெளிப்படையா அதுவும் எங்கிட்டயே இவ்வளவு சொல்லியிருக்கார்னா பாட்டியே சொல்ற மாதிரி நீ ரொம்பவும் அதிர்ஷ்டக்காரி தாம்மா!'' என்றார்.

''ஆனாலும்...''

''என்ன டாடி?''

''மாப்பிள்ள கொஞ்சம் கோபக்காரர்மா. ஆரம்பத்துல ரெண்டு பேரும் பரஸ்பரம் புரிஞ்சுக்க முடியாமக் கூடப் போகலாம். அந்த சமயத்துல அவர் ஏதாவது சொல்லிட் டாக் கூட நீ கொஞ்சம் விட்டுக் குடுத்துப் போயிடணும் கண்ணம்மா.''

ஏன் தான் மட்டும் தான் விட்டுக் கொடுத்துப் போக வேண்டுமாக்கும், மாப்பிள்ளைத் துரை விட்டுக் கொடுக்க மாட்டாராக்கும்.

''என்னமா...''

''சரிதான் டாடி. இந்த மண்டைக்குள்ள நல்லதையும் தான் கொஞ்சம் நினைச்சு சந்தோஷப்படலாமே. அத விட்டுட்டு ஏன் எப்பப் பாத்தாலும் பாவம் பிரச்சனை யவே போட்டு உருட்டணும், சொல்லுங்க,'' என்று தந்தையின் தலையைத் தொட்டுக் காட்டிக் கேட்டாள்.

''அது சரி, ஏதோ போனாப் போகுது. நம்ம அருமை மகள் என்னதான் பண்றான்னு பாக்க வந்த எனக்கு இனி இதுவும் வேணும் இன்னமும் வேணும்.''

தந்தை பதில் சொன்ன பாவனையில் சிரிப்பு வந்து விட்டிருக்க, ''சரிதான் டாடி. தேவையில்லாத கவலைகளை யெல்லாம் விட்டுட்டு சந்தோஷமாப் போங்க. நானும் இதோ வர்றேன்,'' என்று தலைமுடியைத் திருத்துவதற்காகச் சீப்பைக் கையில் எடுத்திருந்தாள்.

''சரிடாம்மா. வா, நான் போறேன்.''

தந்தை சென்றது தான் தாமதம், மீண்டும் அந்தப் பழைய வெறுமை வந்து ரதியைப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தது.

கடவுளே! இன்றுவரை ஏதோ தன்னளவிலேனும் நிம்மதியாக இருக்க முடிந்தது. ஆனால் இனி வரும் நாட்களில்...

அதே சமயம் வெளியே பாட்டி அழைக்கும் குரல் கேட்க, வர்றேன் பாட்டி என்று குரல் கொடுத்தாள்.



# 10

திருமண நாளும் இனிதே விடிந்தது.

ஒரு பெரிய மலையையே தனது தலையில் சுமக்கத் தயாராகிக் கொண்டிருப்பதைப் போலிருந்தது ரதிக்கு.

சுற்றியிருப்பவர்களின் பார்வைக்காகப் புன்னகையை விடாமல் முகத்தில் பூசிக் கொண்டாள்.

தாடை, முகமெல்லாம் வலித்த போதும், அதைப் பொருட்படுத்தினாளில்லை.



புது மணப் பெண் என்பதால் வெட்கம் எனும் போர்வையில் குனிந்து கொள்வது மேலும் வசதியாகிப் போயிற்று.

சொந்த பந்தங்கள் சூழ அழைத்துச் சென்று மணவறையில் அமர வைக்கப்பட்டவள், தொடர்ந்து வந்த சிறிது நேரத்தில் குணசீலனின் திருமதியாகிப் போனாள்.

கணவனின் முகத்தை ஒரு முறை பார்க்க நேர்ந்தவளுக்கு, அவனும் தன்னைப் போலவே சுற்றியிருப்பவர்களுக்காகத் தான் புன்னகையை முகத்தில் பூசிக் கொண்டிருக்கிறானோ என்று நினைக்கத் தோன்றியது.

ஏன் இவனுக்கென்ன, இவனுடைய கையையும் காலையும் யார் வந்து கட்டிப் போட்டு விடப் போகிறார்களென்று இப்படியிருக்கிறானென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனாலும் கணவனின் அருகாமையில் மற்ற தேவையற்ற சிறுசிறு பயங்களெல்லாம் நீங்கிக் கொஞ்சம் தைரியம் வந்து விட்டாற் போலவும், அதே சமயம் பாதுகாப்பாகவும் உணர்ந்தாள்.

இதுதான் தாலிக் கயிற்றின் மகிமையோ!

யதேச்சையாக நிமிர்ந்தவளுக்குத் தந்தை ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தது கண்களில் பட, ஆனாலும் இந்தத் தந்தை ஏன் தான் இப்படி இருக்கிறாரோ என்று ரதியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நேரம் போகப்போக மணவறைக்கு வந்து வாழ்த்துபவர்கள் குறைந்து கொண்டே வர, கணவனுடன் தனித்து விடப்பட்டதைப் போல ஒரு மாதிரியாக உணர்ந்தாள்.

பயமாகவும். இதற்கே இப்படியென்றால், இனிமேல்...

ரதி மனதிற்குள் எண்ணிப் பயந்து கொண்டிருந்தது போலவே, கணவனுடனான அந்தத் தனிமை சந்திப்பு ஒரு வழியாக வந்தே விட்டிருந்தது.

பாட்டி என்னென்னவோ அறிவுரைகளையெல்லாம் சொல்லியிருக்க, அவையனைத்தையும் கேட்க நேர்ந்த வளுக்கு ஏற்கெனவே இருந்த பயம் மேலும் பல மடங்கு அதிகமாகி விட்டிருந்ததென்று தான் சொல்ல வேண் டும்.

ஆனாலும் முயன்று அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு கணவனை எதிர் கொண்டாள்.

''பால்...''

இருந்த பயத்திலும் பதட்டத்திலுமாகத் தொண்டையை விட்டுக் குரல் வெளியே வருவேனா என்றது.

''அங்க வெச்சுடு.''

கணவனின் ஆறடி உயரத்திற்கும் சேர்த்து அவனை நிமிர்ந்து பார்த்துப் பேச வேண்டியிருந்தது ஏற்கெனவே அவளுக்கிருந்த படபடப்பை மேலும் அதிகப்படுத்தி யிருந்தது.

''ம், என்ன?''

''பாட்டி...''

''ம்.''

''உங்க கால்ல விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக்கச் சொன் னாங்க.''

தான் சொன்னதைக் கேட்டுச் சிரித்த கணவனைப் புரி யாமல் பார்த்தாள் ரதி.



ஆனால் உடனே, ''யார் வேணும்னாலும் அவங்கவங்க மனசுக்குப் பட்றதைச் சொல்லுவாங்க. ஆனா உன் மன சுக்கு என்ன படுதோ அத மட்டும் செய்!'' என்று விட் டிருந்தான்.

''அதோட...''

மீண்டும் அவன் ஏதோ சொல்ல வர, நிமிர்ந்து பார்த் தாள்.

அதே சமயம் கணவனும் தன்னையே பார்த்துக் கொண் டிருப்பது தெரிந்தது.

அவனுடைய பார்வை ஏதேதோ எண்ணங்களைத் தோற்றுவித்து விட்டிருக்க, தன்னால் இயன்ற மட்டும் நிமிர்ந்து நின்று அந்தப் பார்வையை எதிர் கொண்டாள் ரதி.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

அதற்கு மேல் முடியாமல் தனது கைவிரல்களைப் பார்ப்பது தான் மிக முக்கியம் என்பது போல, அவள் குனிந்து கொண்டு விட, ''அதோட எனக்கும் இந்த ஃபார்மாலிட்டிஸ் எல்லாம் பிடிக்காது!'' என்றான் குண சீலன்.

கணவனின் குரலில் ரதி மீண்டும் நிமிர்ந்து அவனைப் பார்க்க, ''உனக்குப் பிடிக்காத எதுக்கும் நான் உன்னக் கம்பல் பண்ண மாட்டேன். நீ உன் இஷ்டத்துக்கு ஃப்ரியா இருக்கலாம்!'' என்றான்.

''அது மட்டுமில்ல, உனக்கு என்னப் பிடிக்க அது எத்தன நாளானாலும் சரிதான், காத்திருப்பேன்!'' என்றும்.

ஓ, அன்று அவனைப் பிடிக்காதென்று தான் சொன்ன தற்காகத்தான் ஐயா இதையெல்லாம் சொல்கிறாராக்கும்.

சரிதான், ஏதோ இந்த அளவிற்கேனும் பெருந்தன்மை இருக்கிறதே.

''ஆனா...''

இன்னும் என்ன சொல்லப் போகிறான்?

''இதெல்லாம் நமக்குள்ள மட்டும் தான் இருக்கணும், நாலு பேருக்குத் தெரிஞ்சுட்டா அப்புறம் என்னக் குத்தம் சொல்லிப் பலனில்ல.''

அது சரி,

பிறகு திருவாளர் குணசீலனின் மீது மற்றவர்கள் வைத்திருக்கும் மதிப்பும் மரியாதையும் என்ன ஆவது?

அதிலும் ஐயா மகாமகா பெரிய மனிதராயிற்றே.

அதே நேரம் கணவனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட பார்வையை எதிர்கொண்ட ரதிக்கு, ஏனோ மனச்சாட்சி உறுத்தியது.

தனக்கு ஏன் கணவனின் மீது ஆரம்பத்திலிருந்தே இப்படியொரு வெறுப்பு என்ற எண்ணம் தோன்றியிருக்க, அது ஏனென்று நினைவு வந்திருந்ததில் மீண்டும் மனம் இறுகியும் போனது.

''நீயும் தூங்கு!'' என்று விட்டுக் கணவன் சென்று கட்டிலின் ஒரு பக்கமாகப் படுத்துக் கொண்டு விட்டிருக்க, அதற்குப் பிறகுதான் அதுவரை இருந்த இறுக்கம் தளர்ந்து ரதியால் மனம் நிம்மதியடைய முடிந்தது.

''உன் தலைக்குப் பக்கமா ஸ்விட்ச் இருக்கு. படுக்கும் போது லைட்ட ஆஃப் பண்ணிடு.''

கணவனின் குரலுக்கு அவளையறியாமலேயே தலையை ஆட்டியிருந்தாள்.



என்னதான் கணவன் ஒரு பக்கமாக அதுவும் திரும்பியே படுத்திருந்தாலும் ஒரே கட்டிலில் அவனுடன் படுக்க வேண்டியிருந்தது மிகுந்த படபடப்பை ஏற்படுத்தியிருந்தது.

சத்தம் செய்யாமல் கணவன் சொன்னது போல லைட்டை ஆஃப் செய்து விட்டுக் குறுகிப் படுத்திருந்தாள்.

எதையெதையோ எண்ணி மிகவும் பயந்து கொண்டிருந்தவளுக்கு இப்பொழுது எவ்வளவோ நிம்மதியாக இருந்தது.

தனது மனதைப் பற்றிய அக்கறையும் கணவனுக்கு இருக்கிறதென்று மனம் ஆறுதலடைந்திருந்தது.

ஆனாலும் அந்த ஏளனம்!

போதும் மனமே, இதற்கு மேல் எதையும் யோசிக்காதே.

பிறகு அதிசயமாகக் கிடைத்திருக்கிற இந்தக் கொஞ்ச நஞ்ச நிம்மதியும் கூட மீண்டும் காணாமல் போய் விடும்.



# 11

ரதி காலையில் கண் விழித்தபோது, அவளுடைய கணவன் படுக்கையில் இருக்கவில்லை.

வெளியே இன்னும் இருள் விலகாமல் இருந்தது தெரிந்தது.

கடிகாரத்தில் நேரம் பார்த்தாள். ஐந்தரை ஆகியிருந்தது.

குளியலறைக்குள் விளக்கு எரிந்து கொண்டிருப்ப திலிருந்து அவன் உள்ளே இருப்பது உறுதியானது.

குளித்துக் கொண்டிருப்பானோ?

இவ்வளவு அதிகாலையிலா?

தானும் உடனே எழுந்து விட வேண்டும் போல மனம் பரபரத்தது.

ஆனால் கணவனை எதிர்கொள்ள நேரிடுமே!

சரிதான். இன்னும் சிறிது நேரம் போகட்டுமென்று மீண்டும் கண்களை மூடிப் படுத்துக் கொண்டாள்.

தான் இன்னும் இப்படி முக்காடு போட்டுத் தூங்கிக் கொண்டிருப்பதை இந்நேரம் பாட்டி மட்டும் பார்க்க நேர்ந்தால் -

பெண்ணென்றால் பின் தூங்கி முன்னெழ வேண்டு மென்று எப்பொழுதும் சொல்லிக் கொண்டே இருப்பார் களே என்றிருந்தது.

இரவெல்லாம் நன்றாகத் தூங்கி விட்டிருந்ததாலோ என்னவோ மனதளவிலும், உடலளவிலும் சுறுசுறுப்பாக உணர்ந்தாள்.

சில நிமிடங்களில் குளியலறைக் கதவு திறக்கப்படும் ஓசை கேட்க, என்ன இவள் இன்னும் தூங்கிக் கொண டிருக்கிறாளென்று கணவன் தன்னை ஏதாவது நினைத் துக் கொள்வானோ என்று மனம் கிடந்து அடித்துக் கொண்டது.

தொடர்ந்து சில நிமிடங்களில் கதவைத் திறந்து கொண்டு கணவன் வெளியே செல்வதும் தெரிந்தது.



இனியும் தான் படுத்துக் கொண்டிருந்தால் நன்றாக யிருக்காதென்று தோன்றி விட்டிருக்க, உடனே எழுந்து விட்டிருந்தவள், வேகமாகச் சென்று காலைக் கடன்களை முடித்தாள்.

கீழே இறங்கி வந்த ரதி ஹால் சோபாவில் அமர்ந்து அன்றைய நாளிதழைப் படித்துக் கொண்டிருந்த தனது மாமா சுந்தரமூர்த்தியை முதலில் எதிர் கொண்டாள்.

''குட்மார்னிங்மா.''

மாமா காலை வாழ்த்துச் சொல்ல, தானும் புன்னகை யுடன், ''குட்மார்னிங் மாமா!'' என்றாள்.

சரியாக அதே நேரம் தனது அத்தையும் ஹாலுக்கு வர, அவருக்கும் காலை வணக்கம் சொன்னாள்.

''என்னமா, இதுக்குள்ள எழுந்து வந்துட்டே! இன்னும் கொஞ்ச நேரம் தூங்கியிருக்கலாமே.''

''அஞ்சு மணிக்கு எழலேன்னா பாட்டிகிட்ட அன் னைக்கு முழு நாளும் அர்ச்சனை வாங்கணும் அத்தெ. அதான் பழகிட்டேன்.''

''எதுக்கு? எழறதுக்கா இல்ல அர்ச்சனை வாங்கறதுக்கா?''

''அச்சச்சோ! எழறதுக்கு அத்தெ.''

''ஓ, ஆனா இங்க அந்த மாதிரி ரூல்ஸெல்லாம் எது வும் கிடையாது. நீ எப்ப வேணும்னா எழலாம்...''

''அடடா! இது தெரியாமப் போயிடுச்சே!'' என்று புலம்பு வதைப் போலச் சொன்ன மருமகளைப் பார்த்தார் சுசீலா.

''இல்ல, தெரிஞ்சிருந்தா இப்படி அடிச்சுப் புடிச்சு எழுந்து வந்திருக்க வேண்டியதில்ல.''

''அது சரிதான்.''

''சரி விடுங்க. நாளையிலிருந்து நீங்க சொல்ற மாதிரியே செஞ்சுக்கறேன். ஆனாலும் ஒரு சின்னச் சந்தேகம் அத்தெ.''

''என்ன?''

''இல்ல, மினிமம் பத்து மணிக்குள்ள எழுந்து வர ட்ரை பண்றேன் அத்தெ. ஒருவேள அதுக்கு மேலயும் ஒன்னோ ரெண்டோ மணி நேரம் லேட்டானா கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்க முடியுமா?''

''பாவமேன்னு கொஞ்சம் சுதந்திரமா விடப் பாத்தா தலைல ஒட்டு மொத்தமா மிளகாய் அரைச்சுட்டு அதுக்கு மேலயும் அட்ஜஸ்ட் பண்றதப் பத்திப் பேசறியா...''

''சரிதான். அப்ப ஒரு அரை மணி முக்கால் மணி நேரம் முடியுமா அத்தெ? எப்படியும் பதினோரு மணிக்குள்ள வந்துடப் பாக்கறேன்.''

''அவ்வளவுதானா மேடம், இல்ல... இனியும் ஏதாவது இருக்குங்களா?''

''அத விடுங்க அத்தை. இன்னும் நிறைய இருக்கு. அப்பப்ப ஒவ்வொன்னா சொல்றேன். இல்லன்னா பாவம் நீங்களும் கஷ்டப்பட்டு ஞாபகம் வெச்சுக்கணுமில்லையா?''

தங்களுடைய மருமகளின் பாவனையில் சுசீலா, சுந்தரமூர்த்தி இருவருமே சிரித்து விட்டிருந்தனர்.

''ஆனாலும் நான் இந்த அளவுக்கு ம்கூம் எதிர் பார்க்கல...'' என்று ரதி சொல்ல -

''இனியும் என்னமா?'' என்று கேட்டார் சுசீலா.



''இல்ல, அத்தைன்னா மிரட்டுவாங்க, கண்டிஷன் போடு வாங்கன்னு பாத்தா இப்படி அப்பாவியா இருக்கீங்க! ம்கூம்... இப்படியெல்லாம் இருந்தீங்கன்னா என்ன மேய்க்கறது கஷ்டம் அத்தை.''

''அது சரிதான். ஏதோ புது மருமகளாச்சேன்னு கொஞ்சம் பாவம் பாத்துட்டேன். விடு. இனி பாத்துக்கறேன்.''

''சரி தான். நானும் பாத்துக்கறேன்.''

ரதி சொல்ல, ''ம் இது...'' என்றார் சுந்தரமூர்த்தி.

''என்ன?'' என்று கேட்ட மனைவியிடம், ''இனிமேல் நானும் மருமக கட்சி. தெரிஞ்சுக்கோ!'' என்றார்.

''ஓ, கூட்டணியாக்கும்! சரிசரி.''

''என்ன அத்தை, பயமா இருக்கா?''

''யாருக்கு? எனக்கா?'' என்று பார்த்தவர்,

''இன்னைக்கு ஒரு நாளைக்குப் போனாப் போகுதுன்னு என் கையால காபி குடுக்கறேன். பிழைச்சுப் போ!'' என்று எழுந்து சமையலறைக்குச் சென்றார்.

''அடடா! நல்லவங்க தான் போலிருக்கே. நான்தான் தெரியாம அவசரப்பட்டுட்டேன்!'' என்று தனது மாமனாரைப் புன்னகையுடன் பார்த்தபடியே தானும் தனது அத்தையைத் தொடர்ந்து சமையலறைக்கு வந்திருந்தாள் ரதி.

''ஸாரி அத்தை.''

''திடீர்னு என்ன?''

''நான் பாட்டுக்கு ஏதேதோ பேசிட்டிருக்கேன்.''

''இப்படியிருந்தா தான் ரதிம்மா எங்களுக்கும் பிடிக்கும்.''

''அப்ப சரிதான். ஆமாம். வினய் எங்க அத்தை?''

''அப்பாடா! மேடம்க்கு இப்பதான் அவன் ஞாபகம் வந்ததா? அது சரி. இப்பவாவது வந்ததேன்னு சந்தோஷப் பட்டுக்க வேண்டியது தான்.''

''சொல்லுங்க அத்தை.''

''அவன் நேத்து சாயங்காலமே ஹாஸ்டலுக்குக் கிளம்பிட்டாம்மா.''

''ஏன்?''

''செமஸ்டர் எக்ஸாம் நடந்துட்டிருக்காம். முடிச்சுட்டு வந்து என் அண்ணி கூட சரிக்குச் சரி பேசிக்கிறேன்னு கிளம்பிட்டான்.''

''அடடா! தெரிஞ்சிருந்தா விஷ் பண்ணியிருந்திருப் பேனே.''

''உங்கூட சொல்லிட்டுத் தான் போவேன்னு ஒத்தக் கால்ல நின்னான். நீங்க கோவில்ல இருந்து வர்றதுக்கு இன்னும் லேட்டாகும்னு யாரோ சொல்லவும், போன்ல பேசறதா சொல்லிட்டுக் கிளம்பிட்டான்.''

''சரிதான், நானே அப்புறமாக் கூப்புட்டுப் பேசிட்றேன்.''

''கூப்புட்றதா இருந்தா மதியத்துக்கு மேல கூப்புடுமா. இப்ப எக்ஸாம்ல இருப்பான்.''

''சரிதான் அத்தை. நீங்க உக்காருங்க. நானே காபி கலந்துக்கறேன்.''

''இல்லடாம்மா, நீ உக்காரு. புது இடம். எதுவும் கைக் குக் கிடைக்காது!'' என்றவர் சில வினாடிகளில் சூடாக நுரை பொங்க ஆற்றிய காபி கப்பைக் கொண்டு வந்து மருமகளிடம் கொடுத்தார்.



''தேங்க்ஸ் அத்தெ.''

''அப்புறம் உனக்கு என்ன டிபன் புடிக்கும்?''

''எதுன்னாலும்...''

''ம்கூம், ஏதாவது ஒண்ணு ஸ்பெஷலா இருக்குமே, அத சொல்லு.''

''அப்பிடிப் பாத்தா இட்லி தான்.''

...............

''ஏன் அத்தெ சிரிக்கறீங்க?''

''அப்ப மேடம் அப்படியே உங்க வீட்டுக்காரர் மாதிரி யாக்கும்?''

அப்படிச் சொன்னவரைப் பார்த்தவளுக்கு அதற்குப் பிறகு தான் ஓ தனது கணவனுக்கும் ஃபேவரிட் டிபன் இட்லி என்பது நினைவிற்கு வந்தது.

''என்ன மேடம் பேச மாட்டேங்கறீங்க?''

''அப்படித்தான்னே வெச்சுக்கோங்களேன்.

''ஏன் அத்தை திரும்பவும் சிரிக்கறீங்க?''

''இல்ல, முன்ன எல்லாம் குணா கூட சரிக்குச் சரி பேசுவ...''

''ஓ, ஆனா இப்ப அப்படி இல்லேங்கறீங்களாக்கும்!''

''இனி அத நான் சொல்ல வேற செய்யணுமாக்கும்!''

''வேண்டாம், தப்புக் கணக்குப் போடாதீங்க.''

''ஓ அப்ப இனிமேலும் அப்படித்தான் பேசுவேங்கறியா? இரு. குணா வரட்டும்.''

"அச்சச்சோ! ஏன் அத்தை நீங்க வேற..." என்றவள், அதுவும் நேத்திருந்த டயர்டுக்குப் போனதும் படுத்ததுதான். அடிச்சுப் போட்ட மாதிரி தூங்கினேன்..."

யோசிக்காமல் அப்படிச் சொல்லி விட்டிருந்த ரதி, உடனே நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

கடவுளே! இருந்திருந்து இப்படி வாயை விட்டு விட்டிருக்கிறோமே என்றிருந்தது.

லேசாக அசடு வழிய நிமிர்ந்து தனது அத்தையைப் பார்த்தாள்.

அதே சமயம் தனது அத்தையின் முக பாவனையும் சில வினாடிகள் மாறிப் பின் மீண்டும் இயல்புக்கு வந்ததோ என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இல்லை, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.

அது தன் பிரமையே அன்றி வேறொன்றுமில்லை.

"அப்புறம் ரதி..."

"என்ன அத்தெ?"

"ஒன்பது மணிக்கு நாம எல்லாரும் நம்ம குல தெய்வக் கோவிலுக்குக் கிளம்பறோம்மா. வேண்டுதல் ஒண்ணு முடிச்சுட்டு வந்துடலாம்."

"சரி அத்தை."

"உன் பாட்டி, தாத்தா, அப்பா எல்லாருமே தான்."

............

"என்ன பாக்கற?"

"அவங்களுமா?"

"ஏன், வேண்டாமா?"



"அச்சச்சோ, வரட்டும் அத்தை!" என்று சந்தோஷமாகச் சொன்னாள் ரதி.

"என்னமா?"

"இல்ல, இப்பவே சொன்னாதான ஒன்பது மணிக்குள்ள கிளம்ப முடியும்..."

"அதெல்லாம், காலைல ஆறு மணிக்கே சொல்லியாச்சு."

"ஓ."

"உன் வீட்டுக்காரரும் இப்ப வந்துடுவார். நீயும் போய்ப் பட்டுச் சேல நகைகளையெல்லாம் எடுத்துப் போட்டுக்கிட்டு அப்படியே தேவத மாதிரி கிளம்பி வாற."

"ஓ அப்ப அதையெல்லாம் போட்டுக்கிட்டா தான் நான் தேவதையாக்கும்?"

"நான் என்ன பதில் சொன்னாலும் உனக்கு இனிக்காது, இத நீ வேற ஒருத்தர் கிட்டக் கேக்கணும்."

"அது யாரு அத்தை?"

"ம், முதல்ல காபியக் குடி வாயாடி. இல்லன்னா ஆறிடும்."

அத்தை தனது கணவனைக் குறிப்பிட்டுச் சொல்வது புரிய, ஏனோ நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது.

தனது அத்தை சொன்னது போலெல்லாம் செய்யப் பிடிக்காவிட்டாலும், அவருடைய பேச்சைத் தான் மீறுவதாக அவர் எடுத்துக் கொள்ளக் கூடாதென்று பட்டுச் சேலை அதற்குப் பொருத்தமாக நகைகள் என அனைத்

தையும் எடுத்துப் போட்டுக் கொண்டு கண்ணாடியில் பார்த்தாள்.

தலைக்குக் குளித்துத் தளரப் பின்னியதில் சிலுசிலு வென்று நீண்டு இடைவரை தொங்கிய கூந்தலும், சந்தன நிறத் தோலுக்கு ஏற்றவறு அடர்ந்த வண்ணத் தில் பட்டுச் சேலையும், அதற்குப் பொருத்தமாக அளவான நகைகளும் எனத் தன்னைப் பார்க்கத் தனக்கே மிகவும் பிடித்துப் போனது ரதிக்கு.

அதற்கு மேலும் சில ஒப்பனைகளைச் செய்து கொண்டு பார்த்தவளுக்கு, உண்மையிலேயே தான் தேவதையாகி விட்டோமோ என்று சிரிப்புக் கூட வந்து விட்டிருந்தது.

என்றுமில்லாத அதிசயமாக மிகவும் அக்கறையுடன் பார்த்துப் பார்த்து அனைத்தையும் செய்திருந்தவள், தேவதையாகவே ஜொலித்தாள்.

கணவனின் நினைவு வந்தது.

இந்தக் கோலத்தில் அவன் தன்னைப் பார்த்தால்...

உள்ளம் படபடவென்று அடித்துக் கொள்ள, ஒருவிதக் குற்றக் குறுகுறுப்பில் நெஞ்சம் பரபரத்தது.

இரவு கணவன் சொன்னது தான் நினைவிற்கு வந்தது.

தனக்குப் பிடிக்காத எதற்கும் தன்னை வற்புறுத்த மாட்டானாமே.

தனக்காக, அது எத்தனை நாட்களானாலும் காத்திருப்பா னாமே.

மற்றதெல்லாம் எப்படியோ, ஆனால் கணவன் இரவு இந்த மாதிரி சொன்னதிலிருந்து ரதியின் உள்ளமும் லேசாக அலை பாயத் தொடங்கி விட்டிருந்ததென்றால் அது சற்றும் மிகையல்ல.



தனது உள்ளம் மட்டும் அவனுக்குத் தெரிந்தால்,

நித்தமொரு நிறம் மாறுகிறாளே என்ன பெண் இவ ளென்று ஏளனமாக நினைத்துக் கொண்டு விட மாட் டானா?

ஏற்கெனவே அவனுக்குத் தன் மீது எந்தவொரு நல்ல எண்ணமும் இருப்பது போலத் தெரியவில்லை.

எதையெதையோ எண்ணி மீண்டும் கலங்கத் தொடங் கிய மனதை முயன்று ஒரு நிலைக்குக் கொண்டு வந் தாள் ரதி.

வேண்டாம்.

இனி அவசியமற்ற எதற்காகவும் நம்மை நாமே குழப்பிக் கொள்ளக் கூடாது.

மற்றவர்களிடம் போலவே கணவனிடமும் இயல்பாக நடந்து கொள்வோம்.

அதை அவன் எப்படி எடுத்துக் கொண்டாலும் சரி தான்.

தன் மீதிருக்கும் கோபத்தில் அவன் தொடக்கத்தில் வெறுப்பைக் காட்டினாலும் சரிதான்.

ஏன், நிச்சயம் அதுதான் நடக்கும்.

ஆனாலும் நாம் பொறுமையாக நின்று நம் மனதை, முக்கியமாகத் தான் முன்பு போல சிறு பிள்ளைத்தனமாக இனி நடந்து கொண்டு விட மாட்டேன் என்பதைக் கணவனுக்குத் தெரியப்படுத்தி விட வேண்டும்.

ஆனால் கணவனின் மனதை அறிந்திருக்காதவள் என்பதால் தான் நினைத்ததைச் செயல்படுத்துவது மிகவும் எளிது என்பதையும் அவள் அறிந்திருக்கவில்லை.

''அடடா!''

''என்ன அத்தை?''

''ஒரு வார்த்த தான் சொன்னேன். ஆனா இப்ப நிஜ தேவதையே தோத்துப் போய்டும் போலிருக்கே!''

ரதி வரவும், ''அம்மா, டிபன் ரெடியா?'' என்று குண சீலன் வரவும் மிகச் சரியாக இருந்தது.

''ரெடிப்பா!'' என்று மகனுக்குப் பதில் சொன்னவர், ''நீயும் டிபன் சாப்பிட வாம்மா!'' என்று மருமகளையும் அழைத்தார்.

''அப்பா சாப்டாச்சா?''

மகன் கேட்க, ''இல்லப்பா. இதோ அவரும் இப்ப வந் துடுவார்!'' என்றார்.

இயல்பாகத் தான் என்றாலும், கணவனின் பார்வை தன் மேல் விழுந்ததில், உள்ளுக்குள் நெளியத் தொடங்கி விட்டிருந்தாள் ரதி.

''நான் அப்புறமா சாப்புட்றேன் அத்தெ.''

''என்னது? கால் மணி நேரத்துல கிளம்பணும். வந்து உக்காரு.''

தனது அத்தை அப்படிச் சொன்னதில் உடனே அமர்ந்து விட்டிருந்தாள் ரதி.

கணவனுக்கு அருகிலிருந்த இருக்கையில் அமர்ந் திருந்தவளுக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள எவ்வளவோ முயன்றாள்.



ஆனாலும் முடிந்திருக்கவில்லை.

மருமகளின் படபடப்பும், தயக்கமும் சுசீலாவிற்குப் புன்னகையை வரவழைத்திருந்தன.

தன்னிடம் ஓயாது பேசும் பெண் மகனிடம் வாயைத் திறக்கக் கூட காசு கேட்பதையும்,

அதே சமயம் மகன் அவனும் மருமகளைக் கண்டு கொள்ளாததும்,

ஏன் அவனுடைய மனைவி இருக்கும் பக்கமாகக் கூட மகன் திரும்பியிருக்காததும், அவருடைய கண்களில் படவே செய்தது.

சில வினாடிகளில் சுந்தரமூர்த்தியும் வந்து டிபன் சாப்பிட அமர, கணவனுக்கும் ப்ளேட் வைத்தார் சுசீலா.

''அப்புறம் மருமக ரெடி போல?''

''ஆமாம் மாமா.''

''ஆனா புது மாப்பிள்ள ஸார் ரொம்ப ஸிம்பிளா இருக்கார்மா. ஒண்ணும் சரியில்ல.''

''சரிதான் விடுங்க. நானும் பட்டு வேஷ்டியும் சட் டையும் மாட்டிக்கறேன். கூடவே கை, கழுத்தெல்லாம் நகைகளையும்.''

கணவனை அவன் சொன்னது போலக் கற்பனை செய்து பார்த்த ரதிக்கு அவளையறியாமலேயே சிரிப்பு வந்து விட்டிருந்தது.

''ம் கரெக்ட். அப்பதான் நீயும் மருமகளுக்குப் பொருத் தமா இருப்ப!'' என்று சுந்தரமூர்த்தி மகனைப் பார்த்துச் சொல்ல, ''பார்த்தீங்களா அத்தெ, மாமா ஓவரா இருக் குன்னு சொல்றார். நீங்க சொன்னீங்கன்னு தான நான்

இப்படியெல்லாம் செஞ்சுக்கிட்டேன்!'' என்று ஆதங்கத்துடன் சொன்னாள் ரதி.

''சரிதான் ரதிம்மா. ரசனை எல்லாருக்கும் ஒரே மாதிரியாவா இருக்கும்? விடு.''

''அடடா! என்ன மருமகளே நீ! நல்லா இருக்குன்னு தான நானும் சொல்றேன்!'' என்று சுந்தரமூர்த்தி சொல்ல, ''சரிதான் மாமா! நம்பிக்கறேன்!'' என்றாள்.

''ஆமா ரெண்டு பேரும் பேசிக்க மாட்டீங்களா?''

சுசீலா கேட்க, தனது கணவனைப் போலவே, தானும் தனது அத்தையை நிமிர்ந்து பார்த்தாள் ரதி.

''இல்ல, எங்களுக்கு முன்னாடி பேசினா கண்ணு பட்டுடும்னு பேசிக்க மாட்டேங்கறீங்களா?''

ரதி ஏதோ சொல்ல வர, அதே நேரம், ''வாயால பேசிக்கிட்டா தானா, இல்லமா?'' என்று மனைவியைப் புன்னகையுடன் பார்த்தபடி கேட்டான் குணசீலன்.

கணவனிடமிருந்து அப்படியொரு பார்வையை எதிர்பார்த்திருக்காத ரதி, தன்னை மறந்து பார்த்திருந்து விட்டுப் பிறகு சில வினாடிகள் கழித்தே மீண்டும் நடப்பிற்கு வந்திருந்தாள்.

தொடர்ந்து கணவனின் கேள்விக்கு அவனும் ஒன்றும் அதைக் கேள்வியாகக் கேட்டிருக்கவில்லை என்பதால் பதில் சொல்லத் தோன்றியிருக்கவில்லை.

''ம், சரிதான்.''

அப்படிச் சொன்ன தனது அத்தையை ரதி நிமிர்ந்து பார்க்க, ''இல்ல, எங்களுக்கு முன்னாடி பேசிக்க மாட்டிங்கன்றது புரியுது!'' என்றார் சுசீலா.



''ரெண்டு பேருமே பதில் சொல்லாம இருக்கறதப் பாத்தா...''

அதே சமயம் தாயை இடை மறித்திருந்த குணசீலன், ''ஏன் நாங்க தனியா இருந்தாக் கூடப் பேசிக்க மாட்டோம்!'' என்றான்.

கணவன் இதை எந்த அர்த்தத்தில் சொன்னானோ, அவன் சொன்னதைக் கேட்ட ரதியின் முகம் இரத்த நிறம் கொண்டு விட்டிருந்தது.

மும்முரமாகச் சாப்பிடுவதைப் போலக் குனிந்து கொண்டு விட்டிருந்தாள்.

சரியாக அதே நேரம் பார்த்துத் தனது கணவன் ஏதோ கேட்க, அதற்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்த சுசீலாவின் காதுகளில் மகன் சொன்னது விழுந்திருக்கவில்லை.

சுந்தரமூர்த்திக்கும்.

''சும்மாவே நீ கொள்ளை அழகு! அப்படியிருக்கும் போது நீ இப்படி வெட்கப்பட்டுக்கிட்டே இருந்தா எனக்கே பார்த்துட்டே இருக்கணும் போலத் தோணுது. மத்தவங்களுக்கு எப்படியிருக்கும்?'' என்று தனது அத்தை தன்னைப் புன்னகையுடன் பார்க்க, ''நாம வேணும்னா ஒண்ணு செய்யலாமா?'' என்று தனது மனைவியைப் பார்த்தான் குணசீலன்.

அப்படிச் சொன்ன கணவனை ரதி என்னவென்பதைப் போலப் பார்க்க, ''அவசியமில்லாம மத்தவங்க விஷயத்துல மூக்க நுழைக்கறவங்களுக்கெல்லாம் நாம பதில் சொல்லாம விட்டுடலாம்!'' என்றான்.

''இது உனக்கு அவசியமா?'' என்று புன்னகையுடன் சுந்தரமூர்த்தி தனது மனைவியைப் பார்த்துக் கேட்க,

''சரிதான். நாளைக்கு ஏதாவது ஒன்னுன்னா நம்மகிட்ட வருவாங்கள்ள, அப்பப் பாத்துக்கலாம். விடுங்க!'' என்று விளையாட்டாய்க் கோபித்துக் கொண்டார் சுசீலா.

''ம்கூம். சான்ஸே இல்ல.''

அப்படிச் சொன்ன மகனைப் பார்த்த சுசீலா, ''என்ன சான்ஸே இல்ல?'' என்று கேட்டார்.

''எங்களுக்குள்ள பிரச்சனையே வராது. அதுக்கு மேல வந்தாலும் நாங்க ஏன் உங்ககிட்ட வரப் போறோம்?''

''அப்ப...''

''ஆமாம். பிரச்சனையச் சரியாக்கறவங்ககிட்டப் போக லாம் தான், உங்ககிட்ட எதுக்கு...''

''ஓ அப்ப நான் பிரச்சனய பெரிசு பண்றவளாக்கும்?''

''அதெல்லாம் இப்ப எதுக்குமா, விடுங்க.''

''வேண்டாம்பா. என் தயவும் உங்க ரெண்டு பேருக் கும் வேணும். எதுக்கும் பாத்துக்கோங்க.''

''சரிதான். தேவைப்படும்போது பாத்துக்கலாம்.''

குணசீலன் சொல்ல, ''வேண்டாம் ரதி. உன் வீட்டுக்காரர் பேசறதொன்னும் சரியில்ல. சொல்லிட்டேன்!'' என்றார் சுசீலா.

''என் வீட்டுக்காரர் எது சொன்னாலும் சரியாதான் இருக்கும் அத்தெ.''

''ம்கூம். இது ஒன்னும் எனக்குச் சரியாப் படல. புருஷன் பொண்டாட்டி ரெண்டு பேருக்குமே மரியாதையே தெரியல...''

தனது அத்தை அவர் பாட்டுக்குப் புலம்பத் தொடங்கி யிருக்க, என்ன முயன்றும் ரதியால் சிரிப்பைக் கட்டுப் படுத்திக் கொள்ளாவே முடிந்திருக்கவில்லை.



ஏன், மற்ற அனைவருமே கூட சிரித்து விட்டிருந்தனர்.

அதே சமயம் குணசீலனின் கவனம் முழுவதுமே அவனுடைய மனைவியின் மீது தான் இருந்தது.

ஆனாலும் அதை ரதி கவனித்திருக்க வில்லை.

ரதி மட்டும்தான்.

அப்பாடா! மகன் மருமகளுக்குள் பிரச்சனையெதுவும் இல்லையென்று அதற்குப் பிறகே சுசீலாவால் நிம்மதி யடைய முடிந்திருந்தது.

சிறிது நேரத்தில் அனைவரும் உண்டு முடித்து எழுந் திருக்க, தானும் தனது அத்தைக்கு அனைத்தையும் ஒதுக்கி வைப்பதில் உதவப் போனாள் ரதி.

''வேண்டாம்மா. நீ போய் உக்காரு. இந்த சேலயக் கட்டிக்கிட்டு எதயும் எடுக்காத. அப்புறம் மேல கொட்டிக் கப் போற!'' என்று தனது அத்தை சொல்ல, ''அப்படிப் பாத்தா உங்களுடையதும் புது சேலதான்!'' என்றாள் ரதி.

''என் அனுபவம் வேற. நீ வேணும்னா ஒண்ணு செய்.''

''என்ன அத்தை?''

''உன் வீட்டுக்காரருக்குப் போய் ஏதாவது வேணுமான்னு கேளு.''

''அவருக்கெல்லாம்...''

''ரதி!''

சரியாக அதே நேரம் கணவன் தன்னை அழைக்க, ''ம் பாரு. போம்மா. போய் என்னன்னு கேளு,'' என்று விட்டு இன்னும் சில நிமிடங்களில் கோவிலுக்குக் கிளம்ப

வேண்டுமே என்று வேகமாக அனைத்தையும் ஒதுக்கி வைப்பதில் முனைந்தார் சுசீலா.

''சரி அத்தை!'' என்று விட்டுத் திரும்பியவளோ, கணவன் மாடியிலிருக்கும் தங்களுடைய அறைக்குச் சென்று கொண்டிருப்பதைக் கண்டாள்.

கடவுளே! எதற்காக அழைக்கிறானோ என்ற பயத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு, தானும் படிகளில் ஏறத் தொடங்கினாள்.

அறைக்குள் வந்திருந்தவளுக்குக் கணவன் சட்டையை மாற்றிக் கொண்டிருந்தது கண்களில் பட்டது.



## 12

பூனை போலக் காலடி எடுத்து வைத்து வந்திருந்தாள் என்பதால் தான் வந்து விட்டது கணவனுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லையென்று நினைத்துக் கொண்டு கணவன் திரும்புவதற்காகக் காத்திருந்தாள்.

"அம்மா கொஞ்சம் ஷார்ப். ஏற்கெனவே மேரேஜ் ஃபிக்ஸ் ஆனதிலிருந்தே நாம ரெண்டு பேரும் பேசிக்கறது கூட இல்லைன்னு ஃபீல் பண்ணிட்டிருந்தாங்க. அதுதான் உண்மையும் கூட. ஆனா இனிமேலும் தொடர்ந்து அந்த மாதிரி சந்தேகத்துக்கெல்லாம் இடம் கொடுக்கறத நான் விரும்பல. அதான் சும்மா தான் கூப்புட்டேன்.'' என்று



திரும்பாமலே சொன்ன கணவனின் வார்த்தைகளைக் கேட்டபடி அப்படியே நின்று விட்டிருந்தாள்.

''இப்பவே கீழே போயிடாத! ஒரு அஞ்சு நிமிஷம் கழிச்சு ரெண்டு பேரும் ஒன்னாப் போகலாம்.''

கணவன் தலையைத் திருத்திக் கொண்டிருப்பது தெரிந்தது.

சரி என்பதைப் போலத் தலையை ஆட்டியவளுக்கு வாயைத் திறந்து பதில் சொல்லத் தோன்றியிருக்கவில்லை.

சரியாக அதே நேரம் தன்னை நோக்கித் திரும்பிய கணவனைப் பார்த்தாள்.

''கீழ பிரமாதமா நடிச்சதுக்கு நன்றி.''

''நடிப்பா?''

கடவுளே! அது நடிப்பில்லையென்று, இவனுக்கு எப்படி எடுத்துச் சொல்வது?

அது நூற்றுக்கு நூறு சதவிகிதம் நிஜமாயிற்றே.

''உனக்கும் கொஞ்சங்கூட வித்யாசம் கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு நிஜம் மாதிரியே நடிக்கறதுக்குக் கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்கும். அட்ஜஸ்ட் பண்ணிக்கோ. வேற வழியில்ல.''

அப்படிச் சொல்லி விட்டுக் கணவன் தனது முகத்தையே பார்க்க, எந்தப் பதிலும் சொல்லத் தோன்றாமல் அப்படியே நின்று விட்டிருந்தாள் ரதி.

..............

''என்ன, ரொம்பவும் சிரமமா இருக்கா?''

கணவன் கேட்க, "நான் நடிக்கல!" என்றாள்.

உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் தன்னைப் பார்த்த கணவனின் பார்வையைத் தானும் தன்னால் இயன்ற மட்டும் நேருக்கு நேராகச் சந்தித்தாள்.

"அது சரிதான். தொடர்ந்து நடிக்கறதும் கொஞ்சம் சிரமம் தான்."

"அச்சச்சோ! நான் அந்த அர்த்தத்துலயே சொல்ல வரல. காலைல மட்டுமில்ல, இனி எப்பவுமே நடிக்க வேண்டிய அவசியம் வராதுன்னு சொல்ல வர்றேன்."

......................

"அன்னைக்கு அந்தக் கவரக் குடுக்க வந்தப்ப, நான் சொன்னதெல்லாமே பொய். அப்படி சொல்லிட்டு அதுக் கப்புறம் நான் எப்படியெல்லாம் ஃபீல் பண்ணிட்டிருக்கேங் கறது எனக்கு மட்டும்தான் தெரியும்..."

மனைவியின் வார்த்தைகள் காதுகளுக்குள் தேன்மாரி பொழிந்தாலும், குணசீலன் அதைச் சற்றும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

"கோவிலுக்கு உங்க வீட்ல இருந்தும் கூட எல்லாரும் வர்றாங்க. எதுக்கும் கொஞ்சம் பாத்து நடந்துக்கோ."

நடிக்கவில்லையென்று தான் சொல்லி விட்டோமே, அப்படியிருக்க இன்னும் ஏன் இப்படியெல்லாம் வார்த்தை களால் கொல்கிறான்.

தான் மனதிற்குள் நினைத்ததை அப்படியே படித்து விட்டவன் போல, "நீ நடிக்கலை. சரிதான். ஆனா புதுசாக் கல்யாணமானவங்களைப் பாத்ததும் கண்டு பிடிச்சுட லாம். ஆனா நம்ம கிட்ட அந்த மாதிரி யெல்லாம்..."



ஏதோ சொல்ல வந்து விட்டுப் பிறகு பேச்சைப் பாதியி லேயே நிறுத்தி விட்டிருந்த கணவனை நிமிர்ந்து பார்த் தாள் ரதி.

சில விஷயங்கள அப்படியே சொல்லிப் புரிய வெக் கறது கஷ்டம், கிளம்பலாம் என்ற கணவன் மாடிப்படி களில் இறங்கத் தொடங்கியிருக்க, அவனைத் தொடர்ந்து ரதி தானும் கீழே இறங்கி வந்தாள்.

கடவுளே! என்ன இவன் தான் இந்த அளவிற்கு இறங்கி வந்த பிறகும் கூடத் தன்னைக் குற்றம் சொல்வதைப் போலவே பேசுகிறான்.

புதிதாகத் திருமணமானவர்களைப் பார்த்ததுமே கண்டு பிடித்து விடலாமாமே.

ஏன் நெற்றியில் எழுதி ஒட்டிக் கொண்டு அலைவார் களாமா?

"வா ரதி."

தனது அத்தையின் குரலில் நடப்பிற்கு வந்திருந் தவள், குடுங்க அத்தெ. காருக்குள்ள வைக்கறதுக்குதான என்று தானும் ஒரு பேக்கை வாங்கிக் கொள்வதற்காகக் கையை நீட்டினாள்.

"ம்கூம், இந்தா, நீ வேணும்னா ஹேன்ட் பேக்கப் புடி. அங்க வந்து வாங்கிக்கறேன். உள்ள கொஞ்சம் முக்கிய மான திங்ஸ் இருக்கு. பத்திரம்."

"சரி அத்தை."

"என்ன ஒரே யோசனையா இருக்க?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல அத்தெ."

''சரி. வா, கிளம்பலாம்.''

மாமாவும் கணவனும் ஏற்கெனவே காருக்குச் சென் றிருக்கத் தனது அத்தையுடன் தானும் வெளியே வந் தாள் ரதி.

வெளியே வந்த ரதியின் பார்வை அவளுடைய பிறந்த வீட்டை மேய்ந்தது.

''என்னமா, என்ன பாக்கற?''

''இல்ல அப்பா... எல்லாரும் கிளம்பிட்டாங்களான்னு பாத்தேன் அத்தெ.''

''அதெல்லாம் போற வழில அவங்களுக்கு வேறொரு வேலையாம்மா. அத முடிச்சுட்டு அப்படியே கோவி லுக்கு வந்துட்றதா சொன்னாங்க. அநேகமா நமக்கு முன்னாடி கோவில்ல இருப்பாங்கன்னு நினைக்கறேன்.''

கணவனும், மாமாவும் முன் பக்கமாக ஏறி அமர்ந் திருக்கத் தனது அத்தையுடன் தான் பின் ஸீட்டில் ஏறி அமர்ந்திருந்தாள்.

மகனும் மருமகளும் முன் பக்கமாக ஒன்றாக அமர்ந்து வந்தால் நன்றாக இருக்குமே என்று சுசீலாவால் நினைக் காமல் இருக்க முடியவில்லை.

சரிதான். இனி அமர்ந்து விட்ட பிறகு ஏன் மாறச் சொல்லவேண்டுமென்று விட்டு விட்டிருந்தார்.

கணவனும், மகனும் வெகு மும்முரமாகத் தொழில் விஷயம் பேசத் தொடங்கியிருக்க, தான் மருமகளிடம் பேச்சுக் கொடுத்தார் சுசீலா.

''என்னமா, போரடிக்க வைக்கறோமா?''

''அச்சச்சோ! என்ன அத்தெ நீங்க...''



''நிஜமா மனசத் தொட்டு சொல்லு. கோவிலுக்கு வர்றது உனக்குப் பிடிச்சிருக்கா?''

''ஓ. ரொம்ப.''

''சரிதான். நம்பிக்கறேன்.''

''ஆமா அத்தெ, நாந்தான் பாட்டி, தாத்தா கூட வளந்த வளாச்சே. அவங்களும் இப்பிடிதான் ஏதாவது வேண் டுதல் பூஜைன்னு அடிக்கடி கோவிலுக்குப் போவாங்க.''

''ஆனா நீ தப்பிச்சுக்குவியாக்கும்?''

''ஓரளவு அப்படித்தான் அத்தெ!'' என்று சிரித்தவள், ''ஆனா அவாய்ட் பண்ண முடியாதுங்கற பட்சத்துல பேசாம கூடப் போய்டுவேன்!'' என்றாள்.

''இப்ப வர்ற மாதிரின்னு சொல்லு!'' என்று சிரித்தவர், ''ஆனா நான் அப்பிடியெல்லாம் எதுக்காகவும் வேண் டிக்கிட்டதே கிடையாதுமா. இதத் தவிர...'' என்றார்.

...............

''ஆமாம் ரதி, இது என்னோட நாலு வருஷத்து வேண்டு தல். இன்னைக்கு தான் அதை நிறைவேத்த நல்ல நேரம் வந்திருக்கு.''

''எதுக்கு, என்ன வேண்டுதல்னு தெரிஞ்சுக்க...''

''உங்கிட்ட சொல்லாமலா? எல்லாம் குணாவுக்குக் கல் யாணம் கூடி வரணுங்கறது தான் ரதிம்மா. நீ மருமகளா வந்து கடவுள் புண்ணியத்துல நினைச்சது நல்லபடியா முடிஞ்சது.''

''நான் இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியு மாம்மா. ஏன் அத அப்பிடியே வார்த்தைகளால சொல் லக்கூட என்னால முடியல.''

என்னதான் முன்புறம் அமர்ந்திருக்கும் கணவனும் மாமாவும் அவர்களுக்குள் மும்முரமாகப் பேசிக் கொண் டிருந்தாலும், தாங்கள் இருவரும் பேசுவதும் கூட அவர்களுக்குக் கேட்கத் தானே செய்யுமென்று ரதியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தான் எதையாவது கேட்கப் போய், பிறகு அசடு வழிய நேர்ந்து விடுமோ என்று தனது அத்தை சொல் வதை மட்டும் காதுகளில் வாங்கிக் கொண்டபடி பேசாமல் வந்தாள்.

''நாங்களும் நாலு வருஷமா குணாவுக்குப் பொண்ணு பாத்துட்டிருக்கோம்மா.''

''எத்தன இடங்க வந்தது தெரியுமா?''

''ஆனா காரணமே இல்லாம, குணா தட்டிக் கழிச்சுடு வான்.''

''முதல்ல பெரிசாத் தோணாதது போகப் போகப் பெரிய வேதனையாக் கூட மாறிடுச்சு.''

''சரிதான், திரும்பவும் பாத்துக்கலாம்னு விட முடிஞ் சிருந்தா அவ்வளவு கஷ்டமா இருந்திருக்காதோ என் னவோ. ஆனா நாளுக்கு நாள் தீவிரமா எதிர்பார்க்கத் தொடங்கியிருந்ததுல ரொம்பவுமே ஒரு மாதிரியா யிடுச்சுன்னே வெச்சுக்கோயேன்.''

சுசீலா அவர் பாட்டுக்குத் தனது மருமகளிடம் மிகவும் உணர்ந்து சொல்லிக் கொண்டே வர, ''என்னமா மலரும் நினைவுகளா?'' என்று கேட்டான் குணசீலன்.

மகனின் குரலில் அவனைத் திரும்பிப் பார்த்தவள், ''நீ பேசாதடா!'' என்றார்.



''அடடா, விட்டா அடிச்சுடுவீங்க போல.''

''அப்படியெல்லாம் செய்ய முடிஞ்சிருந்தாத்தான் பரவாயில்லையே. தோளுக்கு மேல வளந்துட்டாலே கை நீட்ட முடியாதுன்னு சொல்லுவாங்க. அப்பிடியிருக்கும் போது நீ தலைக்கும் மேல அல்ல வளந்து நிக்கற!''

''இவ்வளவு ஃபீல் பண்ணுவீங்கன்னு தெரிஞ்சிருந்தா நான் இன்னும் கொஞ்சம் குறைவா வளந்திருப்பே னேமா.''

''அது சரி, உனக்குத் தான் எப்பவுமே விளையாட் டாச்சே...''

தனது கணவனும் அத்தையும் பேசிக் கொண்டு வர, தனது மாமாவைப் போல ரதியால் இயல்பாக இருக்க முடியவில்லை.

''என்ன பண்றது, ரதிதான் உங்களுக்கு மருமகளா வரணும்னு இருந்திருக்கு.''

''அது சரிதான். காத்திருந்ததுக்கெல்லாம் சேத்து இப்பப் பலன் கிடைச்சுடுச்சு. அந்த விதத்துல ரொம்ப சந் தோஷம் தான். ஆனாலும் நீ செஞ்சது...''

''நீங்க சொல்றதப் பாத்தா நாலு வருஷத்துக்கு முன் னாடியே நான் ரதியோட அப்பா கிட்ட போய் உங்க பொண்ணக் குடுங்கன்னு கேட்டிருக்கணுங்கற மாதிரி யிருக்கு.''

''நல்ல வேளப்பா. நீ அப்பிடியெதையும் செஞ்சு வைக்கல. அப்புறம் ரகுநாத் உதைக்க வந்திருந்தாலும் ஆச்சரியப்பட்றதுக்கில்ல. இல்லையா ரதிம்மா?'' என்று புன்னகையுடன் தனது மாமா சுந்தரமூர்த்தி தன்னைத் திரும்பிப் பார்க்க, ரதிக்கும் சிரிப்பு வந்து விட்டிருந்தது.

''உங்களுக்கு எல்லாமே விளையாட்டாத்தான் இருக்கு இல்ல?''

மனைவி ஆதங்கத்துடன் கேட்க, ''இதென்னடா வம்பாப் போச்சு. படிச்சுட்டிருக்கற பதினாறு வயசுப் பொண்ணப் போய்க் கேட்டா எந்த அப்பாவுக்குத் தான் கோபம் வராது?'' என்றார் அவர்.

அவர் அப்படிச் சொன்ன பிறகு தான் தனக்கும் கணவனுக்கும் இடையிலிருக்கும் அந்தப் பத்து வயது வித்யாசம் மனதில் உறைத்தது ரதிக்கு.

ஆனால் நன்கு கணக்கிட்டுப் பார்த்த போதுதான் தனக்கு இருபத்தியொன்று முடியும் தருவாயில் இருந்ததும், கணவன் முப்பதின் தொடக்கத்திலிருந்ததும் புரிந்தது.

தான் மனதிற்குள் நினைத்ததை அப்படியே ஆமோதிப்பது போல, ''எப்படிப் பாத்தாலும் ரதிக்கும், குணாவுக்கும் எட்டு வயசு தான் வித்யாசம். அத ரொம்பவும் அதிகம்னெல்லாம் சொல்லிட முடியாது!'' என்றார் சுசீலா.

மனைவியைத் தானும் ஆமோதித்தார் சுந்தரமூர்த்தி. ''எப்படியோ நடந்ததெல்லாம் நல்லதுக்குன்னே எடுத்துக்க வேண்டியது தான்.''

''என்னமா ரொம்பவும் சலிச்சுக்கறீங்க?''

மகன் கேட்க, ''நானெப்படா சலிச்சுக்கிட்டேன்?'' என்று ரோஷத்துடன் கேட்டார் சுசீலா.

''சரிதான். விடுங்கமா. என்னதான் புடிக்காத மருமகள்னாலும் உங்களோட ரொம்ப நாளைய பிரச்சன ஒரு



வழியாத் தீந்ததேன்னு அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போய்டுங்க...''

''பாத்தியா ரதிம்மா. இவங்கூட இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருந்தா நம்ம ரெண்டு பேருக்குள்ளயும் சண்ட வந்துடாது?''

தனது அத்தை கேட்க, புன்னகையுடன் பார்த்தாள் ரதி.

''பாத்தீங்களாம்மா, அப்படியெல்லாம் எதுவும் வராதுன்னு இந்நேரம் பதில் ஸ்பீடா வந்திருக்க வேண்டாம்...''

தனது கணவனின் வார்த்தைகளில் அந்த வினாடியே, ''நிச்சயமா அந்த மாதிரியெல்லாம் எதுவும் வராது அத்தை!'' என்று உடனே சொல்லி விட்டிருந்தாள் ரதி.

''எனக்கென்னவோ ஒரு சந்தேகம்.''

சுந்தர மூர்த்தி சொல்ல, அனைவரும் அவரைத் திரும்பிப் பார்த்தனர்.

''இல்ல, தன்னோட மனசுல இருக்கறத சொல்ல முடியாமத் தான் குணா அது உன்னோட மனசுல இருக்கற மாதிரி மாத்திச் சொல்றானோன்னு ஒரு சின்னச் சந்தேகம்...''

''என்னங்க நீங்க?'' என்று கணவனை ஆதங்கத்துடன் பார்த்த சுசீலா,'' ''என்னப்பா, அப்படியா?'' என்று மகனிடம் கேட்டார்.

''என்ன, அப்படியா...''

''இல்ல, உனக்குத் தான் ரதியப் பிடிக்கலேன்னு உங்கப்பா சொல்றார், அப்படியா?''

''என்ன பண்றதுமா. உங்ககூட சேந்து சேந்து பாவம் அப்பாவும் தான் ரொம்பக் குழம்பிப் போய்ட்டார்...''

''அதெல்லாம் வேண்டாம். முதல்ல கேக்கற கேள் விக்கு நேரடியா பதில் சொல்லு.''

மீண்டும் தாய் கேட்க, ''நான் எப்ப ரதிய முதன் முதலாப் பாத்தேனோ அப்பவே மனசுக்குள்ள இவ தான் என் வருங்கால மனைவின்னு முடிவு பண்ணி வெச்சுட் டேன்!'' என்றான்.

மற்றவர்களுக்கு எப்படியோ, ஆனால் கணவனிட மிருந்து வரப் போகும் பதிலுக்காக அவ்வளவு நேரமும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்த ரதி, அதற்குப் பிறகே பழையபடி மீண்டும் மூச்சுவிடத் தொடங்கினாள்.

''சும்மா சொல்லாத...''

''அட என்னமா நீங்க, எனக்குப் பொய் சொல்லிப் பழக்கமில்லேங்கறது உங்களுக்கே தெரியும். ரதியோட தாத்தா கேட்டிருக்கலேன்னாலும் கூட கொஞ்சம் முன் னாடி அப்பா சொன்ன மாதிரி நான் நேரடியாவே ரதி யோட அப்பகிட்ட போய்ப் பேசியிருப்பேன்.''

''அவரோட சம்மதம் கிடைச்சதுக்கப்புறம் உங்க ரெண்டு பேர் கூடவும் சொல்லியிருப்பேன்.''

மகனின் பதிலில் இப்பொழுது சுசீலா முழுமையாகத் திருப்தியடைந்து விட்டிருக்க, ரதியின் நிலை பற்றியோ சொல்ல வேண்டியதே இருக்கவில்லை.

அப்படியே நாடி நரம்பெல்லாம் ஊற்றெடுத்துப் பாயத் தொடங்கியிருந்த சந்தோஷத்தை மற்றவர்கள் அறியாத வண்ணம் காத்துக் கொள்ளச் சற்று சிரமப்பட்டுத் தான் போனாள்.



கணவனின் மனதை அப்படியே முழுமையாக அறிய நேர்ந்திருந்ததில், அந்த வினாடியில் தன்னைப் போல அதிர்ஷ்டம் செய்த பெண் இந்த உலகத்திலேயே இருக்க முடியாதென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

அதே சமயம் புன்னகையுடன் அத்தையும், மாமாவும் தன்னைத் திரும்பிப் பார்க்க, தன்னை இயல்பாகக் காட்ட வெகுவாக முயன்று தோற்றாள்.

''என்னவோப்பா, கேக்கவே மனசுக்கு ஆறுதலா இருக்கு.''

அலுத்துக் கொள்வதைப் போலச் சொன்ன தந்தையை, என்னவென்பதைப் போலப் பார்த்தான் குணசீலன்.

............

''என்னப்பா, சொல்லுங்க.''

''இல்ல, உனக்காவது மனசுக்குப் புடிச்ச மனைவி அமைஞ்சிருக்கறத நினைச்சா சந்தோஷமா இருக்கு...''

''அப்ப நீங்க சொல்றதப் பாத்தா...'' என்று சுசீலா கோபத்துடன் கணவனைப் பார்க்க, ''அடடா! இனி உங்க மலரும் நினைவுகள ஆரம்பிச்சுடாதீங்கப்பா. தாங்காது!'' என்று பயந்தவன் போலச் சொன்னான் குணசீலன்.

கணவன் எதையோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போக, ''வேண்டாங்க!'' என்று எச்சரிப்பது போலச் சொன் னார் சுசீலா.

புன்னகையுடன் தான்.

''என்னப்பா, பரவாயில்ல. எதுவானாலும் சொல்லுங்க. நாங்க இருக்கோம். பயப்படாதீங்க!'' என்றான் குணசீலன்.

''நீங்கன்னா?''

''நானும், ரதியும் தான்.''

''அது சரி.''

''என்னப்பா?''

''இல்ல, நீங்க இருப்பீங்க. அதுல எந்தச் சந்தேகமும் இல்ல. ஆனா அந்த தைரியத்துல வாயக் குடுத்துட்டா அப்புறம் நான் எங்க இருக்கறது...''

''ஆனாலும் நீங்க இந்த அளவுக்கு இருக்கக் கூடா துப்பா...''

''சும்மா பேசறதுக்கென்ன, அது ரொம்பவும் சுலபம்...'' என்று சுந்தரமூர்த்தி மேலும் ஏதோ சொல்ல வர, ''சரி தான். விடுங்க! நீங்க ரொம்பவும் பயந்தவர் தான். ஒத்துக் கறேன்!'' என்று கணவனைப் பார்த்துச் சொன்னார் சுசீலா.

''ஆமா, நீங்க ரெண்டு பேரும் எப்படி யாரப் பாத்து யார் பயந்துக்குவீங்க?'' என்று சுந்தரமூர்த்தி மகனையும் மருமகளையும் பார்த்துக் கேட்க, ''ஐய்யோ! கடைசில எங்க தலைலயே கைய வைக்கப் பாக்கறீங்களா? நாங் கில்லப்பா. விட்டுடுங்க!'' என்று விட்டிருந்தான் குண சீலன்.

''நான் ஏதோ நல்ல எண்ணத்தோட தாம்மா கேக்க றேன். ஆனா உம் புருஷன் நம்ப மாட்...''

சுந்தரமூர்த்தி சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. அதற்குள் அவரை இடைமறித்திருந்த ரதி, இல்ல மாமா. எங்க வீட்டுக்காரர் எது சொன்னாலும் சரியாதான் இருக்கும். விட்டுடலாமே என்று சொல்லி விட்டிருந் தாள்.



ரதியின் பாவனையில் அனைவருமே சிரித்து விட் டிருக்க, என் மருமக ரொம்பவும் விவரம் தான் என்று புன்னகையுடன் தானும் மெச்சிக் கொண்டார் சுசீலா.

அது சரிதான். இந்த மாதிரி எல்லாரும் வாய் விட்டுச் சிரிச்சுக் கூட ரொம்ப நாளாயிடுச்சு என்று தானும் ஒப்புக் கொண்டார் சுந்தரமூர்த்தி.

# 13

தொடர்ந்து வந்த அரை மணி நேரத்தில் நால்வரும் கோவிலைச் சென்றடைந்திருந்தனர்.

அவர்களுக்கு முன்பே வந்து சேர்ந்திருந்த ரதியின் பிறந்த வீட்டினர் அனைவரையும் வரவேற்க, தானும் சென்று தனது தந்தை பாட்டி, தாத்தாவுடன் சந்தோஷ மாகப் பேசினாள் ரதி.

என்னதான் இயல்பாகக் காட்டிக் கொண்டபடி அனை வருடனும் பேசிக் கொண்டிருந்தாலும், ரதியின் மனமோ அவளுடைய கணவனைச் சுற்றியே இருந்தது.

''என்ன ரதிம்மா, ஏதோ யோசனைலயே இருக்க போலிருக்கு?''

பாட்டி கவனித்து விட்டுக் கேட்க, ''கோவில் வெளிப் பக்க வேலைப்பாடுகள் எல்லாம் ரொம்பப் பிரமாதமா இருக்கு பாட்டி. அதத்தான் பாத்துட்டிருக்கேன்!'' என்று பாதி உண்மையும், பாதிப் பொய்யுமாகச் சமாளித்தாள் ரதி.

ஆனால் ஏற்கெனவே கோவிலின் பிராகாரத்தில் தன்னை மறந்து லயித்துப் போயிருந்த மங்களமோ, ''அது சரி தான்!'' என்று ஒப்புக் கொண்டார்.

அவர்கள் எதிர்பார்த்து வந்தது போலவே பூஜை, நேர்த்திக் கடன் என அனைத்தும் திருப்திகரமாக முடிய மதியமாகி விட்டிருந்தது.

அங்கேயே மதிய உணவையும் முடித்துக் கொண்டு அனைவரும் கிளம்ப எழுந்தபோது நேரம் மூன்றுக்கும் மேல் ஆகி விட்டிருக்க, தனது அத்தை சொன்னது போல ரதிதான் சென்று தனது பிறந்த வீட்டுச் சொந்தங்களுடன் விடை பெற்றுக் கொண்டு வந்தாள்.

''அப்புறம் ரதிம்மா...''

தந்தை அழைக்க, நின்று அவரைத் திரும்பிப் பார்த் தாள்.

''என்ன டாடி?''

''இல்ல நானும்...''

''நானும் பாட்டி தாத்தாவும் அநேகமா இன்னும் ரெண்டு நாள்ல ஊருக்குக் கிளம்ப வேண்டியிருக்கும்னு நினைக்கறேன்.''

''ஓ அறுவடைக்கா?''

''ஆமாம்மா. அப்ப மாப்பிள்ளயும் நீயும் அத்தையை யும் மாமாவையும் அழைச்சுக்கிட்டு ஊருக்கு வந்தா நல்லாருக்கும்.''

''சரிதான். நான் இன்னைக்கு சாயங்காலம் உங்க வீட்டுக்கு வர்றேன். அப்பப் பேசிக்கலாம்மா.''



''சரி டாடி...''

''என்னமா?''

''நீங்க கிளம்பும்போதே நாங்களும் கூட வர்றோம்...''

''சரிதான். ஆனா அத நாமளே முடிவெடுத்துட முடி யாது. சாஸ்திர சம்பிரதாயங்களெல்லாம் சிலது இருக்கு. அத நாங்க வந்து முதல்ல உங்க அத்தை மாமாகிட்டப் பேசறோம்.''

''சரிதான் டாடி. ஊருக்கு வரணும்னு எனக்கும் ரொம்ப ஆசையா இருக்கு!'' என்றாள்.

தனது கணவனும் மாமாவும் கோவிலில் இருந்து திரும்பிய பொழுது கம்பெனியில் இறங்கிக் கொண்டு விட்டிருக்க, தனது அத்தையுடன் தான் வீட்டிற்கு வந்திருந்தாள் ரதி.

''ரதி!''

''என்ன அத்தை?''

''ஒரு நிமிஷம் டிரைவர இருக்கச் சொல்லுமா. உங்க மாமா டீ சாப்பிட மாட்டார். ஹார்லிக்ஸ் போட்டுக் குடுத்தனுப்பிடலாம்.''

''சரி அத்தை. சொல்றேன்,'' என்று ரதி நகர, தான் வேகமாக ஹார்லிக்ஸைத் தயாரித்து ப்ளாஸ்க்கில் ஊற்றி எடுத்து வந்தார் சுசீலா.

அதை வாங்கிக் கொண்டு டிரைவர் கிளம்ப, ''நீ என்ன டாம்மா குடிக்கற?'' என்று மருமகளிடம் கேட்டார்.

''எனக்கு இப்ப எதுவும் வேண்டாம் அத்தை. கொஞ் சம் போகட்டும்.''

''நானும் அதுதான் நினைச்சேன். சரி. வா, உக்காரு.''

தனது அத்தையுடன் தானும் சோபாவில் அமர்ந்தாள் ரதி.

''மதியம் தூங்கற பழக்கமிருக்கா?''

''இல்ல அத்தை.''

''சரிதான். இன்னைக்கு ஏதாவது டயர்டா இருந்தாலும் போய்க் கொஞ்சம் படுத்துக்கோ.''

''அதெல்லாம் இல்ல அத்தை. உங்களுக்குத் தான் கல்யாண அலைச்சல் நிறைய இருந்தி...''

''அது சரிதாம்மா. ஆனா நான் ஸ்ட்ரெய்ன் பண்ணிக் கல. முன்னாடியே யோசிச்சு கடைசி ஒரு வாரமும் ரொம்ப ஃப்ரீயா முடிஞ்ச அளவுக்கு ரெஸ்ட்லயே இருக்கற மாதிரி பாத்துக்கிட்டேன். அதுக்குத் தகுந்த மாதிரி வேலைக்கும் ரெண்டு பேரு இருந்தாச்சே...''

''அதோட கல்யாணத்துக்கு வந்த சொந்த பந்தங் களும் நிறைய இருந்திருப்பாங்க. இல்லையா அத்தை?''

''ஆமாம்மா. அப்புறம் உங்க அப்பா ஏதோ சொல்லிட் டிருந்தாரே.''

இன்னும் இரண்டு நாட்களில் தனது பிறந்த வீட்டினர் ஊருக்குக் கிளம்ப இருப்பதைப் பற்றிச் சொன்னாள் ரதி.

''உன் பாட்டியும் சொல்லிட்டிருந்தாங்கமா.''

''நாம எல்லாரும் ஊருக்குப் போய்ட்டு வரலாமா அத்தை?''

''இல்லமா. நீயும் குணாவும் வேணும்னாப் போய்ட்டு வாங்க. நானும் மாமாவும் இன்னொரு நாள் வர்றோம்.''

''ஏன் அத்தை?''



''ஆமா ரதி. ஏற்கெனவே உன் வீட்டுக்காரர் இல்லேன்னா அவர் எட்டு மணி நேரம் பாக்கறதை உங்க மாமா ராத்திரி பகலாத் தூங்காம பாக்க வேண்டியதிருக்கும்.''

''அப்படிப் பாத்தாக் கூட முடியாதுன்னு தான் சொல் லணும். குணா அதுக்கு மேல ஒரு சின்னத் தப்பக்கூட ஏத்துக்க மாட்டான். ரொம்பவும் டென்ஷனாயிடுவான். அப்புறம் திரும்பி வரும்போது பிரச்சனைகள் நிறையக் காத்துட்டிருக்கு...''

''ஏன் அத்தை, நீங்க சொல்றதப் பாத்தா மாமாவ விடவும் கூட அவர் தான் நல்லாப் பாத்துக்குவார்னு சொல்ற மாதிரியிருக்கு.''

''ஆமாம் வாயாடி. அப்படித்தான் சொல்றேன். என்ன, குணா தண்ணி பட்ட பாடா செய்யறத உங்க மாமா ரொம்பவும் கஷ்டப்பட்டாவது செஞ்சிடுவார்னு வை. அதனால நீங்க ரெண்டு பேர் மட்டும் போய்ட்டு வாங்க. நாங்க இன்னொரு நாள் வர்றோம்.''

''ஏன் அத்தை, இன்னொரு நாளும் இதே பிரச்சன இருக்கத்தான செய்யும்?''

''அது சரிதான் ரதி. ஆனா இப்பத்தான கம்பெனி எக்ஸ்பேன்ஷன்ல போயிட்டிருக்கு. நாம இந்த அளவுக் குப் பேசிட்டிருக்கோம். இப்ப இருக்கற நிலைமைல உன் வீட்டுக்காரரே கூட கம்பெனிய விட்டுட்டு வர்றது சந்தேகம் தான்.''

''அடடா! அதுக்குள்ள ஏன் முகம் சின்னதாயிடுச்சு? நீ கூப்புட்டாக்கூட வரலன்னு சொல்ல மனசு வருமா? கவலப் படாத.''

''அச்சச்சோ! அதெல்லாம் ஒண்ணுமில்ல அத்தை.''

''அப்புறம் ஊரில உனக்கு ஃப்ரெண்ட்ஸ் நிறைய இருப்பாங்க இல்லையா?'' அவங்க எல்லாரையும் பாக்க ஆவலா இருப்ப.''

''அது சரிதான் அத்தை. ஆனா...''

''என்னமா?''

''அது பக்கா வில்லேஜ். அவருக்குப் புடிக்குமோ என்னவோ... ஆனா நல்ல டூரிஸ்ட் ஸ்பாட்...''

''ஏன் நாங்கெல்லாம் கிராமத்தப் பாத்ததே இல்லையாக்கும்? நமக்கும் தோட்டமிருக்கு ரதிம்மா. எப்படியும் வருஷத்துக்கு ஒரு சில முறையாவது போய்ச் சில நாள் தங்கறது வழக்கம் தான்.''

''அப்படியா அத்தை!''

''ஆமாம்மா.''

''முதல்ல அங்க உங்க ஊருக்குப் போய்ட்டு வாங்க. அப்புறமா நம்ம தோட்டத்துக்குப் போலாம்.''

''அங்க போறதுக்குன்னா மட்டும் நீங்களும் மாமாவும் வர முடியுமாக்கும் அத்தை?''

''என்ன நீ, புதுசாக் கல்யாணமானவங்க தனியாப் போய்ட்டு வரட்டுமேன்னு பாத்தா நீ எங்களையே தப்பு சொல்ற?''

''அச்சச்சோ! நானொன்...''

''சும்மா சொன்னேன்டாம்மா. நீ எதுக்கும் ஊருக்குப் போறதுக்கு மனசுக்குள்ள ஆசைய வளத்துக்காத. உன் வீட்டுக்காரரப் பத்தி உன்ன விடவும் எனக்கு நல்லாத் தெரியும்.''



''நீங்களும் அவர்கிட்ட சொல்லுங்களேன் அத்தை.''

''பின்ன விட்டுடுவேனாக்கும். ஆனா...''

ஆராய்ச்சிப் பார்வையுடன் தன்னைப் பார்த்த அத்தையைத் தானும் பார்த்தாள் ரதி.

''என்ன அத்தை?''

''ஒண்ணுமில்ல. விடு.''

''ஏன், ஏதோ சொல்ல வந்தீங்க தான.''

''ம்கூம், கேக்க வந்தேன்.''

''என்ன அத்...''

''ஆமா, நீ சொன்னா உங்க வீட்டுக்காரர் கேக்க மாட்டாராக்கும்? அதுவும் இப்ப நீ தப்பித் தவறி வாய் விட்றதக் கூட தலையால ஏந்திச் செய்யணுமே...''

..............

''அட, மேடம்க்கு வெக்கமாக்கும். சரி ரதிம்மா. நான் போய்க் கொஞ்சம் படுத்துக்கட்டுமா?''

''சரி அத்தெ. போங்க.''

''அப்புறம் எழுந்தேன்னா நைட் வரைக்கும் வேலையே சரியா இருக்கும். கல்யாணத்துக்கு வர முடியாதவங்க வீட்டுக்கு வருவாங்க. அப்படி யாராவது வந்துட்டாங்கன்னாலும் என்ன வந்து எழுப்பு. எப்படி எழுப்புறதுன்னு யோசிக்காத.''

''சரி அத்தை.''

''ஆனாலும் இந்த மதிய நேரத்துல யாரும் வந்துட மாட்டாங்க. நீயும் போய் இந்த நகை சேலையக் கழட்டி

வெச்சுட்டு கட்றதுக்கு ப்ரியா நல்லா இருக்கற மாதிரி ஏதாவது சேலைய எடுத்துக் கட்டிட்டு வந்துடு.''

''சரி அத்தை.''



# 14

சரியாக அரை மணி நேரத்தில் தனது அத்தை எழுந்து வர, ''வாங்க அத்தை. தூங்கினீங்களா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்மா. ஒரு குட்டித் தூக்கம் போட்டதுக்கப்புறம் தான் ஃப்ரஷ்ஷா இருக்கு. யாராவது வந்தாங்களா?''

''இல்ல அத்தை. யாரும் வரல.''

''நீ போய்க் கொஞ்சம் ரெஸ்ட் எடு. போம்மா.''

''சரி அத்தை. நான் போய் ஃபேஸ் வாஷ் பண்ணித் தலை வாரிட்டு வர்றேன்.''

''காபி போடட்டுமா ரதி?''

''இல்ல அத்தை, முதல்ல மேல போய்ட்டு வந்துட றேன்.''

தங்களுடைய அறைக்கு வந்து சொன்னது போல அனைத்தையும் செய்து முடித்து விட்டுத் திரும்பினாள்.

அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர எடுத்துப் பார்த்தாள்.

கணவன் அழைத்திருக்க, அட்டெண்ட் செய்து காதில் வைத்தாள்.



இயல்பாகப் பேசச் சற்று சிரமப்பட வேண்டியிருந்தது.

சில நிமிடங்கள் பேசிவிட்டு மொபைலை வைத்த வளுக்கு மனம் முழுக்க சந்தோஷம் நிரம்பி வழிந்தது.

அதே மனநிலையுடன் கீழே இறங்கி வந்தாள்.

''வாடாம்மா, என்ன சந்தோஷமா வர்ற?''

''ஆமா அத்தை...''

''என்ன விஷயமோ?''

''அவர் போன் பண்ணினார்.''

''யாரு?''

''உங்க பிள்ளை.''

''ஏன் உன் வீட்டுக்காரர்னு சொல்ல மாட்டியா?''

''என்ன சொன்னான்?''

''கிளம்பித் தயாரா இருக்கச் சொன்னார். அத்தை. எங்காவது வெளிய போய்ட்டு வரலாம்னு சொன்னார்.''

''அப்படியா? சந்தோஷம். டிபன் எடுத்துக்கோடாம்மா.''

''இல்ல அத்தை. காபி மட்டும் போதும்,'' என்றவள் காபி கப்பை வாங்கிக் கொண்டாள்.

''வெளிய கிளம்பறதுக்கு முன்னாடி பூஜையறைல விளக்கேத்தி வெச்சுட்டுப் போகணும்மா.''

''சரி அத்தை.''

''என்ன, சொல்லு?''

''இல்ல, கல்யாணத்துக்குக் கேக்க யாரோ வருவாங் கன்னு சொன்னீங்க. நாங்க வீட்ல இருக்கணுமா?''

''இல்லமா. நீங்க வெளிய கிளம்புங்க. யாராவது வர்றதுக்கும், நீங்க கிளம்பறதுக்கும் சம்பந்தமில்ல.''

''எங்க டாடியும் வர்றேன்னார் அத்தை...''

''அதுக்கு?''

''சும்மா ஒரு வார்த்தை சொன்னேன் அத்தை. வேறொண்ணுமில்ல. என்ன அத்தை, ஏன் சிரிக்கறீங்க?''

''இல்ல, நீ ரொம்பவும் இன்னஸன்டா இருக்க. இனி உன் வீட்டுக்காரர் கிட்ட என்ன பாடு படப் போறியோ?''

''ஏன் அவரு என்ன...''

''நானும் உங்க வீட்டுக்காரரத் தப்பா எல்லாம் எதுவும் சொல்லலமா. கொஞ்சம் கோபக்காரன், பயந்துக்காதன்னு சொல்றேன்.''

''அவரு என்னப் பாத்துப் பயப்படாம இருந்தாப் போதும் அத்தை.''

''அது சரி, நீ தான் அவ்வளவு பெரிய வாயாடியாச்சே.''

ஏற்கெனவே முடிவு செய்திருந்தது போலக் கணவ னுடன் வெளியே கிளம்பியிருந்தாள் ரதி.

கணவனின் வலிய கரங்கள் ஸ்டியரிங்கைப் பிடித் திருக்க, அவனுடைய முழுக் கவனமும் ஓட்டுவதில் இருப்பதைக் கண்டாள்.

பேசாமல் அமர்ந்திருக்கவும் முடியாமல், பேசவும் வராமல் சற்று சிரமப்பட்டுத் தான் போனாள் எனலாம்.

மனைவியின் தயக்கம் குணசீலனுக்கும் புரியவே செய்தது.

''கண்டிப்பா எதையாவது பேசித்தான் ஆகணும்னு கிடையாது. ப்ரியா இரு.''

திடீரென்று அப்படிச் சொன்ன, அதுவும் தன் நிலையை மிகச் சரியாகக் கணித்துச் சொன்ன கணவனை ஆச்சரியத் துடன் பார்த்தாள் ரதி.



''அவ்வளவு கஷ்டமா இருந்தா பேசாத. விடு.''

''அச்சச்சோ! அப்படியெல்லாம்...''

''ம் எப்படியெல்லாம்...?''

''பேசறதுக்கெல்லாம் ஒண்ணுமில்ல. என்ன பேசற துன்னு தான் தெரியல...''

''அது சரிதான்.''

''இல்ல, நா...''

...........

''விடுமா. ப்ரியா இரு.''

''ஏன் நான் பேசினாதான் நீங்க பேசுவீங்களா? நீங்க கூட முதல்ல பேச்ச ஆரம்பிக்கலாமே.''

எங்கிருந்து தான் அவ்வளவு தைரியம் வந்ததோ, கேட்டே விட்டிருந்தாள் ரதி.

ஆனால் கேட்ட பிறகு பயம் வந்து விட்டிருந்தது.

கடவுளே! தனது அத்தையே சொன்னது போலக் கணவன் கோபக்காரனாயிற்றே...

''தாராளமாப் பேசலாம், பதில் சொல்ற நிலைமைல நீ இருந்தா!'' என்று விட்டுக் கணவன் திரும்பித் தனது முகத்தைப் பார்க்க, ''அச்சச்சோ! என்ன இப்படிச் சொல் றீங்க. நானெல்லாம் பேச ஆசையாத்தான் இருக்கேன்!'' என்றாள்.

''நம்பத்தான் முடியல.''

அப்படிச் சொன்ன கணவனை நிமிர்ந்து பார்த்தவள், பேசினால் தான் நம்புவான் போலிருக்கிறதென்று வாயைத் திறந்தாள்.

''நீங்க மதியம் சாப்டிங்களா?''

மனைவியின் கேள்வியில் நன்றாகவே சிரித்து விட்டிருந்தான் குணசீலன்.

கணவனின் அந்தப் புன்னகையில் ரதி தானும் நிமிர்ந்து பார்க்க, ''மதியம் கோவில்ல பரிமாறினதே நீதான, மறந்துட்டியா?'' என்று கேட்டான்.

''அதெல்லாம் ஞாபகமிருக்கே!'' என்று ரதிக்கும் இப்பொழுது யோசித்ததில் சிரிப்பு வந்து விட்டிருந்தது.

என்னதான் எதையாவது பேசியாக வேண்டுமென்றாலும், இப்படியொரு கேள்வியையா கேட்டு வைப்பது என்றிருந்தது.

''என்ன மேடம் அடுத்த கேள்விக்குத் தயாராகறீங்களா?''

''அச்சச்சோ! நானில்லையா. பேசலேன்னா தான பிரச்சனை வரும்னு பாத்தா பேசினாக்கூட பிரச்சன வரும் போலிருக்கே.''

''பிரச்சனையா? அது எப்ப வந்தது?''

''இன்னும் வரல தான். ஆனா வந்துடுச்சுன்னா?''

''ஏன்?''

''நீங்க வேற...''

''ம்.''

''இல்ல, நீங்க வேற கோபக்காரராச்சே! அதான் கொஞ்சம் பயமா இருக்கு. வேறொண்ணுமில்ல.''

''நான் கோபக்காரனா? யார் சொன்னது?''

''யாரும் சொல்லல. நானே பாத்ததுல அப்படித் தெரிஞ்சது.''



''அது சரி.''

''ஏன், இல்லேங்கறீங்களா?''

''இல்லேன்னும் ஒரேயடியா சொல்லிட முடியாது.''

''அதான, நீங்க இல்லேன்னு சொல்லியிருந்தீங்கன்னா நான் ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பேன்.''

''சொல்லியிருக்கலாம் தான். ஆனாலும் பொய் சொல்லி அவ்வளவா பழக்கமில்ல பாரு.''

''சரிதான். நம்பிக்கறேன்.''

''என்ன நீ, அப்ப நான் சொல்றத நம்ப மாட்டியா?''

''நம்பிக்கிட்டேன் குணா. விடுங்க.''

''என்ன நீ பேர் சொல்லிக் கூப்புட்ற?''

''ஆமாம் குணசீலன். அப்படித்தான் கூப்புடுவேன்.''

அப்படிச் சொன்ன மனைவியை உடனே திரும்பிப் பார்த்தான் குணசீலன்.

புன்னகையுடன் தான்.

''என்ன பாக்கறீங்க?''

''என்ன பேர் சொல்லிக் கூப்புட்டதுக்கு உனக்கு என்ன தண்டனை குடுக்கலாம்னு யோசிக்கறேன்.''

''ஓ.''

''என்ன, பயமா இருக்கா?''

''எனக்கா? என்ன தண்டனையா இருந்தாலும் பரவா யில்ல. சீக்கிரம் குடுங்க. எனக்கு சர்ப்ரைஸ் தாங்காது.''

''சரிதான். அந்த தண்டனைய இந்த மாதிரி இடத்துலயெல்லாம் வெச்சுக் குடுக்க முடியாது.''

''ஏனோ?''

''அதுக்குத் தனிமை வேணும்.''

கணவனின் வார்த்தைகளில் ஏதேதோ எண்ண அலைகள் தோன்றி விட்டிருக்க, ரதியின் முகம் சூடாகத் தொடங்கி விட்டிருந்தது.

''ம். கரெக்ட். அதுதான்.''

அப்படிச் சொன்ன கணவனின் பார்வை மேலும் முகத்தைச் சிவக்க வைத்திருக்க, பேசாமல் குனிந்து கொண்டு விட்டிருந்தாள்.

கார் கடற்கரைக்கு வந்திருக்கக் கணவனுடன் தானும் இறங்கினாள்.

''என்ன?''

கணவன் கேட்க, ''இங்க வர எனக்கு ரொம்பப் பிடிக்கும்!'' என்றாள்.

தான் அப்படிச் சொன்னதும் சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டவனைப் புன்னகையுடன் பார்த்தாள் ரதி.

''ஐயாவுக்கு ஞானக்கண் சக்தியிருக்கு. அதுதான் உனக்குக் கடற்கரை பிடிக்கும்னு எனக்குச் சொல்லுச்சு.''

''ஓஹோ! அந்தக் கண் மூலமா இன்னும் எனக்கு என்ன வெல்லாம் பிடிக்கும்னு கண்டு பிடிச்சுச் சொல்லுங்க பாக்கலாம்.''

ஆள் நடமாட்டம் சற்றே குறைந்திருந்த அந்த இடத்தில் அமர்ந்தால் நன்றாயிருக்கும் என்று ரதி மனதிற்குள்



நினைத்துக் கொண்டிருக்க, ''இங்க உக்காந்துக்கலாமா?'' என்று கேட்டான் அவளுடைய கணவன் குணசீலன்.

கணவன் முதலில் அமர்ந்திருக்க, தொடர்ந்து தானும் அமரப் போனாள்.

''ம்கூம். இவ்வளவு பக்கமா உக்காரக் கூடாது. இன்னும் கொஞ்சம் தள்ளி உக்காரு.''

தான் சற்று தூரத்தில் அமர்வதைக் கணவன் அந்த மாதிரி சுட்டிக் காட்டுகிறானென்பது புரிய, புன்னகை யுடன் மேலும் சற்று நெருங்கி அமர்ந்தாள்.

இடையில் இன்னொருவர் அமருமளவிற்கு இடை வெளி விட்டு அமர்ந்திருந்தவளைத் தானும் சற்று நெருங்கி அமர்ந்தான் குணசீலன்.

கணவனின் அருகாமையில் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொள்ள, அதை மறைத்துக் கொள்ள எவ் வளவோ முயன்றும் முடியாமல் தோற்றாள்.

மனைவியின் நிலை புரிய ரதி என்று மென்மையாக அழைத்தான்.

தொடர்ந்து குணசீலன் மனைவியின் கையையும் பற்றியிருக்க, கணவனின் முதல் தொடுகையில் உடல் சிலிர்த்துப் போனாள் ரதி.

''அப்புறம் மதியம் வீட்டுக்குப் போய் எப்படிப் பொழுது போச்சு? என்ன பண்ணிட்டிருந்த?''

கணவன் கேட்க, பதில் சொன்னாள்.

''நீங்க?''

மனைவி கேட்கத் தானும் சுவைபட சிரிக்கத் தோன் றும்படி பதில் சொன்னான் குணசீலன்.

''மாமா, பாட்டி தாத்தாவெல்லாம் இந்த வாரம் ஊருக்குப் போறாங்களாமே.''

''ம், அறுவடைக்காகப் போறாங்க. அங்க ரொம்ப ஜாலியா இருக்கும்.''

''ம், பேர் சொல்லியே கூப்புடு. என்ன தயக்கம்?''

''அது நல்லார்க்குமா?''

''ஏன் நல்லா இல்லாம என்ன?''

''திடீர்னு யாராவது இருக்கும் போதும் அப்படியே மறந்து போய்க் கூப்புட்டுட்டேன்னா.''

''ஏன் அதுதான எம்பேரு?''

''ம்கூம். எந்த விதத்துல பார்த்தாலும் தப்புதான்.''

''அது எந்த விதத்துல?''

''நீங்க வயசுல பெரியவர். அதோட ஹஸ்பண்ட் பேர் சொல்லிக் கூப்புட்றது தெரிஞ்சா பாட்டி தாத்தாயெல்லாம் என்ன ஒரு வழி பண்ணிடுவாங்க.''

''சரிதான். அப்ப நான் சொல்றதக் கேக்கக் கூடாதுன்னு முடிவு பண்ணிட்ட தான. விடு.''

''அச்சச்சோ! அப்படியெல்லாமில்ல குணா!'' என்றவள், ''யாரும் இல்லாதப்ப மட்டும் வேணும்னா பேர் சொல்லிக் கூப்புட்டுக்கறேன். சரியா?'' என்று புன்னகையுடன் கேட்டுக் கொண்டாள்.

''அப்புறம் நீ ரொம்ப அழகா இருக்க...''

கணவனின் பார்வையில் முகம் இரத்த நிறம் கொண்டு விட்டிருக்க, பேசாமல் குனிந்து கொண்டு விட்டிருந்தாள் ரதி.



பேச்சு சுவாரஸ்யமாகப் போய்க் கொண்டே இருந்தது.

இரண்டு மணி நேரங்கள் கடந்திருக்கக் கடிகாரத்தில் நேரம் பார்த்தான் குணசீலன்.

மணி இரவு ஏழரை ஆகியிருந்தது.

''கிளம்பலாம்மா.''

''சரிங்க!'' என்று கணவனுடன் தானும் எழுந்திருந்தாள் ரதி.

அந்தப் பேச்சிற்குப் பிறகு கணவனுடன் மிகவும் நெருங்கி விட்டதைப் போல உணர்ந்தாள் ரதி.

கணவனுக்கு எப்படியோ, ஆனால் ரதிக்கு ஏதோ பல பல யுகங்கள் பழகியதைப் போன்ற உணர்வு ஏற்பட்டு விட்டிருந்தது.

ஏதோ போனால் போகிறது என்பதைப் போல அல்லாமல் மிகவும் பொறுமையாகவும் அதே சமயம் சுவாரஸ்யமாகவும் தனது இளமைப் பருவம் முதல் அனைத்தையும் கேட்டறிந்து கொண்ட கணவனின் அக்கறையில் மனம் உருகிப் போனாள்.

தனது கணவன் பழகுவதற்கு இவ்வளவு இனிமையானவனா என்று ஆச்சரியமாகவும்.

அதே சமயம் கணவனைப் பற்றி ரதியும் நிறையக் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

அதிலும் குணசீலன் தனது கல்லூரிப் படிப்பு தொழில் பருவம் என நடந்ததனைத்தையும் சுவைபடச் சொன்னதில் நன்றாகச் சிரிக்கக் கூட செய்தாள்.

கணவனைத் தொடர்ந்து ரதியும் காரில் ஏறி அமர்ந்திருக்கக் காரை ஸ்டார்ட் செய்திருந்தான் குணசீலன்.

''என்ன மேடம் சிரிக்கறீங்க?''

''நீங்க சொன்னதையெல்லாம் நினைச்சதுல சிரிப்பு வந்துடுச்சு.''

''போரடிச்சுட்டேனா?''

''அச்சச்சோ! என்ன குணா நீங்க, இந்த அளவுக்கு சுவாரஸ்யமா இதுக்கு முன்னாடி நான் எப்பவும் என்ஜாய் பண்ணினதே கிடையாது.''

இந்த இரண்டு மணி நேரங்களில் கணவனை அப்படி இயல்பாகப் பெயர் சொல்லி அழைக்குமளவிற்கு வந்திருந்தாள் ரதி.

குணசீலன் அப்படி அழைக்கச் செய்திருந்தான்.

''சரிதாம்மா. நம்பிக்கறேன்.''

''நிஜமா தான் சொல்றேன்.''

''அதான் சொல்றேன், நம்பிக்கிட்டேன்.''

''நான் உங்ககிட்ட ஒண்ணு கேக்கலாமா?''

''ம்கூம். கூடாது.''

''ஏன்?''

''ஒண்ணே ஒண்ண மட்டும் கேக்கக் கூடாது.''

''ம்கூம். கேப்பேன்.''

''சரி. கேளு.''

''நாம ரெண்டு பேரும் ஊருக்குப் போய்ட்டு வரலாமா?''

''ஊருக்கா?''

''ம், தாத்தா பாட்டி ஊருக்கு.''



''சரிதான். போலாம்.''

''வாவ், தேங்க்யூ!'' என்றவள் திடீரென்று சந்தேகம் வந்தவளாய், ''ஷ்யூர்?'' என்று கேட்டாள்.

''ஷ்யூர்.''

''எப்ப போலாம்?''

''வர்ற வாரம்.''

''ரொம்ப தேங்க்ஸ் குணா.''

''அவ்வளவுதானா?''

கணவனின் பார்வையில் ரதியின் முகம் சிவந்து விட்டிருந்தது.

''என்ன மேடம்?''

''நாம கிளம்பி ரொம்ப நேரமாச்சு.''

''சரி.''

''அத்தை எதிர்பார்த்துட்டிருப்பாங்க.''

மனைவி பேச்சை மாற்றுவது புரிய, சிரிப்பு தான் வந்தது குணசீலனுக்கு.

இருவரும் வீடு வந்து சேரவும் கம்பெனியிலிருந்து சுந்தரமூர்த்தி வரவும் சரியாக இருந்தது.

''என்னப்பா கம்பெனியில இருந்து கிளம்ப லேட்டாயிடுச்சு போல?''

மகன் கேட்க, ''இல்லில்ல. என் பழைய ஃப்ரண்ட் ஒருத்தர வழில பாத்தேன். அதான் பேசிட்டு லேட்டாயிடுச்சு!'' என்றார் சுந்தரமூர்த்தி.

''என்ன மருமகளே, வெளிய போய்ட்டு வர்றீங்களா?''

''ஆமாம் மாமா.''

''அப்புறம் உங்க அப்பா வந்துட்டுப் போயிருப்பார்னு நினைக்கறேன்.''

அதே நேரம் ஹாலுக்கு வந்த சுசீலா, ''இல்லைங்க. ரதி அப்பா வரல!'' என்று கணவனுக்குப் பதில் சொன்னார்.

''இப்பதான் உன் டாடி போன் செஞ்சிருந்தார்மா. ஆபீஸ்ல ஒரு அவசர வேலையாம். அதனால நாளைக்கு வர்றேன்னார். நீ இருப்பேன்னு கூப்புட்டிருக்கார். அழைச்சுப் பேசிக்கோ.''

''சரி அத்தை.''

''நேர்ல போறதா இருந்தாலும் நீயும் குணாவும் ஒரு எட்டு போய்ப் பாத்துட்டு வந்துடுங்க.''

''இல்ல அத்தை. பாட்டியும் தாத்தாவும் இந்த நேரத்துக்கு தூங்கப் போயிருப்பாங்க. நாங்க போனா அப்புறம் தூக்கத்தக் கெடுத்துட்டு எழுந்து வருவாங்க.''

''அடடா என்ன அக்கறை, இப்படித்தான் இருக்கணும்!'' என்று தனது மனைவியை மெச்சிக் கொண்ட தாயைப் புன்னகையுடன் பார்த்தான் குணசீலன்.

''என்னப்பா?''

''பின்ன பிறந்த வீட்டுச் சொந்தம்னா சும்மாவா?''

''ஓ, அப்ப எங்களுக்கெல்லாம் ஒண்ணுன்னா ரதி கவலைப்பட மாட்டாங்கறியா?''

''அப்படிச் சொல்லிட முடியாது. ஆனா நிச்சயமா அவளோட பிறந்த வீட்டுச் சொந்தங்களுக்காகப் பாக்கற அளவுக்குப் பார்ப்பாளான்றது சந்தேகம் தான்.''



''அச்சச்சோ! சும்மா விளையாட்டுக்கு தான் அவர் அப்படியெல்லாம் சொல்றார் அத்தை.''

தனது அத்தையின் கண்களில் தெரிந்த ஆச்சரியத்தில் என்னவென்று கேட்டாள் ரதி.

''உன் வீட்டுக்காரர் மேல இவ்வளவு நம்பிக்கையா?''

''அப்படின்னு ஏன் கேக்கறீங்க? உங்க மேல இருக்கற அவநம்பிக்கையாக் கூட இருக்கலாமில்லையா?''

''அது சரி. விட்டா இவன் நம்ம ரெண்டு பேரையும் சண்ட போட வெச்சுடுவான் போலிருக்கே.''

''அச்சச்சோ! என்ன அத்தை நீங்க, அவரெல்லாம் அப்படிக் கிடையவே கிடையாது.''

ஒரேயடியாக அடித்துச் சொல்லி விட்டிருந்த ரதியின் செய்கையில் இப்பொழுது குணசீலன் உட்பட அனைவருமே சிரித்து விட்டிருந்தனர்.

கேலி, கால் வாரல்களுக்கிடையே இரவு உணவு முடிந்தது.

தனது அத்தைக்கு அனைத்தையும் எடுத்து வைப்பதில் உதவினாள் ரதி.

''வேண்டாம்மா. நீ போய் உக்காரு. எல்லாத்தையும் நான் ஒதுக்கி வெச்சுக்கறேன்!'' என்றார் சுசீலா.

''அத நான் சொல்லணும் அத்தை.''

''வாயாடி, அப்புறம் உன் வீட்டுக்காரரில்ல என்னத் தப்பு சொல்லுவார்.''

''அவரெதுக்கு அத்தை உங்கள சொல்லப் போறார்?''

''ஓ அப்ப நீதான் காரணம்னு அவருக்கே தெரியுமாக்கும்?''

''அச்சச்சோ, அப்படியெல்லாம் அவர் யாரையும் ஒண்ணும் சொல்லிட மாட்டார்னு சொல்றேன்.''

''என்னவோ தெரியல, நீ...''

''என்ன அத்தை, சொல்லுங்க?''

''இல்ல, உன் வீட்டுக்காரருக்காக நீ ரொம்பவும் தான் பாக்கற. ஒரே நாள்ள இவ்வளவு மாற்றமா?'' என்றவரின் வார்த்தைகளில் என்ன முயன்றும் ரதியால் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

''அப்புறம் ரதி...''

''என்ன அத்தை, சொல்லுங்க?''

''மேல போகும் போது இதையெடுத்துட்டுப் போயிடு;'' என்று தனது அத்தை கொடுத்த பால் டம்ளர்களை வாங்கிக் கொண்டாள்.

தங்களுடைய அறைக்குள் காலடி எடுத்து வைத்த ரதியின் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

கணவன் அவனுடைய ஆபீஸ் டேபிளில் ஏதோ வேலையாக இருப்பது தெரிய அருகில் சென்றாள்.

''பால் உங்களுக்கு...''

என்ன முயன்றும் ரதியின் குரல் அதற்கு மேல் எழும்ப வில்லை.

''அப்படி வை.''

கணவன் சொல்ல, டேபிளின் மீது வைத்து விட்டுத் திரும்பப் போனாள்.

கணவன் கையில் வைத்திருப்பது ஏதோ ஒரு பழைய ஆல்பம் என்பது தெரிய, தானும் உடன் சேர்ந்து அதைப் பார்த்தால் என்ன என்றிருந்தது.



''ரதி.''

கணவனின் அழைப்பில் உடனே நின்று திரும்பி னாள்.

''இங்க வா.''

அருகில் வந்திருந்தவள், ''என்னங்க?'' என்று கேட்டாள்.

''உக்காரு.''

கணவன் சொல்ல, அவனுக்கு அருகிலிருந்த இருக் கையில் அமர்ந்தாள்.

நிமிர்ந்து மனைவியின் முகத்தைப் பார்த்த குணசீல னுக்கு அவளுடைய முகத்தில் தெரிந்த படபடப்பு ஆச்சரியத்தைக் கொடுத்திருந்தது.

''என்னமா, என்னாச்சு?''

''இல்ல, ஒண்ணுமில்...''

''ப்ரீயா இரு!'' என்றவன், ''என்ன பாத்துட்டிருக்கீங் கன்னு கேக்க மாட்டியா?'' என்றான்.

''ஏதோ ஆல்பங்கறது தெரியுது...''

''சரிதான், வெறும் ஆல்பமில்ல. ஸ்பெஷல் ஆல்பம்.''

''எப்படி?''

''ஏன்னா என்னன்னு சொல்றது. இத நான் பொக்கிஷம் மாதிரி பாதுகாத்துட்டு வர்றேன்.''

''ஒரு ஆல்பத்தைப் பொக்கிஷமாகவா?''

அதுவும் தன்னுடைய கணவனா?

ஏன், அதில் அப்படி என்னதான் இருக்கிறது?

''என்ன பாக்கற?''

''இல்ல. அப்படி அந்த ஆல்பத்துல என்ன இருக்கு?''

மனைவிக்கு மிக அருகில் தனது இருக்கையை நகர்த்திப் போட்டவன், ஆல்பத்தை இருவருக்கும் இடையில் வைத்தான்.

வைத்து விட்டுக் கணவன் ஒவ்வொரு பக்கமாகப் புரட்டத் தொடங்க, ஆவலுடன் பார்த்தாள் ரதி.

தோளோடு தோள் உரசுவதைப் போல அமர்ந்திருந்த கணவனின் அருகாமையில் நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது.

மனைவியின் நிலை புரிய, மேலும் சற்று உரசுவதைப் போல அமர்ந்து விட்டிருந்தான் குணசீலன்.

கணவனுடன் சேர்ந்து ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிக் கொண்டே வந்தவளுக்குத் தன்னுடைய கண்களையே நம்ப முடிந்திருக்கவில்லை.

ஏனென்றால் அதில் தன்னுடைய சிறு வயதுப் புகைப் படங்களும் நிறைய இருந்தன.

அனைவருடனும் சேர்ந்து எடுத்துக் கொண்டவை தான்.

சிறிய வயதில் எடுத்தவை என்பதால் அதில் பெரும் பாலான தருணங்கள் ரதிக்கு மறந்து கூடப் போய் விட் டிருந்தன.

சிலது மட்டும் மேலோட்டமாக நினைவிற்கு வர, சிரிப்பு கூட வந்து விட்டிருந்தது.

''என்ன?''

கண்களில் புன்னகையுடன் கணவன் கேட்க, ''இதுல என்ன ஸ்பெஷல் இருக்கு?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.



''ஏன், இல்லையா?''

''எனக்குத் தெரியலையே.''

''நீதான் அந்த ஸ்பெஷல்.''

''நானா?''

''ம்.''

''எப்படி?''

''ஒவ்வொரு போட்டோலயும் என் பக்கத்துலயே நின்னுட்டிருக்க பாரு.''

கணவன் சொல்வதற்கு முன்னரே அது ரதியின் கண் களிலும் பட்டிருந்தது.

ஆனாலும், அறியாதது போல, ''ஓ அப்ப இது நீங் களா?'' என்று கேட்டாள்.

''பாத்தியா, இது உனக்கே கொஞ்சம் ஓவரா இல்ல?''

''எனக்கு ஞாபகமே கொஞ்சம் கூட வரமாட்டேங்குது குணா. நானென்ன செய்யட்டும்?''

''ஒண்ணும் செய்யாத. எங்கிட்டக் கேளு. கதைகதையா சொல்லுவேன்.''

''அப்ப சரி. சொல்லுங்க.''

மனைவி ஆவலுடன் கேட்க, முன்பு நடந்தவற்றை யெல்லாம் அப்பொழுது நடந்தது போல மனக் கண் களில் கொண்டு வந்து சொன்னான் குணசீலன்.

''சின்ன வயசுலயே எனக்கு உன்ன ரொம்பப் புடிக் கும் தெரியுமா? உனக்கும் என்ன ரொம்பப் பிடிக்கும்.''

அப்படிச் சொன்ன கணவனை ஆச்சரியத்துடன் பார்த் தாள் ரதி.

''என்ன?''

''எனக்கு இப்பக் கொஞ்சம் ஞாபகம் வருது.''

''அப்படியா...''

''ம், நான் முதல்ல எல்லாம் எங்க லீவுக்கு வரும் போது நானும், நந்து அண்ணாவும் மேக்ஸிமம் விளையாட இங்க வந்துடுவோம். அப்புறம்...''

''ம்.''

இன்னும் தன் நினைவிற்கு வந்தவற்றையெல்லாம் கோர்வைப்படுத்திச் சொல்லிக் கொண்டே வந்தாள் ரதி.

''என்ன குணா பாக்கறீங்க, நான் சொல்றதெல்லாம் சரிதான?''

''ஆமாம்மா. அதுலயும் எனக்குத் தோணும் போதெல்லாம் இந்த ஆல்பத்தத் தான் நான் எடுத்துப் பாத்துக் கிட்டே இருப்பேன்.''

''எதுக்கு?''

''அந்த நாட்கள நினைவு படுத்திப் பாக்கத்தான். அதுலயும் குறிப்பா உன்னப் பாக்கறதுக்குன்னே வெச்சுக் கோயேன்.''

''ஓஹோ! என்ன ஏன் பாக்கணும்?''

''அத நான் சொல்ல வேற செய்யணுமா, கண்மணி?'' என்றவன் மனைவியின் முகத்தைத் தனது கைகளில் ஏந்திக் கொண்டாள்.

''குணா!''

''என்னடா?''



''தயவு செஞ்சு நான் கேக்கப் போறத நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாது.''

''என்ன, சொல்லு?''

''இல்ல, என்னால நம்ப முடியல. அதான்...''

''என்னடா, எதுவா இருந்தாலும் பரவாயில்ல கேளு.''

''மனசுல ஆசையிருந்திருக்குன்னு சொல்றீங்க. ஆனா அத எந்த விதத்துலயும் நீங்க வெளிப்படுத்தின மாதிரியே தெரியலையே. ஒருவேள...''

''என்னமா?''

''நான் இங்க இந்த ஊருக்கே வராம இருந்திருந்தா, இல்ல, பெரியவங்க நம்ம கல்யாணப் பேச்சையே எடுக்காம இருந்திருந்தா...''

''எனக்கும் முதல்ல ஒண்ணுமே புரியாத குழப்பம் தான் ரதிம்மா. அத எப்படி உனக்கு விளக்கமா எடுத்துச் சொல்றதுன்னு எனக்குமே புரியல.

''இந்த ஆல்பத்துல உன்னப் பாக்கும் போதெல்லாம் எம் மனசுக்குள்ள தப்பான எந்த எண்ணமும் வந்தது கிடையாது. ஆனாலும் மனசுக்கு என்னவோ, சந்தோஷமா நிம்மதியா இருக்கும்.

''அன்னைக்கு இங்க நம்ம வீட்ல வெச்சுப் பெரியவளா உன்ன முதன் முதலாப் பாத்தப்ப எனக்கு முதல்ல குழப்பம். அப்புறம் ஒரு நிம்மதி கலந்த சந்தோஷம்.''

''ஆனாலும் அத எப்படி வெளிப்படுத்தறதுன்னு தெரியாம... சரியா அந்த நேரத்துல தான் தெய்வம் மாதிரி உங்க தாத்தா அப்படியொரு கேள்வியக் கேட்டார்.''

''என்னடா, என்ன பாக்கற?''

தனது கைகளில் ஏந்தியிருந்த மனைவியின் முகத்தை ஆவலுடன் பார்த்துக் கேட்டான் குணசீலன்.

''ஒரு வேளை தாத்தா நம்ம கல்யாணப் பேச்சு எடுத் திருக்கலேன்னா?''

''நானே உன் அப்பாகிட்ட வந்து பேசியிருப்பேன். அங் கிளுக்கு எம் மேல எப்பவுமே ஒரு நல்ல கருத்து இருக் கறதும் எனக்கே தெரியும்.''

அது சரிதான், இன்று காலையில் கோவிலுக்குச் செல் லும் போதுகூட இதைத்தானே சொன்னான்.

அது மட்டுமா என்ன?

கணவனே சொல்கிற மாதிரி தந்தையும் இவனைத் திருமணப் பேச்சு எடுத்ததிலிருந்தே மாப்பிள்ளை, மாப் பிள்ளையென்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடாதது ஒன்று தானே குறை.

''என்னடா, என்ன யோசனை?''

கணவனின் கேள்வியில் முழுமையாக நடப்பிற்கு வந்திருந்தாள் ரதி.

மூச்சுக் காற்று தன் மேல் விழுமளவிற்கு இருந்த கண வனின் அருகாமையில் முகம் சூடாகிச் சிவக்கத் தொடங்கி விட்டிருக்க, ''ரதி...'' என்று மென்மையாக அழைத்தான் குணசீலன்.

கணவனின் அழைப்பில் நிமிர்ந்து அவனைப் பார்த் தாள் ரதி.

ஆனால் சில வினாடிகள் தான்.



தொடர்ந்து அந்தப் பார்வையை எதிர்கொள்ள முடி யாமல் போக, கீழுதட்டைப் பற்களால் கடித்தபடி பேசா மல் குனிந்து கொண்டு விட்டிருந்தாள்.

மனைவியின் நிலை குணசீலனையும் ஏதேதோ செய்யத் தொடங்கி விட்டிருந்தது.

மேலும் மனைவியைத் தன்னருகில் இழுத்துக் கொண் டவன், அவளுடைய கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

ஆனால் தொடர்ந்து முடியாமல் ரதியின் கண்கள் அவளையறியாமலேயே மூடிக் கொண்டு விட்டிருக்க, அப்படியே கணவனின் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

பூக்குவியலைப் போலத் தன் மேல் சாய்ந்திருந்த மனைவியை மென்மையாக அணைத்துக் கொண்ட குணசீலன், ''ரதி!'' என்று அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தான்.



## 15

இரண்டு நாட்கள் சென்றிருந்தன.

கணவன், மனைவி இருவரும் மனதளவில் ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டிருந்தனர்.

கணவனின் அளவு கடந்த அன்பு ரதியை சந்தோஷத் தில் திக்கு முக்காடச் செய்திருந்ததென்றால் அது சற்றும் மிகையல்ல.

பதிலுக்குக் கணவனிடம் அவளும் தனது அன்பை முழுமையாக வெளிப்படுத்தினாள்.

மகன் மருமகளின் நிலை புரிந்ததில் சுசீலாவிற்கும் மனதை அரித்துக் கொண்டிருந்த அவசியமற்ற குழப்பங்களனைத்தும் நீங்கி நிம்மதியாக இருந்தது.

வாய் திறந்தால் ஓயாது பேசும் மருமகள் ஏனோ சில நாட்களாக ஓரிரு வார்த்தைகளுக்கு மேல் அதுவும் அவசியப்பட்டால் ஒழிய வாய் திறவாமலிருந்தது அவருக்கும் புரியாதிருந்தது.

''ரதி!''

தனது அத்தையின் அழைப்பில் அருகில் வந்திருந்த ரதி, ''என்ன அத்தை?'' என்று கேட்டாள்.

''இன்னும் ஒரு மணி நேரத்துல நீங்க ஊருக்குக் கிளம்பணும்மா.''

''ஆமாம் அத்தை.''

''எல்லாத்தையும் எடுத்து வெச்சாச்சா?''

''வெச்சாச்சு அத்தை, அவருடையத எல்லாத்தையும் எடுத்து வெச்சுட்டேன். எனக்கு மட்டும் வேண்டிச் சிலத மட்டும் எடுத்துக்கிட்டேன்.''

''ஏன்?''

''அங்கயே என் டிரஸ் நிறைய இருக்கு அத்தை. திரும்பி வரும்போது அதை யெல்லாத்தையும் எடுத்துட்டு வரணும்.''

''சரிதான்டாம்மா. அப்புறம்...''

''என்ன அத்தை?''

''எப்படியும் நீங்க திரும்ப நாலு நாள் ஆகலாம் இல்லையா?''



''தெரியல அத்தை, அவர் எப்படி சொல்றாரோ அப்படி தான். ஏன் அத்தை?''

''சும்மா தான் கேட்டேன். போறதும் போறீங்க, ஒரு வாரமானாலும் பரவாயில்ல. இருந்துட்டு மெதுவா வாங்க.''

''சரிதான் அத்தை.''

''அடடா! என்ன சந்தோஷம்! சின்ன வயசுலிருந்தே நீ பாத்து வளர்ந்த ஊருக்குப் போறீங்க. வரவேற்பெல்லாம் தடபுடலா இருக்குமில்லையா?''

''ஆமாம் அத்தை, நீங்களும் மாமாவும் வராதது தான் குறையா இருக்கப் போகுது.''

''நாங்களும் வர்றோம்மா.''

''நிஜமாவா அத்தை?''

''இப்பக் கிடையாதுடாம்மா. எப்படியும் ஒரு நாள் இருக்கற மாதிரி வர்றது தான் நடக்கும். எதுக்கும் நாளைக்கு போன் பண்றேன்.''

''சரி அத்தை.''

''அங்க உன் ஃப்ரண்ட்ஸ்க்கெல்லாம் சொல்லிட்டியா?''

''ம்கூம், பாட்டி சொல்லியிருப்பாங்க. ரொம்ப ஆவலா எதிர்பார்த்துட்டிருப்பாங்க.''

''சரிடாம்மா. போய் சந்தோஷமா என்ஜாய் பண்ணிட்டு வா. சீக்கிரம் உன் வீட்டுக்காரர் கிளம்பலாமான்னு வந்து நிக்கறதுக்குள்ள எல்லாத்தையும் தயாரா எடுத்து வெளிய வெச்சுடலாம், வா.''

''சரி அத்தை!'' என்று உடன் சென்றாள் ரதி.

''ரதிம்மா! இதுல ஸ்வீட், இதுல ரெண்டுலயும் மிக்ஸரும் முறுக்கும் இருக்கு. போன உடனே பாட்டிகிட்ட எடுத்துக் குடு.''

''இவ்வளவு எதுக்கு அத்தை?''

''அது சரி, இதுவே குறைவா இருக்குன்னு நான் ஃபீல் பண்ணிட்டிருக்கேன்.''

பேசிக் கொண்டே அத்தையும், மருமகளுமாக அனைத்தையும் எடுத்து வைத்து முடிக்கவும் குணசீலன் வரவும் சரியாக இருந்தது.

''வா குணா, அப்பா எங்க?''

''வந்திருக்கார்மா. பேன்ட்ட மாத்திட்டுவரப் போயிருக்கார்னு நினைக்கறேன். சாப்பிடலாமா?''

''எல்லாம் தயார். நீங்க வந்து உக்காந்தா சரி.''

''சீக்கிரம் எடுத்து வைங்கம்மா.''

''ரதி, நீயும் வாம்மா!'' என்று சுசீலா மருமகளை அழைக்க, அதே சமயம் சுந்தர மூர்த்தியும் வந்து சாப்பிட அமர்ந்திருந்தார்.

''என்ன யோசனை? இனி சாப்டுட்டு கிளம்பினா தான் சரியா இருக்கும்!'' என்று கணவன் சொல்ல, தானும் உடனே அமர்ந்து கொண்டாள் ரதி.

''ம், சொல்றவங்க சொன்னா எல்லாம் நடக்குது!'' என்ற தனது அத்தையின் வார்த்தைகளில், ''அச்சச்சோ! அப்படியெல்லாம் இல்ல அத்தை!'' என்று அவசரமாக மறுத்தாள் ரதி.

''ஏன், அப்படித்தான்னே நீ சொல்லுமா!'' என்று சுந்தர மூர்த்தி சொல்ல, ''எல்லாம் அவங்க ஊருக்குப் போகப் போற சந்தோஷம் தான்!'' என்றான் குணசீலன்.



''யாருக்கு? உனக்கா, ரதிக்கா?''

''அது சரிதான், என் பொண்டாட்டியோட சந்தோஷம் தான் என்னோட சந்தோஷமும்.''

''இதெல்லாம் கொஞ்சம் ஓவரா இல்ல?'' என்று சுசீலா சிரிக்க, ரதியால் தான் மற்றவர்களுக்கு முன்பாகத் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

''சரிதான் விடுமா. மத்தவங்களுக்காவது குடுத்து வெச்சிருக்கே!'' என்று சுந்தரமூர்த்தி தனது மனைவியைப் பார்த்துச் சொல்ல, ''அத நான் சொல்லணும்!'' என்றார் சுசீலா.



## 16

மதிய உணவை முடித்துக் கொண்டு கணவனுடன் காரில் ஊருக்குக் கிளம்பியிருந்தாள் ரதி.

கணவனின் கவனம் முழுவதும் பாதையில் காரைச் செலுத்துவதில் இருக்க, அவள் வெளியே வேடிக்கை பார்த்த வண்ணம் வந்தாள்.

ஓரிரு முறை திரும்பித் தன்னைப் பார்த்துவிட்டுப் பின் மீண்டும் திரும்பிக் கொள்ளும் மனைவியின் செய்கையில், ''என்னமா?'' என்று கேட்டான் குணசீலன்.

''இல்ல. ஏதோ யோசனையில இருப்பீங்க போலிருக்கு?''

''சரிதான். கம்பெனில ஒரு பெண்டிங் வொர்க். ஆனா அப்பா காதுலயும் போட்டுட்டேன். பாத்துக்குவார்!'' என்றவன், ''என்ன சொல்லு, நீ என்ன சொல்ல வந்த?'' என்றான்.

''இல்ல, நான்...''

''ம். சொல்லு.''

''நான் இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா?''

''அப்படியா?''

''ம்.''

''ஏன்?''

''ஏன்னா ஊருக்குப் போய்ட்டிருக்கோமே, அதான். அங்க எல்லாருக்கும் உங்கள இன்ட்ரட்யூஸ் பண்ணி வைக்கணும்.''

''எல்லாருக்கும்னா?''

''எல்லாருக்கும்னா என் ஃப்ரண்ட்ஸ், ரிலேட்டிவ்ஸ், தெரிஞ்சவங்க, பழகினவங்க எல்லாருக்கும் தான்.''

''அட, அத்தன பேரத் தெரியுமா அப்ப உனக்கு?''

''பின்ன, ஒரே ஊர்ல இருபது வருஷத்துக்கும் மேல இருந்துட்டிருக்கேன். தெரியாம என்ன?''

''எப்படியோ அங்க போனா பொழுது நல்லாப் போகுதுங்கறது மட்டும் தெரியுது.''

''சரிதான் குணா.''

மனைவியின் சந்தோஷம் தன்னையும் பற்றிக் கொண்டதைப் போல உணர்ந்தான் குணசீலன்.



''ரதி...''

கணவனின் அழைப்பில் திரும்பி அவனைப் பார்த்தாள்.

''என்ன குணா, சொல்லுங்க?''

''இல்ல, நானும் கூட இப்ப ரொம்ப சந்தோஷமா தான் இருக்கேன்.''

''ஓ, அப்படியா!''

''ஆமாம், அங்க இருக்கப் போற இந்த ஒரு வாரமும் கையைக் கோத்துக்கிட்டு ஊரெல்லாம் சுத்தலாம் உன் விருப்பப்படி. சரியா?''

கணவன் கேட்க, வெட்கத்துடன் சரி என்பதைப் போலத் தலையை ஆட்டினாள் ரதி.

''ஆனாலும்...''

''என்னடா?''

''இல்ல, அது கிராமம்...''

''சரி.''

''அங்கெல்லாம் இத சாதாரணமா எடுத்துக்க மாட்டாங்களே.''

''எத?''

''நீங்க சொல்ற மாதிரி நாம ரெண்டு பேரும் சேந்து சுத்தறதைத்தான் சொல்றேன் குணா.''

''நம்ம ரெண்டு பேரும் புருஷன், பொண்டாட்டியா...''

''அது சரிதான், ஆனாலும் ஒரு...''

மனைவியின் தேவையற்ற தயக்கம் குணசீலனுக்குச் சிரிப்பை வரவழைத்திருந்தது.

கார் முக்கியச் சாலையை அடைந்திருக்க தனது இடது கையால் மனைவியின் கையைப் பற்றியிருந்தான்.

கணவனின் பார்வை தன்னை என்னவோ செய்ய, உதட்டைக் கடித்தபடி குனிந்து கொண்டு விட்டிருந்தாள்.

''வேண்டாம்மா.''

''என்ன வேண்டாம்?''

''அப்புறம் தாங்காது.''

இப்பொழுது கணவனின் கவனம் தனது உதடுகளில் வந்து நிலைத்திருக்க, வெட்கத்தில் மேலும் முகம் கன்றிப் போனாள் ரதி.

''ம்கூம். இது தாங்கவே தாங்...''

''ஷ்...''

தனது மடியிலிருந்த கணவனின் கையை நறுக் கென்று கிள்ளியிருந்தாள் ரதி.

''ம். இப்ப எப்படியிருக்கு?''

''இதெல்லாம் கொஞ்சங் கூட நியாயமே கிடை யாதுமா.''

''ம், நியாயத்தப் பத்தி நீங்க பேசறீங்களாக்கும்?''

''ஏன், நான் பேசக் கூடாதா?''

''பின்ன? நேரங்காலம் தெரியாம ஏதேதோ பேசிக் கிட்டு!''

''இதுக்கெல்லாம் கூட நேரங்காலம் பாக்கணுமா? சரிதான். அப்படியே பாத்தாலும் கூட இந்த மாதிரி ஒரு தனிமை...''



''போதும் குணா.''

''ம்கூம். எனக்குப் பத்தாது.''

''நீங்க ரொம்ப மோசம்.''

மனைவியின் சிணுங்கல் என்னவோ செய்திருக்க, தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள மிகவும் சிரமப்பட்டுத் தான் போனான் குணசீலன்.

சில வினாடிகளில், ''சரி விடு பாத்துக்கறேன்,'' என்றான்.

''என்ன பாத்துக்குவீங்களாம்?''

''அத அப்புறமா சொல்றேன்.''

''ம்கூம். இப்பவே சொல்லுங்க.''

''இப்பவா?''

''ம்.''

''எனக்கும் ஆசையா தான் இருக்கு. ஆனா இப்ப முடி யாது.''

''ஏனோ?''

''அதுக்குத் தனிமை வேணும்...'' என்று கணவன் தொடர்ந்து மேலும் ஏதேதோ சொல்லச் சொல்ல, இரத்த மென முகம் சிவந்து போனாள் ரதி.

மனைவியின் நிலை புரிய, ''என்ன நான் சொல்றது, அப்பத் தடுத்துப் பாரு!'' என்று புன்னகையுடன் சொன் னான்.

அதற்கு மேல் கணவனின் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் மும்முரமாக வெளியே வேடிக்கை பார்ப் பதைப் போலத் திரும்பிக் கொண்டு விட்டிருந்தாள்.

மனைவியின் நிலை புரிய, நன்றாகவே சிரித்தான் குணசீலன்.

''அப்படிப் பாத்தா உனக்குக் கிராமத்துல ப்ரண்ட்ஸ் நிறைய இருக்காங்கன்னு சொல்லு.''

கணவனின் கேள்வியில் மீண்டும் திரும்பினாள் ரதி.

''என்ன அப்படியா?''

''போடா! நீ பேசாத.''

மனைவியின் கோபத்தில் மீண்டும் சிரித்து விட்டிருந்தான் குணசீலன்.

''ம், பேர் சொல்லிக் கூப்புடக் கூடத் தயங்கிட்டிருந்த நல்ல பொண்ணா இருந்தவ இன்னைக்கு...''

''ஆமாம், அப்படித்தான் கூப்புடுவேனாக்கும்.''

''ஓ உங்க கிராமத்துல எல்லாப் பொண்ணுங்களும் அவங்களோட...''

''அது ஒண்ணும் கிராமம் கிடையாது.''

''சரி விடு, உங்க ஊர்ல...''

''அதெல்லாம் இல்லையே, ரொம்ப மரியாதையா தான் கூப்புடுவாங்க.''

''அப்ப என்ன நீ மட்டும்...''

''ஏன் குணா, கூப்புடக் கூடாதா? உங்களுக்குப் பிடிக்காதா?''

மனைவியின் மென்மையான கேள்வியில் இப்பொழுது மீண்டும் சிரித்து விட்டிருந்தான் குணசீலன்.

''தாராளமாக் கூப்புடலாம். அதுவும் இந்த மாதிரி தனிமைல இன்னும் கூட என்ன வேணு...''



''போதும், போதும்.''

''அட அதுக்குள்ள மேடம்க்கு திரும்பவும் கோபம் வந்துடுச்சா?''

''எங்க ஊருக்கு வந்து பாருங்க. நீங்களே ஆச்சரியப் பட்டுப் போவீங்க.''

''ஏன், அப்படியென்ன ஸ்பெஷல்?''

''அங்க எல்லாமே ஸ்பெஷல் தான்.''

''சரி தான், நான் வந்து பாக்கத்தான போறேன்.

''நான் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதிலே சொல்லல.''

''ம், என்ன கேட்டீங்க?''

''உனக்கு அங்க ஊர்ல ஃப்ரண்ட்ஸ் நிறைய இருக்காங் களான்னு கேட்டேன்.''

''அது சரிதான், இருக்காங்க.''

''பாய் ஃப்ரண்ட்ஸா இல்ல எல்லாமே கேர்ள் ஃப்ரண்ட்ஸ் மட்டும் தானா?''

அப்படிக் கேட்ட கணவனைப் புன்னகையுடன் பார்த் தாள் ரதி.

''ஏன் சிரிக்கற?''

''என்ன பதில் சொன்னா சந்தோஷப் படுவீங்க?''

''உண்மைய சொன்னா.''

''கேர்ள் ஃப்ரண்ட்ஸ் மட்டும் தான். ஆனா...''

''ம், என்ன?''

''என் ஸ்கூல், காலேஜ் படிப்பு ரெண்டுமே கோ எஜு கேஷன்ஸ் தான். அந்த விதத்துல நிறையப் பசங்களத் தெரியும்.''

''ஓ, ஆனா அவங்க ஃப்ரண்ட்ஸ் கிடையாதாக்கும்?''

''அப்படிச் சொன்னா கிராமத்துல ஏத்துக்க மாட்டாங் களே...''

''இப்பத்தான் யாரோ கிராமம்னு சொல்லக் கூடா துன்னு சண்ட போட்டாங்க.''

''ஆமாம் போட்டேன். ஆனா நான் இப்ப சொல்ல வர்ற வார்த்தைகளோட அர்த்தமே வேற. பெரிய ஏன் இங்க சென்னைல இருக்கற மாதிரியெல்லாம் பொண் ணுங்களும், பசங்களும் சேந்து போறத, பேசறத, பழகறத யெல்லாம் ஊர்ல இயல்பா எடுத்துக்க மாட்டாங்க. தப்பு வண்ணம் பூசிடுவாங்க.''

''ஓ அப்ப நீ எந்தப் பையன் கூடவும் பேசினதே இல்லன்னு சொல்லு.''

''அதெல்லாம் இல்லையே. அவாய்ட் பண்ண முடி யாத பட்சத்துல நிறையப் பேசியிருக்கேன். மத்தவங்க பார்வைய உறுத்தாத அளவுக்கு. முக்கியமா அவசியத் துக்கு.''

''இதுக்கு சிம்பிளா நீ முன்னாடியே ஒரே வரில சொல்லி யிருக்கலாம்.''

''என்னன்னு?''

''உனக்கு பாய் ஃப்ரண்ட்சும் இருக்காங்கன்னு.''

''சரி விடுங்க. அப்படியே வெச்சுக்கோங்க.''



கோபப்படாமல், அதே சமயம் இயல்பாக மனைவி பதில் சொன்ன விதம் குணசீலனுக்குப் பிடித்திருந்தது.

ஆனாலும் விளையாட்டிற்கு மேலும் சீண்டினான்.

பின்னாளில் அதுவே வினையாக மாறப் போகிறதென் பதை அறியாமல்.

''ஆனாலும் என்னால நம்ப முடியல.''

''என்ன நம்ப முடியல?''

''இல்ல, அதெப்படி பொண்ணுங்களும், பசங்களும் ஃப்ரண்ட்ஸா இருக்க முடியும்?''

..............

''என்ன மேடம், பேசுங்க?''

''என்ன பேசறது?''

''அதான் ஒரு பொண்ணும், பையனும் தொடர்ந்து ரொம்ப நாளைக்கு ஃப்ரண்ட்ஸா இருக்கறது சாத்தியமா, அதுலயும் நம்ம சுத்தி இருக்கறவங்கெல்லாம் சந்தேகக் கண்ணோட பாத்துட்டே இருக்கற பட்சத்துல?''

''இதுக்கு நான் என்ன பதில் சொல்லணும்னு எதிர் பாக்கறீங்க?''

''உன் அனுபவத்த...''

''ஹலோ, என்ன ஸார் உதை கேக்குதா?''

சுள்ளென்ற மனைவியின் கோபம் சிரிப்பை வரவழைத் திருந்தாலும், குணசீலன் அதைத் துளியும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

''ம்கூம், பதில் தான் கேக்கறேன்.''

''எனக்குத் தான் அப்படியொரு அனுபவமே இல்லையே.''

''சும்மா சொல்லக்கூடாது, நீ படிச்சு வந்த சூழல்ல அப்படியொரு அனுபவம் உனக்கு நிச்சயம் இருந்திருக்கணும், இருக்கும்.''

''ம்கூம் இல்ல.''

''பொய் சொல்லாத.''

மனைவியைச் சீண்டி அவள் கோபப்படுவதைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் குணசீலனுக்கு.

''நான் எதுக்காகப் பொய் சொல்லணும்?''

''யாருக்குத் தெரியும்?''

''ஹலோ, இப்ப உங்களுக்கு என்ன தான் வேணும்?''

''உண்மை.''

''என்ன உண்மை?''

''அது உனக்குத்தான தெரியும்.''

''என்ன நீங்க, விளையாட்றீங்களா?''

''நீ எப்படி எடுத்துக்கிட்டாலும் சரிதான்.''

''க்கும், இதுக்கெல்லாம் ஒண்ணும் குறைவில்ல...''

மனைவி கோபப்படத் தொடங்கியிருக்க, அதை உள்ளூர ரசித்தான் குணசீலன்.

''என்னமா, பேசு?''

''என்னத்தப் பேசறதாம்?''

''ஒரு பொண்ணும், பையனும் ஃப்ரண்ட்ஸா இருக்கறது சாத்தியமான்னு கேக்கறேன்.''

''ஏன், பதிலையும் நீங்களே சொல்லிடுங்களேன்.''



''நானெப்படி சொல்ல முடியும்?''

''ஏன்?''

''எனக்குத் தான் அப்படியொரு அனுபவமே இல்லையே.''

''அப்ப எனக்கு மட்டும் இருக்குன்னு சொல்றீங்களா?''

கோபத்தில் உயர்ந்திருந்த மனைவியின் குரலில், ''அத நான் சொல்ல வேற செய்யணுமா?'' என்று அதே போலத் தானும் கேட்டான்.

கணவனின் கேள்வியில் அதிர்ச்சியின் எல்லைக்கே சென்று விட்டிருந்தாள் ரதி.

கடவுளே! என்ன இவன், விட்டால் இன்னும் தன்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்வான் போலிருக்கிறது.....

''என்ன மேடம், எப்படிடா இவனுக்கு எல்லாமே தெரிஞ்சிருக்குன்னு ஆச்சரியமா இருக்கா?''

''ம்க்கும், இதுக்கெல்லாம் ஒண்ணும்...''

''ம், ஏன் பாதியில நிறுத்திட்ட சொல்லு?''

''உங்க மனசுக்குள்ள ஏதோ வக்கிர புத்தி இருக்கு. அது நான் என்ன பதில் சொன்னாலும் தப்பாத்தான் எடுத்துக்கும்.''

''ஓஹோ!''

''சிரிக்காதீங்க.''

''ஏன், வேணும்னா அழட்டுமா?''

''நீங்களா? மத்தவங்கள அழ வைக்காம இருங்க. அதுவே போதும்.''

''அடடா! நல்லாப் பேசற.''

''நீங்க பேசாதீங்க.''

''உம் மனசுல ஏதோ தப்பிருக்கு. இல்லன்னா உனக்கு இவ்வளவு கோபம் வராது.''

''ஆமாம், இருக்கு. நான் மோசமான பொண்ணு தான். அதுக்கு இப்ப என்னங்கறீங்க?''

''எனக்கென்ன, நானென்ன சொல்லப் போறேன். சாதாரணமா ஒரு கேள்விக்குக் கருத்து மட்டும் தான் கேட்டேன். ஆனா நீதான் குறுக்குக் கேள்விகளையெல்லாம் நிறையக் கேட்டு விஷயத்தையே திசை திருபிட்ட....''

''அதான் சொல்லிட்டேனே, நான் மோசமான பொண்ணு தான்னு, இன்னும் என்ன...?''

''ம்கூம்.''

''என்ன?''

கோபத்துடன் கணவனைப் பார்த்தாள் ரதி.

''இருக்க முடியாது, இருக்கவே முடியாது.''

''என்ன இருக்கவே முடியாது?''

''நீ மோசமான பொண்ணா இருக்கவே முடியாது.''

''அடடா! ஐயாவுக்குத் தான் எவ்வளவு நம்பிக்கை, அதுவும் எவ்வளவு சீக்கிரமா வந்திருக்கு. கிரேட்!''

''கூல் டியர் கூல்.''

''என்னால நம்பவே முடியல!'' என்ற மனைவியைப் பார்த்தான் குணசீலன்.

..............



''நீங்க இந்த அளவுக்குச் சந்தேகப் பிறவியா இருப்பீங்கன்னு நான் துளி கூட எதிர்பாக்கல.''

''அட!''

''நானொரு முட்டாள், எதையுமே புரிஞ்சுக்காத முட்டாள்.''

''ம், இது வேணும்னா கரெக்ட்.''

கணவன் ஸீரியஸாகச் சொன்ன பாவனையில் தன்னையறியாமலேயே அதுவரை இருந்த கோபமனைத்தையும் மறந்து சிரித்து விட்டிருந்தாள் ரதி.

''என்ன, கொழுப்பா?''

''ம்கூம். முசுடு.''

முசுடா, ஏன் இப்படிச் சொல்கிறான்?

''என்னப் பத்தி என் மனைவி அப்படித்தான் கேள்விப் பட்டாளாம்.''

''ரொம்ப சரிதான், அது யாரப்பா அந்த அறிவு ஜீவிப் பொண்ணு?''

''கொஞ்சம் முன்னாடி தன்னையே முட்டாள்னு சொல்லிக்கிட்டவ தான் அந்த அறிவு ஜீவிப் பொண்ணு. சரி, நீயே சொல்லு. நீ அப்ப சொன்னது உண்மையா, இல்ல இப்ப சொன்னதா? ஐ மீன் நீ முட்டாளா, இல்ல அறிவு ஜீவியா?''

மிகவும் முக்கியம் போலக் கணவன் கேட்ட பாவனையில் மீண்டும் சிரித்து விட்டிருந்தாள் ரதி.

''நான் அறிவு ஜீவி தானப்பா. ஆனா உன் பொண்டாட்டி முட்டாள்.''

''ஐயோ! நானில்லமா, விட்ருங்கம்மா.''

இப்பொழுது பயந்து விட்டவன் போல நடித்த கணவனை, ''உங்கள...'' என்று கோபமும் சிரிப்பும் ஒரு சேரத் தோன்ற அடிக்கப் போனாள் ரதி.

''ம், கிராமத்துப் பொண்ணு அடக்க ஒடுக்கமா இருப்பான்னு கல்யாணம் பண்ணி வெச்சாங்க. ஆனா இங்க நான் பட்ற பாடு யாருக்குத் தெரியும். பேர் சொல்லிக் கூப்டாச்சு, வாடா போடான்னும் சொல்லியாச்சு, இப்பக் கடைசியா அடியும் வாங்கியாச்சு. இனி என்னதான் மிச்சமோ தெரியல...''

கணவனின் புலம்பலில் நன்றாகவே சிரித்து விட்டிருந்தாள் ரதி.

''கிராமத்துப் பொண்ணுன்னா சும்மாவாக்கும்? அதுவும் உங்கள மாதிரி...''

''ம்.''

''வேண்டாம், விடுங்க.''

''இல்ல, உன் கோபம் தீரத் திட்டி முடிச்சுடு.''

''கோபமா, அப்பிடின்னு நான் உங்ககிட்ட சொன்னேனா?''

''பாரு, கோபப்பட்டுக்கிட்டே கோபமா அது எப்படியிருக்கும்னு கேக்கற?''

''ஐயோ! போதுமடா சாமி. கொஞ்சம் பேசாம வண்டிய ஓட்டுங்க. நான் தூங்கப் போறேன்.''

''அதெப்படி, அப்புறம் நானும் தூங்கிடுவேன்.''

''உங்க இஷ்டம்.''



''நிஜமாவே செஞ்சிடுவேன்...''

''கடவுளே! இப்ப என்னதான் வேணும உங்களுக்கு? எனக்கும் கார் டிரைவிங் திவ்யமாத் தெரியும். அதனால நான் தூங்கியெழுந்ததும் நான் ஓட்றேன். நீங்களும் கொஞ்ச நேரம் தூங்குவீங்களாம்.''

''ம், கொஞ்ச நேரம் தூங்கணும்னு தான கேட்டேன். அதுக்கேன் ஒரேயடியாத் தூங்க வழி சொல்ற...!'' என்று புலம்பிக் கொண்டே கணவன் காரைச் செலுத்த, வந்த புன்னகையை முயன்று வெளிக்காட்டிக் கொள்ளாமல் மறைத்தபடி கண்களை மூடி இருக்கையில் பின்னால் சாய்ந்து படுத்துக் கொண்டு விட்டிருந்தாள் ரதி.

## 17

குணசீலனும், ரதியும் கிராமத்தைச் சென்றடைந்த போது மாலை நேரமாகி விட்டிருந்தது.

ஏற்கெனவே அனைவரும் தயாராக வாசலில் வந்து காத்திருக்க, புதுமணத் தம்பதியை ஆலம் சுற்றி உள்ளே அழைத்துக் கொண்டார் மங்களம்.

அக்கம் பக்கத்து வீடுகளில் இருந்தெல்லாம் நிறையப் பேர் வந்திருக்க, வரவேற்பு தடபுடலாக இருந்தது.

மரியாதைக்காக ஓரளவு அனைவரிடமும் பேசிவிட்டு அதற்குப் பிறகே, மாமனார் ரகுநாத்துடன் வீட்டிற்குள் வந்தான் குணசீலன்.

''வாங்க மாப்ள, உக்காருங்க.''

''வரலாம் மாமா. நீங்க, நேத்து ஈவினிங் வந்திருப்பீங்க இல்லையா?''

''அது சரிதான். உங்களுக்கும் தனியாளா வண்டி யோட்டிட்டு வந்து அசதியா இருக்கும்.''

''ம்கூம், இல்ல மாமா. ஆறு மணி நேர ட்ராவலிங் எல்லாம் எனக்குப் பழக்கம் தான். சாதாரணமா வந்துடு வேன். அதோட ரதியும் கொஞ்சம் தூரம் கார ஓட்டிட்டு வந்தா.''

''பரவாயில்ல, சந்தோஷம்.''

''என்ன மாமா இப்படி ஈஸியா சொல்லிட்டிங்க? மனசுக்குள்ள நான் பயந்த பயம் எனக்கு மட்டும் தான தெரியும்?''

''எதுக்கு, என்ன சொல்றீங்க?'' என்ற ரகுநாத்திற்கும் குணசீலனின் கேலி புரிவதைப் போலத்தான் இருந்தது.

ஆனால் அதே நேரம், ''அப்ப என் பேத்திய நீங்க என் னன்னு நினைச்சுட்டிருக்கீங்க? என்று விளையாட்டுக் கோபத்துடன் கேட்டார் கருணாகரன்.

''உங்க பேத்தியாய் நினைச்சுட்டேன் தாத்தா!'' என்று பட்டென்று பதில் சொல்லியிருந்த குணசீலனின் பாவ னையில் இப்பொழுது தந்தை மகன் இருவருமே சிரித்து விட்டிருந்தனர்.

''போதும் சிரிச்சது. அவர் என்னக் கிண்டல் பண்றார். நீங்க ரெண்டு பேரும் இப்படிச் சிரிச்சுட்டிருக்கீங்க?''

கோபத்துடன் வந்து நின்ற பேத்தியைக் கருணாகரன் சமாதானப்படுத்த, மகளைப் புன்னகையுடன் பார்த்தார் ரகுநாத்.



''என்ன டாடி, நீங்க எதுவுமே பேச மாட்டேங்கறீங்க?''

''என்ன பண்றதுமா, மாப்பிள்ளையாச்சே! கோபப்பட் டுட்டாருன்னா...''

''அப்ப நான் கோபப்பட்டாப் பரவாயில்லையா?''

''நீதான, பரவாயில்ல!'' என்று சொல்லிக் கொண்டே பாட்டி மங்களம் டிபன் ப்ளேட்களை எடுத்து வந்து கொடுத்து உபசரித்தார்.

''எடுத்துக்கோங்க. அப்புறம் ஊர்ல அம்மா, அப் பாவையும் அழைச்சுட்டு வந்திருக்கலாமே.''

''வருவாங்க பாட்டி. நாங்க முன்னாடி கிளம்பி வந் தோம்.''

''வினய் காலேஜ்ல இருப்பான், இல்லையா?''

''ஆமாம் பாட்டி.''

ஒரு ப்ளேட்டைத் தான் கையில் எடுத்துக் கொண்ட குணசீலன் மாமா ரகுநாத்தையும், கருணாகரனையும் எடுத்துக் கொள்ளச் சொல்லி உபசரித்தான்.

''ஹலோ, முதல்ல எல்லாரும் நான் கேக்கற கேள்விக்குப் பதில் சொல்லுங்க. அப்புறமா சாப்புடுவீங்களாம்.''

மகள் கோபத்துடன் நின்றிருக்க, புரியாமல் பார்த்தார் ரகுநாத்.

''என்ன கண்ணம்மா இது, புதுசு புதுசா நிறையப் பழகி யிருக்க போல?'' என்று சற்றே அதட்டுவதைப் போலக் கேட்டார்.

''பின்ன என்ன டாடி, என்ன யாருமே கண்டுக்க மாட் டேங்கறீங்க. நானும் வந்ததுலிருந்து பாக்கறேன், நான்

ஒருத்தி இங்க இருக்கறதே உங்க எல்லாருக்கும் மறந்து போயிடுச்சு இல்ல?''

''அட என்ன ரதிம்மா இது...'' என்று பாட்டி மங்களம் ஏதோ சொல்ல வர, ''பேத்தி கேக்கறதுலயும் என்ன தப் பிருக்கு?'' என்றார் கருணாகரன்.

''என்னப்பா நீங்களும்?'' என்று தந்தையைப் பார்த்த ரகுநாத், ''நீயும் எங்க எல்லாருக்கும் ரொம்ப முக்கியம் தாம்மா. ஆனாலும் மாப்பிள்ளை அத விடவும் இல்லையா? அதோட அவருக்கு இது புது இடம், புதுச் சூழல். நாம கொஞ்சம்...''

''அதெல்லாம் புரியுது டாடி!'' என்ற மனைவி தன்னைச் சற்றே கோபத்துடன் பார்க்க, தான் பதிலுக்குப் புன்னகை செய்தான் குணசீலன்.

இதற்கெல்லாம் ஒன்றும் குறைவில்லையென்று கோபத்துடன் நினைத்துக் கொண்ட ரதி, தனது தந்தை யின் அருகில் சென்று அமர்ந்திருந்தாள்.

''என்ன கண்ணம்மா, வரும்போது மாப்பிள்ளைய பயப்படுத்திட்ட போல?''

அப்படிக் கேட்ட தந்தையைப் புரியாமல் பார்த்தாள் ரதி.

என்ன, மாமா இப்படி மீண்டும் பிரச்சனையை வர வழைப்பதைப் போலக் கேட்கிறார் என்று நினைத்துக் கொண்டவனுக்குச் சிரிப்பு தான் வந்தது.

''என்ன டாடி, அப்படி நானென்ன செஞ்சேன்?''

''நீ கார ஓட்டிட்டு வந்தியாமே...''



''அதுக்கு?'' என்று கோபத்துடன் கேட்டவள், சற்றே திரும்பிக் கணவனைப் பார்த்தாள்.

''ஐயய்யோ நானில்லமா, நீ எனக்கு ஹெல்ப் பண ணினதாத்தான் மாமாகிட்ட நான் சொன்னேன்.''

பயப்படுவது போலக் கணவன் சொல்ல, ''சரிதான். நம்பிக்கிட்டேன்!'' என்றாள்.

''என்னமா நீ...'' என்று தனது தந்தை ஏதோ சொல்ல வர, அதற்குள் வேறு ஏதோ கேட்டுப் பேச்சை மாற்றி யிருந்த கணவனை ம் இந்தப் பயம் இருக்கட்டும் என் பதைப் போலப் பார்த்தாள் ரதி.

புன்னகையுடன் தான்.

''உங்க மேல எனக்குக் கோபம் டாடி.''

''ஏன் கண்ணம்மா?''

''ம், பக்கத்துலயே இருந்துட்டுக் கூட நீங்க என்னப் பாத்து மூணு நாளாச்சு.''

''அத அங்கிள் கேக்கணும்!'' என்ற கணவனிடம், ''அப்பத் தப்பு எம்மேல தான்னு சொல்றீங்களா?'' என்று கேட்டாள் ரதி.

''அதான, சரி. விடுடாம்மா. இப்ப பாத்துக்கிட்டோ மில்லையா?''

''ரதி, நீயும் டிபன் எடுத்துக்கோ.''

பாட்டி மங்களம் சொல்ல, ''என்னடா இளைச்சுட்ட?'' என்று பேத்தியிடம் கேட்டார் கருணாகரன்.

''உங்களையெல்லாம் பாக்காம தான் தாத்தா!'' என்று குணசீலன் சொல்ல, ''சரிதான், நம்பிக்கறோம்!'' என்றார் ரகுநாத்.

''அப்புறம் மாப்பிள்ளைக்கு நம்ம ஊரையெல்லாம் நாளைக்குச் சுத்திக் காட்டணும்!'' என்று கருணாகரன் சொல்ல,

''ஆமாம் தாத்தா!'' என்றாள் ரதி.

''அப்படியே சொந்தங்கள், தெரிஞ்சவங்க, பழகினவங் கன்னு சிலர் வீட்டுக்கும் மாப்பிள்ளைக்கு ஆட்சேபணை இல்லைன்னா போயிட்டு...''

''நிச்சயம் போயிட்டு வரலாம் மாமா!'' என்று புன்னகை யுடன் முடித்தான் குணசீலன்.

''கண்ணம்மா, மாப்பிள்ளைக்கு வேஷ்டி வேணும்னா எடுத்துக் குடு, போ!'' என்று தந்தை சொல்ல, ''இல்லமா. நான் தூங்கப் போகும்போதே மாத்திக்கறேன்!'' என்று விட்டிருந்தான் கணவன்.

''அங்க அளவுக்கு இங்க இருக்காது. உங்களுக்கு என்ன அசவுகர்யம்னாலும் சொல்லுங்க.''

''சரிதான் மாமா!'' என்றான் குணசீலன்.

''என்னமா?'' என்று ரகுநாத் தாய் கொண்டு வந்து நீட்டிய டீ டம்ளரை எடுத்துக் கொண்டே கேட்க,

''இல்ல, ஊர்ல எல்லார் கண்ணும் ஒரே மாதிரியிருக் காது. கொஞ்சம் பாத்து முக்கியமானவங்க வீட்டுக்கு மட்டும் போனாப் போதும்!'' என்று தயக்கத்துடன் என் றாலும் சொல்லியே விட்டிருந்தார் மங்களம்.

''சரிதான்மா!'' என்று ரகுநாத் சொல்ல, சிரித்தாள் ரதி.

''ஏன்டி சிரிக்கற?''

''நீங்க எப்பதான் மாறுவீங்க பாட்டி?''



''ஏன் எனக்கென்ன?''

''பின்ன, எதுக்கெடுத்தாலும் ஏதோ ஒண்ணு சொல்லிக் கிட்டே இருக்கீங்க.''

''என்ன நீ, வரவர உனக்கு வாய் நீளம் ரொம்பவும் அதிகமாயிடுச்சு ரதி...''

''போதும் பாட்டி.''

''சரிதான் ரதிம்மா. பாட்டி எப்பவுமே நல்லதுக்குத்தான் சொல்லுவாங்க. விடு,'' என்றார் ரகுநாத்.

''ஆமாம்பா, நீ உன் மகள இன்னும் தலமேல தூக்கி வெச்சுட்டுக் கொண்டாடு. அவ குட்டிச்சுவராகட்டும்.''

''அப்ப நான் குட்டிச் சுவரா?''

''பின்ன வேறென்னவாம்?''

''போதும் மங்களம். குழந்தைய ஏன் இப்படியெல் லாம் பேசிட்டிருக்கற?'' என்று கருணாகரன் மனைவியை அதட்ட, ''புதுசு புதுசா வித்யாசமா நிறையப் பழகியிருக் காளேங்கற ஆதங்கம் தான். வேறென்ன?'' என்று உள்ளே சென்றார் மங்களம்.

''மகன் ஏதாவது சொல்லிடுவானோங்கற பயம் அவங் கம்மாவுக்கு!'' என்று கருணாகரன் வீட்டு மாப்பிள்ளையைப் பார்த்துச் சொல்ல, ரகுநாத்தால் தன்னை ஏனோ இயல் பாகக் காட்டிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

தான் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதைக் காட்டுவதைப் போல, வேறு விஷயங்களைப் பற்றி குணசீலன் பேசத் தொடங்கி விட்டிருக்க, தானும் அதில் கலந்து கொண்டார் ரகுநாத்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரும்பி மனைவியைப் பார்த்தான் குணசீலன்.

"கொஞ்சம் வெளிய நடந்துட்டு வரலாமாம்மா?"

கணவன் கேட்க, சரியென்றாள் ரதி.

சில நிமிடங்களில் இருவரும் வீட்டை ஒட்டியே இருந்த தென்னந்தோப்பிற்குள் வந்திருந்தார்கள்.

காற்று சிலுசிலுவென்று சாமரம் வீச, எப்பொழுதும் போல அந்தச் சூழல் ரதியின் மனதை லேசாக்கி விட்டிருந்தது.

அதைவிட அதிகமாகவே என்றும் சொல்லலாம்.

அதிலும் கணவனின் அருகாமை அப்பொழுது அவளை ஏதேதோ செய்தது.

எத்தனையோ ஆயிரம் முறைகள் தனியாகச் சுற்றி யலைந்த இடத்தில் இப்பொழுது கணவனே என்றாலும் ஒரு ஆடவனுடன் இருப்பது அவளை மெய்சிலிர்க்கச் செய்திருந்தது.

இருவரும் தோட்டத்திற்குள் சிறிது தூரம் வந்திருக்க, அங்கிருந்த அந்தக் கல் திண்ணையில் தான் முதலில் அமர்ந்தாள் ரதி.

"உக்காருங்க!" என்று கணவனையும் அமரச் சொன்னாள்.

"ஏன், அப்ப உள்ளே வரைக்கும் வேண்டாமா?"

"இருட்டிடுச்சே."

"பயமா?"

"ம்கூம், ஆனாலும் இந்த நேரத்துல போய்ப் பழக்கமில்ல."



"ஏன், பாட்டி, தாத்தா ஏதாவது சொல்வாங்களா?"

"ஆமாம், அதுதான்."

"நீ தனியாப் போனா அப்பிடிதான். இப்பதான் நான் இருக்கேனே..."

"அது சரிதான், ஆனாலும்..."

"என்னமா?"

"இங்கயே உக்காந்துக்கலாம் குணா. எனக்கு இந்த இடம் ரொம்ப பிடிக்கும்."

மனைவி சொல்ல, "அப்படின்னா சரி," என்று உடனே அமர்ந்து விட்டிருந்தான் குணசீலன்.

"அப்ப இந்த நேரத்துல தோட்டத்துக்குள்ள போக உங்களுக்குப் பயமில்லையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் ரதி.

"என்ன பயம்?"

"இருந்தாலும் சிட்டில இருந்து பழகிட்டு..."

"நமக்கும் விவசாய நிலம், முக்கியமா தோப்பு இருக்கு. தெரியுந்தான உனக்கு?"

"அத்தை ஏதோ பேச்சு வந்தப்ப சொன்னாங்க. எத்தன ஏக்கர்?"

"ஒரு ஐம்பது ஏக்கர் இருக்கும்."

"அவ்வளவா!"

"அட என்ன இவ்வளவு ஆச்சரியம்!" என்று சிரித்த குணசீலன், "அந்த மாதிரி இன்னும் எத்தனையோ மடங்கு இருந்தது. பாத்துக்க முடியலன்னு நிறையக் குடுத்துட்டோம்!" என்றான்.

''ஓ. ஆனா இங்க வெறும் அஞ்சு ஏக்கர் தான் இருக்கு. அதையே எங்களால பாத்துக்க முடியல...''

''ஆமாம், பின்ன பாட்டி தாத்தாவால முடியணும் இல்லையா?''

''அங்க யார் பாத்துக்கறாங்க.''

''எல்லாமே ஆளுங்கதாம்மா. நாங்க மூணு மாசத்துக்கொரு தடவ போய்ட்டு மட்டும் வருவோம். அவ்வளவு தான்.''

விவசாயத்தைப் பற்றியெல்லாம் கணவன் இன்னும் எத்தனை எத்தனையோ விஷயங்களைச் சொல்லிக் கொண்டே போனதில் பிரமித்துப் போனாள் ரதி.

தன்னுடைய கணவனுக்கு என்னதான் தெரியாது என்று பெருமையாகவும் இருந்தது.

''என்னமா?''

''இல்ல, எல்லாமே தெரிஞ்சு வெச்சிருக்கீங்களேன்னு பாத்தேன்.''

''ம்கூம். உலகத்துல யாராலையும் எல்லாத்தையுமே தெரிஞ்சு வெச்சிருக்க முடியாது!'' என்றவன், ''இருந்தாலும் நீ குடுக்கற சாட்டிபிகேட்னா சும்மாவா!'' என்று சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

கணவனின் பாவனையில் தன்னையறியாமலேயே சிரித்து விட்டிருந்தாள் ரதி.

''ஆனாலும்...''

''என்னமா?''

''நீங்க என்ன சந்தேகப்பட்றீங்க இல்ல?''



''சந்தேகப்பட்றேனா?''

''ம், கார்ல வரும்போது கேட்டிங்களே.''

மனைவி தான் பேசியதையெல்லாம் உண்மையென நினைத்து வருந்துவது புரிந்தது.

மனம் உருகிப் போய்விட்டிருக்க, ரதி என்று ஏதோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போனான்.

ஆனால் உடனே இப்பொழுது வேண்டாமென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பேச்சின் திசையை மாற்றினான்.

கணவன் பேச்சை மாற்றியது, ஏற்கெனவே ரதிக்கு இருந்த சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்தியிருந்தது.

ஏனோ மனம் மிகவும் பாரமாகி விட்டிருக்க, முயன்று முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டபடி அமர்ந்திருந்தாள்.

அவ்வளவு நேரமும் இருந்த சந்தோஷமான மனநிலை இப்பொழுது திடீரென்று துணி கொண்டு துடைத்தாற் போலக் காணாமல் போய் விட்டிருந்தது.

அடுத்த சில நிமிடங்களில், ''போலாம்,'' என்று எழுந்திருந்தாள்.

''என்னமா, திடீர்னு என்...''

''போலாம் ப்ளீஸ்.''

''ஏன் நீயே சொன்ன மாதிரி இந்த இடம் ரொம்ப நல்லாக்கு. இன்னும் கொஞ்ச நேரம் உக்காந்திருக்கலாமே.''

''எனக்கு இப்பப் பிடிக்கல!'' என்ற மனைவி அதற்கு மேல் ஒரு வினாடி கூட நிற்காமல் கடகடவென்று

திரும்பி நடக்கத் தொடங்கி விட்டிருக்க, அவளுடைய கோபத்திற்கான காரணத்தை குணசீலனால் புரிந்து கொள்ள முடிந்தது.

அழைத்துச் சமாதானப்படுத்தினால் என்னவென்று தோன்றி விட்டிருந்த மனதை இப்பொழுது வேண்டாம், சற்றுப் பொறு என்று கட்டுப்படுத்திக் கொண்டான்.

மகளும், மருமகனும் வீட்டிற்குள் வர, ''வாங்க மாப்பிள்ளை!'' என்று வரவேற்றார் ரகுநாத்.

''என்ன மாமா திண்ணைல உக்காந்துட்டீங்க?''

''ஆமாம், வாங்க. நீங்களும் உங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபணையில்லேன்னா உக்காருங்க.''

''இதுல என்ன மாமா இருக்கு?'' என்று தானும் உடனே அமர்ந்து விட்டிருந்த குணசீலன், தனது மாமாவுடன் பொதுவான விஷயங்களைப் பேசத் தொடங்கி விட்டிருந்தான்.

சிறிது நேரத்தில் ரதி வந்து தந்தை, கணவன் இருவரையும் சாப்பிட அழைக்க, சரிதானென்று எழுந்தார்கள்.

''என்னமா, இன்னும் கொஞ்சம் போகட்டுமே!'' என்ற தந்தையைப் பார்த்தவள், ''அப்படிப் பாத்து தான் இப்ப வந்து கூப்புட்றேன் டாடி. இல்லன்னா அப்பவே வந்து சாப்பிட அழைச்சிருப்பேன்!'' என்றாள்.

புரியாமல் பார்த்த கணவனிடம், ''இங்க எல்லாரும் எட்டு, எட்டரைக்குள்ள தூங்கவே ஆரம்பிச்சுடுவாங்க. சாப்பாட்டு வேல முடிஞ்சா பாட்டி தூங்கப் போவாங்க. அதான்,'' என்றாள்.

''அட என்னமா நீ, பாட்டிய வேணும்னா தூங்கப் போகச் சொல்லு.''



தந்தை சொல்ல, ''ம்கூம். நானும் சொல்லிப் பாத்துட்டேன். வீட்டு மாப்பிள்ளைக்கு அவங்க கையால பரிமாறிட்டுத் தான் போவாங்க போலிருக்கு டாடி!'' என்றாள்.

''அதுவும் சரிதான்!'' என்ற ரகுநாத், குணசீலனுடன் சென்று சாப்பிட அமர, அதே சமயம் கருணாகரனும் உள்ளே வந்தார்.

''வாங்க தாத்தா, என்னால உங்களுக்கும் சிரமம் போல. இல்லைன்னா இந்நேரம் சாப்டுட்டு தூங்கவே போயிருப்பீங்கன்னு நினைக்கறேன்.''

குணசீலன் சொல்ல, ''அட என்ன மாப்ள நீங்க, அப்படித் தூங்கியாகணும்னா நானும் அப்பவே சாப்டுட்டுப் போய்ப் படுத்திருப்பேன். ஆனா அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல!'' என்று அமர்ந்தார் கருணாகரன்.



## 18

சிறிது நேரத்தில் கணவனுக்கும், தனக்குமாகப் பாலை எடுத்துக் கொண்டு மேலே தங்களுடைய அறைக்கு வந்திருந்தாள் ரதி.

உள்ளே வந்தவளுக்கு அறையின் திடீர் மாற்றங்கள் கண்களில் பட்டன.

முன் போல இல்லாமல் ஒற்றைத் தேக்குக் கட்டில் இப்பொழுது இரண்டாக மாறியிருந்தது.

ஏன், அறை முழுவதுமே எத்தனையோ மாற்றங்கள்.

மெச்சிக் கொள்ளக் கூடிய மாற்றங்களே.

எல்லாம் மரியாதைக்கும், மதிப்பிற்குமுரிய வீட்டு மாப்பிள்ளைக்காக என்பது புரிந்தது.

ஆனால் அவனோ...

சரியாக அதே நேரம் குளித்து விட்டுக் கணவன் வெளியே வருவது தெரிந்தது.

அப்படியே சென்று அந்த அறையின் கதவை உள்பக்கமாகத் தாழிடுவதும்,

ஏனோ மனம் படபடவென்று அடித்துக் கொண்டது,

ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கண்ணாடியின் முன்பாக இருந்த ஸ்டூலில் சென்று அமர்ந்தவள், அதிகப்படியான நகைகளைக் கழற்றி வைக்கத் தொடங்கினாள்.

சில வினாடிகளில் அவை அனைத்தையும் நகைப் பெட்டிக்குள் எடுத்து வைத்து விட்டு எழுந்தாள்.

ஆனால் அதற்குள் தனக்கு மிக அருகிலேயே வந்திருந்த கணவன் மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியவாறு நின்று தன்னையே பார்ப்பது தெரிந்தது.

அது சரிதான்.

மனதிற்குள் ஏதோ பெரிய மன்மதனென்று நினைப்பு போலிருக்கிறது.

''ஆமா, நான் மன்மதன் தான்.''

திடீரென்று தான் மனதிற்குள் நினைத்ததைக் கணவன் அப்படியே சொன்னதில் அதிர்ந்து போய் விட்டிருந்தாள் ரதி.



ஒருவேளை தன்னுடைய ஏளனப் பார்வை காட்டிக் கொடுத்திருக்குமோ?

ஆம், அப்படித்தான் இருக்க வேண்டும்,

இனிமேல் தான் நிச்சயம் உணர்ச்சிகளைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும்...

''என்ன பாக்கற?''

''கண் இருக்கே, மூடிக்கவா முடியும்?''

''கோபமா இருப்ப போல!''

''இல்ல, ரொம்ப சந்தோஷமா இருக்கேன்.''

''இவ்வளவு சந்தோஷமாவா, வேண்டாம்பா. தாங்காது.''

''உங்க பேச்சுத் திறமை பிரமாதம் தான். ஆனா பாருங்க. எனக்குத் தான் போரடிக்கிது.''

''ஓ, அதனால பேச வேண்டாங்கறியா?''

''புரிஞ்சா சரி.''

''ம்கூம். என்னால பேசாம இருக்க முடியாதே...''

............

''ம்.''

''இப்ப என்ன வேணும் உங்களுக்கு? அங்க டேபிள் மேல பால் வெச்சிருக்கேன். எடுத்துக் குடிச்சுட்டு வந்து தூங்குங்க. அப்படியே வழிய விட்டிங்கன்னா நானும் போய்ப் படுத்துக்குவேன். தூக்கம் வருது.''

''முடியாது.''

அப்படிச் சொன்ன கணவனைக் கோபத்துடன் உறுத்து விழித்தாள் ரதி.

''குட், கோபத்துலயும் நீ அழகா தான் இருக்க.''

''நற்சான்றிதழுக்கு நன்றி. மூளையிருந்தா கொஞ்சம் புரிஞ்சு நடந்துக்கோங்க. நான் தூங்கணும்.''

''எனக்கு மூளையே கிடையாது.''

கணவனின் விட்டேற்றியான பதிலில் இப்பொழுது அலுப்புத் தோன்றி விட்டிருந்தது ரதிக்கு.

''ஐயோ, போதும். கொஞ்சம் தள்ளுங்க.''

அதே நேரம் மனைவியை அருகில் இழுத்திருந்த குணசீலன் தன்னுடைய கைகளுக்குள் கொண்டு வந்திருந்தான்.

''ரதி!''

கணவனின் அந்த மென்மையான அழைப்பும், அருகாமையும் தன்னை என்னவோ செய்வதை ரதியால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனாலும் முயன்று மனதைக் கல்லாக்கிக் கொண்டு எங்கோ பார்த்தாள்.

''என்னடா, பேச மாட்டியா?''

.............

''ப்ளீஸ் ரதி, நீ பேசாம இருந்தா, அத என்னால தாங்கிக்க முடியாது.''

''ஓ, இத நான் நம்பணுமாக்கும்?''

''என்னடா, என்னாச்சு உனக்கு?''

''அப்ப என் கோபத்துக்கான காரணம் கூட தெரியாது உங்களுக்கு?''

''என்னடா, என்...''



''நீங்க என்ன சந்தேகப்பட்றீங்க இல்ல?''

''சும்மா விளையாட்டுக்குச் சீண்டினேன். அவ்வளவு தாம்மா.''

''அது கார்ல வரும்போது.''

''சரி.''

''கொஞ்சம் முன்னாடி தோப்புக்குள்ள வெச்சு நான் அதப் பத்திக் கேட்டதுக்குப் பேச்ச மாத்தினீங்களே. அதுக்கு என்ன அர்த்தம்?''

''அதுவும் சீண்டு...''

''போதும்.''

''என்ன போதும்?''

''உங்களுக்குப் பொய் கொஞ்சங் கூடப் பொருந்தல.''

''அடப் பரவாயில்லையே. நீ கூட எனக்கு சர்ஃடிபிகேட் தர்ற!''

''நான் ஸீரியஸாப் பேசிட்டிருக்கேன்.''

''சரிதான். ஆனா எனக்குத் தான் நீ பேசறது ஏனோ புரியல.''

''ம், எனக்கு உங்க கூடப் பேச விருப்பமில்ல. என்ன விட்டுடுங்கன்னு சொல்றேன்.''

''அது எப்படி முடியும்?''

''ஏன்?''

''ஏன்னா...'' என்ற கணவன் அந்த வினாடியில் மேலும் தன்னை அருகில் இழுத்திருக்க, கோபத்தின் உச்சிக்கே சென்றிருந்தாள் ரதி.

அந்தக் கோபம் தந்த வேகத்தில் முழுப் பலத்தையும் கொடுத்துக் கணவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் போராடியவள், தொடர்ந்து வந்த சில வினாடிகளில் தான் நினைத்ததைச் சாதித்தும் இருந்தாள்.

மனைவியின் செயல் இப்பொழுது குணசீலனுக்கு எரிச்சலை வரவழைத்திருந்தது.

''ரதி, போதும்.''

''தயவு செஞ்சு விட்டுடுங்க. இல்லன்னா எனக்குக் கெட்ட கோபம் வந்துடும்.''

''இப்ப மட்டும் என்ன நல்லவிதமா நடந்துக்கற மாதிரி நினைப்பாக்கும்?''

''அடடா, எந்த அளவுக்குப் பேச முடியுமோ பேசிட்டு இப்பிடி ஒண்ணுமே தெரியாத மாதிரி கேள்வி கேக்க உங்களால எப்பிடி முடியுது?''

அந்த வினாடியில் மீண்டும் மனைவியைத் தன்னருகில் இழுத்திருந்த குணசீலன், ''அப்ப நான் சீரியஸாப் பேசினதா முடிவே பண்ணிட்டயா?'' என்று கேட்டான்.

''அதுல என்ன சந்தேகம்?''

''இல்லடா. நான் சும்மா விளையாட்டுக்குத் தான் அப்படியெல்லாம் பேசினேன்.''

''ம்கூம், நான் நம்ப மாட்டேன்.''

''நம்பித்தான் ஆகணும்.''

''முடியாது.''

''உன்னப்பத்தி எனக்குத் தெரியாதாடா? எதையாவது சொன்னாக்கூட அத உடனே புரிஞ்சுக்காத என் அழகான வெகுளிடா நீ...''



கணவனின் கொஞ்சல் சிரிப்பை வரவழைத்து விட்டிருக்க, அதை மறைக்க, உதட்டைக் குவித்து வைத்துக் கொண்டு கீழே பார்த்தாள் ரதி.

ஆனால் அதுவே அவளுடைய கணவனின் உணர்ச்சிகளைக் கட்டவிழ்த்து விடப் போதுமானதாக இருந்தது.

ரதி என்று மனைவியை இழுத்துத் தனது மார்போடு அணைத்துக் கொண்டவன், அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தான்.

கணவனின் அருகாமையில் போகப்போக ரதியும் தன்னை மறக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

தன்னை என்னவெல்லாம் சொன்னான். அப்படியிருக்கும்போது இவனுடைய கைகளில் நாம் மயங்குவதா என்று மீண்டும் கணவன் நெகிழ்ந்திருந்த அந்த வேளையில் அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள் ரதி.

மனைவியின் செய்கையில், ''முட்டாள்தனத்துக்கும் ஒரு அளவிருக்கு ரதி!'' என்று கோபத்துடன் சொன்னான் குணசீலன்.

கணவனின் கோபம் தன்னை என்னவோ செய்ய, தள்ளி நின்று கொண்டு எங்கோ பார்த்தாள்.

''அப்ப அவசியத்துக்கு மட்டும் வா, போ, உக்காரு, சாப்புடுன்னு மட்டும் தான் சொல்லணும். அதுக்கு மேல எதுவுமே பேசக் கூடாது, இல்லையா?''

கணவனின் ஆதங்கம் தன்னை மேலும் என்னவோ செய்ய, திரும்பி அவனைப் பார்த்தாள்.

ஆனால் அதே நேரம், ''சரி விடு. இனிமேல் நீ விரும்பற மாதிரியே இருந்துக்கறேன்!'' என்று குணசீலன் படுக்கைக்கு வந்திருக்க, செய்வதறியாது அப்படியே நின்று விட்டிருந்தாள் ரதி.

உள்ளுக்குள் என்னவோ செய்தது.

ஒன்றுமில்லாததை அவசியமின்றிப் பெரிது படுத்தி விட்டோமோ என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

படுக்கையை உதறி விட்டுக் கணவன் படுத்திருக்க, மெதுவாக அருகில் சென்றாள்.

கணவனை அழைக்கப் போனவள், பிறகு வேண்டாமென்று அருகில் அமர்ந்தாள்.

கணவன் கண்களை மூடிப் படுத்திருக்க, அவனுடைய கையைப் பிடித்து அழுத்தினாள்.

கணவனிடமிருந்து எந்த எதிரொலியும் இல்லாது போக, அவனுடைய காதருகே குனிந்து ஸாரி குணா என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

ஆனால் அதற்கும் எந்த எதிரொலியும் இல்லாது போக, இனி என்ன செய்வது என்று சிந்தித்ததுவரை மட்டுமே அவள் அறிவாள்.

ஏனென்றால் அடுத்த வினாடி அவள் இருந்தது படுக்கையில்.

''என்னடா...'' என்று தனது முகம் நோக்கிக் குனிந்த கணவனைக் காதலுடன் இறுக அணைத்துக் கொண்டாள் ரதி.

மனைவியின் நிலையைத் தெரிந்து கொண்ட குணசீலனுக்கோ அவனுடைய நிலை பற்றிக் கேட்க வேண்டியதே இருக்கவில்லை.





# 19

காலை உணவை முடித்துக் கொண்டு கணவனுடன் காரில் ஊரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பி விட்டிருந்தாள் ரதி.

''மாப்பிள்ளைய போரடிக்க வெச்சுடாதமா!'' என்று தந்தை சொல்ல, பாட்டியும் தாத்தாவும் கூட அதையே ஆமோதிப்பதைக் கண்டாள்.

மீண்டும் மீண்டும் கூட அவர்கள் அதையே சொன்னதில் என்ன இவர்கள் எதற்கெடுத்தாலும் எதையாவது சொல்லிக் கொண்டே இருக்கிறார்களென்று மனதிற்குள் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது ரதிக்கு.

மனைவியின் மனம் புரிய, ''அப்படியெல்லாமில்ல. ரதியக் கூட்டிட்டுப் போறதே நாந்தான்!'' என்று முடித்து விட்டிருந்தான் குணசீலன்.

தங்கள் வீட்டு மாப்பிள்ளையே அப்படிச் சொல்லி விட்டதற்குப் பிறகு, அதற்கு மேல் யாரும் எதையும் சொல்ல விடவில்லை.

''என்ன?''

கணவன் திரும்பிப் பார்த்துக் கேட்க, ''ஸாரி குணா!'' என்றாள்.

''எதுக்கு?''

''உங்கள டார்ச்சர் பண்ணேறேனில்ல...''

''ம்கூம், நல்லவேள நீ என்னக் காப்பாத்திட்ட.''

''அப்ப...''

''ஆமாம். உன் பாட்டி, தாத்தாகிட்டிருந்து நீ என்னத் தப்பிக்க வெச்சதுக்கு, நாந்தான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும்.''

''என்ன தைரியமிருந்தா இப்படி அதுவும் எங்கிட்டயே சொல்லுவீங்க?''

''உண்மையச் சொல்ல என்ன தைரியம் வேணுங் கற?''

கணவனை விளையாட்டுக்கு முறைத்த ரதி, பிறகு அது சரிதானென்று சிரித்து விட்டிருந்தாள்.

''அவங்க வயசுல பெரியவங்க, நல்லதுக்குத் தான் எதையும் சொல்லுவாங்க. அதனால அவங்க சொல்றத நீயும் சிரிச்ச முகத்தோடு ஏத்துக்கலாமே...''

''என்ன நீங்க, விட்டா அவங்கள மாதிரியே நீங்களும் எனக்கு அட்வைஸ் பண்ணுவீங்க போலிருக்கு!''

''இல்லமா, நம்ம மேல அக்கறையிருக்கறவங்க தான் நமக்காக எதையாவது சொல்லுவாங்க. அத சகஜமா ஏத்துக்கிட்டுப் போயிட வேண்டியது தான...''

''பின்ன, இத்தன நாளும் நான் எப்பிடியிருந்தேனாம்?''

''கூல் டியர், ஏதோ சொல்லணும்ம்னு தோணுச்சு. அதான் சொன்னேன்.''

''ம். இப்பப் புரியுது, சும்மா சொன்னா கேட்டுக்க மாட்டாளோன்னு பாட்டி தாத்தாவ தப்பு சொல்ற மாதிரி ஆரம்பிச்சு, கடைசில என்னத் தப்பு சொல்றீங்க இல்ல?''



''இல்லமா, அவங்க உன்ன...''

''சரிதான் விடுங்க. வெளிய வந்துட்டு எதுக்கு நாம சண்ட போட்டுக்கணும், சிரிச்சு என்ஜாய் பண்ண எத்தனை எத்தனையோ இருக்கும் போது?''

''ம், இது கரெக்ட்!'' என்ற குணசீலன் மனைவியைப் புன்னகையுடன் பார்க்க, ''ஏதோ நான் இன்னைக்கு நல்ல மூட்ல இருக்கவும் தப்பிச்சீங்க!'' என்று தானும் புன்னகை யுடன் சொன்னாள் ரதி.

''அப்ப இன்னைக்கு எனக்கு நல்ல நேரம்னு சொல்லு.''

''பின்ன?''

''சரிதான் விடு. எல்லாத்துக்கும் சேத்து வெச்சுப் பாத்துக்கறேன்!'' என்று அர்த்த புஷ்டியுடன் சிரித்த கணவனை வெட்கம் மேலிட விளையாட்டுக்கு முறைத் தாள் ரதி.

''ம். இதுக்கும் சேத்துதான். ஆமா, எங்க போயிட்டிருக் கோம், நீ சொல்ற வழில நான் பாட்டுக்குப் போய்ட்டே இருக்கேன்.''

''ம், டேம்க்கு.''

''டேமா?''

''ம்.''

''இந்த ஊர்ல அதெல்லாம் வேற இருக்கா?''

''ஹலோ, என்ன கிண்டலா? நானும் உங்ககிட்ட எத்தன தடவ சொல்லியிருப்பேன்...''

''நீ சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கு. ஆனா விளை யாட்டுக்குச் சொல்லியிருப்பையோன்னு நினைச்சேன்.''

''விளையாட்டுக்குன்னாலும் யாராவது பொய் சொல் வாங்களா?''

''மத்தவங்க சொல்ல மாட்டாங்க...''

''ஆனா நான் சொல்வேனாக்கும்?''

கோபத்துடன் மனைவி கேட்க, ''தெரியலயே. அத நேரல போய்ப் பாத்த பின்னாடியே சொல்றேனே!'' என் றான்.

''உங்களுக்கு இன்னைக்கு என்னவோ தெரியல...''

''அட உண்மைலயே அணை வந்துடுச்சே. அப்ப நீயும் உண்மையத்தான் சொல்லியிருக்க.''

''இப்பவாவது புரிஞ்சுக்கோங்க, எல்லாரும் உங்கள மாதிரியே இருக்க மாட்டாங்கன்றத.''

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தெரிந்த அந்த இடத் தின் பசுமையும், குளுமையும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவதாய் இருக்க, அதை வெளிப்படையாகவே சொன்னான் குணசீலன்.

கணவன் உணர்ந்து சொன்னது ரதியையும் உள்ளம் துள்ளச் செய்திருந்தது.

அந்த அணையைப் பற்றியும், அந்த ஊரைப் பற்றியும் தனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் சந்தோஷமாகக் கணவனுடன் பகிர்ந்து கொண்டாள்.

அப்படியே தன்னுடைய சிறு வயது நினைவுகளை யும்.

மனைவி ஆசையுடனும் ஆவலுடனும் அனைத்தை யும் சொல்லச் சொல்ல, அந்த உற்சாகம் குணசீலனை யும் பற்றிக் கொண்டு விட்டிருந்தது.



அணை நீரில் கால்களை நனைத்தபடி பேசிக் கொண்டே கணவன் மனைவி இருவரும் அடர்ந்த மரங்கள் தந்த நிழலில் வெகுதூரம் நடந்து சென்றனர்.

போதுமென்று தோன்றி விட்டிருக்கப் பிறகு திரும்பிப் பழைய இடத்தை வந்தடைந்தனர். மலரும் நினைவு களைப் பேசியபடியே தான்.

அதற்குப் பிறகு அணையின் ஓரமாக இருந்த அந்தப் பசுமை நிறைந்த அழகாகவும், நேர்த்தியாகவும் பராமரிக் கப்பட்டிருக்கும் பூங்காவிற்குள் சென்று அமர்ந்து பேசத் தொடங்கி விட்டிருந்தனர்.

குளிர் சாதன வசதி செய்யப்பட்டது போலிருந்த அந்தப் பூங்காவை விட்டு வெளியே வரவே இருவருக் கும் சுத்தமாக மனம் வந்திருக்கவில்லை.

வெகு நேரத்திற்குப் பிறகு அதுவும் மனமே இல் லாமல் எழுந்தவர்கள், பிறகு சற்றுச் தள்ளியிருந்த அரு வியை அடைந்து அதில் நனையத் தொடங்கி விட்டிருந் தனர்.

முக்கியமாக ரதி.

சற்று முன் வரை ஆங்காங்கே எதிர்ப்பட்ட ஓரிரு தெரிந்த முகங்கள் கூட அந்த இடத்தில் தட்டுப் பட் டிருக்கவில்லை.

ஏன் மனித நடமாட்டமே இல்லாத இடம் போல, பறவைகளின் பலவிதமான ஒலிகளும் அவர்களை வேறு ஏதோ ஒரு புதிய அமைதியான உலகிற்குள் கொண்டு செல்வதைப் போலிருந்தது.

தான் நினைத்ததைக் குணசீலன் அப்படியே தனது மனைவியிடம் வெளிப்படுத்த, ''ஆமாம் குணா, எனக்

கும் அப்படித்தான் இருக்கு!'' என்று சந்தோஷமாகக் கணவனை ஆமோதித்தாள் ரதி.

''உனக்குமா?''

''ம்.''

''அப்ப இதுக்கு முன்னாடி நீ இங்க வந்ததே இல்லையா?''

''வந்திருக்கேனே. ஆனா ரெண்டோ மூணோ தடவ மட்டும் தான். அதுவும் கூட ரொம்பவும் கம்பல் பண்ணிக் கூட்டத்தோட கூட்டமா. அதுக்கே நான் எவ்வளவு கேக்க வேண்டியிருந்தது தெரியுமா?''

''ஏன்?''

''ஏன்னா என்ன சொல்றது?''

''இதுவும் உன் அழகான ஊர் தான?''

''அது சரிதான். ஆனா இப்ப நாம இருக்கறது ஊர் எல்லைல. நல்ல ஸீஸன் டைம்லயே ஆள் நடமாட்டம் குறைவா இருக்கற இடம் இது. அவ்வளவு சீக்கிரம் டேம், பார்க்குக்கு வர்ற மாதிரி இங்க நினைச்சதும் வந்துட முடியாது.''

''ஓ....''

''நான் இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா குணா?''

''தெரியலையே...'' என்ற கணவனின் கையைப் பிடித்து இப்பொழுது முழுமையாகத் தண்ணீருக்குள் இழுத்திருந்தாள் ரதி.

ஆனால் அதை எதிர்பார்த்திருந்தவன் போலத் தானும் மனைவியுடன் சேர்ந்து அருவி நீரை அனுபவிக்கத் தொடங்கி விட்டிருந்தான் குணசீலன்.



நேரம் அதன் பாட்டுக்குப் போய்க் கொண்டே இருக்க, வெகு நேரத்திற்குப் பிறகு தான் வெளியே வந்திருந்தான் குணசீலன்.

ஆனால் அப்பொழுதும் வெளியே வர மனமில்லாமல் அருவியில் நின்று கொண்டிருந்த மனைவியை வலுக்கட்டாயமாக வெளியேற வைத்திருந்தான்.

''இன்னும் கொஞ்ச நேரம் குணா ப்ளீஸ்...''

''அது சரி, டைம் பாரு...''

''மணி ரெண்டாச்சு. அதுக்கென்ன?''

''கிளம்பலாம்மா.''

''ம்கூம்.''

''என்ன நீ துணியெல்லாம் பாரு, தொப்பலா நனைஞ்சிருக்கு...''

''அதனாலென்ன, வெயில்ல பத்து நிமிஷம் நின்னா சரியாயிடப் போகுது.''

''சரிதான்.''

''என்ன சரிதான்?''

''இல்ல, இன்னைக்கு ஊர் முழுக்க நல்லா சுத்திப் பாத்துடலாம்னு நான் ப்ளேன் பண்ணிட்டிருக்கேன். நீ என்னடான்னா இங்கயே முழு நாளையும் போக வெச்சுடுவ போலிருக்கு.''

''இல்லையே, நான் அப்பவே வெளிய வந்துட்டேனே!'' என்றவள், ''டீ சாப்புட்றீங்களா?'' என்று கேட்டாள்.

''இப்பவா? எங்க போறது? கண்ணுக்கு எட்ற தூரம் வரைக்கும் கடை கூட ஒண்ணும் இருக்கற மாதிரி தெரியல.''

''ஆனாலும் நாம இப்ப டீ சாப்புடப் போறோமே!'' என்று கணவனிடமிருந்து சாவியை வாங்கிக் கொண்டு போய்க் காரைத் திறந்திருந்தாள் ரதி.

சில வினாடிகளில் ஆவி பறக்க இரண்டு டிஸ்போஸபிள் கப்களில் டீயை எடுத்து வந்தவள், ஒன்றைக் கணவனிடம் கொடுத்துவிட்டு, மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டாள்.

''இங்க உக்காரலாமா?'' என்று மனைவி காட்டிய இடத்தில் அவளுடன் தானும் சென்று அமர்ந்தான் குணசீலன்.

''குட்!'' என்ற கணவனைப் பார்த்தாள் ரதி.

''இல்ல, டீ சாப்ட மாதிரியும் ஆச்சு. வெயிலுக்குத் துணி காய்ஞ்ச மாதிரியும் ஆச்சு.''

''பின்ன மேடம் பத்தி என்ன நினைச்சீங்களாம்?''

''சரிதான். எப்படியோ காலைல இருந்து நல்ல என்ஜாய் பண்ணிட்டிருக்கன்னு சொல்லு.''

''ஆமாம் குணா, ஏன் உங்களுக்குப் பிடிக்கலையா?''

''எனக்கும் பிடிச்சதுமா, என்ன...''

''ம். சொல்லுங்க.''

''உன் சொந்த ஊருங்கறதால கொஞ்சம் அடக்கி வாசிக்க வேண்டியதா இருக்கு. அது ஒண்ணு குறைன்னு வெச்சுக்கோயேன்.''

''ஓஹோ, இல்லைன்னா ஐயா என்ன பண்ணியிருப்பீங்களாம்?''

''இல்லன்னா இந்த மாதிரியொரு பிரமாதமான சான்ஸ் கிடைச்சதுக்கு...'' என்ற கணவனின் பார்வை நனைந்து



உடலோடு உடலாக ஒட்டியிருந்த தனது சேலையின் மீது விழுந்திருக்க வெட்கத்தில் இரத்தமென முகம் சிவந்து போனாள் ரதி.

மனைவியின் நிலை புரிய, வெட்கத்தில் குனிந்திருந்த சூடாகிச் சிவந்து போன அவளுடைய முகத்தையே ஆவலுடன் பார்த்தான் குணசீலன்.

கணவனின் அழைப்பில் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் ரதி.

''நீ எவ்வளவு அழகா இருக்க, தெரியுமா?''

...............

''அப்படியே பாத்துட்டே இருக்கலாம் போல. அந்தக் கண், லிப்ஸ்...''

''போதுமே ப்ளீஸ்.''

...............

''அட வெக்கத்துல இன்னும் கூடப் பல மடங்கு அழகாயிட்ட...''

''ப்ளீஸ் குணா...''

''ம்கூம். இனி என்னக் குத்தம் சொல்லிப் பலனில்ல...'' என்று மேலும் ஏதேதோ சொன்ன கணவனின் கையில் நறுக்கென்று கிள்ளினாள் ரதி.

''ஷ்...''

''ம். தெரியுதுல்ல, இனியாவது இப்படியெல்லாம் பேசக் கூடாதுங்கறது புரிஞ்சா சரி.''

''சரிதான். புரிஞ்சது.''

''குட்.''

''சும்மா வாயில பேசக் கூடாதுங்கறது புரிஞ்சது, செயல் வீரனா இருக்கணுங்கறதும்.''

''குணா!''

''ம்.''

''நாம சினிமாவுக்குப் போலாமா?''

''சினிமாவுக்கா?''

''ம். தியேட்டரெல்லாம் வேற இருக்கா, இந்த ஊர்ல?''

''பின்ன? ஆனா...''

''ம்...''

''சென்னை அளவுக்கு. அதாவது நீங்க எதிர்பார்க்கற அளவுக்கெல்லாம் இருக்காது.''

''இருக்காது தான். சரி, அப்புறம்?''

''ஹலோ, நானென்ன கதையா சொல்லிட்டிருக்கேன், சினிமாவுக்குப் போகலாமா வேண்டாமா, சொல்லுங்க?''

''சரிதான். போலாம்.''

ஏதோ தனக்காக ஒப்புக் கொண்டாற் போலச் சொன்ன கணவனைப் பார்த்தவள், ''அப்புறம் பேச்சு மாறக் கூடாது!'' என்றாள்.

''மாறினாலும் விட்டுடுவியா என்ன?''

''ம்கூம். விடவே மாட்டேன். ஹை ஜாலி! என்னவோ தெரியல, இன்னைக்கு நான் நினைக்கறதெல்லாம் நடக்குது.''

சந்தோஷமாகச் சொன்ன மனைவியைப் பார்த்த குணசீலன், ''படம்னா உனக்கு அவ்வளவு பிடிக்குமா?'' என்று கேட்டான்.



''ஆமாம், அதோட இந்த ஊர்ல வேற என்ன என்டர்டெய்ன்மெண்ட் இருக்கு...''

''ஏன் மேடம், பார்க், ஃபால்ஸ்னு இன்னும் கண்ணுக்குப் பசுமையா மனசுக்கு நிறைவா எவ்வளவோ இருக்கே...''

''அதெல்லாம் சரிதான் குணா. ஆனா அப்படியெல்லாம் நினைச்சதும் பாட்டி தாத்தா கூட்டிட்டு வந்துட மாட்டாங்க. ஒரு தடவ வெளிய வரணும்னாக் கூட தொடர்ந்து குறைஞ்சது ஒரு மாசமாவது கெஞ்சிக் கூத்தாடிப் பர்மிஷன் வாங்கினாத்தான் ஆச்சு.''

''அப்படியே வந்தாலும் இன்னைக்கு நான் என்ஜாய் பண்ணின மாதிரியெல்லாம்... ம்கூம். சான்ஸே இல்ல தெரியுமா? இங்க நிக்காத, அங்க போகாத, அத செய்யாதன்னு ஆயிரம் ரூல்ஸ்...''

''ரதி!''

கணவனின் அழைப்பில் நிமிர்ந்து பார்த்தாள் ரதி.

''நாம இங்க இருக்கப் போற எல்லா நாளையும் உன் மனசுக்குப் புடிச்ச மாதிரி ஜாலியா சந்தோஷமா அனுபவிக்கலாம். சரியா?''

கணவனின் கரிசனத்தில் நெஞ்சு நெகிழ்ந்து போய் விட்டிருந்தது ரதிக்கு.

''தேங்க்ஸ் குணா!'' என்று எம்பிக் கணவனின் கன்னத்தில் இதழ் பதித்திருந்தாள்.

அதைச் சற்றும் எதிர்பார்த்திருக்காத குணசீலன் மனைவியைப் பிடித்துத் தன்னருகில் இழுத்திருக்க, ''ப்ளீஸ் விடுங்களேன். யாராவது பாத்தா என்ன நினைப்பாங்க?'' என்று திக்கித் திணறினாள் ரதி.

எப்பொழுதும் சிறு பிள்ளைத் தனமாக நடந்து கொள்ளும் மனைவியின் அந்த வெட்கம் கலந்த தவிப்பு குணசீலனுக்குப் புன்னகையை வரவழைத்திருந்தது.

அதே நிலையில் மனைவியை நிறுத்தி அவளுடைய அந்தத் தவிப்பை ரசித்தான்.

''விடுங்க குணா ப்ளீஸ்...''

''ம்கூம்.''

இப்பொழுது வெட்கத்தில் துடித்த மனைவியின் உதடுகளின் மீது வந்து அவனுடைய பார்வை நிலைத் திருக்க, ரதி என்று மென்மையாக அழைத்தான்.

சரியாக அதே நேரம் தூரத்தில் யாரோ வருவதைப் போல அரவம் கேட்க, மனமே இல்லாமல் மனைவியை விடுவித்தான் குணசீலன்.

அதற்கும் சில வினாடிகள் முன்னரே தானும் கண வனிடமிருந்து விலகி அமர்ந்திருந்தாள் ரதி.

அடுத்த சில நிமிடங்களில் இருவரும் அங்கிருந்து கிளம்பி விட்டிருந்தனர்.

குணசீலனும் ரதியும் வீடு வந்து சேர்ந்தபோது, நேரம் மதியம் மூன்று மணி ஆகியிருந்தது.

கணவன் மனைவி இருவருமே ஒருவித இனிமை யான மயக்க நிலையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர் என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

கணவனின் பார்வையில் ரதியின் முகம் மேலும் சிவந்து விட்டிருக்க, கார் வீட்டு வாசலில் வந்து நின்று விட் டிருந்த பிறகும் கூட இறங்கத் தோன்றாமல் அப்படியே அமர்ந்த வண்ணமிருந்தாள் ரதி.



''வாங்க மாப்ள...''

தந்தையின் குரலில் முழுமையாக நடப்பிற்கு வந் திருந்தவள், அதற்குப் பிறகே தன்னிலை உணர்ந்து இறங்க எத்தனித்தாள்.

ஆனால் அதற்குள், ''வரலாம் மாமா! என்ன வாசல் லையே உக்காந்திருக்கீங்க?'' என்று வாசற்படியை அடைந்திருந்ததைக் கண்டாள்.

''சாப்புட்லாம். வாங்க மாப்ள.''

''நீங்க இன்னும் சாப்பிடலையாமா?''

''நீங்களே கூப்புட்டு சொன்னதுக்கப்புறமும் எப்படி சாப்பிடாம இருக்க முடியும்? நீங்க ரெண்டு பேரும் வந்து சாப்புடுங்க!'' என்று மருமகனையும், தொடர்ந்து உள்ளே வந்த மகளையும் பார்த்துச் சொன்னார் ரகுநாத்.

அதற்குள் பாட்டி மங்களமும், ''சாப்பாடு எடுத்து வைக் கறேன், வாங்க!'' என்று வந்து உபசரிக்க, கணவன் மனைவி இருவரும் தாங்களே எடுத்து வைத்துச் சாப் பிட்டுக் கொள்வதாக ஒரேயடியாக மறுத்து விட்டிருந் தனர்.

தொடர்ந்து வீட்டிற்குள் வந்த மகனும், ''சரிதான்மா. ரதி மாப்ளைக்குப் பாத்துப் பரிமாறிடுவா. நீங்க போங்க. ரெஸ்ட் எடுங்க!'' என்று சொல்லி விட்டிருக்க, வீட்டு மாப்பிள்ளைக்குத் தான் பார்த்துப் பரிமாற முடியவில் லையே, பேத்தி சிறு பெண், அவளுக்கு என்ன தெரியும் என்ற ஆதங்கத்துடன் உள்ளே சென்றார் மங்களம்.

எப்படி என்பதைப் போல புன்னகையுடன், தன்னைப் பார்த்த கணவனின் பார்வையை வெட்கத்துடன் எதிர் கொண்டாள் ரதி.

சரியாக அதே நேரம் மருமகனையும், மகளையும் திரும்பிப் பார்த்த ரகுநாத்தும் அதற்கு மேல் தானும் எதையும் பேச வேண்டாமென்று புன்னகையுடன் திரும்பிச் சென்று விட்டிருந்தார்.

சிறிது நேரத்தில் உண்டு முடித்து விட்டுக் கணவன் எழுந்து சென்றிருக்க, அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டுச் சில நிமிடங்களில் தானும் மேலே வந்திருந்தாள் ரதி.

படுக்கையில் அமர்ந்தவாறு கணவன் அன்றைய நாளிதழைப் படித்துக் கொண்டிருக்க, எதையும் பேசாமல் தான் சென்று படுத்திருந்தாள்.

படுத்தவள் சில நிமிடங்களிலேயே தூங்கியும் போய் விட்டிருந்தாள்.

படித்தது போதுமென்று நாளிதழை வைத்துவிட்டு எழுந்து வந்த குணசீலனுக்கு மனைவி நல்ல உறக்கத்திலிருப்பது தெரிய சத்தம் செய்யாமல் தானும் சென்று சிறிது நேரம் தூங்கலாமென்று படுத்து விட்டிருந்தான்.

பகலில் தூங்கிப் பழக்கப்படாதவன் தான் என்றாலும், அன்று படுத்ததும் தூங்கி விட்டிருந்தான்.

மீண்டும் கண் விழித்தவனுக்கு அருகில் மனைவி இல்லாதது தெரிந்தது. ஈரத் தலையைத் துவட்டிக் கொண்டே குளித்துவிட்டு வெளியே வருவதும்.

மனைவி தன்னைப் பார்ப்பதற்குள் தூங்குவது போல மீண்டும் குணசீலன் கண்களை மூடிக் கொண்டு விட்டிருக்க, கணவனைத் திரும்பிப் பார்த்த ரதி தானும்



திரும்பி நின்று உடலைச் சுற்றிக் கொண்டு வந்த சேலையை உருவி மடிப்பு எடுத்துப் பின் குத்தப் போனாள்.

சரியாக அதே நேரம் சத்தமில்லாமல் மனைவியின் பின்னால் வந்து நின்றிருந்த குணசீலன் அவளைச் சுற்றித் தனது கைகளைப் போட்டிருக்க, தானும் உடனே கணவனை நோக்கித் திரும்பினாள் ரதி.



## 20

மூச்சுக் காற்று தன் மேல் விழுமளவிற்கு வந்து நின்றிருந்த கணவனின் பார்வையை எதிர் கொண்டவள், ''இப்பதான் கஷ்டப்பட்டு மடிப்பு எடுத்தேன் குணா, ப்ளீஸ் விடுங்க!'' என்றாள்.

''ம்கூம்.''

''என்ன நீங்க...'' என்று சிணுங்கிய மனைவியின் இதழ்களை இப்பொழுது அவன் தன்னுடைய இதழ்களால் சிறைப் பிடித்திருக்க, சில வினாடிகளில் தானும் கணவனின் கைகளில் தன்னை மறந்து அவன் மீதே சாய்ந்தாள் ரதி.

''ரதி...'' என்று குணசீலன் மனைவியை மேலும் அருகில் இழுத்து அணைத்திருக்க, அவள் தானும் கணவனை இறுக அணைத்து அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

எவ்வளவு நேரம் அப்படியே நின்றிருந்தார்களோ மிக அருகில் கேட்ட ஏதோ சத்தத்தில் தான் அதுவும் மனமே இல்லாமல் இருவரும் நடப்பிற்கு வந்திருந்தார்கள்.

அதற்குப் பிறகு தான் அது மொபைல் அழைப்பு என்பதும் புரிந்தது.

உடனே சென்று எடுத்துப் பார்த்தான் குணசீலன்.

ஆனால் அதற்குள் இணைப்பு அறுந்திருந்தது.

தாய் அழைத்திருக்க, உடனே அழைத்துப் பேசினான்.

சில நிமிடங்கள் பேசியவன், ''இதோ இருக்கா!'' என்று அருகில் நின்றிருந்த மனைவியிடம் மொபைலைக் கொடுத்தான்.

காதில் வைத்து ''ஹலோ'' சொல்வதற்குள், கணவன் தன்னை அருகில் இழுத்திருக்க, ''ப்ளீஸ் விடுங்க!'' என்று தன்னையறியாமலேயே சிணுங்கி விட்டிருந்தாள் ரதி.

சில வினாடிகள் தனது அத்தையிடம் பேசிவிட்டு மொபைலை வைப்பதற்குள்ளேயே போதும் போதுமென்றாகி விட்டிருந்தது ரதிக்கு.

மொபைலை வைத்து விட்டுத் தன்னை நோக்கித் திரும்பிய மனைவியிடம் என்னவென்று கேட்டான் குணசீலன்.

''என்னமா?''

''நீங்க பேசாதீங்க.''

''அட என்ன, ஏன் இவ்வளவு கோபம்?''

''ஓ, அப்ப நான் எதுக்குக் கோபப்பட்றேன்னு உங்களுக்கு நிஜமாவே புரியல?''



''இல்ல, எதுக்கு...''

''ம், அத்தை கூடப் பேசிட்டிருக்கும்போது ஏன் அப்படி செஞ்சீங்க?''

''எப்படி... ஓ உக்காந்து பேசுன்னு சொல்றதுக்காகக் கையைப் புடிச்சு இழுத்தேன். அவ்வளவுதான்...''

................

''அட, சரிதான். அத நீ வேற மாதிரி புரிஞ்சுக்கிட்ட மாதிரியே அம்மாவும்...''

கணவனின் புன்னகையில் கோபம் மேலும் அதிகமாகி விட்டிருக்க, ''உங்கள...'' என்று கணவனை ஆதங்கத் துடன் முறைத்தாள் ரதி.

''ம், என்ன?''

''அத்தை என்ன நினைச்சிருப்பாங்க...'' என்று சிணுங்கிய மனைவியை, ''ஏன் என்ன நினைச்சிருப்பாங்க?'' என்று முடிந்த அளவு வந்த சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு பார்த்தான் குணசீலன்.

''ஓ அப்படி செஞ்சதுமில்லாம இன்னும் சிரிக்க வேற செய்யறீங்களாக்கும்?...''

''சரி, வேணும்னா அழட்டுமா? ஆனா முன்னும் பின்னும் அழுது பழக்கமில்லையே.''

''போதும்...''

''என்ன போதும்?''

''இருங்க. உங்களுக்குச் சரியான தண்டனை குடுக்கறேன்.''

மனைவியின் பாவனையில் என்ன முயன்றும் குணசீலனால் புன்னகையைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

''என்ன தண்டனை குடுக்கப் போற?'' என்று வந்த சிரிப்பிற்கிடையில் முயன்று கேட்டான்.

''ம்...''

''என்ன சொல்லு. இல்ல, உனக்கே மறந்துடுச்சா?''

''எனக்கு ஏன் மறக்கப் போகுது? நீங்க... நீங்க...''

''ம், என்னமா?''

மனைவியின் தயக்கம் குணசீலனை மேலும் சிரிக்க வைத்திருக்க, ''ம் அத செயல்ல காட்றேன்!'' என்று கிளம்பிக் கீழே வந்திருந்தாள் ரதி.

மனைவியைத் தொடர்ந்து தானும் கிளம்பிக் கீழே இறங்கி வந்திருந்தான் குணசீலன்.

பாட்டி மங்களம் சமையலறையில் வேலையாக இருக்க, தானும் சென்று உதவினாள் ரதி.

''வாங்க மாப்ள, எங்கயோ வெளிய கிளம்பிட்டிங்க போல?''

''ஆமாம். மாமா, தூங்கி எழுந்தாச்சு போலிருக்கு?''

''ஆமாம். ஒரு குட்டித் தூக்கம். வாங்க, உக்காருங்க.''

''தாத்தா எங்க மாமா காணல?''

''தோட்டத்துக்குப் போயிருக்கார் மாப்ள, இப்ப வந்துடுவார்.''

''ஓ நாளைக்கு நீங்க தோட்டத்துக்குக் கிளம்பறதுக்கு முன்னாடி சொல்லுங்க. நானும் வர்றேன்.''

''சரிதான்,'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே சூடாகக் கேசரியும், மிளகாய் பஜ்ஜிகளும் அடங்கிய டிபன் ப்ளேட்டுகளுடன் வந்திருந்தாள் ரதி.



இருவருக்கும் கொடுத்து உபசரித்தவள் மீண்டும் ஒரு முறையும், ''எடுத்துக்கோங்க!'' என்றாள்.

''எங்க ஊர் பிடிச்சிருக்கா?''

புன்னகையுடன் மாமா ரகுநாத் கேட்க, ''ரொம்ப, உங்க பொண்ணு ரதிய எந்த அளவுக்குப் பிடிச்சிருக்கோ, அந்த அளவுக்கு!'' என்றான் குணசீலன்.

தங்கள் வீட்டு மாப்பிள்ளையின் பதிலில் ரகுநாத் சிரித்து விட்டிருக்க, கணவனைப் பொய்க் கோபத்துடன் பார்த்தாள் ரதி.

''ஆனாலும் உங்க ஊர் பரவாயில்ல மாமா.''

அப்படிச் சொன்ன குணசீலனை ரகுநாத் பார்க்க, ''உங்க பொண்ணு மாதிரி அது என்ன பயப்படுத்தறதில்ல!'' என்றான்.

''ஏன் இப்படிச் சொல்றீங்க, அப்ப ரதிய நீங்க தப்பு சொல்றீங்கன்னு தான அர்த்தம்?''

''இனியும் அர்த்தம் அது இதுன்னு என்ன மாமா, அதத்தான் சொல்றேன்.''

''அடடா, ஏன் ரதிம்மா மாப்ளைய நீ பயப்படுத்தற...''

''அப்பா...''

''என்னமா, என்ன சொல்லு?''

''ஒண்ணுமில்ல, விடுங்க!'' என்றுவிட்டு ரதி உள்ளே வந்திருக்க, ''அவ விளையாட்ட ஸீரியஸா எடுத்துக்கிட்டா போலிருக்கு மாப்ள!'' என்று சிரித்தார் ரகுநாத்.

''சரிதான் மாமா!'' என்ற குணசீலனுக்கு மனைவியின் கோபத்திற்கான காரணம் புரியாமல் இல்லை.

ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், வேறு பேசினான்.

சிறிது நேரத்தில் **தாத்தா** கருணாகரனும் வந்து விட்டிருக்க, அவருக்கும் **டிபன்** கொண்டு வந்து கொடுத்தாள் ரதி.

''ரதி!''

''என்ன பாட்டி?''

''நீயும் எடுத்துக்கோ.''

''வேண்டாம்.''

''ஏம்மா?''

''மூணு மணிக்குத் தான பாட்டி மதியச் சாப்பாடே சாப்பிட்டேன், பசியில்ல.''

''ஏன் சிரிக்கறீங்க?''

''இந்த வயசுல அதெப்படி பசியில்லாமப் போகும்? எல்லாமே சூடா நல்லா இருக்குமா. கொஞ்சமாவாவது எடுத்துக்கோ.''

பாட்டிக்காக உண்டதாகப் பெயர் செய்து வைத்தவள், பாட்டி கொடுத்த டீயைக் கொண்டு போய் அனைவருக்கும் கெடுத்து விட்டு வந்து பிறகு தானும் எடுத்துக் கொண்டாள்.

''ஆமா, இப்ப எங்க கிளம்பிட்டீங்க?'

''வெளிய போறோம் பாட்டி.''

''அதான் எங்கன்னு கேக்கறேன்.''

''தெரியல.''

''பொய் சொல்லாத.''



படத்திற்கு என்று சொன்னால் பாட்டி எதையாவது சொல்வாரென்று உண்மையை மறைத்தாள் ரதி.

''என்னமா?''

''தெரியல பாட்டி. அவர்கிட்டத் தான் கேக்கணும்.''

''படத்துக்குத் தான போகப் போறீங்க?''

''இல்லையே.''

''என்னடி இல்ல, எனக்குத் தெரியும். மாப்ள உங்கப்பா கிட்ட அப்படித்தான் சொல்லிட்டிருந்த மாதிரியிருந்தது...''

''சரிதான். விடுங்க...''

''அப்ப நீதான் மாப்பிள்ளையையும் நச்சரிச்சுக் கூட்டிட்டுப் போற இல்ல?''

''அப்படியே வெச்சுக்கோங்க.''

''நீ பண்றது எதுவும் எனக்குச் சுத்தமாப் பிடிக்கலமா.''

''என்ன பாட்டி நீங்க, எதுக்கெடுத்தாலும் ஏதோ ஒண்ணு சொல்லிட்டே இருக்கீங்க?''

''ஆமாம்மா, அந்தத் தியேட்டருக்கு நீ முன்னாடி சில தடவ போனதையே நாங்க தப்புன்னு சொல்லிட்டிருக்கோம். அப்படியிருக்கும்போது நீ மாப்பிள்ளையையும் இல்ல சேத்துக் கூட்டிட்டுப் போகத் தயாரா இருக்க?''

''ஆமாம் பாட்டி, இப்ப அதுக்கென்ன?''

''என்னவா, முக்கால் வாசிக்கும் மேல காலிப் பசங்க தான் வருவானுங்க. மாப்பிள்ள உன்னப் பத்தி என்ன நினைப்பார்...''

அதே சமயம் வெளியே கணவனின் குரல் கேட்க, ''சரி பாட்டி, நைட் ஒன்பது மணிக்குப் பாக்கலாம்!'' என்று வெளியே வந்திருந்தாள் ரதி.

என்னதான் கணவனுடன் கிளம்பி விட்டிருந்தாலும் பாட்டியே சொன்னதைப் போலக் கணவன் தன்னை சீப்பாக நினைத்து விடுவானோ என்று ரதிக்கும் மன திற்குள் சற்று பயமாகத் தான் இருந்தது.

அதிலும் பல மாதங்களுக்கு முன்னரே வந்து விட்டிருந்த அந்தப் படத்தை இப்பொழுது தான் இந்தத் தியேட்டரில் திரையிட்டிருக்கிறார்களென்றால் இது எவ்வளவு பெரிய, அரிய தியேட்டராக இருக்க வேண்டு மென்று கணவன் செய்த கேலியில் இப்பொழுது ரதிக்குமே ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

கணவன் விளையாட்டிற்குத் தன்னைச் சிரிக்க வைப்ப தற்காகத் தான் அப்படியெல்லாம் சொல்கிறானென்பது புரியவே செய்தாலும், ரதியால் அதை இயல்பாக எடுத்துக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

''என்னமா, ஏன் ஒரு மாதிரியிருக்க?''

''படத்துக்கு வேண்டாம் குணா.''

''ஏன், திடீர்னு என்னாச்சு?''

''இந்தத் தியேட்டர்... முதல்ல இத தியேட்டர்னே சொல்ல முடியாது. அந்த அளவுக்குச் சிறிசா தான் இருக்கும்...''

''சரி.''

''அதான் வேண்டாம், உங்களுக்கு நிச்சயம் புடிக்காது...''

''ஊருக்குத் தகுந்த தியேட்டர். அவ்வளவுதான். அதுக்கு ஏன் இவ்வளவு தயங்கற? எல்லாத்துக்கும் மேல உனக்கு எது பிடிச்சாலும் உடனே எனக்கும் அது பிடிச்சுப் போகும். அதனால கவலைப்படாம வா.''



கணவனின் பதிலில் அதுவரை இருந்த தயக்க மனைத்தும் நீங்கி ரதிக்கு மனம் லேசாகியிருந்தது.

''என்னமா?''

''இல்ல அப்பா, பாட்டி, தாத்தா யாருக்குமே நான்... நாம இப்ப வந்தது புடிக்கலன்னு நினைக்கறேன்...''

''அவங்க எல்லார விடவும் எனக்கு நீயும் உன் சந் தோஷமும் முக்கியம். அதனால தேவையில்லாம மனசப் போட்டுக் குழப்பிக்காம ப்ரீயா இரு.''

கணவனின் பதிலில் நெஞ்சு நெகிழ்ந்து போயிருந் தது ரதிக்கு.

''தேங்க்ஸ் குணா!'' என்றாள்.

என்னதான் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளா விட்டாலும் ஏற்கெனவே சினிமாக்களுக்குச் செல்வதை அவ்வளவாக விரும்பாதவனான குணசீலனுக்கு மனைவி வேண்டாமென்று ஒரு வார்த்தை சொன்னதுமே உடனே கிளம்பி விட்டால் என்னவென்று தோன்றி விட்டிருந்த தென்னவோ உண்மை.

அது கூடச் சில வினாடிகள் தான்.

ஆனாலும் மனைவியின் விருப்பத்தை அறிந்தவனென்ப தால் உடனே மனதை மாற்றிக் கொண்டான்.

குணசீலன் எப்பொழுதுமே அவசியமில்லாமல் பந்தா செய்கிறவனல்ல என்பதால் இந்த மாதிரி சிறு தியேட்டர் களுக்கெல்லாம் நாம் என்ன செல்வதென்றும் நினைத்து விட்டிருக்கவில்லை.

என்ன, நமக்கென்று ஒரு அந்தஸ்து இருக்கிறது, முடிந்த அளவு அதை மேம்படுத்திக் கொள்ளா

விட்டாலும் கூடப் பரவாயில்லை. ஆனால் குறைத்துக் கொள்ளக் கூடாதென்று எப்பொழுதாவது சமயம் வரும் பொழுது மனைவிக்கு எடுத்துச் சொல்லிப் புரிய வைத்து விட வேண்டுமென்று மட்டும் மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

இருப்பதிலேயே அதிக விலையுடைய டிக்கெட்டை வாங்கிக் கொண்டு கடைசி ஸீட்டில் மனைவியுடன் சென்று அமர்ந்தவனுக்கு என்ன முயன்றும் ஒரு வித அருவருப்பு எட்டிப் பார்ப்பதைத் தடுக்க முடிந்திருக்க வில்லை.

உடனே திரும்பி மனைவியின் முகத்தை வெளிப் படையாகத் தெரியாத வண்ணம் ஆராய்ந்தான்.

''ஸாரி குணா.''

''எதுக்கு?''

''இங்க ஸீட்டெல்லாம் ஒரு மாதிரி தான் இருக்கும். எப்படியோ... ம்கூம். எனக்காக அட்ஜஸ்ட் பண்ணிக் கோங்களேன்.''

மனைவியின் முகத்திலும் அப்பொழுது தெரிந்த அந்தத் தயக்கம் குணசீலனின் மனதை லேசாக்கி விட் டிருந்தது.

சரிதானென்று மனைவிக்கும் சேர்த்துச் சமாதானம் சொன்னான்.

''என்னமா, சொல்லு?''

''இல்ல, இதுக்கு முன்னாடியும் இங்க மூணு தடவ வந்திருக்கேன். அப்பெல்லாம் என் கூடப் படிச்ச ஃப்ரெண்ட் அம்சவள்ளி கூட வருவேன். ஏனோ



தெரியல, அப்பெல்லாம் நான் இந்த அளவுக்கு கில்ட் டியா ஃபீல் பண்ணினதே இல்ல...''

தான் ஏதோ மிகப் பெரிய தவறைச் செய்து விட்டாற் போன்ற மனைவியின் தயக்கத்தைப் பார்த்த குணசீல னுக்கு மனம் நெகிழ்ந்து போய் விட்டிருந்தது.

வேறு விஷயங்களைப் பற்றிப் பேசி, சூழ்நிலையை எளிதாக்கி மனைவியையும் சிரிக்க வைத்திருந்தான்.

அப்படியே சில நிமிடங்கள் சென்றிருக்க, பிறகு தனது மொபைலுக்கு வந்த அழைப்பை அட்டெண்ட் செய்து பேசத் தொடங்கி விட்டிருந்தான்.

மனைவி அவள் பாட்டுக்கு வருகிறவர்களிடமெல் லாம் பேசிய வண்ணமிருக்க, குணசீலன் தனது மொபைல் அழைப்பை மேலும் சற்று நீட்டிக்கச் செய்திருந்தான்.

ஏன், மேலும் கூட சிலருக்கு அழைத்துப் பேசினான்.

அப்படியே கம்பெனிக்கும்.

என்ன, அமைதியாகப் பேசுவதற்குப் பதிலாகப் பலவித மான பேச்சு ஒலிகளுக்கிடையே சற்றுச் சிரமப்பட்டுப் பேசினான். அவ்வளவே.

ஒரு வழியாகத் தியேட்டர் பெருமளவு நிரம்பியிருக்க, தங்களுடைய வரிசைக்கு மட்டும் இன்னும் யாரும் வந்து அமர்ந்திருக்காதது தெரிந்தது.

அனைவருடைய பார்வையும் ஏதோ அதிசயத்தைப் பார்ப்பதைப் போலத் தங்கள் மேல் விழ, ரதிக்கும் கூட ஒரு மாதிரியாகத்தான் இருந்தது.

ஆனால் அதெல்லாம் படம் ஆரம்பமாகும் வரை தான்.

சில நிமிடங்களில் படம் தொடங்கி விட்டிருக்க, அனைத்து மின் விளக்குகளும் அணைக்கப்பட்டன.

ரதிக்குப் பிடித்த முகங்கள் நடித்திருப்பதோடு நல்ல கதையும் என்பதால் போகப்போக அவள் படத்திலேயே ஒன்றி விட்டிருந்தாள்.

ஓரளவு குணசீலனும்.

ஆனால் அந்த அமைதி நிலைத்திருக்கவில்லை.

திடீரென்று பெரிய கும்பலொன்று திபுதிபுவென்று உள்ளே வந்திருக்க, புகையும் மதுவும் கலந்த நெடியொன்று அவர்களுக்கும் முன்பாகவே உள்ளே வந்திருந்தது.

வந்தவர்களின் அநாகரிகமான கசகசப் பேச்சிலும் மிரட்டலிலும் உடனே மின் விளக்குகள் உயிர் பெற்றிருந்தன.

இனிமையான ராகத்திற்கிடையே கேட்ட அபஸ்வரம் போல, அனைவருடைய கவனமும் இப்பொழுது அந்தக் கும்பலின் மீது திரும்பியிருந்தது.

கிட்டத்தட்ட அனைவருடைய முகங்களிலும் இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத ஒருவித எரிச்சலும் கோபமும்.

மொத்தம் ஒரு பத்துப் பன்னிரண்டு பேர் வந்திருக்க, அவர்களுடைய பார்வையோ கடைசியில் காலியாக இருந்த வரிசையில் வந்து நிலைத்திருந்தது.

அந்த நீண்ட வரிசையின் கடைசி இரு இடங்களில் உள்பக்கமாக ரதியும் அடுத்ததாகக் குணசீலனும் அமர்ந்திருக்க, வாங்கடா, இங்க நம்ம எல்லாருக்கும் இடமிருக்கு,



உக்காரலாம் என்று அந்தக் கும்பலுக்குத் தலைவன் போன்றிருந்தவன் மற்றவர்களையும் அழைத்தான்.

அப்போது அங்கு அமர்ந்திருந்த ரதியைப் பார்த்து விட்டு, ''அட நம்ம மேடம்!'' என்று அவன் ஆச்சரியத்துடன் சொல்ல, தானும் பெயருக்குப் புன்னகை செய்து வைத்தாள் ரதி.

அத்துடன் அவன் பேசாமல் அவனுடைய வேலையைப் பார்த்துக் கொண்டு இருந்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்.

ஆனால் அப்படிச் செய்யாததோடு, மேலும் ரதியை வம்புக்கு இழுத்தான்.

அவன் பேசுவதும், அதற்கு அவனுடன் வந்தவர்களின் சிரிப்பும் அப்படித்தான் எண்ண வைத்தது.

கணவனின் உடல் இறுகுவதைச் செய்கையற்ற கோபத்தில் பதட்டத்துடன் உணர்ந்தாள் ரதி.

பேசாமல் கணவனையும் அழைத்துக் கொண்டு எழுந்து சென்று விட்டால் என்னவென்று கூடத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனால் அந்தக் கும்பலின் கவனமோ இப்பொழுது குணசீலனின் பக்கம் திரும்பியிருந்தது.

''ஓ, ஸாரும் நம்ம மேடம்க்கு நல்ல மேட்ச் தான் போலிருக்குடா!'' என்றார்கள்.

நீங்க ரொம்ப லக்கி, உங்களுக்கு மச்சம் தான் என்று இன்னும் கூட ஏதேதோ.

கணவன் தனது கையைப் பிடித்திருக்க, அந்தப் பிடியின் இறுக்கம் கணவனின் கோபத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

''போலாம் குணா!'' என்று ரதி மெல்லிய குரலில் கணவனிடம் சொல்ல, ''வா!'' என்று உடனே எழுந்திருந் தான் குணசீலன்.

''அட ஸார் பயந்துட்டார் போலிருக்குடா!'' என்று அதில் ஒருவன் சொல்ல, ''பின்ன சிட்டியாச்சே! அதுவும் நெய்யும் பாலும் சாப்புட்டுப் பஞ்சு மெத்தைல புரண்ட உடம்பு போல!'' என்றான் மற்றொருவன்.

கணவனை அவர்கள் செய்யும் கிண்டலில் நடுங்கிப் போனாள் ரதி.

கணவனின் கையை இறுகப் பிடித்துக் கொண்டு பின் தொடர்ந்தாள்.

இப்பொழுது அந்தக் கும்பலின் தலைவன், ''பயத்துல படத்தக் கூடப் பாதில விட்டுட்டுப் போறாங்கடா! பாவம், பேசாம விட்டுடலாமே!'' என்று சொல்ல, உடனே நின்று விட்டிருந்த குணசீலன் அவனுடைய முகத்தை நேருக்கு நேராகப் பார்த்தான்.

ரதியின் நெஞ்சு தடதடவென்று அடித்துக் கொள்ள, ''கசகசன்னு பேசறவனெல்லாம் ஆம்பளையும் கிடை யாது. பேசாமப் போறவனெல்லாம் கோழையும் கிடை யாது. எனக்குன்னு ஒரு பிரஸ்டிஜ் இருக்கு. அதக் கெடுத் துக்க நான் விரும்பல!'' என்று விட்டு வெளியேறி யிருந்தான் குணசீலன்.

இறுகி விட்டிருந்த கணவனின் முகம், ரதியைக் கதி கலங்கச் செய்திருந்தது.

பயத்துடன் கணவனைப் பார்த்தாள்.

மனைவி ஏறி அமர்ந்ததும் காரை ஸ்டார்ட் செய் திருந்த குணசீலன் நேராக அணைக்கட்டின் பாலத்தருகே சென்று காரை நிறுத்தினான்.



''ஸாரி குணா.''

மெல்லிய குரலில் பதட்டத்துடன் சொன்ன மனை வியைப் பார்த்தான் குணசீலன்.

''ஸாரி, இந்த மாதிரி நடக்கும்னு நான் கொஞ்சங்கூட எதிர்பாக்கல.''

''யாரவன்?''

கணவனின் கேள்வியில், விவரம் சொன்னாள் ரதி.

''ஓ, இவங்கப்பா ஊர்ல பணக்காரர்னா உடனே இவன் ஹீரோவாயிட்டானாக்கும்.''

''இந்த மாதிரி அநாகரிகமா இதுக்கு முன்னாடி அவன் எப்பவுமே நடந்துக்கிட்டது கிடையாது.''

''ஓ, அப்ப அவன உனக்கு நல்லாத் தெரியுமா?''

''ம்கூம், பொது இடத்துல வெச்சு சில முறை பாத் திருக்கேன். அவ்வளவுதான். ரொம்ப மரியாதையா சில வார்த்தைகள் பேசுவான். தவிர்க்க முடியாம நானும் ஒரு வார்த்தைல பதில் சொல்லிட்டுப் போயிருக்கேன். அவ் வளவுதான். இன்னைக்குத் தண்ணி ரொம்பவும் அதிகம் போலிருக்கு!'' என்றாள்.

எதுவும் பேசாமல் தன்னைப் பார்த்த கணவனை நடந் ததை நினைத்துக் குற்ற மனப்பான்மையுடன் பார்த்தாள்.

மனைவியின் நிலை புரிய, ''சரிதான், விடு!'' என்று முடித்திருந்தான் குணசீலன்.

முடித்ததோடு மட்டுமல்லாமல், வேறு இயல்பான விஷ யங்களைப் பற்றியும் சாதாரணமாகப் பேசிச் சூழ்நிலையை யும் எளிதாக்கினான்.

தொடர்ந்து முயன்று தன்னையும் அந்தப் பேச்சுக்குள் இழுத்துச் சிரிக்க வைத்த கணவனை நன்றியுணர்ச்சியுடன் பார்த்தாள் ரதி.

''என்னமா?''

''ஒண்ணுமில்ல குணா.''

''ம்கூம், என்னவோ இருந்து இந்த சின்ன அழகான தலையைக் குடையறது தெரியுது. சொல்லு, என்ன விஷயம்?''

''இல்ல, இதுவே வேற யாராவதா இருந்து உதாரணத் துக்குப் பாட்டி, தாத்தா, அப்படி அவங்க பேச்சக் கேக்காம நான் வந்ததுக்கு இந்த மாதிரி நடந்திருந்தா என்னைப் பேசியே ஒரு வழி பண்ணியிருப்பாங்க.''

''அது நியாயமும் கூட. ஆனா நீங்க அப்படியெல்லாம் எதுவுமே சொல்லாததோட அதுக்கும் ஒரு படி மேல போய் என்ன சிரிக்கவும் வெக்க ட்ரை பண்...''

''ரதி! இங்க பாரு.''

கணவனின் அன்பில் என்ன முயன்றும் ரதியால் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்திருக்க வில்லை. கண்கள் கலங்கி அழுகை கூட வந்து விட் டிருந்தது.

''என்னடா, இங்க பாரு.''

''நான் ரொம்ப லக்கி குணா...''

''ம்கூம் இல்லடா,'' என்ற கணவனை நிமிர்ந்து பார்த் தாள் ரதி.

''நீ எவ்வளவு ஆசையாப் படத்துக்குக் கிளம்பி வந்த! ஆனா எவனோ ஒரு பொறுக்கிக்காக நான் உன்னக் கூட்டிட்டு வர வேண்டியதாயிடுச்சு. உன்னோட ஒரு சின்ன ஆசையக் கூட என்னால நிறைவேத்த முடியலன்னு நினைக்கும் போது வேதனையா இரு...''



''ப்ளீஸ் குணா...'' என்று கணவனின் கையைப் பிடித்து அழுத்தினாள் ரதி.

''இப்ப இருக்கற நிலைல நீதாம்மா என்ன மன்னிக் கணும்.''

கணவனின் உணர்ந்து சொன்ன அந்த வார்த்தைகள் ரதியை நெஞ்சு நெகிழச் செய்திருந்தன.

''எனக்கு வர்ற கோபத்துக்கு இப்பவே போய் அவன ஒரு கை பாத்துட்டு...''

''ப்ளீஸ் குணா. அத விடுங்க. இப்படியொரு விஷயம் நடக்கப் போகத்தான என்னால உங்கள முழுசா புரிஞ் சுக்க முடிஞ்சது. யோசிச்சுப் பாத்தா நான் அவனுக்கு நன்றி கூடச் சொல்லணும் போலிருக்கே.''

''ஓ. அப்ப என்ன புரிஞ்சுக்கிட்டயா? அதுவும் முழுசா...'' என்ற கணவனின் பார்வையை எதிர் கொண்டவள், ஆமாம் என்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

''எங்க காட்டு...''

..............

''என்ன பாக்கற? நீ சொன்னது எல்லாமே உண் மையா இருந்திருந்தா நிச்சயம் நீ இந்த மாதிரி இருக்க மாட்ட...''

''பின்ன எப்படி இருப்பேனாம்?''

''அது உனக்கே தெரிஞ்சிருக்கணும், ஏன் தெரியும்...''

கணவனின் பார்வை தன்னை என்னவோ செய்ய, வெட்கத்தில் சூடாகத் தொடங்கியிருந்த முகத்தை உதட்டைக் கடித்து இயல்பாக வைத்துக் கொள்ள முயன்றாள்.

''ம்...''

தன்னைப் பார்த்த கணவனின் பார்வையில், ''இது பொது இடம்...'' என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

''இல்லன்னா...''

வெட்கத்தில் கன்றிப் போய் விட்டிருந்த மனைவியின் முகத்தை மென்மையாகப் பிடித்து நிமிர்த்தியவன், ''அப்பத் தனிமைல நிறைய எதிர்பார்க்கலாம்னு சொல்ற, இல்லையா?'' என்று சரசமான குரலில் கேட்டான்.

கணவனின் கேள்வியில் அவனை நிமிர்ந்து பார்த்தாள் ரதி.

''என்னமா?''

''சரிதான்.''

''அப்பாடா! மேடம் இத சொல்லவே இவ்வளவு யோசிச்சீங்கன்னா இனி செயல்ல எங்க... என்னடா, சொல்லு?''

''குணா...''

''ம்.''

''இப்பப் போனா வீட்ல கேப்பாங்க. அப்ப இங்க நடந்தத...''

''சொல்ல வேண்டாம்.''

''தேங்க்யூ.''

''அடடா என்ன சந்தோஷம். ஆனா...''



மீண்டும் மனைவியின் முகம் சிறிதாகி விட்டிருக்க, ''என்னமா?'' என்று கேட்டான்.

''இல்ல பாத்தவங்க யாராவது போய்ச் சொல்லாமலா இருப்பாங்க...''

''சொல்லட்டுமே. அதுக்கு முன்னாடி நாமளே கச கசன்னு நிறைய வந்து எங்க பக்கத்துலயே உக்காந்தாங்க. அவங்களுக்குள்ள பேசறதெல்லாம் பிடிக்காம எழுந்து வந்துட்டோம்னு சொல்லிட்லாம்.''

''அது சரிதான்.''

''என்ன சிரிக்கற?''

''இல்ல, நீங்க சொல்ற மாதிரி சொல்லிட்டா சொன்ன மாதிரியும் இருக்கும், சொல்லாத மாதிரியும் இருக்கும், நாளைக்கு யாராவது போய்ச் சொல்லி அவங்களே நம்மளக் கேட்டாக் கூட...''

''கரெக்ட், நாங்களே சொன்னோம் தானேன்னு முடிச்சுடலாம்.''

''நீங்க பெரிய ஆள் தான் குணா.''

''ம்.ம், நீயும் பேச்சு மாறக் கூடாது.''

............

''என்ன பாக்கற...''

கணவன் எதைப் பற்றிச் சொல்ல வருகிறானென்பது புரிந்தாலும் ரதி அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

''வீட்டுக்குப் போலாமா குணா?''

''ஏன் அதுக்குள்ள...''

"வீட்ல கொஞ்ச நேரம் எல்லார் கூடவும் பேசிட்டிருக்கலாமே. நாமே வந்ததுலிருந்து இன்னும் தொடர்ந்து கொஞ்ச நேரம் கூட யார் கூடவும் உக்காந்து பேசவே இல்லயே."

"அது சரிதான்!" என்ற குணசீலன், "மத்தவங்களுக்காகக் கூட ரொம்பக் கவலப்பட்டு, யோசிக்கற!" என்று உடனே காரை ஸ்டார்ட் செய்து விட்டிருந்தான்.

கணவனின் வார்த்தைகளின் பொருள் ரதிக்குப் புரியாமல் இல்லை.

அப்படியானால் அவனுக்காகத் தான் பார்க்கவில்லை என்கிறானா?

"என்னமா, திடீர் யோசனை?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லையே."



## 21

அடுத்த சில நிமிடங்களில் இருவரும் வீடு வந்து சேர்ந்திருக்க, தான் முதலில் இறங்கி வீட்டிற்குள் வந்திருந்தாள் ரதி.

கணவனும் தன்னைத் தொடர்ந்து உள்ளே வர, பாட்டி, தாத்தா, தந்தை என அனைவரும் ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

தங்களைக் கண்டதும் பாட்டி எழ, "மரியாதையெல்லாம் மனசுல இருந்தாப் போதும் பாட்டி. உக்காருங்க!" என்றாள்.



அதற்குள் கணவன் உள்ளே வர, அனைவரும் அவனை வரவேற்பதைக் கண்டாள்.

சில நிமிடங்களில் கணவன் தந்தையுடனும் தாத்தாவுடனும் சகஜமாகப் பேசத் தொடங்கி விட்டிருக்க, தான் உள்ளே வந்திருந்தாள்.

வந்தவள் பேசாமல் சென்று படுத்து விட்டிருக்க, காலையிலிருந்து தண்ணீரில் அலைந்ததாலோ என்னவோ படுத்ததும் நன்றாகத் தூங்கியும் போய் விட்டிருந்தாள்.

ரதி மீண்டும் கண் விழித்தபோது. கணவன் படுக்கையில் சாய்ந்தவாறு எதையோ படித்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

அவசரமாக எழுந்து அமர்ந்திருந்தவள், திரும்பிக் கடிகாரத்தைப் பார்த்தாள்.

மணி இரவு பத்தாகி யிருந்தது தெரிந்தது.

"இந்த அளவுக்குத் தூங்கிப் போய்ட்டேனா?" என்று தன்னைத் தானே ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டவள், "நீங்களாவது எழுப்பியிருக்கலாமே..." என்று கணவனைப் பார்த்தாள்.

"சாப்டிங்களா?"

"ஆச்சு."

"எப்படி?"

"எப்படின்னா? வழக்கம் போல..."

"ம்கூம், நான் கேக்க வர்றது எப்படி என்ன எழுப்பாம நீங்க மட்டும் சாப்பிடலாம்னு?"

"நீ நல்ல தூக்கத்துலிருந்த, அதான் உன்ன எழுப்ப வேண்டாம்னு சொல்லிட்டேன்."

''ஏன் சிரிக்கற?''

''அது பாருங்க, இந்த வயித்துக்கு இப்ப பசிக்கிறது. என்ன பண்ணலாம்?''

''பசிச்சதுன்னா சாப்பிட வேண்டியது தான், வேறென்ன செய்ய முடியும்?''

''கரெக்ட். போய்ச் சாப்டுட்டு வர்றேன்.''

''அவசியமில்ல...''

''பின்ன பசிக்குதே.''

''வெளிய போக வேண்டிய அவசியமில்லைன்னு சொல்றேன்.''

கணவனின் பார்வை சென்ற திசையைப் பார்த்தாள் ரதி.

ப்ளேட் ஒன்று, மற்றொரு ப்ளேட்டால் மூடி வைக்கப் பட்டிருந்தது தெரிந்தது.

சென்று திறந்து பார்த்தாள்.

இட்லி, சப்பாத்தி, தயிர் சேமியா என மூன்றும் சட்னி, குருமாவுடன் அழகாக வீற்றிருந்தன.

''தேங்க்யூ!'' என்றவள் கை கழுவிக் கொண்டு வந்து அனைத்தையும் ஒரு பிடி பிடித்தாள்.

சாப்பிட்டு முடித்தவள் அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு மீண்டும் சென்று கைகளைக் கழுவிக் கொண்டு வந்தாள்.

''உங்களுக்குப் பால் எடுத்துட்டு வர்றேன்!'' என்று நகரப்போன மனைவியை வேண்டாமென்று காத்திருந் தான் குணசீலன்.



''ஏன்?''

''ஏன்னா வயிறு ஃபுல், வா உக்காரு.''

கணவனின் அழைப்பில் படுக்கையில் வந்து சம்மண மிட்டு அமர்ந்தாள் ரதி.

''என்ன விருந்து சாப்புட்ற மாதிரி உக்காந்திருக்க?''

''இனியுமொரு முறையா? ம்கூம். தாங்காதுப்பா.''

''அப்புறம் என்ன இன்னைக்குத் தூங்கிட்டே இருக்க?''

கணவனின் கேள்வியில், ''தெரியல. தண்ணில அலைஞ் சேனில்லையா, அதனால இருக்கலாம்!'' என்றாள்.

''அது மட்டும் தானா?''

''வேறென்ன?''

''ஒருவேள நேத்து நைட் தூக்கம் கெட்டதால இருக்கு மோன்னு...''

................

''ஆஹா என்ன வெட்கம், சரிதான் விடு. இன்னைக் குப் பாக்கப் போற நைட் டியூட்டிக்கு நாளைக்குப் பகல்ல தூங்கிக்கலாம்.''

கணவனின் பேச்சு காதில் விழுந்தாலும் விழாதது போல, ''இது என்ன புக்?'' என்று கையை நீட்டினாள் ரதி.

மனைவி பேச்சை மாற்றுவது புரிய, மனதிற்குள் சிரித்துக் கொண்டான் குணசீலன்.

''பாட்டி என்ன நல்லாத் திட்டியிருப்பாங்க!'' என்ற மனைவியிடம், ''அதுக்கு நான் விட்டிருந்தா தான?'' என்றான்.

''குடிக்கத் தண்ணி கிடைக்குமா?''

கணவன் கேட்க, எழுந்து சென்று ஜக்கை எடுத்தாள் ரதி.

மிக்க குறைந்த அளவு தண்ணீரே அதிலிருக்க, ''ஒரு நிமிஷம் எடுத்துட்டு வர்றேன்,'' என்று கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

வெளியே பந்தலில் மின் விளக்கு எரிந்து கொண்டிருப்பது தெரிய, சென்று பார்த்தாள்.

தந்தை, அமர்ந்து, ஏதோ படித்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

''வாடாம்மா.''

''என்ன டாடி தூங்கலையா?''

''இல்லமா, நான் தூங்க மணி பன்னெண்டாகும்.''

''அவ்வளவு லேட்டாகுமா?''

''ஆமாம்மா, அப்படிப் படுத்தாதான் காலைல அஞ்சரைக்கு எழற வரைக்கும் ஒரே தூக்கமா தூங்கி எழ முடியுது.''

''ஓ.''

''நீ தூங்கலையா?''

''ரொம்ப நாளைக்கப்புறம் தண்ணில அலைஞ்சதாலயோ என்னவோ, மதியத்துல இருந்து ஒரே தூக்கம் டாடி. இப்பக் கொஞ்சம் முன்னாடிதான் எழுந்து சாப்பிடவே செஞ்சேன்.''

''மாப்பிள்ள?''

''அவர் தூங்கப் போறார்...''



''போம்மா, நீ போய்ப் படுத்துக்கோ.''

''ம்கூம், இன்னைக்கு என்னவோ உங்ககூடப் பேசிட்டே இருக்கலாம் போல இருக்கு டாடி. ஒரு நிமிஷம் இருங்க. அவருக்குத் தண்ணி கொண்டு போய்க் குடுத்துட்டு வந்துட்றேன்.''

கணவனுக்குத் தண்ணீரைக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு மீண்டும் சில வினாடிகளிலேயே திரும்பி வந்திருந்தாள்.

வந்தவள், ''அப்புறம் டாடி...'' என்று பேசும் ஆவலுடன் தந்தையின் அருகில் சென்று அமர்ந்தாள்.

''மாப்பிள்ள காத்துட்டிருக்கப் போறார் கண்ணம்மா.''

இதென்ன அமர்ந்து பேசத் தந்தை விட மாட்டார் போலிருக்கிறதே என்று தோன்றி விட்டிருக்க, ''அவரு ஒரு தூக்கமே தூங்கிட்டார் டாடி!'' என்று வேண்டுமென்றே பொய் சொன்னாள்.

கணவன் தன்னை எதிர்பார்த்துக் காத்திருப்பது நினைவிற்கு வர, மனதிற்குள் என்னவோ போலிருந்தது.

ஆனாலும் தந்தையுடன் பேசும் ஆவல் உந்த, அதை முயன்று ஒதுக்கினாள்.

''நீங்க எப்பவுமே இப்படித்தானா டாடி?''

''எப்படி?''

''இல்ல, லேட்டா தான் தூங்குவீங்களான்னு கேக்கறேன்.''

''இப்ப சில வருஷங்களாம்மா. அப்புறம் எப்படியிருக்க கண்ணம்மா? உன் புகுந்த வீட்ல எல்லாரும் நல்லாப் பேசறாங்களா?''

''அதெல்லாம் டாடி.''

''முக்கியமா மாப்ள உன்ன நல்லபடியாப் பாத்துக்கறா ராம்மா?''

''அதெல்லாம்...'' என்ற தனது முகத்தைத் தந்தை கூர்ந்து கவனிக்கிறாரோ என்று தோன்றியது ரதிக்கு.

''மாப்பிள்ள மாதிரி ஒருத்தர எங்கயும் பாக்க முடியா துமா. அந்த அளவுக்கு எல்லா விதத்துலயுமே கிரேட். நானும் இருபது வருஷமாப் பாத்துட்டுத் தான இருக் கேன்.''

''அது சரிதான் டாடி. அப்புறம் உங்களுக்கு பிஸினஸ் எப்படிப் போயிட்டிருக்கு?''

''அதுக்கென்னமா, நல்லாப் போகுது. எல்லாத்தையும் ஸிஸ்டமேட்டிக்கா மாத்தியாச்சு. அதனால என் டைரக்ட் கேர் இல்லேன்னாலும் கூடப் பிரச்சனையில்ல. நல்லாப் போகும்.''

''பரவாயில்ல டாடி. கேக்கவே சந்தோஷமா இருக்கு. இனிமேலாவது ஸ்ட்ரெய்ன் குறைஞ்சு நிம்மதியா இருங்க.''

''அது சரிதான்மா. அதோட வயசும் அறுபதுக்கு மேலாச்சு. இனிமேல் தொடர்ந்து முன்ன அளவுக்கு ஸ்ட் ரெய்ன் பண்ணவும் என்னால முடியாது.''

''உங்களுக்கு என்ன டாடி, சிங்கக் குட்டி மாதிரி நந்து அண்ணா இருக்கான். இனிமேல உங்கள உக்கார வெச் சுட்டு அவன் எல்லாத்தையும் பாத்துக்க மாட்டானா என்ன?''

''அது சரிதான். கொஞ்ச நாள் கூட இருந்து பாத்துக் கிட்டா அவனும் பிக்கப் பண்ணிக்குவான். ஆனா...''



''என்ன டாடி?''

''அவனுக்கு வேற ஐடியா இருக்கும் போலிருக்குமா.''

''வேற ஐடியான்னா, தனியா ஏதும் பிஸினஸ் பண் ணப் போறானா?''

''ஆமாம் கண்ணம்மா, அப்படித்தான் சொல்லிட்டிருக் கான்.''

''ஓ.''

''இவனும், இவனோட ஃப்ரண்டும் சேந்து செய்யப் போறாங்களாம். கேட்ட வரைக்கும் நல்லாதான் படுது.''

''பாருங்க டாடி, எல்லாமே நல்லபடியாப் பட்டுச்சுன்னா அண்ணா கேக்கறத செஞ்சு குடுங்க.''

''சரிதான். அப்புறம் ரதிம்மா...''

''என்ன டாடி?''

''வாற மாசம், அங்க சென்னைல வெச்சு வீட்டு வேலை தொடங்கலாம்னு இருக்கேம்மா.''

''என்ன திடீர்னு, நமக்குத் தான் வீடு இருக்கே.''

''நான் கட்டப் போறதா சொல்றது உங்களுக்கு. அதா வது உனக்கு.''

''எனக்கா?''

''ஆமாம்மா.''

''என்ன டாடி சொல்றீங்க, எனக்கு ஒண்ணுமே புரியல.''

''உன் புகுந்த வீட்டு மனுஷங்க தங்கம்மா. அவங்க கிட்டக் கேட்டுட்டிருந்தா எதுக்குமே விட மாட்டாங் கன்னு வீடு கட்றதுக்கான ஏற்பாட்டையெல்லாம் முடிச் சுட்டு அதுக்கப்புறமா சொல்லலாம்னு இருந்துட்டேன்.''

''ஓ, அப்ப எங்கிட்ட தான் முதல்ல சொல்றீங்களா?''

''இல்லமா, கொஞ்சம் முன்னாடி மாப்ள கிட்ட சொன்னேன்.''

''என்ன சொன்னாரு?''

''நான் எதிர்பாத்த மாதிரி எதுக்குன்னு தான் கேட்டார், ஆனா நான் முடிவா இருக்கறது தெரிஞ்சுட்டதால அவராலயும் ஒண்ணும் சொல்ல முடியல.''

''எதுக்கு டாடி இதெல்லாம்?''

''என்னமா?''

''இப்ப வீடுதான். ஏன் சிரமப்பட்றீங்க?''

''அடப் பெரிய மனுஷி மாதிரி ஏதேதோ கேக்கற!''

''அதுக்கு எல்லாத்தையும் விடப் பணம் நிறையச் செலவாகுமே.''

''இப்ப இருக்கற வீட்டையும், பிஸினஸையும் தவிர எங்கிட்ட இருக்கற எல்லாத்தையும் பாதிபாதியா பிரிச்சுட்டேம்மா.''

''ஒரு பாதிய அவனுக்கு பிஸினஸ்க்குக் கொடுத்துட்டு, இன்னொரு பாதில உனக்கு வீடு எடுக்கப் போறோம். அவ்வளவுதான்.''

''ஓஹோ, அப்ப அந்த பிஸினஸ், பழைய வீடு ரெண்டும் உங்களுக்கா?''

''வாயாடி. அதப்பத்தி உனக்கென்ன?''

''பின்ன, நீங்க தான டாடி பங்கு பிரிச்சுட்டிருக்கீங்க.''

''அது கட்டாயம்மா.''



''ம், அப்படி யாரு வந்து உங்களக் கட்டாயப் படுத்தினாங்களாம்?''

''நீ சின்னப் பொண்ணுமா. உனக்கு அதெல்லாம் புரியாது. விடு.''

''சரிதான் டாடி.''

''அப்புறம் வீட்டு ப்ளேன்ல உனக்கும் மாப்பிள்ளைக்கும் ஏதாவது ஐடியா இருந்தாலும் கலந்து பேசிட்டுச் சொல்லுங்கம்மா.''

''சரி டாடி.''

''இனி நீ போய்ப் படுத்துக்கோமா. நேரமாச்சு பாரு.''

''ம்கூம், தினமுமா உங்ககூட இப்படிப் பேசிட்டிருக்கேன். இன்னும் ரொம்ப நேரம் பேசிட்டிருந்துட்டு தான் எழுந்து போவேன்.''

''நாளைக்கு உன் அத்தையும், மாமாவும் வர்றாங்கமா.''

''அப்படியா!''

''ஏன் மாப்ள உங்கிட்ட சொல்லலயா?'' என்றவர், ''அது சரிதான் இப்ப கொஞ்சம் முன்னாடி தான் எங்களுக்கே தெரியும்!'' என்றார்.

''அதுதான், இல்லன்னா அவர் எங்கிட்ட சொல்லியிருப்பாரேன்னு பாத்தேன்.''

மேலும் ஒரு மணி நேரமும் கூட தந்தையிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு அதற்குப் பிறகே தூங்கச் சென்றாள் ரதி.

அவள் தங்களுடைய அறைக்கு வந்து சேர்ந்த போது கணவன் நன்கு தூங்கி விட்டிருந்தது தெரிந்தது.

மின் விளக்கு அணைக்கப்பட்டிருக்க, மிகக் குறைந்த விடிவிளக்கின் வெளிச்சத்தில் சத்தம் செய்யாது சென்று படுத்துக் கொண்டாள்.

காலையிலும் கணவனுக்கு முன்பாகவே எழுந்து வெளியே வந்திருந்தாள் ரதி.

அத்தையும், மாமாவும் வருகிறார்களென்று பாட்டி பரபரப்புடன் வேலை செய்து கொண்டிருக்க, தானும் சென்று உதவினாள்.

''ரதி!''

''என்ன பாட்டி.''

''மாப்பிள்ள எழுந்துட்டாரான்னு பாத்துட்டு வாம்மா. காபி கலக்கிக் குடுக்கறேன்.''

...

''என்னமா, போய்ப் பாத்துட்டு வா.''

''அப்படிப் போய்க் கேக்க வேண்டிய அவசியமே இல்ல பாட்டி. அவரே வந்து கேப்பார்.''

''சரிதான், இந்தப் பாத்திரங்களக் கொஞ்சம் தேய்ச்சுக் கொண்டு வா.''

மேலும் சில நிமிடங்களில் கணவன் வர, பாட்டியே காபி கொண்டு போய்க் கொடுப்பது தெரிந்தது.

பாட்டி சொல்லச் சொல்ல அவருக்கு அனைத்து வேலை களையும் செய்து கொடுத்தாள் ரதி.

''சரிமா. டிபன் ஆச்சு. இனி பரிமாறினாப் போதும்.''

''சரிதான் பாட்டி. நான் எல்லாத்தையும் பரிமாறத் தயாரா எடுத்து டேபிள் மேல வைச்சுட்றேன்.''



டைனிங் டேபிள் மீது அனைத்தையும் எடுத்து வைத்து முடித்தவள் ஹால் சோபாவில் அமர்ந்து கணவன் பேப்பர் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

அருகில் சென்றவள், ''சாப்பிடலாம், வாங்க!'' என்று மெதுவாக அழைத்தாள்.

எதுவும் பேசாமல் பார்த்த கணவன்னை லேசாகத் தோன் றிய படபடப்பை மனதிற்குள் மறைத்துக் கொண்டு பார்த்தாள் ரதி.

''அம்மாவும், அப்பாவும் வருவாங்க. சேர்ந்து சாப்புட் டுக்கறேன்.''

''குடிக்க ஏதாவது...''

''ஆறு மணிக்கு வந்து கேட்டிருந்தா கொஞ்சம் பரவாயில்லாம இருந்திருக்கும்.''

சில வினாடிகள் நின்றிருந்து விட்டுப் பழையபடி மீண்டும் வந்து தன்னுடைய வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள் ரதி.



## 22

சொன்னது போல ஒன்பது மணிக்குத் தனது அத் தையும், மாமாவும் வந்து சேர, தானும் சென்று வரவேற்று உபசரித்தாள்.

தொடர்ந்து வந்த ஒரு மணி நேரத்தில் டிபன் வேலை முடிய, தானே முன்னின்று மதிய உணவிற்கான வேலை களைக் கவனித்தாள்.

''என்னடாம்மா, ரொம்பவும் பிஸியா இருக்க போல?''

''வாங்க அத்தை!'' என்றவள், ''அப்படியெல்லாம் இல்லையே!'' என்று லேசான வெட்கத்துடன் மறுத்தாள்.

''நீ இவ்வளவு பிரமாதமா, அதுவும் இவ்வளவு சாமர்த்தியமா எல்லா வேலைகளையும் செய்வியா?''

''அப்படியெல்லாமில்ல...''

''தன்னடக்கமும் வேற.''

சரியாக அதே நேரம், ''டீ எடுத்துக்கோங்க!'' என்று ட்ரேயைக் கொண்டு வந்து நீட்டிய மங்களம், ''அதெல்லாம் பிரமாதமா எல்லா வேலைகளையும் செய்வா. என்ன, அதுக்கு மனசு இருக்கணும். அவ்வளவுதான்!'' என்றார்.

''அப்படியா!'' என்று தனது மருமகளைப் பார்த்த சுசீலா, ''இன்னைக்கு என்னமா ஸ்பெஷல் அப்படி?'' என்றார்.

''ஏன் அத்தை நீங்களும், மாமாவும் வந்திருக்கீங்களே, அதக்கூட ஒரு காரணமா எடுத்துக்கலாமே.''

''அப்படியா, ரொம்ப சந்தோஷம். அதோட இப்பதான் எனக்கு நிம்மதியாவும் இருக்கு.''

''ஏன் அத்தை?''

''இல்ல, எங்கள நல்லா உக்கார வெச்சு கவனிச்சுக்குவ இல்லையா? அந்த நிம்மதிதான்.''

''அதெல்லாம், அதுவும் உங்கள மாதிரி தட்டிக் கொடுத்து வேல வாங்கினா நல்லாவே செய்வா!'' என்றார் மங்களம்.



''ரதிம்மா!''

''என்ன பாட்டி?''

''மாப்ள அவரு ரூம்ல இருப்பார் போலிருக்கு. இந்த டீயக் கொண்டு போய்க் குடுத்துட்டு வந்துட்றியா?'' என்று பாட்டி கொடுத்ததை வாங்கிக் கொண்டு வந்தாள் ரதி.

தங்களுடைய அறையில் கணவன் சோபாவில் அமர்ந்து படித்துக் கொண்டிருக்க, அருகில் சென்றாள்.

''டீ எடுத்துக்கோங்க.''

''வெச்சுட்டுப் போ.''

''சூடு சரியா இருக்கு!'' என்ற மனைவியின் குரலில் உடனே எடுத்துக் கொண்டவன், நிமிர்ந்து பார்த்தான்.

''உக்காரு.''

''பரவாயில்ல...''

''சரிதான். நான் எத சொல்லி நீ கேக்கப் போற?''

கணவன் சொல்லிக்கூட முடித்திருக்கவில்லை. உடனே அமர்ந்து விட்டிருந்தாள்.

''நீ முக்கியமான வேலை ஏதும் இருந்தாப் போய்ப் பாரு.''

கணவனின் வார்த்தைகளில் இருந்த உட்பொருள் ரதிக்குப் புரிந்திருக்கவில்லை.

''இல்ல. சும்மா கிச்சன்ல பாட்டிக்கும் அத்தைக்கும் ஹெல்ப் பண்ணிட்டிருந்தேன். அவ்வளவுதான்.''

டீயை ஒரு வாய் குடித்தவன், ''உனக்கு?'' என்றான்.

''ம்கூம், வேண்டாம்.''

''நைட் ரொம்ப நேரம் கழிச்சுத் தான் தூங்க வந்த போல?''

''ஸாரி, அப்பா கூட பேச உக்காந்ததுல நேரம் போனதே தெரியல.''

''வேணும்னே செஞ்ச மாதிரி ஸாரியெல்லாம் எதுக்கு?'' என்ற கணவனின் பார்வையில் என்ன முயன்றும் அவளையறியாமலேயே ஒருவிதக் குற்ற மனப்பான்மை தோன்றுவதை ரதியால் தடுக்க முடிந்திருக்கவில்லை.

''நான் உன்ன ரொம்பவும் கஷ்டப்படுத்தறேனாம்மா?''

கணவனின் வார்த்தைகளில் தெரிந்த விரக்தி ரதியை என்னவோ செய்திருந்தது என்றால் அது சற்றும் மிகையல்ல.

''அச்சச்சோ! அதெல்லாம் ஒண்ணு...''

''நான் உங்கிட்ட இன்னும் எவ்வளவோ எதிர்பாக்கறேன் ரதி. கூடாதுன்னாலும் சொல்லிடு. எப்படிடா சொல்றதுன்னு சகிச்சுக் கிட்டுத்தான் போகணுங்கற அவசியமெல்லாம் கிடையாது.''

''அதெல்லாம்...''

''வேண்டாம். நீ பொய் சொல்லாத. அது உனக்கு சுத்தமாப் பொருந்தல.''

அப்படிச் சொல்லிவிட்டுக் கணவன் மீண்டும் பேப்பரில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருக்க, ''எம்மேல கோபமா?'' என்று அவனுடைய கையின் மேல் தனது கையை வைத்திருந்தாள்.

............



''குணா, உங்ககிட்ட தான்.''

''அப்ப நான் அந்த அளவுக்கு உங்கிட்ட உரிமை எடுத்துக்கலாம்னு சொல்றியா?''

''ப்ளீஸ் குணா, ஏன் இப்படியெல்லாம் பேசறீங்க?''

''ஏன்னா என்ன சொல்றது?

''எனக்கு உன்ன மாதிரி நடந்துக்கத் தெரியலன்னு வேணும்னா சொல்லலாம்.''

''என்ன மாதிரின்னா?''

''உள்ள ஒன்ன வெச்சுக்கிட்டு வெளிய வேற பேசறியே, அந்த மாதிரி தான்.''

''நான் அப்படியெல்லாம் நடந்துக்கவே இல்லையே...''

''சரிதான். நம்பிக்கறேன்.''

''நான்...''

''உனக்கு வேலை நிறைய இருக்கும். போய்ப் பாரு.''

''ப்ளீஸ் குணா.''

''போதும் ரதி, உங்கிட்ட ஒரு செயற்கைத்தனம் அப்படியே வெளிப்படையாத் தெரியுது. விட்டுடு.''

''நான் என்ன செஞ்சா நம்புவீங்க?''

''உண்மையப் பேசினா.''

''இப்பவே உண்மையத் தான் பேசிட்டிருக்கேன்!'' என்று உணர்ந்து சொல்வதைப் போலச் சொன்ன மனைவியை ஒரு வினாடி பார்த்தவன், ''என்னக் கொஞ்சம் தனியா விடு!'' என்று எழுந்து உள்ளறைக்குப் போனான்.

கணவனைத் தொடர்ந்து தானும் உள்ளே எழுந்து வந்திருந்த ரதி, ''நான் சொல்றத நம்பற வரைக்கும் நான் உங்கள விடப் போறதில்ல!'' என்றாள்.

''அதான் ஏற்கெனவே சொன்னேனே. உனக்குப் பொய் சுத்தமாப் பொருந்தல.''

கணவனின் வார்த்தைகளில் திரும்பி அந்த அறையின் கதவை உள்பக்கமாகத் தாழிட்டாள் ரதி.

தாழிட்டு விட்டுத் திரும்பியவள், இப்பொழுது கணவனின் ஏளனப் பார்வையில் திகைத்துப் போனாள்.

''ஓ. அப்ப உடம்புத் தேவைக்காக... ம்கூம்... உன் உடம்புக்காக நான் அலைஞ்சுட்டிருக்கேன்னு நினைச்சுட்டிருக்க?''

கணவனின் வார்த்தைகளில் கன்னத்திலேயே அறை வாங்கியதைப் போலத் துடித்துப் போனாள் ரதி.

''ஏன் இப்படியெல்லாம்...''

''ஆமான்னு உண்மைய ஒத்துக்கோயேன். உன் மனசுல இருக்கறதும் அது தான.''

கணவன் அவன் பாட்டுக்குத் திரும்பி ஷெல்பில் எதையோ தேடிக் கொண்டிருக்க, எதையும் செய்யத் தோன்றாமல் கால்கள் தரையிலேயே வேரோடி விட்டாற் போல அப்படியே நின்று விட்டிருந்தாள் ரதி.

சில நிமிடங்களில் மீண்டும் நடப்பிற்கு வந்திருந்தவள், கணவனின் அருகில் சென்றாள்.

சரியாக அதே வினாடி தானும் திரும்பியிருந்த குணசீலன், மனைவியை மிக அருகில் சந்தித்தான்.

''தயவு செஞ்சு என்ன நம்புங்க குணா...''

''ஆசையாத் தான் இருக்கு!'' என்ற கணவனைத் தவிப்புடன் பார்த்தாள் ரதி.



''நான் என்ன செஞ்சா என்ன நம்புவீங்க?''

முத்துப் பூத்தாற் போல மனைவியின் முகத்தில் ஆங்காங்கே பூத்திருந்த வேர்வைத் துளிகளும், பார்வையில் தெரிந்த ஒருவித ஏக்கமும் தன்னை என்னவோ செய்வதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

வினாடிகள் அப்படியே போய்க் கொண்டிருந்தன.

''என்ன நம்பு...''

மனைவி சொல்லிக் கூட முடிந்திருக்கவில்லை. அவளை வெறி கொண்டாற் போலத் தனது மார்போடு இழுத்து அணைத்துக் கொண்டு விட்டிருந்தான் குணசீலன்.

எதையுமே உணர்ந்து கொள்ளக் கூட முடியாத நிலையிலிருந்த ரதி தானும் கணவனை இறுக அணைத்து, அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

அப்படியே எவ்வளவு நேரம் சென்றதோ, மீண்டும் இருவரும் நடப்பிற்கு வந்தபோது வெகு நேரம் கடந்து விட்டிருந்தது மட்டும் தெரிந்தது.

ஆனாலும் மனைவியை விடுவிக்க வேண்டுமென்று குணசீலனுக்கோ, கணவனிடமிருந்து விலக வேண்டுமென்று ரதிக்கோ தோன்றியிருக்கவில்லை.

ஏன், கணவனின் அணைப்பு மேலும் இறுகுவது தெரிய மீண்டும் முற்றிலுமாகத் தன்னிலை மறந்து போனாள்.

மீண்டும் எவ்வளவு நேரம் அப்படிச் சென்றதோ, மிக அருகில் கேட்ட ஏதோ சத்தத்தில் தான் திரும்பவும் நடப்பிற்கு வந்திருந்தனர்.

தனது மொபைல் ஒலித்துக் கொண்டிருக்க, மேலும் சில வினாடிகள் எடுத்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டு அட்டெண்ட் செய்து பேசினான்.

சில வினாடிகள் பேசிவிட்டு மொபைலை வைத்தவன், திரும்பி மனைவியைப் பார்த்தான்.

அவளும் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

கணவனின் அந்தப் பார்வையைத் தொடர்ந்து சந்திக்க முடியாமல் முகம் மீண்டும் சூடாகத் தொடங்கி விட்டிருக்க, ''ப்ளீஸ் குணா அப்படிப் பாக்காதீங்க!'' என்று சிணுங்கினாள்.

''நான் இன்னைக்கு ஊருக்குக் கிளம்பியாகணும் ரதி.''

கணவனின் வார்த்தைகளில் அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்த்தாள் ரதி.

''என்ன?''

....

''ஏன் இவ்வளவு சீக்கிரம்?''

''ஒரு முக்கியமான வேலை, அதுவும் திடீர்னு வந்துடுச்சு.''

''எத்தன மணிக்குக் கிளம்பணும்?''

''இப்பவே கிளம்பினாக் கூட நல்லாத்தான் இருக்கும்.''

''இப்பவேவா?''

''ம்.''

''அது முடியுமா...?''

''முடியாம என்ன?''



..............

''என்னமா?''

''இல்ல, இன்னும் சில நாள் இருப்போம்னு ஆசையா இருந்தே...''

''சரிதான். நீ வேணும்னா இன்னுமொரு ரெண்டு நாள் இருந்துட்டு வா.''

''அது எப்படி, நல்லாக்குமா?''

''நல்லா இல்லாம என்ன, என் தொல்லையில்லாம நீ ரொம்பவும் நிம்மதியாக் கூட இருக்கலாமே...''

''ப்ளீஸ் குணா...'' என்று மேலும் ஏதோ சொல்ல வந்த மனைவியை அருகில் இழுத்து அவளுடைய இதழ்களில் இதழ் பதித்தவன் சில வினாடிகளில் விடுவித்தும் இருந்தான்.

''அதுதான் கரெக்ட்.''

கணவனின் செய்கையிலிருந்து நடப்பிற்கு வர ரதிக்கு மேலும் பல வினாடிகள் பிடித்திருந்தன என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

''என்னடா?''

''இல்ல, எது கரெக்ட்னு...''

''நான் முன்னாடி கிளம்பறத சொல்றேன்.''

''நீங்கன்னா?''

''நான் மட்டும் தான். பாக்கலாம். அத்தையும் மாமாவும் வர்றதா இருந்தா அவங்களையும் அழைச்சுட்டே கிளம்பறேன். நீ இன்னும் சில நாள் இருந்து நல்லா என்ஜாய் பண்ணிட்டு அதுக்கப்புறமா மாமாகூட வா.''

''நீங்களும் இருங்களேன் குணா. அந்த வேலைய போன்லயே பேசி முடிச்சுக்குவீங்களாம்...''

''இல்லமா. அது நல்லா இருக்காது. எனக்காக பையர்ஸ் ஃபாரின்ல இருந்து வரப் போறாங்க. ஒரு முக்கியமான பெரிய ஆடரும் கூட. நேர்ல பேசற மாதிரி வராது. எல்லாத்துக்கும் மேல இது சில வார்த்தைகள்ல பேசி முடிக்கப் போற விஷயமும் கிடையாது. பேசி எல்லாம் சரியா ஒத்துப் போனா நான் ஒப்பந்தத்துலயும் ஸைன் பண்ண வேண்டியிருக்கும்.''

''சரிதான். போலாம்.''

''போலாமா? அப்ப நீயும் வரப் போறியா? இங்க இருக்கலையா?''

''ம்கூம்.''

''ஏன்?''

''உங்களப் பிரிஞ்சு இருக்க முடியாது.''

''அடடா! இது மட்டும் மனசார உணர்ந்து வர்ற வார்த்தைகளா இருந்தா எவ்வளவு நல்லார்க்கும்!''

................

''அது கஷ்டம் இல்லையா?''

கணவனின் கேள்வியில், ''இதுதான் உங்க லிமிட்!'' என்று விளையாட்டாய் என்றாலும் கோபத்துடன் சொன்னாள் ரதி.

''ஓ!''

''அப்புறம் குணா...''

''என்னமா?''



''ஒண்ணுமில்ல, நான் வந்து ரொம்ப நேரமாச்சு. காணமேன்னு பாத்துட்டிருப்பாங்க!'' என்று மனைவி சொல்ல, ''சரிதான்...'' என்று கதவைத் திறந்திருந்தான் குணசீலன்.

''இனி லேட் பண்ணிட்டிருக்க வேண்டாம்னு நினைக்கறேன்,'' என்று பேண்ட்டுக்கு மாறியவன், சில வினாடிகளில் கிளம்பி மனைவியைத் தொடர்ந்து தானும் வெளியே வந்திருந்தான்.

''என்ன மாப்ள, எங்கயோ கிளம்பிட்டிங்க போல?''

ரகுநாத் கேட்க, ''ஆமாம் மாமா, ஊருக்கு...'' என்றான்.

''ஊருக்கா?''

''ஆமாம் மாமா!'' என்றவன், அவரிடமும் விளக்கமாக விஷயத்தைச் சொன்னான்.

''இப்பதான் அப்பாவும், தாத்தாவும் தோட்டத்துக்குள்ள போய்ட்டு வர்றேன்னு கிளம்பினாங்க மாப்ள.''

''சரிதான் மாமா. அவங்களப் போற வழில பாத்து சொல்லிட்டே கிளம்பிக்கறேன்.''

பெண்களிடமும் விஷயத்தைச் சொன்னவன், மனைவியிடமும் மீண்டுமொரு முறை சொல்லிக் கொண்டு புறப்படத் தயாரானான்.

''மதியம் சாப்டுட்டுக் கிளம்பலாமே.''

ஆசையாகப் பாட்டி மங்களம் கேட்க, ''எனக்கும் ஆசையா தான் இருக்கு பாட்டி. என்ன பண்றது, அதுக்குள்ள இப்படியொரு வேலை வந்துடுச்சு. நிச்சயம் இன்னொரு நாள் வந்து நீங்களே அலுத்துக்கற வரைக்கும் தங்குவேன்!'' என்று மீண்டுமொரு முறையும் அனைவரிடமும் சொல்லிவிட்டுக் கிளம்பியே விட்டிருந்தான்.

அப்படியே தோட்டத்திற்குச் சென்று தனது தந்தை மற்றும் தாத்தா கருணாகரனிடமும்.



## 23

சில நிமிடங்களில் முக்கிய சாலையை அடைந்திருந்த குணசீலன், காரின் வேகத்தை வெகுவாக அதிகரித்தான்.

முடிந்தால் வெளிநாட்டவர்களைக் காக்க விடாமல் அன்று இரவே ஏதாவது ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வைத்துச் சந்தித்துப் பேச வேண்டுமென்று மனதிற்குள் எண்ணிக் கொண்டான்.

திடீரென்று சற்றுத் தொலைவில் யாரோ காருக்குக் குறுக்காக வந்து நின்று இரண்டு கைகளையும் நீட்டுவது தெரிய, வேகத்தை வெகுவாகக் குறைத்துக் கடைசியில் காரை நிறுத்தியே இருந்தான் குணசீலன்.

கார் நின்றதும், கார் கண்ணாடியை இறக்கி விட்டு வெளியே பார்த்தான்.

இளைஞன் ஒருவன் நின்றிருப்பது தெரிந்தது.

சற்று நன்றாகப் பார்த்ததில் தான் அவன் இரவு தியேட்டரில் வைத்துப் பார்த்தவர்களில் ஒருவன் என்பதும் புரிந்தது.

''என்ன...?''

குணசீலன் வாயைத் திறந்து கேட்பதற்குள் அவன், அந்த இளைஞன் முந்திக் கொண்டான்.



''தயவு செஞ்சு என்ன நீங்க மன்னிக்கணும்!'' என்று விட்டு குணசீலனின் முகத்தையே பார்த்தான்.

சுற்றி வளைத்துப் பேசக் குணசீலனுக்கும் விருப்பமில்லாததால் நேரடியாகவே விஷயத்திற்கு வந்திருந்தான்.

''எதுக்காக இப்ப கார நிறுத்தின?''

பார்ப்பதற்கு ஒரு இருபத்தைந்து வயது கணிக்கத் தக்கவனாக இருந்த அந்த இளைஞனிடம், ''என்ன, சொல்லு?'' என்று மீண்டுமொரு முறையும் கேட்டான்.

''நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்.''

''சொல்லு.''

''உக்காந்து பேசினா நல்லார்க்கும்னு பாத்தேன்.''

சில வினாடிகள் எதுவும் பேசாமல் அந்த இளைஞனையே பார்த்த குணசீலன், உடனே தனக்குப் பக்கவாட்டிலிருந்த முன்பக்க கார் கதவைத் திறந்திருந்தான்.

''வா, உக்காரு.''

''இல்ல ஸார், வெளிய எங்காவது...''

"எனக்கு ஒரு முக்கியமான வேலையிருக்கு. அதுக்காகத் தான் அவசரமாக் கிளம்பிட்டிருக்கேன். சொல்ல நினைக்கறத ஒரு ரெண்டோ, மூணோ நிமிஷத்துல சொல்ல முடியும்னா நான் இருக்கறேன். இல்லன்னா...''

குணசீலன் முடித்துக் கூட இருக்கவில்லை. ''அச்சச்சோ! இல்ல ஸார்...'' என்று காருக்குள் ஏறி அமர்ந்திருந்தான் அந்த இளைஞன்.

அவன் ஏறி அமர்ந்ததும் காரை ஒரு ஓரமாக மரத்தடி நிழலில் கொண்டு போய் நிறுத்தினான் குணசீலன்.

நிறுத்திவிட்டு அவன் திரும்பி என்ன என்பதைப் போல, அந்த இளைஞனைப் பார்க்க, அவனோ பயத்துடன் விழித்தான்.

''என்ன விஷயம், சொல்லு?''

''ஸார்... இத எப்படித் தொடங்கறதுன்னுதான் தெரியல...''

சில வினாடிகளில் மீண்டும் அவனே வாயைத் திறந்திருந்தவன், ''நான் சொல்றத நீங்க கோபப்படாம கேக்கணும்,'' என்றான்.

குணசீலனின் முகத்தில் லேசாகத் தெரிந்த எரிச்சலும், கோபமும், மீண்டும் உடனே அவனைப் பேசச் செய்திருந்தன.

''ஸார்! நான் ரதி கூட அதாவது உங்க மனைவி கூடக் காலேஜ்ல படிச்சவன். என் பேர் ராஜேஷ்.''

.........

''நான் ரதிய உயிருக்குயிரா நேசிக்கறேன். அதே மாதிரித்தான் என்ன ரதியும்.''

...

''எங்க... என் காதல் உண்மையானது. அது ரதிக்கும் நல்லாவே தெரியும்.''

...

''ஆரம்ப நாட்கள்ல மறுத்தாலும் கடைசி வருஷத்துல ரதியும் என்ன உயிருக்குயிரா நேசிக்கத் தொடங்கிட்டா.''

...

''அவளும் நானும் எந்த அளவுக்குப் பழகியிருக்கோம், எப்படியெல்லாம் சேந்து சுத்தியிருக்கோங்கறது எங்களுக்கு மட்டும் தான் தெரியும்.''



...

''முக்கியமா எங்க காதல வெளிய யாருக்கும் தெரியாமல் பாத்துக்கிட்டோம். குறிப்பா ரதி.''

''ஏன்னா ரதி அவங்க வீட்டுக்கு ரொம்பவும் பயப்படுவா. அதுலயும் பாட்டி தாத்தாவுக்குக் கெட்ட பேர் வாங்கித் தரவும் அப்பாவுக்குத் துரோகம் பண்ணவும் என்னால எப்பவுமே முடியாதுன்னு சொல்லிட்டே இருப்பா.''

...

''அதனால படிப்பு முடிஞ்சதும் அப்பாவ இங்க கூட்டிட்டு வர்றேன். அப்ப நீங்க உங்க அம்மா அப்பாவோட எங்க வீட்டுக்கு வந்து பேசுங்கன்னும் சொல்லிட்டே இருந்தா.''

...

''அந்த நாளுக்காக நாங்க ரெண்டு பேரும் எவ்வளவு ஆவலாகக் காத்துட்டிருந்தோங்கறதும் எங்களுக்குத் தான் தெரியும்.''

...

''ஆனா அதுக்கு முன்னாடியே கொஞ்சமும் எதிரே பாக்காததெல்லாம் ஏதேதோ நடந்து போச்சு.''

...

''ரெண்டு நாளைக்கு முன்னாடி தான் ஊர்ல வெச்சு ரதிக்குக் கல்யாணம் முடிஞ்சிருச்சுங்கற விஷயமே எனக்குத் தெரிஞ்சது.''

...

''அந்த வினாடில வாழ்க்கையே முடிஞ்சு போய்ட்ட மாதிரி இடிஞ்சு, வெறுத்துப் போய் உக்காந்துட்டேன்.''

...

''என் மனசுல ஆசைய வளத்து விட்டுட்டு ரதி செஞ்சிருக்கற துரோகத்தப் பாத்தீங்களா ஸார்...''

...

''சபாஷ், பிரமாதமா நடிக்கற.''

அவ்வளவு நேரமும் பேசாமல் தான் சொல்வதையெல்லாம் கேட்டபடி அமர்ந்திருந்த குணசீலன் திடீரென்று இப்படிச் சொல்வானென்று அந்த ராஜேஷ் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை என்பது அவனுடைய முகத்திலேயே தெரிந்தது.

''ஸார்! நான் சொன்னதெல்லாம் நூத்துக்கு இருநூறு சதவிகிதம் உண்மை ஸார்.''

''சரிதான். நம்பிக்கிட்டேன்.''

குணசீலனின் குரலில் தெரிந்த ஏளனத்தில் உடனே அவனுடைய பாக்கெட்டிலிருந்து பர்ஸை வெளியே எடுத்திருந்தான் ராஜேஷ்.

அடுத்த வினாடியே அதிலிருந்த ரதியின் போட்டோவையும் வெளியே எடுத்திருந்தவன், ''பாருங்க ஸார், இதப் பாத்ததுக்கப்புறமாவது நம்புவீங்கன்னு நினைக்கிறேன்!'' என்று காட்டினான்.

''நீ ஏன் இதத் திருடியிருக்கக் கூடாது?''

''ஸார்! இது ரதியே தன் கையால எனக்குக் குடுத்தது. இங்க பாருங்க...'' என்று போட்டோவைத் திருப்பிக் காட்டினான்.

''வித் லவ் ரதி'' என்று மனைவியின் கையெழுத்து அதில் இருப்பது தெரிந்தது.

அது மனைவியின் கையெழுத்து தான் என்பதிலும் அவனுக்குத் துளியும் சந்தேகமும் இருக்கவில்லை.

''என்ன ஸார் இப்பவாவது நம்பறீங்களா?''

''இப்ப என்ன பதில் வேணும், நான் என்ன சொல்லணும்னு எதிர்பாக்கற?''



''என் நிலையப் பாத்தா உங்களுக்கே பாவமாத் தெரியலையா ஸார்?''

''என்னோட உண்மையான பதில. அதாவது எம் மனசுல இருக்கறத நான் அப்படியே சொல்லட்டுமா?''

''இந்த மாதிரி சுண்டக்கா விஷயத்துக்கெல்லாம் நான் என் மனைவிய சந்தேகப்பட மாட்டேன். ஏன்னா எனக்கு ரதிமேல நூறு சதவிகிதம் நம்பிக்கையிருக்கு. அதனால இனிமேல் இந்த மாதிரியான முயற்சிகளையெல்லாம் பேசாம விட்டுடு.''

''நான் சொல்றதெல்லாம் உண்ம ஸார். தயவு செஞ்சு என்ன நம்புங்க!'' என்ற அந்த ராஜேஷின் கண்கள் இப்பொழுது கலங்கி விட்டிருந்தது தெரிந்தது.

சில வினாடிகள் எடுத்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டவன், பிறகு, ''ஸாரி ஸார்!'' என்று நிமிர்ந்தான்.

''சரி. இறங்கிக்கோ. நான் கிளம்பணும்.''

''அப்ப நீங்க என்ன சுத்தமாவே நம்பல. அப்பிடித்தான ஸார்?''

''நான் சொன்னது காதுல விழுந்திருக்கும்னு நினைக்கறேன்...''

''தயவு செஞ்சு ஒரே நிமிஷம் இருங்க ஸார்!'' என்று தனது மொபைலைக் கையிலெடுத்திருந்தவன் அதனுடைய கீபேட் லாக்கை விடுவித்தான்.

''நீங்களே பாருங்க ஸார். ரதி அதாவது உங்க மனைவி நேத்து காலைல எனக்குக் கூப்புட்டுப் பேசியிருக்காங்க!'' என்று காட்டினான்.

அவன் சொல்வது போலவே அது தனது மனைவியிடமிருந்து வந்திருந்த அழைப்பு தான் என்பது புரிந்தாலும்,

அதைத் துளியும் வெளிக் காட்டிக் கொள்ளாமல், ''இப்ப இறங்கப் போறியா இல்லையா?'' என்று எரிச்சலுடன் கேட்டான்.

''மனசுக்குள்ள என்ன வெச்சுக்கிட்டு, உடம்பால உங்களத் தீண்டறவள...''

கோபத்தில் கண்கள் சிவந்து முகம் இறுகிப் போய் விட்டிருந்த குணசீலனைப் பார்த்த ராஜேஷ் பயத்தில் சில வினாடிகள் நடுங்கிக் கூடப் போய் விட்டிருந்தான்.

ஆனாலும் அதைச் சற்றும் வெளிக் காட்டிக் கொள் ளாமல் தொடர்ந்து பேசினான்.

''வேணும்னா நீங்க உங்க மனைவி கிட்டயே கேட்டுப் பாருங்க. ஆனாலும் இந்த மாதிரி விஷயத்த யாரும் உடனே ஒத்துக்க மாட்டாங்கன்றத உங்களுக்கு நான் சொல்லித் தெரிய வேண்டியதில்ல.

''இப்பக் கூட ரதிய மறக்க முடியாததால தான் பேச வந்திருக்கேனே தவிர, அவளப் பழி வாங்கணுங்கற எண்ணத்துனாலயோ அல்லது அவ மேல இருக்கற கோபத்துனாலயோ இல்லங்கறத தயவு செஞ்சு நீங்க புரிஞ்சுக்கணும்.

''நிச்சயம் ஒரு நாள் அவள முழுமையா மறந்துட்டு வேற வாழ்க்கைய ஆரம்பிப்பேங்கற நம்பிக்க எனக்கும் நிறைய இருக்கு.''

இறுகிய முகத்துடன் வாட்சைப் பார்த்த குணசீலனின் கை முஷ்டிகளும் இறுகுவது தெரிய, கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கிக் கொண்டான் அந்த ராஜேஷ்.

''ஏதோ எம் மனசுக்குள்ள இருந்ததப் பகிந்துக்கிட் டேன். இப்ப எம் மனசு எவ்வளவோ ஃப்ரீயா இருக்கு!'' என்றவன், ''நீங்களும் இதையெல்லாம் மனசுக்குள்ள போட்டுக் குழப்பிக்காதீங்க!'' என்று நகர்ந்தான்.



அந்த வினாடியே தன்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறான், ராஸ்கல் என்று காரை ஸ்டார்ட் செய்து விட்டிருந்தான் குணசீலன்.

கையை நீட்டுமளவிற்குக் கோபம் வந்திருந்தாலும், சூழ்நிலையை மனதில் கொண்டு தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த மாதிரி நாக்கூசாமல் வந்து பொய் சொல்கிற வர்கள் இன்னும் எதைச் செய்யவும் தயங்க மாட்டார்கள் என்பதும் அவன் அறியாததல்லவே.

ஒருவேளை அவன் சொல்வதில் உண்மை இருந்தால் என்று ஆயிரத்தில் ஒரு பங்காகக் கூட குணசீலனால் நினைத்துப் பார்க்க முடிந்திருக்கவில்லை.

என்ன? தான் ஏதாவது பேசி அல்லது கோபத்தில் கையை ஏதாவது நீட்டி விட்டால் பின்னர் இது போன்ற கிராமங்களில் அது தீப் போல ஒன்றுக்கு இரண்டாகப் பரவி விடுமே என்ற ஒரு காரணத்திற்காக மட்டுமே தன்னை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு வந்திருந் தான் குணசீலன்.

சொல்வதையெல்லாம் சொல்லிவிட்டுச் சொன்னதை அவனும் மறந்து விடுகிறானாம். தானும் மறந்து விட வேண்டுமாமே என்று நினைத்ததில் சிரிப்புத் தான் வந்தது குணசீலனுக்கு. கூடவே கோபமும். மனைவியைப் போல அந்த மாதிரி தியேட்டருக்கெல்லாம் செல்லுமள விற்கு வெகுளியாகவும், முட்டாளாகவும் இருந்தால் இது என்ன, இன்னும் கூட என்ன வேண்டுமானாலும் சொல் வார்களென்று எரிச்சலுடன் நினைத்துக் கொண்டான்.

''வாடா, என்ன ரொம்ப நேரமாப் பேசிட்டிருந்த போல?''

''ம்கூம், சொல்லிட்டிருந்தேன்.''

''அடி, உதை ஏதும் கிடைச்சதா? பின்ன எப்படிக் கிடைக்காம...''

''போதும்டா. உண்மையப் பேசினா யாருக்கும் பயப் பட வேண்டியதில்ல!'' என்ற ராஜேஷைப் புன்னகை யுடன் பார்த்தான் அவனுடைய நண்பன்.

''போதும்பா போதும், எது உண்மை எது பொய்... மத்தவங்களுக்கு வேணும்னா தெரியாம இருக்கலாம். எனக்குத் தெரியாதா என்ன?''

''சரிசரி. விடு.''

''ஆமா, அப்படி என்னதான் சொன்ன?''

நண்பன் கேட்க, அனைத்தையும் பிட்டுப் பிட்டு வைத்தான் ராஜேஷ்.

''நம்பிட்டானா?''

''தெரியல.''

''என்னடா இப்படிச் சொல்ற?''

''ஆனாலும் அவன் பிரச்சன பண்ணப் போறது உறுதி.''

''எதுக்குடா உனக்கிந்த வேண்டாத வேலையெல்லாம்?''

''தான் என்னவோ உலகத்துலயே இல்லாத அழகிங்கற மாதிரி எப்படியெல்லாம் திமிரா நடந்துக்கிட்டா! அதுக்கு வெச்சேன் வேட்டு.''

''அது சரி, அவகிட்ட உன் பருப்பு வேகலையேங்கற ஆதங்கம் உனக்கு.''

''சொல்லமாட்ட, நீ மட்டும் எப்படியாம், எப்பவும் அவளுக்கு ரூட்டு விட்டுட்டுத்தான இருந்த.''



''ஆனா அவ யாருக்கும் மசியலையே மச்சி. அதோட முதல்ல ஒரே ஒரு நாளாச்சும் அந்த ரதி பசங்க கூட நின்னாவது பேசியிருப்பாளா என்ன?''

''எல்லாம் திமிர்.''

''ஏன், தேவையில்லாத பிரச்சனைகள்ல ஏதும் தான் மாட்டிக்கக் கூடாதுங்கற தற்காப்பு உணர்ச்சி கூடக் கார ணமா இருக்கலாம் இல்லையா? ஏன், ரதி விஷயத்துல அதுதான் உண்மையும் கூட.''

''அடப் போடா.''

''அதுலயும் ரதி ரொம்பவும் பயந்த சுபாவமுள்ள பொண்ணு வேற.''

''யாரு அவளா, பசங்ககிட்ட தான் அவ அந்த மாதிரி யெல்லாம் நடிப்பு. ஆனா பொண்ணுங்ககிட்டப் போய்ப் பாரு. ஊர்ல இல்லாத வாய். அது மட்டுமா...''

''டேய் போதும்டா. அப்படி இருந்தா மனசுக்குள்ள தப்பான எண்ணம் எதுவும் இல்லேன்னு தான் அர்த்தம். அப்படியில்லாம குனிஞ்ச தல கூட நிமிராமப் போறாங் களே சில பொண்ணுங்க, அப்படிக் கமுக்கமாப் போற வங்களத் தான் சுத்தமா நம்ப முடியாது.''

''அவளுக்காக ரொம்பவும் தான் வழியாதடா. சகிக்கல.''

''சரிதான். எங்கிட்டிருந்து வாங்கின ரதியோட போட் டோவக் குடு. தங்கச்சிக்குத் தெரியாம எடுத்துட்டு வந்திருக்கேன். அவளுக்குத் தெரியாமலே கொண்டு போய்த் திரும்பவும் வெச்சுட்றேன்.''

''தர முடியாது.''

''இனி உனக்கு எதுக்குடா அந்த போட்டோ?''

''இருக்கட்டும். அப்புறமாத் தர்றேன்.''

''ஏன் இன்னும் யார்கிட்டயெல்லாம் போய்ப் புளுகப் போற?''

''ஏன், எனக்கென்ன வேற வேலையே இல்லையா? ஒருவேளை அவசியப்பட்டா... அதான் இருக்கட்டும்னு சொல்றேன்.''

''ஒண்ணும் அவசியப்படாது. குடு.''

''சரிதான். இன்னும் ரெண்டு மூணு நாள்ல குடுத்துட்றேன்.''

''ஆனாலும் நீ இப்படி நம்பிக்க துரோகம் பண்ணியிருக்கக் கூடாதுடா. எத்தனையோ பேர் இருக்க உங்கிட்ட தான ரிசல்ட் என்னாச்சுன்னு வெள்ள மனசாக் கூப்புட்டுக் கேட்டா.''

''அது சரிதான். நாந்தான இளிச்சவாயன், என்ன பேசினாலும், எப்படிப் பேசினாலும் சிரிச்சுக்கிட்டே உதவி செய்வேன்.''

''அடப்போடா. நீ ரதிக்கு முன்னாடியே தப்பான எண்ணத்தோட பேசிப் பழகினாக் கூட அதப் புரிஞ்சுக்கத் தெரியாத வெகுளிடா அவ. அப்படியிருக்கும்போது நீ இப்படி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிப் பாவம் அவ வாழ்க்கைல பிரச்சனைய உண்டு பண்ணியிருக்கியே, இது நியாயமா?''

''எங்கடா, அந்தாளு தான் நான் சொன்னத நம்பின மாதிரியே தெரியலையே.''

''ஓ, சரிதான். இன்னொரு தடவ போய் நம்பற மாதிரி சொல்லிட்டு வாடா, போ. இல்லாதத செஞ்சுட்டுக் கவல கூடப் படுவான் போலிருக்கு.''



''பின்ன?''

''நீ திருந்த மாட்டடா.''

''தேங்க்ஸ்.''

''நாளைக்கு ஏதாவது பிரச்சனைன்னு வந்தாலும் துணைக்கு நான் வர மாட்டேன். அதயும் இப்பவே சொல்லிட்றேன்.''

''இப்படிக் கால வாரிவிடப் பாக்கறையேடா. இது நியாயமா?''

''போதும்டா. எங்கிட்ட உன் நடிப்பெல்லாம் வேலைக்காகாது.''

''ரொம்பவும்தான் மனிதாபிமானம்.''

''யாருக்கு, தப்புக்குத் துணை போகக் கூடாதுன்னு பாக்கறேன். அவ்வளவுதான்.''

''சரிதான். உங்கிட்ட சொல்றதுக்கென்ன மச்சி, நான் நாளைக்கு வேலைக்காக வெளியூர் போறேன்டா.''

''எங்க?''

''பாம்பே.''

''அப்படியென்ன வேலடா அங்க உனக்கு? ஓ உன் சொந்தக்காரங்க கூட யாரோ...''

''ஆமாம், மாமாவும் மாமா பையனும் ரொம்ப வருஷங்களாவே அங்கதான் இருக்காங்க. மாமா பையன் வேல செய்யற கம்பெனில வேகன்ஸி இருக்காம். அதான்...''

''சரிதான். அப்படியாவது பிரச்சனைல மாட்டாம பிழைச்சுப் போ.''

''ஆனாலும் நீ இவ்வளவு பயந்தாங்கொள்ளியா இருக்கக் கூடாதுடா.''

நண்பர்கள் இருவரும் மேலும் ஒரு மணி நேரமும் கூடப் பேசிக் கொண்டிருந்து விட்டு, அதற்குப் பிறகே வீட்டிற்குக் கிளம்பினார்கள்.

மதிய உணவிற்காக ஆண்கள் மூவரும் வந்து அமர்ந்திருக்க, தனது அத்தையுடன் சேர்ந்து தானும் பரிமாறப் போனாள் ரதி.

ஆனால் அதற்குள் பாட்டி மங்களம் வந்து அவர்கள் இருவரையும் கூட சாப்பிட அமர வைத்திருந்தார்.

''அப்படியே நீங்களும் உக்காருங்கமா. போட்டுச் சாப்புட்டுக்கலாம்.''

சுசீலா அழைக்க, ''ம்கூம். என் கையாலயே எல்லாருக்கும் பரிமாறினாதான் திருப்தி!'' என்று மறுத்து விட்டிருந்தார் மங்களம்.

''அங்க மாப்ளைக்கு சாப்பாடு...''

பாட்டி கேட்க, ''வெளிய சாப்புட்டுக்குவாம்மா. இல்லன்னாலும் குணா தானே எதையாவது செஞ்சுக்குவான். பிரச்சனையில்ல!'' என்றார் சுசீலா.

''ஓ. அப்ப வேற யார் அத்தை பிரச்சன?''

''வாயாடி, பேசாம சாப்புடு.''

''ஏன், மருமக கேக்கறாளே. பதில் சொல்லு.''

கணவன் கேட்க, ''அது எதுக்குங்க பிரச்சன?'' என்றார் சுசீலா.

''அப்ப நீங்க சொல்லப் போற பதில் அந்த மாதிரி பிரச்சனையானது இல்லையா அத்தை?''

''ஆமாம் ரதிம்மா. என்னதான் உன் அருமை அத்தை மறைமுகமா ஏதோ சொல்றாங்க?'' என்றார் சுந்தரமூர்த்தி.



''அப்படின்னு அவங்க கற்பனை பண்ணிக்கிட்டா அதுக்கெல்லாம் நாம என்ன பண்ண முடியும். இல்லையா ரதிம்மா?''

''என் வீட்டுக்காரர் கிளம்பிட்டாரேன்னு நான் இப்ப தான் ரொம்பவும் ஃபீல் பண்றேன்!'' என்று ரதி சோகத்துடன் சொல்ல, சுந்தரமூர்த்தி, சுசீலா உட்பட அனைவருமே சிரித்து விட்டிருந்தனர்.

''ஆனாலும் என் மருமக ரொம்பவும் அறிவு. யார்யார் கிட்ட எப்படி நடந்துக்கணுமோ அப்படிப் பாத்துப் பாத்து நடந்துக்குவாளாக்கும்!'' என்று மனைவி மெச்சிக் கொள்ள,

''சரிதான். இல்லன்னா உங்கிட்ட காலம் போட்றது கஷ்டங்கறது ரதிக்கும் இத்தன நாள்ல புரிஞ்சிருக்காதா என்ன?'' என்றார் சுந்தரமூர்த்தி.

''என்ன மாமா நீங்க, அத்தை ஒண்ணும் அந்த அளவுக்கெல்லாம் இல்ல...''

''ஓ, அத விடக் கொஞ்சம் குறைவு தாங்கறியா?''

''ம்கூம், நானெல்லாம் சாப்புடும் போது அவ்வளவாப் பேச மாட்டேனாக்கும்!'' என்று ரதி சொல்ல,

''அதுவும் சரிதான். அவளுக்குத் தகுந்த மாதிரி பாத்துப் பாத்து நடந்துக்கறதை விடவும் கூட சில நேரங்கள்ல பேசாம இருந்துட்றது ரொம்பவும் பாதுகாப்புத் தான்!'' என்றார் சுந்தரமூர்த்தி.

தங்களுடைய பேத்தி அவளுடைய அத்தை மாமாவுடன் துளியும் பயமில்லாமல் சரிக்குச் சரி பேசுவதை மங்களமும் கருணாகரனும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

''ரதி எப்பவுமே கொஞ்சம் வாய்தான். ஆனாலும் ரொம்ப நல்ல பொண்ணு!'' என்று மங்களம் சொல்ல, ''அத நீங்க சொல்ல வேற செய்யணுமாம்மா?'' என்றாள் சுசீலா.

''அதுலயும் உங்கள மாதிரி அத்தையும் மாமாவும், மாப்பிள்ள மாதிரி ஒரு கணவனும் கிடைக்க ரதி போன ஜென்மத்துல என்ன தவம் செஞ்சாளோ!'' என்று உணர்ந்து சொன்னார் ரகுநாத்.

''ஒண்ணுமே இல்லாத விஷயத்த ரொம்பவும் மிகைப் படுத்தறீங்களோன்னு நினைக்கத் தோணுதுண்ணா!'' என்ற சுசீலா, ''அப்படிப் பாத்தா இப்படியொரு மருமக கிடைக்க நாங்களும் தான் தவம் செஞ்சிருக்கணும்!'' என்றார்.

பெரியவர்கள் அனைவரும் தங்களுக்குள் இதே பாணியில் பேசிக் கொண்டு போக, அந்த இடத்தில் ரதிக்குத் தான் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

ஆனால் அதைத் துளியும் வெளிக் காட்டிக் கொள்ளாமல், இயல்பான புன்னகையுடன் முகத்தை வைத்துக் கொண்டபடி அமர்ந்திருந்தாள்.



# 24

மறுநாள் காலையில் தனது அத்தையும், மாமாவும் ஊருக்குக் கிளம்ப, தானும் அவர்களுடன் கிளம்பி விட்டிருந்தாள் ரதி.



காலையில் ஏழு மணிக்கே டிபனை முடித்துக் கொண்டு அனைவரிடமும் சொல்லிக் கொண்டு மூவரும் கிளம்பி விட்டிருக்க, முதல் நாள் வேலையாட்களை விட்டுத் தானே அருகில் இருந்து சுத்தமான வீட்டு நெய்யில் தயார் செய்யப்பட்டிருந்த பலகாரங்களைப் பெரிய பெரிய சம்படங்களில் போட்டுக் கொண்டு வந்து காரில் வைத்திருந்தார் மங்களம்.

திருமணமானதற்குப் பிறகு அதற்கு முன் எப்பொழுதும் இல்லாத வகையாகக் கணவனை உடனே பார்த்தாக வேண்டும் போல, அவனுக்காக மனதிற்குள் ஏங்கினாள் ரதி.

அதனாலோ என்னவோ, வேண்டுமானால் இரண்டு நாட்களில் நானும் சென்னைக்கு வரப் போகிறேன், அப்பொழுது சேர்ந்து செல்லலாம், இரு என்று தந்தை சொன்னது கூடக் காதுகளுக்குள் சென்றதோடு சரி.

தனது அத்தை மாமாவுடன் ரதி சென்னை வீடு வந்து சேர்ந்தபோது மதிய நேரமாகியிருந்தது.

பருப்பையும் அரிசியையும் குக்கரில் வைத்துவிட்டு மேல் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்த அத்தைக்குத் தானும் சென்று உதவினாள்.

''ரதிம்மா, நீ சட்னிக்குத் தேங்காயத் துருவிக் குடு.''

''சரி அத்தை!'' என்றவள் சில வினாடிகளில் அந்த வேலையை முடித்தாள்.

''சரிமா, இனி நான் சட்னிய அரைச்சு எடுத்துடறேன். நீ ஒரு வேலை செய்.''

''என்ன அத்தை, சொல்லுங்க?''

''உன் வீட்டுக்காரருக்கு போன் பண்ணிப்பாரு, முடிஞ்சா லஞ்சுக்கு வரச் சொல்லு.''

''சரி அத்தை,'' என்றவள் சில கை வேலைகளை முடித்து விட்டுக் கணவனுக்கு அழைத்தாள்.

சில வினாடிகள் பேசியவள் மொபைலை வைத்து விட்டு வந்தாள்.

''என்னமா, பேசிட்டயா?''

''அவரு மீட்டிங்ல இருக்காராம் அத்தை. அவர் கூடப் பேச முடியல.''

''சரிதான். மாமாவ அழைச்சுட்டு வா, ரதிம்மா. நாம சாப்புடலாம்.''

அதே நேரம், ''நான் வந்துட்டேன்!'' என்று சுந்தரமூர்த்தி வந்து சாப்பிட அமர்ந்திருக்க, தனது அத்தையுடன் சேர்ந்து அனைத்தையும் எடுத்து வைத்துவிட்டு ரதி தானும் அவருடன் அமர்ந்து கொண்டாள்.

''நீங்களும் கிளம்பணுமா ஆபீஸ்க்கு?''

மனைவி கேட்க, ''ஏன், எனக்கு ஏதும் வேலையிருக்கா?'' என்று கேட்டார் சுந்தரமூர்த்தி.

''இல்லைங்க, சும்மா தான் கேக்கறேன். குணா ஆபீஸ்ல பிஸியா இருக்கான் போல. அதான் நீங்களும் போகணுமான்னு கேக்கறேன்.''

''ஆமாம்மா. ஒரு குட்டித் தூக்கத்துக்கப்புறம் கிளம்பணும். ஒரேயடியா ஏழெட்டு மணி நேரம் டிரைவ் பண்ணினதால ஒரு மாதிரியா இருக்கு.''

''அதான, நான் அத மறந்தே போனேன் பாருங்க. இன்னைக்கு ஒரு நாளைக்கு வேலை எல்லாத்தையும் குணாவே பாத்துக்கட்டும். நீங்க ரெஸ்ட் எடுங்க.''



''ம்கூம், அந்த அளவுக்கெல்லாம் டயர்ட் இல்ல. ஒரு தூக்கம் போதும். ப்ரஷ் ஆயிடுவேன்.''

''என்ன ரதிம்மா, இன்னும் கொஞ்சம் வெச்சு சாப்புடு. எதுக்குக் கொறிச்சுட்டிருக்க?'' என்ற சுசீலா தனது மருமகளுக்கு மேலும் சிறிது எடுத்து வைத்துப் பரிமாற, ''போதும் அத்தை!'' என்று தடுத்து விட்டுச் சாப்பிடத் தொடங்கினாள்.

மாலை நான்கு மணியிலிருந்தே தனது கணவனை எதிர்பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள் ரதி.

வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தவள் பாதையில் ஏதாவது வண்டிகள் சென்றாலும் கூட ஓடி வந்து வாசலைப் பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பினாள்.

இப்படியே சில முறை நடந்து விட்டிருக்க, மருமகளைப் புன்னகையுடன் பார்த்தார் சுசீலா.

அப்பொழுது தான் தனது அத்தையின் கவனத்திலும் தனது செய்கை பட்டிருந்ததை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

''குணா வரட்டும் இன்னைக்கு, ஒரு வழி பண்ணிடலாம்!'' என்ற அத்தையை அசடு வழியப் பார்த்தாள்.

''போனாவது பேசினாரா மிஸ்டர் குணசீலன், இல்ல அதுவும் இல்லையா?''

..............

''என்னம்மா, எங்கூடவெல்லாம் சொல்லமாட்டியா?''

''அச்சச்சோ! அப்படியெல்லாம் இல்ல அத்தை.''

''அது சரிதான். குணா எப்பவுமே பிஸினஸ்னு வந்துட்டா எல்லாத்தையும் மறந்துடுவாம்மா. ஆனா உன்ன

மறந்திருக்க மாட்டான். மறக்க நீயும் விட்டுடாத. மிரட்டி வெச்சுடு.''

...............

''என்ன மேடம், நான் பாட்டுக்குப் பேசிட்டே இருக்கேன். நீங்க பாட்டுக்கு எதுவுமே சொல்ல மாட்டேன் றீங்க?''

''குணா எப்பவுமே என்ன மறக்க மாட்டார் அத்தை. ஏன், இப்பக்கூட என்னத்தான் நினைச்சுட்டிருப்பார். இன்னும் வீட்டுக்குப் போக முடியலையேன்னு தவிச்சுட்டிருப்பார்.''

மருமகளின் பதிலில் என்ன முயன்றும் சுசீலாவால் புன்னகையை அடக்கிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

''அது சரிதான். எங்ககிட்ட மாதிரியேவா உங்கிட்டயும் நடந்துக்குவான்? ஆனாலும்... நிஜமாவே தான் சொல்றியா இல்ல சும்மா மனசத் தேத்திக்கறதுக்காக நீயாவே அப்படி சொல்லிக்கறையா?''

சரியாக அதே நேரம், ''என்ன அத்தையும், மருமகளும் மும்முரமாப் பேசிட்டிருக்கீங்க போல?'' என்று சுந்தரமூர்த்தி உள்ளே வர, சில வினாடிகளில் தந்தையைத் தொடர்ந்து தானும் உள்ளே வந்திருந்தான் குணசீலன்.

''ரதி!''

தன்னை அத்தை அழைக்கும் குரல் கேட்க, ''என்ன அத்தை?'' என்று ஹாலுக்கு வந்தாள் ரதி.

''உன் வீட்டுக்காரர் வந்தாச்சு. வா.''

ஏன், என்னாச்சு என்பதைப் போல குணசீலன் தாயையும் மனைவியையும் பார்க்க, விஷயத்தைப் போட்டு உடைத்தே விட்டிருந்தார் சுசீலா.



''சாயங்காலம் நாலு மணில இருந்து உன் வீட்டுக்காரம்மா குறைஞ்சது ஒரு ஏழெட்டு முறையாவது வாசலப் பாத்து ஏமாந்து போயிருப்பா!'' என்றார்.

''எதுக்கு?''

''எதுக்கா, எல்லாம் உன்னப் பாக்கத்தான்.''

கணவனின் பார்வையில் ரதியின் முகம் சிவந்து விட்டிருக்க, அவள் அதை மறைக்கக் குனிந்து கொண்டு விட்டிருந்தாள்.

''ம், அவனாவது குடுத்து வெச்சிருக்கானேன்னு சந்தோஷப்பட வேண்டியது தான்!'' என்று தனது கணவன் சொல்ல, ''ஏன் நானும் கூடத் தான்...'' என்று ஏதோ சொல்ல வந்தார் சுசீலா.

''எங்கடா வந்துடுவானோன்னு பயந்துட்டிருப்ப, இல்லையா?'' என்று கேட்டார் சுந்தரமூர்த்தி.

''அச்சச்சோ! என்னங்க நீங்க?'' என்று சுசீலா சொல்ல, சுந்தரமூர்த்தியின் வார்த்தைகளில் சிறியவர்கள் இருவருமே சிரித்து விட்டிருந்தனர்.

''சாப்பிட ஏதாவது கிடைக்குமா?''

குணசீலன் கேட்க, ''ரதிம்மா, எல்லாத்தையும் எடுத்து வை. வர்றேன்!'' என்றார் சுசீலா.

சில நிமிடங்களில் அனைவரும் சாப்பிட வர, சுசீலா பரிமாறி விட்டுப் பிறகு தானும் அமர்ந்து கொண்டார்.

''போன் கூடப் பேச முடியாத அளவுக்குக் காலையிலிருந்து நீ பிஸியா குணா?''

''இல்லமா. ரெண்டு தடவ பேச ட்ரை பண்ணினேன். ஆனா அதுக்குள்ள வேற வேலை வந்துடுச்சு.''

''நினைச்சு வந்த வேலை முடிஞ்சதா கண்ணா?''

மனைவி, மகனிடம் கேட்க, ''அதெல்லாம் மருமக வந்த நேரம் ரொம்பப் பெரிய ஆடர் ஒன்னு கிடைச்சிருக்கு. அத மட்டும் நல்ல விதமா முடிச்சுக் குடுத்தா நமக்கு வருஷம் முழுக்க வர்ற லாபம் இந்த ஒரு ஆடர்லயே வந்துடும்!'' என்றார் சுந்தரமூர்த்தி.

''ஓ, அந்த ஆடர் கையெழுத்தாயிடுச்சா?''

''ஆமாம்மா. அது ஒரு பெரிய சேலன்ஜிங் ஜாப்னே சொல்லலாம். இனி ஃப்யூச்சர்ல எத்தனையோ நாட்கள் தூக்கத்த இழக்க வேண்டி வரலாம். ஆனா அத சக்ஸஸ் ஃபுல்லா பண்ணிட்டா மத்த வேலைகள் சுலபமாயிடும். ஏன், நம்ம நிலைமையே அப்படியே மேல போயிடும்.''

''உன் திறமைக்கு நீ அதையெல்லாம் ரொம்பப் பிரமாதமா பண்ணி முடிச்சுடுவ கண்ணா.''

''ரொம்பவும் நம்பிக்கை தான்மா.''

''என்ன கண்ணா, இதுக்குள்ள எழுந்துட்ட?''

''குளிக்கணும், ஒரே வியர்வை!'' என்ற குணசீலன் தங்களுடைய அறைக்குச் சென்றான்.

சாப்பிட்டு முடித்ததும் ஒதுக்கி வைப்பதில் தனது அத்தைக்கு உதவிய ரதி, பிறகு தனக்கும் கணவனுக்கு மாகப் பாலை எடுத்துக் கொண்டு மேலே தங்களுடைய அறைக்கு வந்திருந்தாள்.

குளித்து விட்டுக் கணவன் குளியலறையிலிருந்து வெளியே வருவது தெரிந்தது.

''பால் எடுத்துக்கோங்க.''



''கொஞ்சம் போகட்டும்மா, வை.''

''ரொம்பவும் வேலையா?''

''அதெல்லாம் இல்லையே.''

''பின்ன ரொம்ப டயர்டாத் தெரியறீங்க?'' என்று கேட்டுக் கொண்டே கட்டிலில் அமர்ந்தாள் ரதி.

''அப்படியா தெரியறேன்.''

''ம்.''

மனைவியின் அருகில் தானும் கட்டிலில் அமர்ந்தான் குணசீலன்.

''என்ன ரொம்ப நேரமா எதிர்பாத்தியா?''

''............''

''என்னடா?''

''ம்.''

''பால எடு!'' என்று கணவன் கேட்க, ஒரு டம்ளரை எடுத்து அவனுக்குக் கொடுத்துவிட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டாள்.

''நேத்து காலைல வரும்போது உன் க்ளாஸ் மேட்டப் பாத்தேம்மா.''

''யாரு?''

''பேரு என்னவோ சொன்னாரே, ம் ராஜேஷ்.''

''ஓ, அவனா?''

''ஏன்?''

''இல்ல, ராஜேசும் அதே ஊர் தான். ஸ்கூலிங்ல இருந்தே அவன் எங்கூடத்தான் படிக்கறான். ஆள் கிடைச்சாப்

போதும். வளவளன்னு பேசிட்டே இருப்பான். உங்களை யும் அறுத்திருப்பான்.''

''சரிதான்.''

''அப்புறம் வேற யாரையெல்லாம் பாத்தீங்க?''

''அவன் மட்டும் தான். நேத்துகூட உங்கிட்டப் பேசி னதா சொன்னான்!'' என்று விட்டு, மனைவியின் முகத்தை அவளறியாமல் ஆராய்ந்தான் குணசீலன்.

''ஆமாம் குணா. எதுன்னாலும் தெரிஞ்சு வெச்சுட் டிருப்பான். அதான் நானும் ரிசல்ட்டப் பத்தி கேக்கற துக்காக நேத்து காலைல அவனுக்கு போன் பண்ணிப் பேசினேன்,'' என்ற மனைவியின் பதில் வெகு யதார்த்த மாக இருந்ததோடு, முகத்திலும் எந்தவொரு வித்தியாச மும் தெரியாததில், இப்பொழுது முழுமையாக மனம் நிம்மதியடைந்திருந்தான் குணசீலன்.

''என்ன குணா?''

''அப்புறம் நேத்து எங்கெல்லாம் போன? உன் ஃப்ரண்ட்ஸ் வேற யாரையெல்லாம் பாத்த?''

''நாங்க எல்லாரும் எங்க குலதெய்வக் கோவிலுக்குப் போய்ட்டு வந்தோம் குணா. அப்புறம் சில ரிலேட்டிவ்ஸ் வீட்டுக்கு. அவ்வளவுதான்.''

''ஓ.''

''ஃப்ரண்ட்ஸ் யாரையும் பாக்க முடியல. அதுதான் ஒரு சின்ன ஆதங்கம்.''

''சரி விடு. நெக்ஸ்ட் டைம் போகும்போது எல்லாத் தையும் பாத்துடலாம்.''



''அது தெரியாது. இன்னும் ரொம்ப நாள் கழிச்சுப் போகும்போது.''

''ஏன் நாம நினைச்சா அடுத்த வாரமே கூடப் போக லாம். என்ன பாக்கற?''

''சரிதான் குணா.''

''என்னமா, ஏன் சிரிக்கற?''

''இல்ல, நீங்க சொல்றது நடக்கக் கூடிய காரியமா என்ன?''

''ஏன் நடக்காது. உனக்குப் போகணும்னு இருந்தா சொல்லு. நாளைக்கே கூட நான் வரத் தயார்.''

...............

''என்னடா?''

''சும்மா சொல்லக்கூடாது. அப்புறம் நான் நிஜமாவே கேட்டுட்டா ஃபீல் பண்ணுவீங்க.''

''நானா, ம்கூம். உனக்காக எத செய்யவும் நான் எப்ப வும் தயாராக்கும்.''

அப்படிச் சொன்ன கணவனைக் காதலுடன் நிமிர்ந்து பார்த்தாள் ரதி.

''என்னடா?''

''நான் உண்மையிலேயே ரொம்ப லக்கி குணா.''

''ஓ.''

ரதி மேலும் கணவனை நெருங்கி அமர்ந்திருக்க, ''அப் புறம் ஊர்ல உனக்கு ஃப்ரண்ட்ஸ் நிறைய இருக்காங் களா?'' என்று கேட்டான்.

மனைவியைப் பற்றி நிறையத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் குணசீலனுக்கு. மற்றப்படி அவன்

விசாரித்ததில் வேறு எந்த உட்பொருளும் இருக்க வில்லை.

''ம், நிறைய இருக்காங்க.''

''கேர்ள் ஃப்ரண்ட்ஸா இல்ல பாய் ஃப்ரண்ட்ஸா?''

''என்ன குணா நீங்க, இப்பப் போய் ஏதேதோ கேட்டுட் டிருக்கீங்க?''

''ஏன், இப்ப அப்படியென்ன ஸ்பெஷல்?'' என்ற கணவனின் பொருள் பொதிந்த சிரிப்பையும், பார்வையை யும் பார்த்தாள் ரதி.

''ம், என்ன?''

''நீ போடா. பேசாத.''

''அட, திடீர்னு மரியாதையெல்லாம் கூடக் குறையுது?''

''ஆமாம், அப்படித்தான்.''

''ம்கூம், நான் இத சும்மா விட மாட்டேன்.''

''என்ன பண்ணப் போறீங்க?''

''உங்க சொந்தங்கள வரச் சொல்லு. முக்கியமா உங்க அப்பாவ. பேசணும்.''

''ஓ....''

''உடனே அவங்க இங்க வந்தாகணும். இல்லன்னா நடக்கறதே வேற.''

''ம், அப்புறம்.''

''அப்புறமென்ன... உன்னக் கழட்டி விட்டுட்டு இன்னொரு...''

''இன்னொரு?''



''விடு. அது அடுத்த ஸ்டெப். அப்புறமாப் பாக்கலாம்.''

''அப்படியெல்லாம் விட முடியாது. விஷயத்துக்கு...''

அந்த வினாடியில் கணவன் தன்னை அருகில் இழுத் திருக்க, அதைச் சற்றும் எதிர்பார்த்திருக்காத ரதி கண வனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன் றாள்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

மனைவியைத் தனது கைகளுக்குள் கொண்டு வந் திருந்த குணசீலன், ''ரதி..!'' என்று தேன் சொட்டும் குரலில் அழைத்தான்.

''ம்.''

''ரெண்டு நாளா நான் உன்ன எந்த அளவுக்கு மிஸ் பண்ணினேன் தெரியுமாடா?''

''எந்த அளவுக்கு?''

''நீ மட்டும் இன்னைக்கு இங்க வந்திருக்கலேன்னா நான் அங்க ஊருக்குக் கிளம்பி வந்திருப்பேனாக்கும்.''

கணவனின் வார்த்தைகளில் நடப்பிற்கு வந்து அவனைப் பார்த்தவள், ''சரிதான். நம்பிக்கறேன்!'' என் றாள்.

''என்ன சிரிக்கற, நீ என்ன நம்பல இல்ல?''

''பின்ன, ஊருக்கு வரணும்னா நினைச்சதும் வந்துட்ற மாதிரி சொல்றீங்க. மினிமம் அஞ்சு மணி நேரம், முன் னூத்தைம்பது கி.மீ. ட்ராவல் பண்ண வேண்டாம்?''

மனைவியின் வார்த்தைகளில் தெரிந்த நம்பாத தன்மையில், உடனே அங்கிருந்து எழுந்து சென்றான் குணசீலன்.

சென்றவன் ஒரு பையுடன் சில வினாடிகளில் திரும்பியும் வந்திருந்தான்.

''இதுல பாரு.''

ஒரு ட்ராவல் பேக்கைக் கணவன் தன் மடியில் வைத் திருக்க, திறந்து பார்த்தாள்.

அதற்குள் கணவனின் பேன்ட் சர்ட் இரண்டு செட் மற்றும் வெளியே சென்று தங்கும்போது எடுத்துக் கொண்டு செல்லும் வேறு சில பொருட்களும் இருப்பதை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

என்ன இது என்று கேட்பதற்காக நிமிரப் போனவள், வேறு பொருள் ஏதோ தட்டுப்பட அதையும் எடுத்துப் பார்த்தாள்.

அது அவள் பயன்படுத்தும் ஃபேஸ் க்ரீம் மற்றும் பவுடர்.

பேக் செய்து வைத்து விட்டு எடுத்து வர மறந்து விட்டேன் என்று கணவனிடம் ஊருக்குப் போன அன்று ஒரு முறை சொல்லியிருந்தது நினைவிற்கு வந்தது.

அதைக் கூட நினைவில் வைத்து இந்த முறை தயாராக எடுத்து வைத்திருக்கிறானே என்று ஆச்சரியமாக வும்.

''என்ன பாக்கற?''

''இல்ல, ஊருக்கு இந்த நேரத்துக்கப்புறம் எப்படி உங்களால கிளம்பியிருக்க முடியும்?''

''நீ வந்துட்டதால அதுக்கு அவசியமில்லாமப் போயி டுச்சு. இல்லன்னா மதியமே கிளம்பியிருப்பேன்.''



''ஆனாலும் எப்படி அவ்வளவு தூரம் திரும்பவும் ட்ராவல் பண்ணியிருக்க முடியும்...''

''அப்ப நான் சொல்றதையே நீ நம்பல. அப்படித்தான.''

''அப்படியெல்லாம் இல்ல குணா...'' என்று எழுந்து கணவனின் அருகில் சென்றாள் ரதி.

''சரிதான் விடு.'' என்ற குணசீலன் தூங்குவதற்காகச் செல்ல, ''குணா..!'' என்று கணவனுக்கு முன்பாகச் சென்று அவனுடைய கையைப் பிடித்திருந்தாள்.

''நீங்க சொல்றத நான் நம்பறேன். சும்மா விளை யாட்டுக்குத் தான் அப்படியெல்லாம் பேசினேன்...''

''நம்பிட்டேன், என்ன விடு. நான் தூங்கணும்.''

''ம்கூம், நான் விட மாட்டேன்.''

.............

''என் குணா...'' என்று கணவனுக்கு முன்பாகச் சென்று அவனுடைய கழுத்தில் தனது கைகளைப் போட்டிருந் தவள், மெல்லிய குரலில், ''இன்னும் கோபமா?'' என்று கேட்டாள்.

''ஆமாம், கொஞ்சம் என்ன விட்டுட்டுப் போ. அந்தப் பக்கம் நான் தூங்கணும்.''

பட்டென்று கோபத்துடன் கணவனிடமிருந்து வந்த பதிலில் ரதியின் முகம் சிறிதாகி விட்டிருக்க, தயக்கத் துடன் சற்றே பின் வாங்கினாள்.

''தள்ளு.''

விட்டால் அடித்து விடுவான் போலக் கணவன் எரிந்து விழுந்ததில் இப்பொழுது கண்களும் கலங்கி விட் டிருந்தன.

ஆனால் முயன்று உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டவள், கணவனின் கோபம் கொஞ்சமேனும் குறையுமோ என்று ஏக்கத்துடன் அவனுடைய முகத்தையே பார்த்தாள்.

''நீ என்னதான் நினைச்சுட்டிருக்க உம் மனசுல? நான் எது சொன்னாலும் கேக்கவே கூடாதுங்கற முடிவோட இருக்க இல்ல?''

''நான் இப்ப என்ன பண்ணணும்?''

மனைவியின் குரலில் தெரிந்த லேசான அழுகை தன்னை என்னவோ செய்தாலும், பேசாமல் சென்று படுத்துக் கொண்டு விட்டிருந்தான்.

சில நிமிடங்கள் அப்படியே நின்று விட்டிருந்த ரதிக்குப் பொங்கிக் கொண்டு அழுகை வந்தது.

கணவனைப் பார்க்க வேண்டுமென்று எவ்வளவு ஆசையாகக் கிளம்பி வந்தோமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

எவ்வளவு ஆசையாகக் கணவனும் கூட அருகில் வந்தான்.

தான் தான் பேசத் தெரியாமல் பேசி அனைத்தையும் கெடுத்து விட்டோமோ.

கணவனின் அருகில் சென்று அவனை எழுப்பிப் பேசினால் என்னவென்று தோன்றியது.

ஆனாலும் பயம் தடுக்க, அங்கிருந்து நகர்ந்து சென்று பால்கனியின் கதவைத் திறந்தாள்.

வெளியே தென்றல் காற்று சிலுசிலுவென வர, காற்றுக்கு ஆடிய அந்தப் பெரிய மரங்களின் கிளைகள்



மனதை மெல்ல மெல்ல லேசாக்க முயன்று ஓரளவு வெற்றியும் கண்டன.

அப்படியே சுவரை ஒட்டிக் கீழே அமர்ந்தவள் முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

எவ்வளவு நேரம் அப்படியே சென்றதோ, போகப் போகத் தூங்கவும் தொடங்கி விட்டிருந்தாள்.

நன்கு தூங்கி விட்டிருந்தவளுக்குத் திடீரென்று தன்னைக் கணவன் தொட்டுத் தூக்குவதைப் போலக் கனவு வர ஆசையுடன் அவனை இறுக அணைத்து அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

ஆனால் கனவென்றால் அப்படியே அல்லவா இருக்க வேண்டும். ஆனால் தனக்கு ஏன் இப்படி எங்கோ செல்வது போல இருக்கிறது.

ஏதோ நினைவில் உடனே கண்களைத் திறந்து பார்த்தவளுக்கு உண்மையிலேயே தான் கணவனின் கைகளில் இருப்பது தெரிந்தது.

வெகு இயல்பாகத் தன்னைக் கைகளில் ஏந்திக் கொண்டு கணவன் உள்ளே வந்ததும் கதவை உள்புறமாகத் தாழிடுவதும் கூட.

அதே சமயம் தங்கள் இருவரையும் இந்தக் கோலத்தில் வெளியே யாராவது பார்த்திருந்தால் என்ற எண்ணமும் கூடத் தோன்றி மறைந்திருந்தது.

ஆனாலும் கணவனை விட்டுப் பிரியத் துளியும் மனம் வந்திருக்கவில்லை.

அப்படியே இறுக அணைத்து அவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

பூப்போல மனைவியை ஏந்திக் கொண்டிருந்த குண சீலனுக்கும் அவளைக் கீழே விடவே மனம் வந்திருக்க வில்லை.

மனமே இல்லாமல் மனைவியைப் படுக்கையில் விட்டிருந்தவன், குடை போல அவளுடைய இரு புஜங் களுக்கு வெளியேயும் கைகளை ஊன்றி அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தான்.



# 25

''வாடாம்மா, என்ன உன்ன இன்னும் காணலை யேன்னு இப்பதான் நினைச்சேன்.''

''ஸாரி அத்தை, நல்லாத் தூங்கிட்டேன்.''

''அசடு, நான் சொல்ல வர்றதே வேற. யாரோ உங்கூடப் படிச்ச பையனாம். பேரு ராஜேஷ்னு உங்கிட்டப் பேச ணும்னு கொஞ்சம் முன்னாடி கூப்பிட்டிருந்தான்.''

''ஓ...''

''நான் கொஞ்ச நேரம் கழிச்சுப் பேசச் சொன்னேன். இல்லைன்னா நீ கூப்புட்டுப் பேசிக்கறையா?''

கடவுளே! இவன் ஏன் இப்படித் தேவையில்லாமல் மூக்கை நுழைக்கிறான்.

''என்னமா?''

''ஏதாவது சொன்னானா அத்தை?''



''இல்லமா. நீ வேணும்னா என்ன விஷயம்னு கூப் புட்டுப் பேசிக்கறையா?''

''எங்கூடப் படிச்சவன் தான் அத்தை. ரிசல்ட் பத்தி ஏதாவது தெரிஞ்சா கூப்புடச் சொன்னேன்.''

''நீ வேணும்னா கூப்புட்டுப் பேசிடு கண்ணா.''

''சரிதான் அத்தை. அப்புறமாப் பேசிக்கறேன்.''

''இந்தாடாம்மா காபி. எடுத்துக்கோ.''

''அப்படியே எனக்கும்.''

மகனும் வர, ''வா குணா!'' என்றார்.

''என்ன ரொம்பவும் அசதி போலிருக்கு?'' என்று கேட்டுக் கொண்டே தாய் கொடுத்த காபியை எடுத்துக் கொண்டான் குணசீலன்.

''அது சரிதாம்மா. நேத்து ஈவினிங் ஃப்ளைட்டுக்குத் தான் ஃபாரினர்ஸ் கிளம்பினாங்க. ரெண்டு நாளா அவங்க கூட ஒரே அலச்சல்.''

''எப்படியோ திருப்தியா வேலை முடிஞ்சதில்லையா?''

''ஆமாம்மா. ஒரு வழியா எல்லாம் நல்ல விதமா முடிஞ்சது.''

''ரதிம்மா, நீயும் வந்து காபி எடுத்துக்கோ!'' என்ற தனது அத்தையின் அழைப்பில் கை வேலையை விட்டு விட்டுத் தானும் வந்து காபியை எடுத்துக் கொண்டாள் ரதி.

''இன்னைக்கு வினய் வர்றானாம்மா?''

''ஆமாம், குணா. எனக்கும் நேத்து கூப்புட்டிருந்தான். இன்னைக்கு மதியம் ஹாஸ்டல்ல இருந்து கிளம்பறா னாம். நைட் வந்துடுவான்.''

''வந்தா ஒரு வாரம் இருப்பார். இல்லையா அத்தை?''

''ஆமாம் ரதிம்மா. உன்ன விடவும் ஒரு வருஷத்துக்கு மட்டும் தான் பெரியவன். அவனப் பேர் சொல்லியே கூப்புடு.''

''அது எப்படி...''

''அவனுமே உன்ன அப்படித்தான் கூப்புடச் சொல்லு வான். அதுதான் நல்லாவும் இருக்கும்.''

தனது அத்தை சொல்வதை ரதியால் ஏனோ இயல்பாக எடுத்துக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஒரு வயதே என்றாலும் வயதில் பெரியவனை எப்படிப் பெயர் சொல்லி அழைக்க முடியுமென்றும் நினைக் காமல் இருக்க முடியவில்லை.

''ஆனாலும் கல்யாணத்துக்கு முன்னாடி நீ எந்த அளவுக்கு வாயடிச்சுட்டிருந்த. இப்ப அப்படியே எதிர்ப் பதமா மாறிட்ட ரதிம்மா.''

''அப்படியெல்லாம் இல்....''

''ஏன் உன் வீட்டுக்காரர் இப்படித்தான் நடந்துக்க ணும்னு ஏதாவது...''

''அச்சச்சோ, அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல அத்தை!'' என்று அவசரமாக மறுத்தாள் ரதி.

''ஏன் என் தலைய உருட்டறீங்க? உங்க மருமகளாச்சே! இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் மத்தவங்க தான் சொல்லிக் குடுக்கணுமா என்ன?''

''அந்த அளவுக்கு மரியாதைன்னு சொல்ற. அப்படித் தான?''



''சரிதான். அப்படியே வெச்சுக்கோங்க.''

''அப்புறம், என்ன ஐயா இன்னைக்கு சாவகாசமா உக்காந்து பேசிட்டிருக்கீங்க?''

''ஆமாம்மா. இன்னைக்கு நான் ஆபீஸ் போகல.''

''ஏன்?''

''நானும், ரதியும் வெளிய எங்கயாவது போய்ட்டு வரலாம்னு இருக்கோம்.''

''சந்தோஷம்பா. நானே கேக்கணும்னு தான் இருந்தேன். ஒரு வாரம் வெளியூர் எங்காவது ஃப்ரீயா போய்ட்டு வாங்களேன்.

''ரதிக்கும் நல்லா இருக்கும். உனக்கும் ஜாப் டென் ஷன்ல இருந்து கொஞ்சம் ரிலீஃப் கிடைச்ச மாதிரியிருக்கு மில்லையா?''

''போகணும்மா. ஆனா இன்னைக்கு வேற வேலை யிருக்கு.''

அப்படிச் சொன்ன கணவனைப் புரியாது பார்த்தாள் ரதி.

''ரதிம்மா!''

''என்ன அத்தை?''

''இந்தக் காய்கறிகளைக் கொஞ்சம் கட் பண்ணிக் குடுமா. குருமா மட்டும் ரெடியானாப் போதும். டிபனப் பரிமாறலாம்.''

''சரி அத்தை!'' என்று தனது அத்தைக்கு உதவப் போனாள் ரதி.

''நான் குளிக்கப் போறேன். ரதி, சீக்கிரம் அந்த வேலைய முடிச்சுட்டு வந்து நீயும் கிளம்பு!'' என்று விட்டுத் தங்களுடைய அறையை நோக்கிச் சென்றான் குணசீலன்.

மகன் சொன்னது போலவே பத்து நிமிடங்களில், ''இனி நான் பாத்துக்கறேன். நீ போய்க் கிளம்பற வேலையப் பாரு!'' என்று மருமகளை அனுப்பியிருந்தார் சுசீலா.

சில வினாடிகளில் தங்களுடைய அறைக்கு வந்திருந்த ரதி, கணவன் குளித்து முடித்துக் குளியலறையிலிருந்து வெளியே வருவதைக் கண்டாள்.

''என்ன, இப்படி வேர்த்துப் பூத்து வந்திருக்க, ரொம்பவும் வேலையா?''

''ம்கூம்...'' என்ற ரதிக்குக் கணவனை இயல்பாகப் பார்த்துப் பேச ஏனோ ஒரு மாதிரியாக இருந்தது.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, இனம் புரியாத ஒரு விதத் தவிப்பு வந்து அவளை என்னவோ செய்தது.

''என்னமா?''

...........

''ரதி! உன்னத்தான்.''

கணவனின் அழைப்பில் நிமிர்ந்து அவனைப் பார்த்தவளுக்கு இரவு நடந்ததனைத்தும் நினைவிற்கு வந்து முகத்தைச் சூடாக்கிச் சிவக்கச் செய்திருந்தன.

''ஓ, மலரும் நினைவுகளா!''

அது மட்டும் தானா, கோபப்படவும் செய்தானே.



அதுவும் எந்த அளவிற்கு...

''ரதி!''

''நைட் ஏன் உங்களுக்கு அவ்வளவு கோபம் வந்தது?''

...............

''குணா, உங்களத்தான்.''

தான் ஏதோ மிகப் பெரிய தவறைச் செய்து விட்டதைப் போல மனைவி கேட்ட விதம் குணசீலனுக்கு லேசாகக் கோபத்தை வரவழைத்து விட்டிருந்தது.

ஆனாலும் அவன் அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

''குணா...''

''ஆமாம்மா. நான் ரொம்பவும் மோசம் தான். விடு.''

''நான் அந்த மாதிரி ஒண்ணும் சொல்லலையே.''

கணவன் அவன் பாட்டுக்குக் கிளம்புவதில் கவனமாக இருக்க, அருகில் சென்று, ''குணா, இங்க பாருங்க...'' என்று அழைத்தாள்.

மேலும் ஒரு முறையும் அழைத்த பிறகே, மனைவியைத் திரும்பப் பார்த்தான் குணசீலன்.

''என்ன மன்னிச்சுடுங்க குணா. தப்பு எம் மேல தான்.''

''அப்படின்னு நான் சொன்னேனா? எதுக்கு நீ பாட்டுக்கு உன் இஷ்டத்துக்கு இல்லாததக் கற்பனை பண்ணிக்கற?''

................

''நான் ஒரு முட்டாள். உங்கிட்ட எந்த அளவுக்கு எதிர்பாக்கணுங்கறதையே அடிக்கடி மறந்து போயிட்றேன்.''

கணவனின் விரக்தி கலந்த வார்த்தைகள் தன்னை என்னவோ செய்ய, ''ஸாரி குணா! இனிமேல் எப்பவுமே உங்க மனசு புண்பட்ற மாதிரி நான் நடந்துக்கவே மாட்டேன்!'' என்றாள்.

''கிளம்பு. லேட்டாயிடும்.''

''ப்ளீஸ்... என்னப் பாருங்க.''

கணவனுக்கு முன்பாக மிக அருகில் சென்று அழைத்தாள் ரதி.

கணவனின் முகத்தைத் தனது கைகளில் ஏந்தியிருந் தவள், ''எம் மேல இன்னும் கோபமா?'' என்று கேட்டாள்.

.........................

''நீங்க பேசற... ம்கூம்... உங்க கோபம் குறையற வரைக்கும் நான் உங்கள விடப் போறதில்ல!'' என்றவள், கணவனின் முகத்தையே பார்த்தபடி அப்படியே நின்று விட்டிருந்தாள்.

சில வினாடிகள் சென்றிருக்க, ''இப்ப என்ன வேணும் உனக்கு?'' என்று இல்லாத எரிச்சலைத் தனக்குள் மறைத்துக் கொள்வது போலக் கேட்டான் குணசீலன்.

''எங்கூடப் பேசணும்.''

''அப்புறம் இப்ப என்ன பண்ணிட்டிருக்கேன்...''

''சந்தோஷமாப் பேசணும்.''



''சந்தோஷமான்னா... ஓ இப்படியா?'' என்று வாயைக் காதுவரை இழுத்துச் சிரித்துக் காட்டினான்.

கணவனின் பாவனையில் சிரிப்பு வந்து விட்டிருக்க, ''ம்கூம். இந்த மாதிரியெல்லாம் நான் சொல்லல!'' என்று ரோஷத்துடன் சொன்னாள்.

''ஓ அப்ப இந்த...'' என்ற கணவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கிய ரதி, ''என்னடா, ரொம்பவும் பிகு பண்ற?'' என்று கேட்டாள்.

அதற்கு மேல் பேசக் குணசீலன் மனைவியை விட் டிருக்கவில்லை. மனைவியை இழுத்துத் தனது மார்போடு அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

சில வினாடிகளில் தானும் தன்னிலை மறந்து கண வனை இறுக அணைத்து அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள் ரதி.

எவ்வளவு நேரம் இருவரும் அப்படியே நின்றிருந் தார்களோ, மீண்டும் இருவரும் நடப்பிற்கு வந்தபோது வெகு நேரம் கடந்து விட்டிருந்தது மட்டும் தெரிந்தது.

''ரதி!''

கணவனின் அழைப்பில் மனமே இல்லாமல் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் ரதி.

''என்ன குணா?''

''உனக்கு ஏதாவது பிரச்சனையா?''

''ஏன் இப்படிக் கேக்கறீங்க?''

''இல்ல, மேக்ஸிமம் டைம் நீ வித்யாசமா நடந்துக்கற மாதிரியே இருக்கு.''

''மேக்ஸிமம் டைம்னா?''

''அப்பப்ப ரொம்பவும் ஒட்டாத மாதிரி பிரஸ் பண்ணிப் பேசினா மட்டும் பேசற.''

...............

''என்னமா?''

''இல்லையே. நான் வழக்கமா எப்படி நடந்துக்கறேனோ அப்படித்தான் நடந்துக்கறேன்.''

''சரிதான்.''

''நிஜம் குணா.''

''எதுவா இருந்தாலும் எங்கிட்ட நீ சொல்லலாம். நீயே மனசுக்குள்ள போட்டுக் குழப்பிக்காத.''

''புரியல?''

''கல்யாணத்துக்கு முன்னாடி நடந்தது, உன் விருப்பு வெறுப்பு, ஆசைகள், முக்கியமா உன் ஃப்ரண்ட்ஸப் பத்தி...''

''ப்ரண்ட்ஸா?''

இரவு கூடக் கணவன் இந்த மாதிரி தானே ஏதோ கேட்டான்.

ஏன்?

அப்படியானால் கணவன் தன்னைச் சந்தேகப்படுகிறானா?

ம்கூம். இருக்காது.

இருக்கவே இருக்காது.

தன்னுடைய குணா அந்த மாதிரியானவன் கிடையாது.



—தன்னைப் போன்ற ஒருத்தியை அதிலும் கட்டிய மனைவியைச் சந்தேகப்படுமளவிற்குத் தன்னுடைய கணவன் ஒன்றும் மோசமானவனல்ல.

''என்னமா?''

''ஒண்ணுமில்லையே.''

''ஏன் அடிக்கடி ஏதோ யோசனைக்குப் போயிட்றே?''

''என்ன சந்தேகப்பட்றீங்களா குணா?''

''என்ன ரதி...''

''போதும். இதுக்கு மேல ஒண்ணும் சொல்லாதீங்க.''

''ஏம்மா இப்படியெல்லாம் கற்பனை பண்ணிக்கற?''

''உங்கள விடவுமா?''

''ரதி.''

''போதும் குணா. என் இடத்துல ஒரு சின்னக் குழந்தை இருந்திருந்தாக் கூட இத்தனை நாள்ல அது உங்களப் புரிஞ்சுட்டிருந்திருக்கும்...''

''ரதி, போதும்.''

''என்ன போதும், நீங்க மட்டுமில்ல குணா, நானும் கூட உங்ககிட்ட இன்னும் எவ்வளவோ எதிர்பாத்தேன். ஆனா நீங்க...''

''ஏன் நிறுத்திட்ட, சொல்லு.''

''சராசரி மனுஷன விடக் கீழே இருக்கீங்க.''

...............

''நீங்க இந்த அளவுக்கு இருப்பீங்கன்னு நான் கொஞ்சங் கூட எதிர்பாக்கல.''

''வேண்டாம்மா. வார்த்தைகளைச் சுலபமாக் கொட்டிட லாம். ஆனா...''

''அதத்தான் நானும் சொல்றேன்.''

''இப்ப நீ என்னதான் சொல்ல வர்ற?''

உணர்ச்சி துடைக்கப்பட்ட குரலில் கணவன் கேட்க, ''அத நான் கேக்கணும்,'' என்றாள் ரதி.

''சரிதான், இன்னைக்கு ஏதோ வித்யாசமாவே பேசிட் டிருக்க.''

நீங்களா, நானா என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட ரதி, அதை வெளியே சொல்லவில்லை.

''நான் கம்பெனிக்குக் கிளம்பறேன். நீ உன் வேலையப் பாரு.''

கணவனுடன் வெளியே கிளம்பும் ஆசையில் இருந்த ரதிக்கு அவன் அப்படிச் சொல்லி விட்டிருந்தது மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்து விட்டிருந்தது.

ஆனாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

சொன்னது போலக் கணவன் சில வினாடிகளில் கீழே இறங்கிச் சென்றிருக்க, செய்வதறியாது அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள் ரதி.

அழுகை பொங்கிக் கொண்டு வந்தது.

இப்படிக் கோபப்பட்டுக் கிளம்பிச் செல்லுமளவிற்கு அப்படித் தான் என்ன தவறு செய்து விட்டோமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந்தாளோ, அத்தை அழைக்கும் குரலில் கீழே இறங்கி வந்தாள்.



''வாம்மா.''

''என்ன அத்தை?''

''சாப்பிடலாமா?''

''மாமா...''

''அவரும் சாப்டுட்டு குணா கூடவே ஆபீஸ் கிளம்பிப் போயிட்டாருமா.''

''ஓ...''

''எங்கயோ வெளிய போகணும்னு சொல்லிட்டிருந் தவனுக்குத் திடீர்னு ஆபீஸ் வேல வந்துடுச்சு. பாத்தி யாம்மா?''

''அது சரிதான் அத்தை. திடீர்னு வந்த வேலைக்கு அவரும் தான் என்ன செய்வார்?''

''நீ இவ்வளவு வெகுளியா இருந்தா பின்ன குணாவும் வேல தான் முக்கியம்னு கிளம்பிப் போகத்தான் செய் வான். அதெல்லாம் முடியாதுன்னு நீ அழுத்தமா சொல்லி யிருக்கணும்.''

தனது அத்தையின் வார்த்தைகளுக்கு அவள் சும்மா சிரித்துக் கொண்டதோடு சரி.

அன்று முழுவதுமே ஒரு வித மந்தத் தன்மையுடன் தான் சென்றது ரதிக்கு.

தனது மொபைலுக்கு அந்த ராஜேஷிடமிருந்து அழைப்பு வர, அட்டெண்ட் செய்து பேசினாள்.

''சொல்லு ராஜேஷ், எப்படியிருக்க?''

...............

''என்ன, ரிசல்ட் வந்துடுச்சா?''

ஆவலுடன் கேட்டவளுக்கு, எதிர்ப்புறத்தில் அவன் சொன்னது மிகுந்த கோபத்தையே கொடுத்திருந்தது.

ஆனாலும் அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல், இயல்பாகப் பேசிவிட்டு அழைப்பைத் துண்டித்திருந்தாள்.

அந்த ராஜேஷ் சொன்னது இதுதான்.

ரதியின் கோபத்திற்கான காரணமும் அதுவே.



# 26

இரண்டு நாட்களுக்கு முன்பு உன் கணவன் குண சீலனை யதேச்சையாகப் பார்க்க நேர்ந்தது.

மரியாதைக்காக அவருடன் சில வார்த்தைகள் பேசினேன்.

அவரும் நன்றாகத் தான் பேசினார்.

ஆனால் அதற்குப் பிறகு அவர் கேட்டதைத்தான் ஏனோ என்னால் துளியும் ஜீரணித்துக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

திரும்பத் திரும்ப உன்னைப் பற்றியே விசாரித்தார்.

அதாவது உனது திருமணத்திற்கு முந்தைய வாழ்க்கையைப் பற்றி. நீ எப்படி, எந்த மாதிரி, யார் யாருடன் எப்படி நடந்து கொள்வாய்.

முக்கியமாக ஆண்களுடன் எப்படிப் பழகுவாய். குறிப்பாக உனக்கு ஆண் நண்பர்கள் எத்தனை பேர்...



இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ கேள்விகள்.

ஒரு கட்டத்தில் நானாக நழுவிக் கொண்டேன். இல்லையென்றால் இன்னும் என்னவெல்லாம் கேட்டிருப்பாரோ, தெரியவில்லை.

எதற்கும் உன் கணவனிடம் நீ கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இரு.

நீ யாரிடமாவது சாதாரணமாகப் பேசப் போய் அதையும் அவர் தவறாக எடுத்துக் கொண்டு எதையாவது சொல்லி விடப் போகிறார்.

அதிலும் உன்னைப் போன்ற வெகுளியைக் கூட இந்த அளவிற்குச் சந்தேகப்படுகிறார் என்றால், அவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டுமென்று என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

எதற்கும் கொஞ்சம் பார்த்து ஜாக்கிரதையாக நடந்து கொள்ளென்று சொல்லத்தான் அழைத்தேனென்று இணைப்பைத் துண்டித்திருந்தான் ராஜேஷ்.

ராஜேஷ் சொன்னது ஏற்கெனவே எரிந்து கொண்டிருக்கும் அடுப்பில் மேலும் எண்ணெயை ஊற்றியது போல் ஆயிற்று.

மனம் வெறுத்துப் போகத் தன்னுடைய அறைக்குச் சென்று பேசாமல் அமர்ந்து விட்டிருந்தாள் ரதி.

ஆனால் அதெல்லாம் சிறிது நேரம் தான்.

அந்த ராஜேஷ் சொன்னது போல அவ்வளவு கீழ்த்தரமாகக் கணவன் கேட்டிருப்பானா என்று ரதிக்குமே இப்பொழுது சந்தேகம் வந்து விட்டிருந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக அந்த ராஜேசும் அவ்வளவு ஒன்றும் யோக்கியமானவன் அல்லவே.

தனது கணவன் சாதாரணமாக எதையாவது கேட்டிருக்க, இவன் வேண்டுமென்றே தன்னிடம் அதை மிகைப்படுத்திச் சொல்லியிருந்தால்...

நிச்சயம் அப்படித்தான் இருக்க வேண்டும்.

ஆனாலும்...

ஏன் கணவன் தன்னிடமுமே சில நாட்களாக மனதில் எதையோ வைத்துக் கொண்டு தானே பேசிக் கொண்டிருக்கிறான்.

தன்னிடமே அப்படி நடந்து கொள்பவன், அவனிடமும் ஏன் அப்படியெல்லாம் கேட்டிருக்கக் கூடாது.

ஆம், அப்படித்தான் இருக்க வேண்டும்.

அந்த ராஜேஷ் சொல்கிற அளவுக்கு இல்லாவிட்டாலும், அதில் பாதியளவேனும் கணவன் கேட்டிருக்கத் தான் வேண்டும்.

அவன் அதை மேலும் கொஞ்சம் மிகைப்படுத்திச் சொல்கிறான். அவ்வளவே.

இது மட்டுமா என்ன?

அன்று ஊருக்குப் போன போது கூடக் கணவன் இது போலத்தானே எதையோ கேட்டான்.

ஏன் ஊரில் தோட்டத்தில் வைத்துத் தான் கேட்டதற்குக் கூடப் பேச்சை மாற்றினானே.

இனியும் இதில் யோசிக்க எதுவுமில்லை,

கணவன் தன்னைச் சந்தேகப்படுகிறான்.



அந்த மாதிரியொரு எண்ணம் வந்து விட்ட பிறகு ரதியால் வினாடி கூட நிம்மதியாக இருக்க முடியவில்லை.

ஏதேதோ எண்ணங்களில் பைத்தியமே பிடித்து விடுமோ என்னுமளவிற்கு மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டாள்.

மாலை வேலை முடிந்து கணவன் வீடு திரும்பும் நேரமாகி விட்டிருக்க, கை கால் முகம் சுத்தம் செய்து கொண்டு கீழே இறங்கி வந்தாள்.

இனி கணவனிடம் எப்படி நடந்து கொள்வது?

முதலில் அவனைத் தன்னால் இயல்பாக எதிர்கொள்ள முடியுமா?

ரதி தங்களுடைய அறையிலிருந்து கீழே இறங்கி வரவும், அவளுடைய கொழுந்தனார் வினய் வீட்டிற்குள் வரவும் சரியாக இருந்தது.

''ஹாய் அண்ணி!''

''வினய்! வாங்க வாங்க, எப்படியிருக்கீங்க?''

''நான் நல்லாக்கேன் அண்ணி. ஆனா நீங்க டல்லா இருக்கற மாதிரி தெரியுதே...''

''ம்கூம், இல்லையே.''

''சரிதான். அப்ப ஏதோ இருக்கு!'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''வா வினய்!'' என்று வரவேற்றுக் கொண்டே ஹாலுக்கு வந்தார் சுசீலா.

''ஹாய் மா, எப்படி யிருக்கீங்க?''

''எனக்கென்னடா... ஆமா, நீ ஏன் இப்படி மெலிஞ்சு போய்ட்ட?''

''நானா! இல்லையே.''

''சரிதான் அத்தை. கல்யாணத்தப்ப பாத்ததுக்கு இப்ப ரொம்பவுமே இளைச்சுத் தான் போய்ட்டார்!'' என்று ரதி தானும் சொல்ல, ''என்ன அண்ணி, பதிலுக்குப் பதிலா?'' என்று புன்னகையுடன் கேட்டான்.

''நல்லா சொல்லுமா!'' என்று சுசீலா, ''வாப்பா, லைட்டா டிபனும் காபியும் குடுக்கறேன். சாப்டுட்டுப் போய் வேணும்னா குளிக்கறது அது இதுன்னு என்ன வேலை யிருந்தாலும் பாரு,'' என்றார்.

''இல்லமா, வேண்டாம். அதையெல்லாம் எடுத்துக் கிட்டா அப்புறம் டிபன் சாப்புட முடியாது,'' என்றவன், ''அண்ணா, அப்பா யாரையும் காணல?'' என்றான்.

''இன்னும் ஆபீஸ்ல இருந்து வர்லப்பா.''

''அட இவ்வளவு ஸின்சியர் ஆயிட்டாங்களா?''

''அது சரி. ஹீட்டர் போட்டு விட்டிருக்கேன். போய்க் குளிச்சுட்டு வந்துடுப்பா.''

''இதோ அர மணி நேரத்துல வந்துட்றேன். சூடா டிபன் எடுத்து வைங்க!'' என்றவன், ''குளிச்சுட்டு வந் துட்றேன் அண்ணி!'' என்று ரதியிடமும் சொல்லிவிட்டு லக்கேஜ்களுடன் தன்னுடைய அறையை நோக்கிச் சென்றான் வினய்.

''அப்புறம் ரதிம்மா...''

''சொல்லுங்க அத்தை.''

''மேக்ஸிமம் டிபன் வேலை முடிஞ்சது. ப்ளேட்ஸ் எடுத்து வெச்சு எல்லாத்தையும் பரிமாறத் தயாரா எடுத்து



வெச்சுட்டிரு. நான் கோவில் வரைக்கும் போய்ட்டு வந்துட்றேன்.''

''சரி அத்தை.''

''நீயும் வர்றியாம்மா?''

''இல்லில்ல அத்தை, நீங்க போய்ட்டு வாங்க.''

''அடுத்த வீதிதான். வர்றதா இருந்தா வா. கால் மணி நேரத்துல திரும்பிடலாம்.''

''இந்த நேரத்துல வீட்ல யாரும் இல்லாம எப்படி அத்தை...''

''அது சரிதான்...'' என்ற சுசீலா தான் மட்டும் கிளம்பி விட்டிருந்தார்.

தனது அத்தை சொல்லி விட்டுச் சென்றது போல அனைத்தையும் தயாராக எடுத்து வைத்திருந்தாள் ரதி.

ஏதோ ஒருவித இனம் புரியாத வெறுமை வந்து நெஞ்சை அடைப்பதைப் போலிருக்க, வேண்டாம் மனமே என்று முயன்று நடப்பிற்கு வந்தாள்.

ஆனாலும் தனிமை என்னவோ போலிருக்க, போய் ஹாலில் இருக்கும் டி.வி.யை ஆன் செய்து கொண்டு சோஃபாவில் அமர்ந்தாள்.

டி.வி.யில் மூழ்கிப் போயிருந்தவள், ''ஹாய் அண்ணி!'' என்ற குரலில் திரும்பினாள்.

''வாங்க வினய்.''

''ம்கூம், இது நல்லா இல்ல அண்ணி.''

''எது?''

''நீங்க என்னப் பன்மைல கூப்புட்றது. வா போன்னு கூப்புடுங்க.''

''அது எப்படி முடியும்...''

''ஏன் அண்ணி சும்மாவே என்ன மேய்க்கறது கஷ்டம். அப்படியிருக்கும் போது இந்த மாதிரி மரியாதையெல்லாம் குடுத்தா அப்புறம் ரொம்பவும் மேல போயிட மாட்டேன்...''

''ரொம்பவும் விளையாட்டாப் பேசறீங்க...''

''ஓ அப்படியா, அதுலயும் மெச்சூரிட்டியே இல்லாத சின்னப் பையன் மாதிரி இல்லையா அண்ணி?''

''அச்சச்சோ! நான் அந்த அர்த்தத்துல சொல்லல...''

''அப்புறம் என் ஃப்ரண்ட்ஸ் எல்லாரும் உங்ககிட்ட ஒண்ணு சொல்லச் சொன்னாங்க அண்ணி. அதுவும் கண்டிப்பா சொல்லணும்னு சொன்னாங்க...''

''என்ன?''

''நீங்க ரொம்பவும் அழகா இருக்கீங்களாம். இப்படியொரு அண்ணி கிடைக்க நீ உண்மைலயே குடுத்து வெச்சிருக்கணும்னு சொன்னாங்க.''

''ஓ...''

''ஆமா அண்ணி. ஏன், நானே சொல்றேன்.....''

''ரொம்பவும் மிகைப்படுத்தறீங்களோன்னு தோணுது. எனிவே தேங்க்ஸ்!'' என்ற ரதி -

''அப்புறம் எக்ஸாம் எப்பிடிப் பண்ணியிருக்கீங்க?'' என்று கேட்டாள்.

''பாத்தீங்களா, திரும்பவும் மரியாதையெல்லாம் பலமா இருக்கு...''

''முயற்சி பண்றேன் வினய், டிபன் எல்லாம் ரெடியா இருக்கு. சாப்புட்றீங்களா?''



''ம்கூம், எல்லாரும் வரட்டும் அண்ணி!'' என்ற வினய் இயல்பாக அதே சமயம் நன்றாகவும் பேசிக் கொண்டே போக, ரதி தானும் அவனுடன் சகஜமாகப் பேசத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஏன் அவனிடம் பேசுவது, அதிலும் வினய் வார்த்தைக்கு வார்த்தை தன்னை மறந்து சிரிக்க வைத்தது, தன் வயதை ஒத்தவர்களிடம் பேசுவதைப் போன்ற ஒரு உணர்வையும் புத்துணர்ச்சியையும் அளித்திருந்தன.

ஆனால் அதெல்லாம், ''வா வினய்! இப்பதான் வர்றியா?'' என்று கேட்டுக் கொண்டே கணவன் வீட்டிற்குள் வரும் வரை தான்.

கணவன் அருகில் வருவதற்குள் அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட முயன்றவள், அதற்குள் அவன் அருகிலேயே வந்து விட்டிருக்க வேறு வழியில்லாமல் நின்றாள்.

தொடர்ந்து சில வினாடிகளில் மாமா சுந்தரமூர்த்தியும் வர, ஆண்கள் மூவரும் பேசத் தொடங்கி விட்டிருந்தனர்.

அந்த நேரம் பார்த்து அங்கிருந்து நழுவி விட்டிருந்த ரதி, நேராகச் சமையலறைக்குச் சென்றாள்.

பூரிக்குக் கடாயில் எண்ணெயை ஊற்றி அடுப்பில் வைத்தாள்.

அப்படியே பூரி மாவையும் சிறுசிறு உருண்டைகளாகச் செய்து தேய்க்கத் தொடங்கினாள்.

''ரதிம்மா...''

''வாங்க அத்தை.''

''பரவாயில்ல. நான் நினைச்சத நீ செய்யவே தொடங்கிட்டமா.''

''எல்லாரும் வந்தாச்சு அத்தை. அதான்.''

''நல்லது தான். நீ தேய்ச்சுக் குடு. நான் சுட்டு எடுக்கறேன்!'' என்று சுசீலா தானும் வர இருவரும் வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினர்.

''சரி ரதிம்மா. எடுத்த வரைக்கும் போதும். எல்லாரும் சாப்புட வந்து உக்காந்ததும் திரும்பவும் போட்டுக்கலாம்,'' என்று தனது அத்தை சொல்ல ரதி போய் அனைவரையும் சாப்பிட அழைத்து விட்டு வந்தாள்.

சிறிது நேரத்தில் இரவு உணவு முடிய, பிறகு அனைவரும் வெளியே அமர்ந்து பேசத் தொடங்கி விட்டிருந்தனர்.

''ரதி, இங்க வா!'' என்று தனது அத்தை அழைக்க, ''இதோ மேல போய்ட்டு வர்றேன் அத்தை,'' என்று தன்னுடைய அறைக்கு வந்திருந்தாள்.

ஏனோ அவளுக்கு யாரையும் பார்த்துப் பேசவே பிடிக்கவில்லை.

முக்கியமாக இயல்பாகப் பேச முடியுமென்று தோன்றவில்லை.

தங்களுடைய அறைக்கு வந்து பேசாமல் அமர்ந்து விட்டிருந்தாள்.

வெகு நேரத்திற்குப் பிறகு ஒருவேளை கீழே தன்னை எதிர்பார்த்தால் என்று தோன்றி விட்டிருக்க இறங்கி வந்தாள்.

ஆனால் அதே நேரம், ''சரிப்பா. நான் வழக்கமாத் தூங்கற நேரமாயிடுச்சு!'' என்று தனது மாமா எழுந்திருக்க, தனது அத்தை அதற்கும் முன்பே தூங்கச் சென்று விட்டிருந்ததைக் கண்டாள்.



சரியாக அதே நேரத்தில் அங்கு வந்திருந்த ரதியிடமும், ''குட் நைட் மருமகளே!'' என்று விட்டுப் போனார் சுந்தரமூர்த்தி.

''ரதி!''

கணவன் அழைக்க என்னவென்பதைப் போலப் பார்த்தாள்.

''வா உக்காரு...'' என்று குணசீலன் அழைக்கும் முன்னரே, ''வாங்க அண்ணி!'' என்று தானும் அழைத்திருந்தான் வினய்.

சரியாக அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வந்திருக்க, ''ஒரு நிமிஷம்...'' என்று அட்டெண்ட் செய்து பேசிக் கொண்டே எழுந்து சென்றான் வினய்.

''ஏன் நின்னுட்டே இருக்க? வந்து உக்காரு.''

கணவன் அழைக்க, ''இல்ல, பரவாயில்ல!'' என்று மறுத்தாள் ரதி.

''எனக்கு போன் ஏதாவது வந்ததா?''

''இல்ல.''

''உனக்கு?''

............

''இல்ல. ஊர்ல இருந்து பாட்டி, தாத்தா, மாமா அப்புறம் உன் ப்ரண்ட்ஸ்னு யாராவது...''

கணவன் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. ''வந்தது!'' என்று பட்டென்று ஒற்றை வார்த்தையில் சொல்லி விட்டிருந்தாள்.

''யாரு?''

..............

''ரதி! உன்னைத் தான்.''

''எனக்கு வேண்டியவங்க.''

''யாரு, உன் ஃப்ரெண்ட்ஸா?''

''அது உங்களுக்கு அவசியமில்லாதது.''

மனைவியின் கோபம் புன்னகையை வரவழைத் திருக்க, ''ம் அப்புறம்...'' என்றான்.

''உங்களோட சந்தேகப் புத்திய எங்கிட்ட காட்டா தீங்க...''

''அட!''

..............

''ஏதோ கோபத்துல இருப்ப போல?''

''பண்றதையெல்லாம் பண்ணிட்டு ஒண்ணுமே தெரி யாத மாதிரி பேசறீங்க...''

மனைவியின் வார்த்தைகள் குணசீலனுக்குச் சற்றும் புரிந்திருக்கவில்லை.

''என்ன சொல்ற?'' என்று கேட்டான்.

''ஒண்ணுமில்ல.''

''இப்படிச் சொன்னா எப்படி, உம் மனசுல இருக்கறதைச் சொல்லு. அப்பதான உனக்கும் சந்தேகம் தெளியும்.''

''எனக்குச் சந்தேகமே இல்ல, முடிவே பண்ணிட்டேன்.''

''என்னன்னு?''

சரிதான், இனி தூங்கப் போகலாமென்று இருக்கையை விட்டு எழுந்திருந்த குணசீலன், ''என்னமா?'' என்று மனைவியின் அருகில் வந்திருந்தான்.



ஏற்கெனவே கோபத்திலிருந்த ரதிக்குக் கணவனின் கரிசனம் சற்றும் இனிக்கவில்லை.

மாறாக எரிச்சலையே வரவழைத்திருந்தது.

''கொஞ்சம் பேசாமப் போறீங்களா?''

''அட என்ன இவ்வளவு கோபம்!''

..............

''என்னமா?''

''போயிடுங்க தயவு செஞ்சு. நான் பேசற மூட்ல இல்ல...''

''என்ன ரதி, என்னாச்சு உனக்கு?''

''ஆமாம். எனக்கு ஊர்ல இருக்கற ஆம்பளைங்க எத்தனையோ பேர் கூடத் தப்பான தொடர்பிருக்கு. நான் நடத்த கெட்டவ தான்.''

கடுங் கோபத்துடன் தொடங்கியிருந்த ரதி அதைச் சொல்லி முடிப்பதற்குள் குணசீலனின் கை மனைவி யின் கன்னத்தைப் பதம் பார்த்திருந்தது.

அதைச் சற்றும் எதிர்பார்த்திருக்காதவள், கணவனை அதிர்ச்சியுடன் பார்க்க, குணசீலனின் கோபமோ இன்னும் பல மடங்கு அதிகம் தான் ஆகியிருந்தது.

கூடவே மனதின் ஓரத்தில் இப்படிச் செய்து விட்டோமே என்ற ஆதங்கமும்.

''ஓ, சந்தேகப் புத்தி மட்டும் தான் இருக்குன்னு நினைச் சேன். ஆனா இதெல்லாம் கூட...''

''போதும், நிறுத்து.''

''எதுக்காக நிறுத்தணும், இருக்கறதத்தான சொல் றேன்.''

''வேண்டாம் ரதி. நான் அவ்வளவாப் பொறுமைசாலி கிடையாது.''

''அத நீங்க சொல்லவே வேண்டாம். எப்ப கைய நீட்ற அளவுக்கு வந்துட்டிங்க...''

''நீ பேசின வார்த்தைகளுக்கு இது என்ன, இன்னும் கூட...''

''ஓ, இன்னும் அடிப்பீங்களாக்கும்?''

''உன் கற்பனை வளத்த இத்தோட நிறுத்திக்கோ. இல்லன்னா, நடக்கறதே வேற.''

''ஓ திரும்பவும் கைய நீட்டிடுவீங்களோ?...''

''முதல்ல மேல போ...''

''ம்கூம். மாட்டேன். நான் யார் கூட வேணும்னாலும் எப்படி வேணும்னாலும் நடந்துக்குவேன். முக்கியமா கண்டவங்க கூடவெல்லாம்...''

''போதும், வாய மூடு!'' என்ற குணசீலன் மீண்டும் கடுங்கோபத்துடன் கையை நீட்டியிருக்க, செய்வதறியாது பார்த்தாள் அவனுடைய மனைவி ரதி.

''ஏன் நிறுத்திட்டிங்க, நல்லா அடிங்க. அடிச்சுக் கொல்லுங்க...''

''ஏன் இப்படியெல்லாம் நடந்துக்கற? தயவு செஞ்சு கொஞ்சம் புரிஞ்சுக்கோம்மா...''

''நீங்க என்ன செஞ்சாலும் கேக்க யாருமில்லைன்னு நினைச்சுட்டிங்க இல்ல!'' என்று கண்ணீருடன் கேட்ட ரதி உடனே அங்கிருந்து தங்களுடைய அறைக்கு வந்திருந்தாள்.



மனைவியின் கண்ணீர் குணசீலனையும் என்னவோ செய்திருந்தது.

இப்படிக் கையை நீட்டுமளவிற்கு மிருகத் தனமாக நடந்து கொண்டு விட்டோமே என்று ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

அதே சமயம் யாரோ உள்ளே வரும் அரவம் கேட்கத் திரும்பினான்.

தம்பி வினய் உள்ளே வருவது தெரிந்தது.

அவன் எதையும் பேசாமல் பார்த்ததிலிருந்து நடந்த தனைத்தையும் அவனும் கவனித்து விட்டிருக்கிறான் என்பது புரிந்தது.

''உங்ககிட்ட நான் இத எதிர்பாக்கல அண்ணா.''

தம்பியின் வார்த்தைகள் குணசீலனுக்குத் தான் தவறு செய்து விட்டதைப் போன்றதொரு எண்ணத்தைத் தோற்றுவித்து விட்டிருந்தது.

''ஸாரிண்ணா.''

சரிதான். அந்த எண்ணத்திலேயே தம்பி சொல்லியிருந்தாலும் கூட அதில் என்ன தவறு இருக்கிறது.

எப்படிப் பார்த்தாலும் தவறு தன் மேல் தான், அல்லவா?

யோசிக்காமல், பொறுமையைக் கடைப்பிடிக்காமல் கையை நீட்டி விட்டது தன்னுடைய குற்றமே அல்லவா?

அதிலும் தம்பி சிறு பையன் பார்க்க நாம் இப்படி நடந்து கொண்டு விட்டோமே என்று குணசீலனுக்குமே ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

அண்ணனின் நிலை புரிய, முக்கியமாகத் தான் அறிந்த வரையிலும் இதுவரை யாரிடமும் வாயடைத்து நின்றிருக்காத அண்ணன் சிறு பையனான தன்னிடம் வாயடைத்து நின்றிருந்தது தம்பி வினயையும் என்னவோ செய்திருந்தது.

''நான் ஏதாவது தப்பாக் கேட்டிருந்தா மன்னிச்சுடுங்க!'' என்று மீண்டுமொரு முறையும் கேட்டு விட்டிருந்தான்.

தம்பி சொன்னதெல்லாம் துளியும் குணசீலனின் கவனத்தில் பட்டிருக்கவில்லை.

''குட்நைட் வினய்!'' என்று விட்டுத் தன்னுடைய அறைக்கு வந்திருந்தான்.

மனைவி கட்டிலில் குறுகிப் படுத்திருந்தது தெரிந்தது.

அழுகையில் உடல் குலுங்குகிறதோ?

அருகில் சென்று சமாதானப் படுத்தினாலென்ன?

ஆம், அதுதான் சரியென்று ஒரெட்டு எடுத்தும் வைத்திருந்தான் குணசீலன்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

உடனே வேண்டாமென்று நின்று விட்டிருந்தான்.

என்ன வார்த்தை சொல்லி விட்டாள்.

அதிலும் தன்னை எந்த அளவிற்குக் கேவலமாகப் பேசி விட்டாள்.

வெகுளி, அதிலும் சிறு பெண் என்றெல்லாம் நினைத்ததற்குச் சரியான பாடம் புகட்டி விட்டாளே.

ஒருவேளை...

வேண்டாம் மனமே, வேண்டாம்.



மனைவி அவளே தனது முட்டாள் தனத்தை உணர்ந்து வந்து மன்னிப்புக் கேட்கட்டும்.

அதற்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

மனதில் ஏதேதோ எண்ணங்கள் முட்டி மோதிக் கொண்டிருந்தாலும், அந்த முடிவிற்கு வந்து விட்ட பிறகு பேசாமல் தூங்கச் சென்றிருந்தான் குணசீலன்.

வந்து படுக்கையில் விழுந்திருந்தவன் சில நிமிடங்களிலேயே நல்ல தூக்கத்திலும் ஆழ்ந்திருந்தான்.

## 27

இடையில் சில முறை விழிப்பு வந்ததாலோ அல்லது மீண்டும் வெகு நேரம் கழித்துத் தூங்கியதாலோ, குணசீலன் காலையில் கண் விழித்தபோது ஆறு மணிக்கும் மேலேயே ஆகி விட்டிருந்தது.

படுக்கையில் எழுந்து அமர்ந்தவன் அருகில் மனைவி இல்லாததைக் கண்டான்.

இரவு நடந்தது நினைவிற்கு வந்தது.

கையை நீட்டி விட்டது எவ்வளவு பெரிய தவறு.

மனைவியை உடனே வந்து சமாதானப்படுத்தியிருக்க வேண்டுமோ?

பாவம்! தன்னுடைய மூர்க்கத் தனத்தினால் அவள் எந்த அளவிற்குத் துடித்துப் போயிருப்பாள்.

மனம் கிடந்து அடித்துக் கொள்ள, அந்த வினாடியே மனைவியை அணைத்துச் சமாதானப்படுத்த வேண்டும் போல உள்ளம் பரபரக்கத் தொடங்கி விட்டிருந்தது.

சரிதான், எழுந்து கீழே சென்றிருப்பாளாக இருக்கும், பிறகு பார்த்துக் கொள்ளலாமென்று மனதைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

உடனே படுக்கையை விட்டு இறங்கியவன், சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்தான்.

குளியலறையிலிருந்து வெளியே வந்தவனுக்கு அங்கு மேஜையின் மீது வித்தியாசமாகத் தெரிந்த அந்த வெள்ளைக் காகிதத்தின் மீது கவனம் சென்றது.

சென்று எடுத்துப் பார்த்தான்.

மனைவியின் கையெழுத்தில் சில வரிகள் எழுதப்பட் டிருந்தன.

படித்தான்.

''ரதி எழுதிக் கொள்வது'' என்று பட்டும் படாமல் தொடங்கப் பட்டிருந்தது.

கடந்த சில நாட்களாகவே என்னால் ஏனோ நிம்மதி யாக இருக்க முடியவில்லை. என்னால் பாவம் நீங்களும் உங்களுடைய நிம்மதியை இழந்து சிரமப்பட வேண் டாம்.

சந்தேக குணம் என்பது மெல்லக் கொல்லும் கொடிய நோய். அது உங்களுக்கு வந்திருக்க வேண்டியது இல்லை தான்.

ஆனால் அனைத்திற்கும் உச்ச கட்டமாக எப்பொழுது அந்தச் சந்தேக நோய் கையைக் கூட நீட்டி விடும்



அளவிற்கு வந்து விட்டதோ இனிமேல் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

நான் என் அப்பா ஊருக்குக் கிளம்புகிறேன். கொஞ்ச நாட்களேனும் தனியாக இருக்க விரும்புகிறேன்.

நீங்களும் அதற்கு ஒத்துழைப்பீர்களென்று நினைக் கிறேன்.

முக்கியமாக அந்த வகையிலேனும் நீங்கள் எனக்கு நிம்மதியைத் தருவீர்களென்று நம்புகிறேன்.

இப்படிக்கு ரதி.

ஒரு முறை படித்து முடித்தவன் அதை அப்படியே நம்ப மாட்டாதவனாய் மீண்டுமொரு முறையும் படித் தான்.

மனைவியின் கடிதம் அவனுடைய உச்சகட்ட முட் டாள்தனம் என்பதைச் சொல்லாமல் சொன்னது.

எப்பொழுது கிளம்பியிருப்பாள்?

உடனே அவளைத் தடுத்து அவளுடைய முட்டாள் தனத்தைப் புரிய வைத்தாலென்ன?

ஆம், அதைச் செய்துதான் ஆக வேண்டும்.

முடிவு செய்திருந்தவன் மனைவியிடம் பேசுவதற்காக மொபைலைக் கையில் எடுத்திருந்தான்.

ஆனால் பிறகோ அதற்கும் மனம் வந்திருக்கவில்லை.

போகிறவள் போகட்டும்.

அப்படியொன்றும் வலுக்கட்டாயமாக அவளுக்கு எதையும் புரிய வைக்க வேண்டிய அவசியமில்லை, போகட்டும்.

ஆனால்....

பெற்றவர்களுக்கு என்ன பதில் சொல்வது?

முக்கியமாக மனைவியின் சொந்தங்களுக்கு!

ஆனால் அந்த எண்ணம் மனைவிக்கல்லவா இருக்க வேண்டும்.

எதைப் பற்றியும் கவலைப்படாமல் தானே கிளம்பியே விட்டிருக்கிறாள்.

என்ன முயன்றும் குணசீலனால் உடனே இயல்பு நிலைக்குத் திரும்ப முடிந்திருக்கவில்லை.

சில நிமிடங்களில் ஓரளவு முயன்று சமாளித்துக் கொண்டவன் அதற்குப் பிறகே கீழே இறங்கி வந்தான்.

''வாப்பா!'' என்ற தாயின் அழைப்பில் அவரைப் பார்த்தான்.

நடந்தது தாய்க்குத் தெரியுமா?

''உனக்கும் ரதிக்கும் என்னப்பா பிரச்சனை?''

..............

''நைட் நீ அவள அடிச்சுட்டியாமே.''

தாய் கேட்டுக் கொண்டிருக்கும் போதே இடையில் வந்திருந்தான் அவனுடைய தம்பி வினய்.

''ஸாரிண்ணா...'' என்றவன் மேலும் ஏதோ சொல்ல வருவதற்குள்ளேயே, ''நீ கொஞ்சம் பேசாம இரு வினய், உனக்கு அது மட்டும் தான தெரியும். அதக் காரணமா வெச்சுட்டு ரதி ஊருக்கே கிளம்பிப் போய்ட்டா. அது தெரியுமா உனக்கு?'' என்று கேட்டார் சுசீலா.



தாயின் வார்த்தைகளில் வினய் அதிர்ச்சியுடன் அவரைப் பார்க்க, அந்த வினாடியில் தன்னை மிகவும் ஒரு மாதிரியாக உணர்ந்தான் குணசீலன்.

மகனின் நிலை சுசீலாவிற்கும் புரியவே செய்தது.

தயக்கத்துடன் என்றாலும், ''இப்ப ரதியோட அப்பாவுக்கு என்னப்பா பதில் சொல்றது?'' என்று கேட்டே விட்டிருந்தார்.

''எல்லாரும் அவங்க கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்டுடலாம். விடுங்க.''

மகனின் வார்த்தைகளில் விரக்தி தென்படுகிறதோ என்று சுசீலாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''அதுலயும்...''

தாய் மேலும் எதையோ சொல்வதற்காக வாயைத் திறந்திருக்க, ''எம்மேல நீங்க எல்லாரும் வெச்சிருக்கற நம்பிக்கைக்கு ரொம்ப நன்றி. ஆனா இதுக்கு மேல இந்த விஷயத்தப் பத்தி யாரும் பேசறத நான் விரும்பல!'' என்றான்.

''அதுக்கில்லப்பா...''

''போதும்மா, உங்க மகன் நீங்க நினைக்கற அளவுக்கெல்லாம் ஒண்ணும் முட்டாளில்ல. விடுங்க.''

எப்பொழுதும் எதற்கும் பணிந்து நின்று பதில் சொல்லிப் பழக்கப்பட்டிராத மகனின் நிலையிலிருந்து அவனைப் பார்த்த சுசீலாவிற்கு மருமகளின் மேல் லேசாகக் கோபம் கூட வந்து விட்டிருந்தது.

ரதி செய்ததும் தவறே அல்லவா?

கணவன் மனைவிக்குள் பிரச்சனைகள் ஆயிரம் வரலாம். அதற்காகக் கிளம்பியே சென்று விடுவதா?

ஆனாலும் மிகவும் நியாயமானவர் என்பதால், தொடர்ந்து அதே வழியில் எண்ணவும் அவரால் முடிந்திருக்க வில்லை.

அப்படிப் பார்த்தால் மகன் கையை நீட்டி அடித்து விட்டிருந்தது, அதைவிடப் பெரிய தவறு அல்லவா?

அதற்கு முதலில் மருமகளின் சொந்தங்களுக்கு என்ன பதில் சொல்வது?

என்னதான் பிரச்சனை யென்றாலும் அதற்காகத் துளியும் யோசிக்காமல் கையை நீட்டி விடுவதா என்று எண்ணாது இருக்க முடியவில்லை.

ரதியின் தந்தை கேட்டால் முகத்தை எங்கே கொண்டு போய் வைத்துக் கொள்வது?

எது எப்படியோ, இனி இது விஷயமாக மகனைத் தான் எதுவும் கேட்டு விடவே கூடாது.

என்னதான் தனக்குத்தானே எதையெதையோ நினைத்துக் கொண்டாலும், இந்த ரதியும் இப்படிச் செய்திருக்கக் கூடாது தான் என்று அவரால் எண்ணாது இருக்க முடியவில்லை.

அப்படிக் கிளம்பிச் செல்பவள் தன்னிடமும் ஒரு வார்த்தை சொல்லியிருக்க வேண்டாமா?

தான் என்ன அந்த மாதிரியா அவளை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

நல்ல அறிவான பெண்ணென்று நினைத்தோமே.



ஏன் இந்த மாதிரி செய்தாள்?

''அம்மா!''

''சொல்லு வினய்?''

''காபி கிடைக்குமா?''

''இதோ கண்ணா, குடுக்கறேன்.''

''அப்படியே அண்ணாவுக்கும்...''

''குணா எங்க?''

''ஏன் இங்க தான...''

''இல்லப்பா. அவன் ஆபீஸ் கிளம்பிப் போயாச்சு. காலைல நேரத்துல கிளம்பணும், முக்கியமான வேலையிருக்குன்னு நைட்டே சொல்லிட்டிருந்தான்.''

..............

''எதுக்கும் பாரு...'' என்ற தாயிடம், ''சரிமா!'' என்று விட்டுப் போனவன், ''இல்லமா. அண்ணாவோட காரக் காணல. அவர் ஆபீஸ் கிளம்பிட்டார் போலத்தான் இருக்கு!'' என்று சில வினாடிகளில் திரும்பி வந்தான்.

''சரி, இந்தா நீ எடுத்துக்கோ!'' என்று தாய் கொடுத்த காபியை வாங்கிக் கொண்டு, தன்னுடைய அறைக்கு வந்திருந்தான் வினய்.

மனம் கேட்காமல் உடனே மொபைலை எடுத்து ரதிக்கு அழைத்தார் சுசீலா.

உடனே இணைப்புக் கிடைத்தது.

சில வினாடிகள் பேசிவிட்டு மொபைலை வைத்தவருக்குச் சற்றும் மனம் ஆற மறுத்தது.

ரதி சொன்னது இதுதான்.

ஏனோ எனது தந்தையைப் பார்க்க வேண்டுமென்று மிகவும் தோன்றுகிறது. கொஞ்ச நாள் அங்கு இருந்து விட்டு மீண்டும் வருகிறேனென்று முடித்து விட்டிருந் தாள்.

அது மட்டும் தான் காரணமென்றால் சொல்லி விட் டுச் சென்றிருக்கலாமே யென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

சிறு பெண் என்பது சரியாகத்தான் இருக்கிறது.

வேறு விதத்தில் யோசித்துப் பார்த்தவருக்குத் தனக்கே இப்படி ஒரு மாதிரி இருக்கிறதென்றால், மகனுக்கு எப்படியிருக்கும் என்றும், நிலைமை இப்படியிருக்க, அதற்கு மேல நாம் அவனையே கேள்வியும் கேட்டால்,

அதிலும் சும்மாவே கோபப்படும் மகனின் குணத் திற்குச் சொல்லவும் வேண்டுமா என்றிருந்தது.



# 28

மதிய உணவை முடித்துக் கொண்டு மகளை எதிர் பார்த்தபடி அமர்ந்திருந்த ரகுநாத்தால் என்ன முயன்றும் இயல்பாக இருக்க முடியவில்லை.

எவ்வளவு பெரிய முட்டாள்தனத்தைச் செய்திருக் கிறாள் மகளென்று மனம் கிடந்து அடித்துக் கொண்டது.

இடையில் இரண்டு முறை மகளுக்கு அழைத்துப் பேசியும் விட்டிருந்தார்.



ஊருக்கு வந்து கொண்டிருக்கிறேன். அப்புறம் பேசிக் கொள்ளலாமென்று சுருக்கமாகப் பதில் வந்ததோடு சரி.

வரட்டும். பிறகு பேசிக் கொள்ளலாமென்று நிம்மதி யாக இருக்க முடியாமல் அறையில் குறுக்கும் நெடுக்கு மாக நடந்து தீர்த்தார்.

சொந்தத்தில் ஒரு விசேஷமென்று தாயும் தந்தையும் வெளியே சென்றிருக்க, ரகுநாத் மாலை செல்வதாக இருந்தது.

அதற்குள் சம்பந்தியம்மா அழைத்துச் சொன்ன செய்தி அவரை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது.

மகளை அவளுடைய தாயிருந்து வளர்க்காதது தான் குறையோ என்று வெகு நாட்களுக்குப் பிறகு மீண்டும் வேதனையுடன் நினைத்தார்.

பிரச்சனை எதுவானாலும் அதற்கு இப்படிக் கிளம்பி வந்து விடுவது தீர்வாகுமா என்றும்.

இனி எப்படி மகளின் புகுந்த வீட்டுச் சொந்தங்களின் முகத்தில் விழிப்பது, முக்கியமாக மாப்பிள்ளை முகத்தில். ஏதேதோ எண்ணங்களில் மனம் மிகவும் பாரமாகி விட, ஒருவேளை மகளின் திருமணத்தில் அவசரப்பட்டு விட் டோமோ என்று கூட ஒரு வினாடி தோன்றி விட்டிருந்தது.

ஆனால் சில வினாடி யோசனைக்குப் பிறகு அப்படி யும் ஒன்றும் சொல்லி விடுவதற்கில்லையே என்று மனம் குழம்பிப் போனார்.

தொடர்ந்து சிறிது நேரத்தில் உள்ளே வந்த மகளை ''வா'' என்று உணர்ச்சி துடைக்கப்பட்ட குரலில் வரவேற் றார் ரகுநாத்.

கேட்க வேண்டுமென்று நினைத்திருந்ததெல்லாம் மகளின் முகத்தைப் பார்த்த வினாடியில் சுத்தமாக மறந்து போய் விட்டிருந்ததைக் கண்டார்.

அந்த அளவிற்கு அழுகையில் முகமெல்லாம் வீங்கிக் கண்களும் சிவந்து போய் விட்டிருப்பதையும்.

மேலும் மகளின் அவசர ஒப்பனைகள் அதை அதிகப் படுத்தித் தான் காட்டியதே தவிர சற்றும் குறைத்திருக்க வில்லை என்பதையும்.

தந்தையின் ஆராய்ச்சிப் பார்வை தன்னுடைய கோலத் தில் இப்பொழுது அதிர்ச்சிப் பார்வையாக மாறியிருந்தது ரதியின் கவனத்தில் படவே செய்தது.

''என்னமா?''

''என்ன டாடி?''

''என்னாச்சு, என்ன பிரச்சனை?''

''ஒண்ணுமில்ல...''

''கொஞ்சம் நடைமுறைக்கு ஒத்துப் போற மாதிரி பேசினா நல்லா இருக்கும்னு நினைக்கறேன் ரதி.

''சொல்லு. என்ன பிரச்சன?''

''தயவு செஞ்சு இப்ப என்ன எதுவும் கேக்காதீங்க.''

''பின்ன?''

..............

''உன்னத்தான் ரதி...''

''நேத்து காலையிலிருந்து நடந்ததையே நினைச்சு நினைச்சு பைத்தியம் பிடிக்காத குறையா இருக்கேன். எதுவா இருந்தாலும் நாளைக்குப் பேசலாமே ப்ளீஸ்...''



மகளின் கரகரத்த குரலில் விட்டால் அழுது விடுவாள் போலிருக்க, சரிதான் இப்போதைக்கு எதையும் கேட்க வேண்டாமென்ற முடிவுக்கு ரகுநாத்தும் வந்திருந்தார்.

''சரிதான். காலைல பேசிக்கலாம். நீ போய்க் குளிச்சுட்டு வந்து முதல்ல சாப்புடு.''

''இல்ல. சாப்டுட்டு அதுக்கப்புறமா குளிச்சுக்கறேன்!'' என்றவள் உண்டதாகப் பெயர் செய்துவிட்டு, ''ரெண்டு நாளா சுத்தமாத் தூக்கமில்ல. அதனால என்ன யாரும் வந்து டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்!'' என்று விட்டுத் தன்னுடைய அறைக்கு வந்திருந்தாள்.

வந்தவள் இரவு உடையை எடுத்துக் கொண்டு நேராகக் குளிப்பதற்குச் சென்றாள்.

குளித்து முடித்து விட்டுச் சில நிமிடங்களில் வெளியே வந்தவள் நேராகச் சென்று படுக்கையில் விழுந்தாள்.

நடந்து முடிந்தவையெல்லாம் மீண்டும் நினைவிற்கு வர அழுகையில் உதடுகள் பிதுங்கின.

கணவன் அடித்து விட்டதைக் கூட அவள் ஒரு பொருட்டாக எடுத்துக் கொண்டிருக்கவில்லை.

எப்பொழுது தன்னைச் சந்தேகப்படுகிறானோ அதற்கு மேல் தனக்கு இனி வாழ்க்கையில் ஒன்றுமே இல்லை யென்ற எண்ணமே அடிக்கடி தோன்றி அவளை ஒரு வழி செய்து கொண்டிருந்தது.

சந்தேக குணம் யாரையும் நிம்மதியாக வாழ விட்ட தில்லை என்பார்களே.

அப்படியானால் தன்னுடைய வாழ்க்கையும் இனி அவ்வளவுதானா?

அனைத்துமே முடிந்து போய் விட்டதா?

அதுவும் தன்னுடைய குணாவால் எப்படித் தன்னை இந்த மாதிரியெல்லாம் சந்தேகப்பட முடிகிறது.

அதுதான் எப்படியென்று தெரிந்து போய் விட்டதே.

இனியும் அதை நம்ப மாட்டேனென்று அடம் பிடிக்கும் மனதை இனி என்னவென்று சொல்வது.

ஒருவரின் மேல் அளவுக்கு அதிகமாக அன்பு வைத்து விட்டால் இதுதான் நிலையோ?

ஏதேதோ எண்ண ஓட்டங்களினால் மனம் மிகவும் பாரமாகி விட்டிருக்க, துளியும் நிலை கொள்ளாமல் மிகவும் தவித்துப் போனாள் ரதி.

மனம் ஓய்ந்து போய்க் கடைசியில் அவளையறியாம லேயே தூங்கியும் போய் விட்டிருந்தாள்.

வெகு நேரத்திற்குப் பிறகு விழிப்பு வந்து எழுந்தவள், சுற்றும் முற்றும் பார்த்தாள்.

நடப்பு புரிய, மீண்டும் பெரிய பாரமொன்று வந்து நெஞ்சை அழுத்துவதைப் போல உணர்ந்தாள்.

நெஞ்சு நிறைய எத்தனை எத்தனையோ ஆசைக் கனவுகளை வளர்த்தேனே!

ஆனால் கடைசியில் இப்படியாகி விட்டதே என்று மனதிற்குள் ஊமையாய் அழுதாள்.

யாரோ உள்ளே வரும் அரவம் கேட்டுத் திரும்பினாள்.

பாட்டி உள்ளே வந்து கொண்டிருக்க, முயன்று முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டாள்.

''வா.''



...........

''எப்ப வந்த?''

பாட்டியின் இரத்தினச் சுருக்கமான வார்த்தைகள் மேலும் மனதை என்னவோ செய்ய, ''மதியம் பாட்டி!'' என்றாள்.

''என்ன திடீர்னு?''

............

''உன்னத்தான்...''

''நான் கொஞ்சம் தூங்கணும்.''

''பின்ன இவ்வளவு நேரமும் என்ன பண்ணிட்டிருந்த?''

''தூக்கமே சரியா வரல. அதனால இன்னும் தூங்கணும்.''

''வந்து தூங்கு. ஆனா இப்ப எழுந்து வா.''

''எதுக்கு?''

''ம், நேரம் பாரு. ஏழரையாச்சு. வந்து சாப்புடு.''

''வேண்டாம்.''

''ஏன்?''

''பசியில்ல.''

''அது சரிதான். உனக்கு மத்தவங்களப் பத்தி தான் எப்பவுமே கவலையில்லையே. நீ நல்லா இருந்தா மட் டும் போதுங்கற எண்ணத்த முதல்ல மாத்திக்கோ.''

பாட்டி மங்களத்தின் கோபம் ரதியை மேலும் அதிக மாக வேதனைக்குள்ளாக்கி விட்டிருந்தது.

''என்னடி, பேசு.''

.............

''ரதி!''

''கொஞ்சம் பேசாம போறீங்களா?''

''என்னடி, அப்படி நீ உம்மனசுல என்னதான் நினைச் சுட்டிருக்க? பாவம் உங்கப்பா, கண் கொண்டு பாக்க முடியல...''

''ஓ...''

அப்படியானால் உனக்கு என்ன பிரச்சனையென்று கேட்கவே மாட்டாரா?

அது சரி, இவர்கள் ஏன் அப்படிக் கேட்கப் போகிறார்கள்.

அதிலும் தன்னைத் தவறு சொல்லாமல் இருந்தால் போதாதா என்ன!

''என்னடி, எழுந்து வா.''

''டிபன டேபிள்ல வெச்சுடுங்க. நான் அப்புறமா வந்து சாப்புட்டுக்கறேன்.''

............

''என்னடி, சொல்றது காதுல விழலையா?''

''விழாம என்ன?''

''என்ன இப்படி விட்டேத்தியாப் பேசிட்டிருக்க? நீ போற போக்கு ஒண்ணும் எனக்குச் சரியாப் படல.''

................

''கண்டிப்பா நீ உன் குணத்த மாத்திக்கத்தான் வேணும். உன் ஒருத்தி சந்தோஷம் மட்டும் தான் முக்கியம்னு சுய நலமா இருக்காத! எவ்வளவு நல்ல குடும்பத்துல போய் வாழ்க்கைப் பட்டிருக்க! அங்க உன்னால பொருந்த



முடியலேன்னா நிச்சயம் தப்பு உம் மேலதான் இருக் கும்...''

பாட்டி இன்னும் என்னவெல்லாம் சொல்லிக் கொண்டே போனாரோ, ஆனால் அதெல்லாம் ரதியின் காதுகளுக் குள் கூடச் சென்றிருக்கவில்லை.

தன்னைச் சுயநலவாதி என்கிறாரே என்ற எண்ணமே அவளை அதிர்ச்சியில் தள்ளி விட்டிருந்தது.

அந்த மாதிரி இருக்க முடிந்திருந்தால் பிறகு ஏன் இந்த அளவிற்கு மனம் வேதனைப்படப் போகிறது.

சரிதான்,

தான் ஏதோ வேண்டுமென்றே அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறோமென்று தான் அனைவருமே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியானால் தன் பாரம் தீர்க்க இங்கு யாருமே இல்லை.

ஏன், கரிசனமாக ஒரு வார்த்தை பேசக்கூட.

வேதனையுடன் மீண்டும் நடப்பிற்கு வந்தாள்.

பாட்டி சென்று விட்டிருந்தது தெரிந்தது.

உச்சகட்ட விரக்தியில் அழுகை பொங்கிக் கொண்டு வர, அப்படியே படுக்கையில் விழுந்து கதறத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஆற்றுவாரோ தேற்றுவாரோ இல்லாமல் வெகு நேரம் அழுது தீர்த்தாள்.

சென்று சாப்பிடவும் தோன்றியிருக்காததோடு, மீண் டும் யாரும் வந்து அழைக்காதது சற்று நிம்மதியளிக்கக் கூடியதாகவும் இருந்தது.

தந்தையின் வார்த்தைகளில் ஓங்கிக் கன்னத்திலேயே அறை வாங்கியதைப் போலத் துடித்துப் போனாள் ரதி.

அழுகை வெடித்துக் கொண்டு வர, முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''நாங்க கொஞ்சமாவது நிம்மதியா இருக்கணும்னு நினைச்சா, உடனே மாப்பிள்ளைக்குக் கூப்புட்டுப் பேசு. உன்னோட தப்புக்கு அவருகிட்ட மன்னிப்புக் கேளு.''

..........

''இதுக்கு மேல என்ன சொல்றதுன்னு எனக்குத் தெரியல...''

என்னது, மன்னிப்புக் கேட்பதா?

அப்படியானால் தவறு தன்மேல் தான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களா?

என்ன அநியாயம்!

என்ன நடந்தது என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் தன்னை எப்படி இவர்களால் குற்றம் சொல்ல முடிகிறது?

தன் மனம் எந்த அளவிற்கு வேதனைப்படுகிறது என்பது தெரிந்திருந்தால் ஒருவேளை இப்படியெல்லாம் பேச மாட்டார்களோ?

அது சரி.

அந்த அளவிற்கு யோசிப்பவர்களாக இருந்திருந்தால் நடந்தது என்னவென்று தன்னைத்தானே முதலில் கேட்டிருப்பார்கள்.

''இனி நாங்க மாப்பிள்ள சொந்தங்க முகத்துல எப்படி விழிக்கறது. இந்த மாதிரி செஞ்சுட்டையேம்மா...'' என்று



தாத்தாவும் தன்னைக் குற்றம் சொல்வதைப் போலவே கேட்க, என்ன முயன்றும் தொடர்ந்து ரதியால் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அவளையறியாமலேயே கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழியத் தொடங்கி விட்டிருக்க, குனிந்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

''உன் நீலிக் கண்ணீரெல்லாம் எந்த விதத்துலயும் எங்களக் குளுமைப் படுத்தாது. உன்னால முடிஞ்சா மாப்பிள்ள கூடப் பேசு இல்ல நேர்லயே கிளம்பிப் போ.''

தந்தையின் எரிச்சலான வார்த்தைகளில் மேலும் துடித்துப் போனாள் என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

நீலிக் கண்ணீராமே!

தன்னுடைய தந்தையா இப்படியெல்லாம் பேசுகிறார்!

அதுவும் தன்னிடம்.

இப்படியெல்லாம் பேச அவரால் எப்படி முடிந்தது?

தன்மேல் தவறு இருக்கிறதோ இல்லையோ, அது இரண்டாம் பட்சம். ஆனால் என்ன நடந்ததென்று தெரிந்து கொள்வது கூட எனக்கு அனாவசியம் என்பதைப் போலல்லவா பேசுகிறார்.

அனைத்திற்கும் மேலாகத் தன் மனம் படும் பாடு பற்றி இங்கு யாருக்கும் துளியும் அக்கறை இருப்பது போலத் தெரியவில்லையே.

முக்கியமாகத் தந்தைக்கு!

சற்றே பரவாயில்லை என்றிருந்த நிலை மாறி மீண்டும் மனம் மிகவும் பாரமாகி விட்டிருக்க, பேசாமல் தன்னுடைய அறைக்கு எழுந்து வந்து விட்டிருந்தாள்.

அழக்கூடத் தெம்பிருக்கவில்லை.

''வயதான காலத்தில் எங்களை ஒரு எல்லைக்கு மேல் சோதித்து விடாதே! தாங்க வலு இல்லை!'' என்ற பாட்டி, ''ப்ளேட்டில் டிபன் இருக்கிறது. முதலில் சாப்பிட்டு விடு!'' என்று விட்டுச் சென்றிருக்க, உடனே எழுந்து வந்து உண்டு முடித்தாள் ரதி.

உணவு மரத்தூள் போல தொண்டைக்குக் கீழே இறங்க மறுக்க, முயன்று கொஞ்சத்தை உள்ளே தள்ளினாள்.

பாட்டியின் கைப்பக்குவத்தை வாழ்க்கையிலேயே முதன் முறையாகச் சாப்பிட முடியாமல் ஒதுக்கி வைத்திருந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏன் எதற்குமே மனம் வந்திருக்கவில்லை.

எதைப் பார்த்தாலும்... ம்கூம். பார்க்கவே பிடித்திருக்கவில்லை.

எதன் மீதும் ஈடுபாடு வராமல் அந்த அறையே கதியாகக் கிடந்தாள்.

ஒரு வாரம் சென்றிருந்தது.

மறுநாள் அனைவரும் சென்னைக்குக் கிளம்புகிறோம், உன் சவுகர்யம் எப்படி என்று தந்தை ஒரு வாரத்திற்குப் பிறகு மீண்டும் தன் முகம் பார்த்துப் பேச என்ன பதில் சொல்வதென்று தோன்றாமல் விழித்தாள் ரதி.

''என்ன?''

.............

''நீ மட்டும் இங்க தனியா இருக்க முடியாது. வேணும்னா வா. அங்க வந்து உன் ரூமுக்குள்ள போய் இருந்துக்கோ. மத்தவங்களப் பத்தி உனக்கென்ன...''



''ரகு!''

தாய் அழைக்க, ''என்னமா?'' என்று கேட்டார் ரகுநாத்.

''நீ எதுக்குப்பா டென்ஷனாகற? அவளுக்கு என்ன தோணுதோ செய்யட்டும். விட்ரு. நம்ம மானம் மரியாதையக் கெடுத்துக் கப்பலேத்தணும்னு அவ முடிவே பண்ணிட்டா...''

''நீ பேசாம உள்ள போ மங்களம்.''

கணவன் அதட்ட, ''அது சரிதான். சொன்னாக் கேட்டுத் திருந்தறவங்ககிட்ட பேசறதுல பலனிருக்கு. இவகிட்ட எதுக்கு?'' என்று விட்டுப் பாட்டி தன் பாட்டுக்குப் போக, ஏற்கெனவே துவண்டு போயிருந்த ரதி மேலும் அதிகமாகத் துவண்டு போனாள்.

''எது எப்படியோ இனி அவங்க முகத்துல போய் எப்படி விழிக்கறதுன்னு நினைச்சா தான் ரொம்ப வேதனையா இருக்கு!'' என்ற தந்தையின் குரலில் வெளிப்படையாகவே தெரிந்த வருத்தத்தில் திகைத்துப் போனாள் ரதி.

தன்னுடைய தந்தையா இப்படியென்று ஒரேயடியாக ஆச்சரியத்தில் முழுகிப் போனாள்.

பெற்ற மகளை விட மற்றவர்களின் மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கிறாரே!

இது மட்டும் தன்னுடைய புகுந்த வீட்டுச் சொந்தங்களுக்குத் தெரிந்தால், தன்னை யெப்படி மதிப்பார்கள்.

ஏன் இதை விடக் கேவலமொன்று கூட இருக்கிறதா?

மறுநாள் தான் சென்னைக்குக் கிளம்ப முடியாதென்று ஒரேயடியாக அமர்ந்து விட்டால் என்ன செய்து விடுவார்களாம்.

அதிலும் இங்கேயே இப்படி நடந்து கொள்கிறவர்கள் அங்கே சென்னைக்கும் சென்று விட்டால் கையைக் காலைக் கட்டிக்கூட இழுத்துச் சென்று தன்னைப் புகுந்த வீட்டில் தள்ளிவிட மாட்டார்களென்பது என்ன நிச்சயம்.

நிச்சயம் செய்வார்கள்.

ஏன் தன்னை ஒரு பொருட்டாக மதிக்கக் கூட மாட் டார்கள்.

அதற்காகப் போகாமல் இருந்துவிட முடியுமா....

''என்னமா யோசன?''

தாத்தாவின் குரலில் நிமிர்ந்து அவரைப் பார்த்தாள் ரதி.

''ஒண்ணுமில்ல தாத்தா.''

''கோவிலுக்குப் போய்ட்டு வரலாமா?''

''இல்ல தாத்தா. நீங்க போய்ட்டு வாங்க.''

''அட வாடாம்மா. வீட்டுக்குள்ள அதுவும் உன் ரூமுக் குள்ளேயே உக்காந்து வேகணும்னு தலவிதியா என்...''

''நான் வரல தாத்தா ப்ளீஸ்...''

''ம்கூம், நீ வர்ற.''

..............

''என்ன ரதி?''

நீண்ட நாட்களுக்குப் பிறகு பழைய நினைவுகள் வந் திருக்க, மனம் எங்கெங்கோ சென்று மீண்டது.

''சரி. கிளம்பு.''

அந்தக் குரலில் தாத்தா எது சொன்னாலும் செய்து பழக்கப்பட்டு விட்டிருந்த ரதி, அவளையறியாமலேயே கிளம்பி விட்டிருந்தாள்.



மனதிற்குள் பயந்து கொண்டிருந்த கருணாகரனுக்கு, பேத்தி கிளம்பியதைக் கண்ட பிறகு தான் மனம் நிம்மதியடைந்தது.

பாவம் பேத்தி! அனைவரும் சேர்ந்து அவளை ஒருவழி செய்கிறார்களே என்று மனதிற்குள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தவர் என்பதால் சந்தோஷமாக உடன் அழைத்துச் சென்றார்.

தாத்தாவுடன் வெளியே சென்று நிறைய நாட்களா யிற்றே என்று நினைத்துக் கொண்டே ஸ்கூட்டரில் ஏறி அமர்ந்தாள் ரதி.

பேத்தியுடன் கருணாகரன் முதலில் சென்ற இடம் பூங்கா.

''என்னமா, பாக்கற. வா, இங்க வந்து உக்காரு.''

''கோவிலுக்குப் போலாம் தாத்தா.''

''போறது தான்டாம்மா. அதுக்கு முன்னாடி கொஞ்சம் பேசணும்.''

..............

''அட என்ன யோசன, உக்காரு,'' என்ற தாத்தாவின் அதட்டலில் அமர்ந்தே விட்டிருந்தாள் ரதி.

''என்னடாம்மா, பேச மாட்டியா?''

''சொல்லுங்க தாத்தா.''

'நீதான் சொல்லணும். என்ன பாக்கற? சொல்லு, அப்படி என்னதான் பிரச்சன உனக்கு''

..........

''என்னமா?''

''என்னன்னு சொல்றது...''

''இங்க பாருடாம்மா. உம்மேல எந்தத் தப்பும் இருக்காதுங்கறதுல எனக்கு முழு நம்பிக்கையிருக்கு. ஆனா என்ன...''

''சொல்லுங்க.''

''ஆனா திடீர்னு கிளம்பி வந்தியே! அது தப்பு தாம்மா.''

..............

''ஏன் உங்க அப்பா, பாட்டி எல்லாருக்குமே கூட அந்த விஷயத்துல மட்டும் தான் உம்மேல கோபம்...''

''சரி தாத்தா. நம்பிக்கறேன்.''

''அட ஆமாம்மா. எதுவானாலும் நீ அங்க இருந்துட்டே உன் அப்பாகிட்டப் பேசியிருக்கலாம். அப்படி உன் புகுந்த வீட்டுச் சொந்தங்க மேல ஏதாவது தப்பிருந்தாக் கூட என் பேத்திய ஏன் இப்படி நடத்தறீங்கன்னு நானே வரிஞ்சு கட்டிக்கிட்டுக் கேட்டிருப்பேன்.

''ஆனா இப்ப எதுக்குமே வழியில்லாம போயிடுச்சு பாத்தியா. நாம... உம்மேல அவங்க தப்பு சொல்ற மாதிரி ஆயிடுச்சு, பாத்தியா? உம்மேல மட்டுமில்ல, நியாயமாப் பாத்தா சின்னப் பொண்ணுக்குப் புத்திமதி சொல்லி அனுப்பி வைக்காம கூட வெச்சுட்டிருக்காங்க பாருன்னு எங்க மேல கூட அவங்க இப்ப கோபமா இருக்கலாம்.''

''ம்கூம். இல்ல தாத்தா...''

''என்ன இல்ல?''

''அவங்களுக்கெல்லாம் அதுக்கான தகுதி இல்ல.''

''என்னமா இப்படிப் பேசற?''



''இருக்கறத சொல்றேன். அதுல என்னிருக்கு?''

''சொல்லுடாம்மா. அப்படி என்னதான் பிரச்சன உங்களுக்கு? நான் யார் கிட்டயும் சொல்லல. தைரியமா சொல்லு. அதுக்கான தீர்வ மட்டும் நான் சொல்றேன்...''

பாட்டியைப் போல அல்லாமல் சிறு குழந்தை முதலே தாத்தாவின் மேல் ரதிக்கு ஒட்டுதல் அதிகம்.

அதேபோல பிரச்சனை எதுவானாலும் சுமுகமாகத் தீர்த்து வைத்து விடுவார் என்ற நம்பிக்கையும் அவளுக்கு நிறையவே உண்டு.

அந்த நம்பிக்கையில் சற்றே தயக்கத்துடன் என்றாலும் ஒரு வழியாக நடந்ததனைத்தையும் சொல்லி முடித்திருந்தாள் ரதி.

''அட இவ்வளவு தானா!''

ஆச்சரியத்துடன் கேட்ட தாத்தாவை நிமிர்ந்து பார்த்தாள் ரதி.

''நானும் கூட என்னவோ, ஏதோன்னு ரொம்பவும் பயந்துட்டிருந்தேன்டாம்மா. இதுக்குப் போயா இப்படி சோகத்துல மூழ்கிக் கிடக்கற?''

கணவன் கோபத்தில் அடித்து விட்டிருந்ததை மட்டும் தாத்தாவிடம் மறைத்து விட்டிருந்தாள் ரதி.

ஏனோ தாத்தாவிடமே என்றாலும் அதைச் சொல்ல மனம் வந்திருக்கவில்லை.

ஒருவேளை அதைச் சொல்லியிருந்தால் தாத்தா இந்தப் பிரச்சனையைக் கொஞ்சம் பெரிதாக எடுத்துக் கொண்டிருந்திருப்பாரோ என்னவோ.

ஆனால் இப்பொழுதோ ஒன்றுமே இல்லாததிற்காகத் தான் வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதாக நினைத்துக்

கொண்டு தாத்தா சிறு பிள்ளையைப் போலப் பரபரத் ததைப் பார்த்துச் சிரிப்பு கூட வந்து விட்டிருந்தது.

''இப்படிச் செஞ்சா என்ன?''

''என்ன தாத்தா?''

''மாப்பிள்ளையைக் கூப்புட்டுப் பேசிடலாமா?''

''ம்கூம்...''

''ஏன்டாம்மா?''

''வேண்டாம் தாத்தா.''

''சரிதான் வேண்டாம்!'' என்றவர் மேலும் ஏதோ சொல்ல வர, ''என்ன தாத்தா?'' என்றாள்.

''பேசத்தான் வேண்டாம். கூப்புட்டு சண்ட போட்டுட லாமா?''

''தாத்தா...''

''நீ பேச வேண்டாம்மா. நான் பாத்துக்கறேன்.''

''வேண்டாம்னா, வேண்டாம்தான்.''

''சரிதான் விடு.''

............

''ஆனா...''

''என்ன தாத்தா?''

''நீ எங்கிட்ட எதையோ மறைக்கற மாதிரியிருக்குமா.''

...........

''அப்படியா?''

''புரியல.....''



''நீ சொல்றதெல்லாம் சின்னப் பிரச்சனடாம்மா. இதுக் கெல்லாம் கோபப்பட்டுட்டுக் கிளம்பறது தான் ஒரே தீர்வுன்னா அப்புறம் நாட்டுல பாதிப் பேருக்கும் மேல பிரிஞ்சு தான் இருக்கணும்...''

''கோவிலுக்குக் கிளம்பலாம் தாத்தா.''

''ஒரு அஞ்சு நிமிஷம்மா. இந்தக் கிழவனோட அறி வுரையெல்லாம் உனக்குக் கசப்பா தான் இருக்கும்...''

''ப்ளீஸ் தாத்தா...''

''பின்ன என்னடாம்மா, ஒன்னுமே இல்லாததப் பெரிசு பண்ணிட்டிருக்க...''

''நீங்களும்...'' என்ற ரதியால் அதற்கு மேல் தான் நினைத்ததைச் சொல்ல முடிந்திருக்கவில்லை.

கண்கள் கலங்கி விட்டிருக்கக் கீழே குனிந்து கொண்டாள்.

''ஏன் ரதிம்மா, என்னாச்சு திடீர்னு?''

............

''ரதி....''

முயன்று அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு தாத்தாவை நிமிர்ந்து பார்த்தாள் ரதி.

''அவர்... அவர் என்ன சந்தேகப்பட்றார் தாத்தா. நான் அந்த மாதிரி பொண்ணா?''

''அழாதடாம்மா. மாப்பிள்ளைய ஏனோ அந்த மாதிரி ஒரு வினாடி நினைச்சுப் பாக்கக் கூட என்னால முடியல...''

''அப்ப நான் பொய் சொல்றேனா?''

''இல்லடாம்மா. நம்ப முடியலன்னு சொல்றேன்.''

''நம்புங்க தாத்தா. நான் பொய் சொல்ல மாட்டேன்னு கூட உங்களால நம்ப முடியலையா?''

''அதில்லடாம்மா. நீ சொல்றது புருஷன் பொண்டாட்டிக்குள்ள சாதாரணமா வர்ற கருத்து வேறுபாடு தாம்மா. இது தானாவே சரியாயிடும். ஆனா என்ன, கொஞ்சம் விட்டுக் குடுத்துப் போற மனப்பான்மை வேணும். அவ்வளவுதான்.''

.................

''என்ன பாக்கற, இந்தத் தாத்தா போரடிக்கறேனா?''

''உங்களுக்கு எப்படி சொல்றதுன்னு எனக்குப் புரியல தாத்தா. ஆனா நீங்க சொல்ற அளவுக்கு இது ஒரு பிரச்சனையே இல்லன்னு ரொம்ப சாதாரணமா விட்டுட்டுப் போகக் கூடிய விஷயம் இல்லேங்கறது மட்டும் புரியுது.''

''அது சரிதான். அதே சமயம் இப்ப நீ உக்காந்துட்டிருக்கியே, அவ்வளவுதான். இனி வாழ்க்கைல ஒண்ணுமே இல்ல, எல்லாமே முடிஞ்சதுங்கற மாதிரி, அப்படி நீ செய்யறதும் முட்டாள்தனங்கறதப் புரிஞ்சுக்கோ.''

..............

''எது எப்படியோம்மா. ஆனா நிச்சயம் நீ நடந்ததையெல்லாம் மறக்கத்தான் வேணும். மாப்பிள்ளை ரொம்ப நல்லவர்மா. ஆனா என்ன கொஞ்சம் ம்கூம் நிறையவே பிரஸ்டிஜ் பாக்கறவர்னு தோணுது.''

''ஒண்ணுக்கும் கைல ஆகாதவங்களே நிறைய ரோஷம் பாராட்டிட்டு இருக்காங்க. அப்படியிருக்கும் போது மாப்பிள்ள மாதிரி இருக்கறவங்க இன்னும்...''

''போதும் தாத்தா, புரியுது.''



''அட, அப்படி என்ன புரிஞ்சது உனக்கு?''

''அவரு மேல தப்பில்ல.''

''அப்ப நீயே ஒத்துக்கறியா?''

''பின்ன ஒத்துக்காம விட்டுடுவீங்களா?''

''இல்லடாம்மா, இதுல நானெல்லாம் மூணாவது மனுஷன். ஏதோ எம் மனசுக்கு என் அனுபவத்துக்குப் பட்டத சொன்னேன். அவ்வளவுதான். நீ சந்தோஷமா இருக்கணும்டாம்மா. அதுதான் எனக்கு வேணும்.''

''சரிதான் தாத்தா.''

''அப்ப மாப்பிள்ள மேல உனக்கு இப்ப எந்தக் கோபமும் இல்ல தான?''

அது எப்படி இல்லாமல் போகும்? அது இன்னும் நூற்றுக்கு நூறு சதவிகிதம் அப்படியே தான் இருக்கிறது...

''என்ன யோசன?''

''கிளம்பலாம் தாத்தா.''

''நான் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லலன்னு நினைக்கறேன்.''

''சில விஷயங்களுக்குப் பட்டுன்னு பதில் சொல்லிட முடியாது தாத்தா.''

''பெரிய மனுஷி மாதிரி பேசற. எப்படியோ நாளைக்கு சென்னைக்குப் போனதுக்கப்புறம் நீ பழையபடி நடந்துக்கணும்மா. அதத் தவிர எங்களுக்கும் தான் வேற என்ன வேணும் சொல்லு.''

''சரிதான் தாத்தா, என்ன நினைச்சு நீங்க யாரும் பயப்படவோ, கவலப்படவோ வேண்டாம்.''

எப்படியோ இந்த அளவிற்கு இறங்கி வந்தாளே, அதுவே போதுமென்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டார் கருணாகரன்.

சில நிமிடங்களில் தாத்தாவும், பேத்தியும் கோவிலுக்குக் கிளம்பினர்.

அங்கே கோவிலில் தாத்தா தனது பால்ய கால நண்பர் ஒருவரை எதிர்பாராத விதமாகச் சந்தித்த சந்தோஷத்தில் பேச அமர்ந்து விட்டிருக்க, தான் மட்டும் சென்று கடவுள் தரிசனத்தை முடித்துக் கொண்டு வந்து கோவிலின் சுற்றுப் பிராகாரத்தை வழக்கம் போல ரசிக்கத் தொடங்கி விட்டிருந்தாள் ரதி.

சொந்த ஊர், பழைய நினைவுகள், தெரிந்த முகங்கள் எனக் கிட்டத்தட்ட தன்னுடைய இயல்பு நிலைக்கே திரும்பியிருந்தாள்.

தாத்தாவே சொன்னதைப் போல ஒன்றுமே இல்லாத சிறு விஷயத்தைத் தான் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறோமோ என்று கூட ஒரு வினாடி தோன்றி விட்டிருந்தது.

உடனே சேர்ந்தாற் போல வேறு பழைய நினைவுகளும் வர, முயன்று மனதை நடப்பிற்குத் திருப்பினாள்.

வேண்டாம் மனமே,

கிடைத்திருக்கும் கொஞ்சம் நிம்மதியையும் நாமே கெடுத்துக் கொள்ள வேண்டாம்.

நாம் என்னதான் எடுத்துச் சொன்னாலும், அதைக் காது கொடுத்துக் கேட்கவோ, தன்னைப் புரிந்து கொள்ளவோ இங்கு யாரும் இல்லையென்னும் பொழுது மேலும்



மேலும் யோசித்து மனதைப் புண்ணாக்கிக் கொள்வானேன். தேவையில்லாமல் நம்மை நாமே வேதனைப் படுத்திக் கொள்வதையாவது தவிர்த்துக் கொள்வது நலமல்லவா?



# 30

''அட ரதி!''

''எப்படியிருக்கீங்க ஆன்ட்டி?''

''நான் நல்லாக்கேம்மா. நீ ஏன் இப்படி டல்லாயிட்ட?''

''இல்லையே ஆன்ட்டி. நான் நல்லாத்தான் இருக்கேன்.''

''அது சரி. அப்புறம் ஊர்ல இருந்து எப்ப வந்த?''

''ஒரு வாரமாச்சு.''

''ஓ, உங்க வீட்ல அதாவது புகுந்த வீட்ல எல்லாரும் நலமா?''

''நல்லாக்காங்க. ஆன்ட்டி, ரூபன் காவ்யா எல்லாரும் எப்படியிருக்காங்க? அப்புறம் அங்கிள்?''

''எல்லாரும் நலம்மா. நீ வந்திருக்கறது தெரிஞ்சிருந்தா அவங்கெல்லாரும் உன்ன இன்னும் வந்து பாக்காம இருந்திருப்பாங்களா என்ன?''

''எல்லாரையும் ரொம்பக் கேட்டதா சொல்லுங்க ஆன்ட்டி.''

''சொல்றேம்மா. வீட்டுக்கு வரலாமில்ல.''

''வர்றேன் ஆன்ட்டி.''

''நீ இருப்ப தான?''

''இல்ல ஆன்ட்டி. நாளைக்குக் கிளம்பறோம்.''

''அடடா, சரி. முடிஞ்சா காவ்யாவக் காலைல வரச் சொல்றேன். அவதான் உன்னக் கேட்டுட்டே இருந்தா.''

''சரிதான் ஆன்ட்டி. நான் அவளுக்கு போன் பண றேன்னு சொல்லிடுங்க.''

மேலும் சில நிமிடங்களும் இருந்து பேசிவிட்டு, அவர் கிளம்ப, அங்கிருந்த மரத்தடியில் அமர்ந்தாள் ரதி.

சென்ற முறை வந்த பொழுது கணவனுடன் அங்கு வந்திருந்தது, அதே இடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தது என அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக நினைவிற்கு வந்தன.

ஏதோ ஒரு இனம் புரியாத வேதனையில் மனம் கசந்து விட்டிருக்க, அந்த நாள் மீண்டும் வருமா என்று ஏக்கத்துடன் நினைத்துக் கொண்டாள்.

அந்த மாதிரி நினைத்து விட்டவளுக்கு அதற்குப் பிறகே தன்னுடைய எண்ணப் போக்கு மனதில் உறைத்தது.

உடனே அதற்கும் சேர்த்து மனம் வலித்தது.

என்ன வெட்கம் கெட்ட கற்பனை!

தன்னை ஒரு பொருட்டாகக் கூட மதிக்காத சந்தேகப் புத்தியுடைய கணவனென்று தெரிந்த பிறகும் கூட இந்த மாதிரியெல்லாம் தோன்றுகிறதென்றால், தன்னை விட ஒரு முட்டாள் கூட இந்த உலகத்தில் இருக்க முடியுமா?



இந்நேரம் கணவன் என்ன செய்து கொண்டிருப்பான்?

என்ன செய்து கொண்டிருப்பானோ தெரியாது. ஆனால் தொல்லை ஒழிந்ததென்று நிம்மதியாக இருப்பான் என்பதில் மட்டும் துளியும் சந்தேகமிருக்கவில்லை.

தன்னால் ஏன் அந்த மாதிரி இருக்க முடியவில்லையென்று வேதனையாகவும்.

''ஹலோ ரதி.''

குரல் வந்த திசையில் திரும்பினாள்.

ராஜேஷ் நின்றிருந்தான்.

''அப்புறம் எப்ப வந்த?''

''ஒரு வாரமாச்சு.''

''என்ன திடீர்னு... இல்ல, ஏதாவது பிரச்சனையா? சொல்லக் கூடாதுன்னா வேண்டாம்.''

ஏற்கெனவே இவனுடைய புத்தி கொஞ்சம் மட்டரகமானது. இன்னும் அனைத்தையும் சொல்ல வேறு செய்தால்...

''என்ன யோசன?''

''வேலைக்கு வெளியூர் எங்கயோ போறதா சொல்லிட்டிருந்த?''

ரதி கேட்க, ''ஆமாம். அடுத்த வாரம் கிளம்பணும்!'' என்றான் ராஜேஷ்.

பெஸ்ட் ஆஃப் லக் என்ற ரதி வேறென்ன, கிளம்ப வேண்டியது தானே என்பதைப் போலப் பார்க்க, சிரித்தான்.

ஏன் சம்பந்தமே இல்லாமல் சிரிக்கிறான்?

ரதி புரியாமல் பார்க்க, அவனுடைய புன்னகை மேலும் அதிகம் தான் ஆனது.

''என்ன பாக்கற, உன் வீட்டுக்காரர் என்னவோ பெரிய ஹீரோ மாதிரி பேசினார். கடைசில சராசரி மனுஷன் தான்னு காட்டிட்டாரா?''

..........

''ஆனாலும் நான் இந்த அளவுக்கு எதிர்பாக்கல.''

என்ன, இவன் பைத்தியம் மாதிரி ஏதேதோ உளறு கிறான்...

''என்ன புரியலையா? உன் வீட்டுக்காரர் கிட்டே இல் லாததையும் பொல்லாததையும் நான் தான் சொன்னேன்.''

''என்ன உளர்ற?''

''சரிதான். நீயும் நானும் ரொம்ப நாளா லவ் பண்ணிட் டிருக்கறதா நான் சொன்னது உளறல் தான்னாலும் அது உனக்கும் எனக்கும் மட்டும் தான தெரி...''

''என்னது, என்ன சொன்ன?'' என்ற ரதியால் என்ன முயன்றும் அவன் சொல்ல வருவதை முழுமையாகப் புரிந்து கொள்ள முடிந்திருக்கவில்லை.

''அட விட்டா மேடம் அடிச்சிடுவீங்க போலல்ல இருக்கு. ஆமாம். நாம ரெண்டு பேரும் லவர்ஸ்னு உங்க வீட்டுக்காரர் கிட்ட நான் பொய் தான் சொன்னே...''

அவன் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. கோபத் தின் உச்சிக்கே சென்றிருந்தாள் ரதி.

போதும், இதுக்கு மேல நீ ஒரு வார்த்த பேசினாலும் அப்புறம் நான் மனுஷியாவே இருக்க மாட்டேன்...''



அடப் போதும்மா, எத்தன நாள் எவ்வளவு திமிராப் பேசியிருப்ப! உனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்...

எதிரிலிருப்பவன் அவன் பாட்டுக்கு ஏதேதோ சொல்ல ரதியால் சுத்தமாக ஜீரணித்துக் கொள்ள முடியாது போயிற்று.

இப்படிக் கூட நடந்து கொள்ள முடியுமா?

அதிலும் எவ்வளவு கேவலமான வேலையைச் செய் திருக்கிறான்.

இவனைப் போய் நல்லவனென்று நம்பி, வெகுளித் தனமாக எவ்வளவு நாள் பேசியிருப்போம்.

அப்பொழுதெல்லாம் மனதிற்குள் எப்படியெல்லாம் சிரித்திருப்பான்.

''நீயெல்லாம் ஒரு மனுஷனா?''

''அப்படின்னா உன் வீட்டுக்காரர் உங்கிட்ட எதுவும் கேக்கலையா? பரவாயில்ல, மனுஷன் சொன்ன மாதிரி தான் செஞ்சிருக்கார்...''

...

''என்ன பாக்கற? நீ என்ன வேணும்னாலும் சொல் லிட்டுப் போ. என் மனைவி மேல எனக்கு நம்பிக்கை யிருக்கு. நான் துளிகூட சந்தேகப்பட மாட்டேன்னு சொல்லிட்டு வந்தார்.''

..........

''அது மட்டுமா? நான் நடிக்கறேன்னு கூட உண்மைய அப்படியே கண்டுபிடிச்சுட்டார் தெரியுமா? எல்லாம் சரிதான். அப்படி உன் வீட்டுக்காரர் சொன்னது சொன்ன மாதிரியே ஜென்டில்மேனா நடந்துக்கிட்டிருந்திருந் தார்னா நீ எப்படி இங்க....''

''ஏன் இன்னும் கூடக் கேவலமா எதையாவது சொல்லாமப் போனோமேன்னு கவலப்பட்றியா?''

''ஒரேயடியா என்ன அவ்வளவு மோசமானவன்னும் நினைச்சுடாத...''

''மகா மட்டமா, கேவலமா நடந்துட்டு இப்ப என்னவோ பெரிய தியாகி மாதிரி பேசற.''

''என்ன பண்றது, சிலருக்கு இந்த மாதிரி செஞ்சா தான கொஞ்சமாவது...''

''சம்பந்தமே இல்லாம மத்தவங்க வாழ்க்கைல பிரச்சன பண்ண உனக்கு என்ன உரிமையிருக்கு?''

''டென்ஷனாகாதீங்க மேடம்!'' என்று பெரிய தியாகி போல சிரித்தவன், ''நீ பாக்க ரொம்ப அழகா இருக்கேங்கற ஒரே காரணத்துக்காக எந்த அளவுக்குத் திமிரா நடந்துக் கிட்ட! அதுக்கெல்லாம் சேத்து வெச்சேன் வேட்டு!'' என்றான்.

என்னது?

திமிராக நடந்து கொண்டேனாமா?

தேவையற்ற பிரச்சனைகளுக்கு இடம் கொடுத்து விடக் கூடாதே என்று கொஞ்சம் பார்த்து நடந்து கொண்டதற்கு இப்படியொரு பொருள் கற்பித்துக் கொள்ள முடியுமா?

அதிலும் இவனைப் போன்ற வழியல்களிடம் தான் என்ன, இன்னும் அனைத்துப் பெண்களுமேகூட கொஞ்சம் பார்த்துத் தானே நடந்து கொள்வார்கள்.

எவ்வளவு திமிர் இருந்தால் இப்படியொரு கேவல மான வேலையைச் செய்திருப்பான்.



செய்வதையெல்லாம் செய்துவிட்டுப் பெரிய இவனைப் போல பேச வேறு செய்கிறானே!

சரிதான். இந்த மாதிரி ஜென்மங்களிடம் இப்படி நிறைய நேரம் பேசிக் கொண்டிருப்பதுகூடத் தவறு தானே!

ஏதோ தோன்றியவளாய் உடனே ரதி எழுந்து விட்டிருக்க, மேலும் சில நிமிடங்களும் கூட ஏதேதோ பேசி விட்டு அதற்குப் பிறகே அங்கிருந்து நகர்ந்தான் அந்த ராஜேஷ்.

தொடர்ந்து வந்த சிறிது நேரத்தில் தாத்தாவுடன் வீடு வந்து சேர்ந்திருந்த ரதி உடனே தன்னுடைய அறைக்கு வந்து விட்டிருந்தாள்.

அவளுக்கு நிறைய யோசிக்க வேண்டியிருந்தது.

முதன் முறையாகத் தன்னுடைய கணவனைப் பற்றி வேறு கோணத்தில் யோசித்துப் பார்த்தாள் ரதி.

என் மனைவியின் மீது எனக்கு முழு நம்பிக்கையிருக் கிறது என்றானாமே.

அப்படிப்பட்டவன் பிறகு ஏன் அந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டும்.

ஒருவேளை வெளியாட்களிடம் மனைவியை விட்டுக் கொடுக்க மனம் வராமல் அப்படிச் சொல்லியிருப்பானோ?

சரிதான்.

அப்படித்தான் இருக்க வேண்டும்.

மற்றப்படி கணவன் நடந்து கொண்டதற்கும், இவன் இப்பொழுது சொல்தற்கும் துளியும் சம்பந்தமில்லையே.



# 31

முதன் முறையாகக் கணவனை நாம் தான் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறோமோ என்னும் கோணத்தில் நினைத்துப் பார்த்தாள்.

மணமான நாளிலிருந்து நடந்தவற்றையெல்லாம் மீண்டுமொரு முறை நினைத்துப் பார்த்தாள்.

என்ன முயன்றும் கணவனைப் பற்றி மிகவும் மோசமான முடிவுக்கு வர ரதியால் முடிந்திருக்கவில்லை. அதே சமயம் நல்ல விதமாகவும்.

ஒருவேளை அந்த ராஜேஷ் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லப் போய்த் தன் கணவனுக்குக் கோபம் வந்து விட்டதோ?

அது எப்படி?

எவன் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் தான்.

ஏன் அந்த ராஜேஷ் மாதிரி இன்னும் எத்தனை பேர் வேண்டுமானாலும் வந்து கண்டதையும் சொல்லலாம் தான்.

ஆனால் கட்டிய மனைவியின் மேல் கணவனுக்கல்லவா நம்பிக்கை இருக்க வேண்டும்.

ஆனால் அதற்குத் தான் கொடுத்து வைத்திருக்கவில்லையே!



தன் மேல் தன்னுடைய கணவனுக்கு நம்பிக்கை இல்லாமல் போய் விட்டதே!

அந்த வகையில் தான் எவ்வளவு பெரிய துரதிர்ஷ்டசாலி.

முட்டி மோதிக் கொண்டு வந்த பல வகையான எண்ணங்களின் தாக்குதலில் தலை தூக்கத் தொடங்கியிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் கூட மீண்டும் காணாமல் போய்ப் பழையபடி மனம் சோர்ந்து போனாள் ரதி.

மறுநாள் அதிகாலையிலேயே தனது தந்தை மற்றும் பாட்டி தாத்தாவுடன் சென்னைக்குக் கிளம்பி விட்டிருந்தாள் ரதி.

சென்னையை வந்தடைய மதியம் மணி இரண்டாகி விட்டிருக்க, ஹோட்டலிலேயே மதிய உணவை முடித்துக் கொண்டு அதற்குப் பிறகே வீடு வந்து சேர்ந்தார்கள்.

காரை விட்டு இறங்கும் போதே ரதியின் மனம் திக்திக்கென்று அடித்துக் கொள்ளத் துவங்கி விட்டது.

ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மற்றவர்களின் முகத்தை ஆராய்ந்தாள்.

அவர்கள் அறியாமல் தான்.

தாத்தாவைத் தவிர மற்ற இருவரின் முகங்களுமே சற்று முன் இருந்ததை விடக் கூட இறுகி விட்டிருப்பதை மனதில் ஒரு வலியுடன் கண்டாள்.

துளியும் குறையாத தந்தையின் கோபம் அவளை மனதளவில் மிகவும் வருந்தச் செய்திருந்ததென்றால் அது சற்றும் மிகையல்ல.

தன்னுடைய தந்தையா இப்படி என்று ஆச்சரியமாகக் கூட இருந்தது.

அதுவும் தன்னிடம்.

தந்தையுடைய கோபத்தை வைத்துப் பார்த்தால் தவறு முழுவதும் தன் மேல் தானென்று சொல்லாமல் சொல்வதைப் போலத்தானே இருக்கிறது.

தன் மேல் அவ்வளவு அவநம்பிக்கையா?

ம்கூம், அது அப்படியில்லை.

அவருடைய மாப்பிள்ளையின் மேல் இருக்கும் நம்பிக்கை.

இது மட்டும் தன்னுடைய புகுந்த வீட்டுச் சொந்தங்களுக்குத் தெரிந்தால்... முக்கியமாகக் கணவனுக்கு.

தன் மேலிருக்கும் ஏளனம் இன்னும் கூட அதிகம் தானே ஆகும்.

ஆனால் தனது கணவனைப் பற்றி ஒரேயடியாக அப்படி எண்ணி விடவும் ரதியால் முடிந்திருக்கவில்லை.

தன்னுடைய கணவனைப் பொறுத்தவரை அவனொன்றும் அப்படியெல்லாம் கண்களை மூடிக் கொண்டு மற்றவர்கள் சொல்வதையெல்லாம் நம்பி விடுபவனல்லவே!

அனைவருக்கும் முன்பாக வீட்டிற்குள் வந்திருந்தாள் ரதி.

முதல் நாள் கோவிலில் வைத்து அந்த ராஜேஷ் பேசியதனைத்தும் அப்பொழுது போல மீண்டும் நினைவிற்கு வந்தன.

நாம் மனதிற்குள் எண்ணிக் கொண்டிருக்கும் அளவிற்கெல்லாம் ஒன்றும் கணவன் மோசமானவன் இல்லையோ?

முதன் முறையாகச் சற்று வேறு மாதிரி நினைத்துப் பார்த்தாள்.



அந்த மாதிரி யோசிக்கத் தொடங்கியவளுக்கு முன்பு நடந்தவையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக நினைவிற்கு வந்தன.

முக்கியமாக அன்று தியேட்டரிலிருந்து பாதியில் அழைத்து வந்து விட்டதற்காகக் கணவன் உண்மையாக வருந்தியது.

அந்த ராஜேஷிடம் தன்னைப் பற்றிச் சொன்னது.

அனைத்திற்கும் மேலாக அந்த ராஜேஷிடம் சொன்னது போலவே கணவன் தன்னைச் சந்தேகித்து எதையும் கேட்காதது வரை அனைத்தும் நன்றாகத் தானே சென்றது.

அதிலும் அந்த ராஜேஷ் பேசியதற்குக் கணவனின் இடத்தில் வேறு யாரேனும் இருந்திருந்தால் தன்னைக் கேவலமாகக் கூட நடத்தியிருக்கக் கூடும்.

ஆனால் கணவன் அப்படியெல்லாம் எதையும் செய்து விடவில்லையே.

அப்படியானால் நாம் தான் அவசரப்பட்டுக் கணவனைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டோமா?

அது மட்டுமா?

எத்தனை பேரை வேதனைப்பட வைத்திருக்கிறோம்.

தந்தையே சொல்வதைப் போல இனி எப்படித் தான் புகுந்த வீட்டினரின் முகத்தில் விழிப்பது?

உண்மையிலேயே தனக்குப் பொறுமை குறைவு தான் போலிருக்கிறது.

இல்லையென்றால் இப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்க மாட்டோமோ?

மேலே யோசிக்க யோசிக்கத் தாத்தா சொன்னதைப் போல ஒன்றுமே இல்லாததைத் தான் தான் அறியாமல் பெரிதாக்கி விட்டோமோ என்று கூடத் தோன்றி விட்டிருந்தது ரதிக்கு.

ஆனாலும்,

ஒரேயடியாக அப்படித் தானென்றும் சொல்லி விடுவதற்கில்லையே.

வேண்டாம் மனமே.

இதற்கு மேல் இந்த விஷயத்தைப் பற்றி நாம் சுய ஆராய்ச்சி செய்யாமல் இருப்பது தான் நல்லது.

முக்கியமாக மற்றவர்களுக்காகவேனும்.

அதிலும் அன்று கடைசியாகத் தான் கணவனிடம் பேசிய வார்த்தைகள்,

எந்த ஆணுக்கும் கோபம் வருமே, இனி கணவனுக்குச் சொல்லவும் வேண்டுமா?

ஏதேதோ யோசித்தபடி படுத்திருந்தவள் தன்னையறியாமல் அப்படியே தூங்கியும் போய் விட்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் விழித்து எழுந்தவள், கை கால் முகம் சுத்தம் செய்து தலை முடியைத் திருத்திக் கொண்டு கீழே இறங்கி வந்தாள்.

தாத்தா, பாட்டி தந்தை என மூவருமே ஹாலில் அமர்ந்திருப்பது தெரிந்தது.

''ரதி!''

''சொல்லுங்க தாத்தா?''

''என்னமா, கிளம்பலாமா?''



............

''என்ன பாக்கற, மாப்பிள்ளை வீட்டுக்குத் தான்...''

''நான் அப்பறமா... என்று சொல்ல நினைத்த ரதிக்குத் தொண்டையிலிருந்து வார்த்தைகள் வெளியே கூட வந்திருக்கவில்லை.

''என்ன, கிளம்பு.''

கோபத்துடன் தந்தை சொல்ல, ''ஒரு நிமிஷம்...'' என்றுவிட்டு மீண்டும் தன்னுடைய அறைக்கு வந்திருந்தாள்.

வந்தவள் சில பெரிய மூச்சுகளை எடுத்துத் தன்னைச் சமனப்படுத்திக் கொண்ட பின் மேலும் சில நிமிடங்களும் கழித்தே மீண்டும் கீழே இறங்கி வந்தாள்.



## 32

தந்தையுடன் தனது புகுந்த வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்த ரதிக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

வராந்தாவைப் போலவே யாரும் இல்லாமல் ஹாலும் வெறிச்சோடிக் கிடந்ததைக் கண்டாள்.

சில வினாடிகள் சென்றிருக்க, உள்ளிருந்து யாரோ வரும் அரவம் கேட்டுத் திரும்பினாள்.

அத்தை வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

''வாங்கண்ணா, வா ரதி.''

புன்னகையுடன் வரவேற்றார் சுசீலா.

''எப்படியிருக்கீங்கமா?''

ரகுநாத் கேட்க, ''எல்லாரும் நலம். உக்காருங்கண்ணா. வா ரதி, உக்காரு!'' என்று உபசரித்தார்.

தான் நினைத்ததற்கு மாறாக வெகு இயல்பாகப் பேசிய அத்தையைக் குற்ற மனப்பான்மையுடன் பார்த்தாள் ரதி.

''பாட்டி, தாத்தா வரலையா?''

அத்தை கேட்க, ''வந்திருக்காங்க அத்தை!'' என்றாள் ரதி.

''அழைச்சுட்டு வந்திருக்கலாமே.''

''ஊர்ல இருந்து வந்த அசதியில கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கறதா சொன்னாங்கமா!'' என்று ரகுநாத் சொல்ல, ''அதான, நான் அத மறந்துட்டேன் பாருங்க!'' என்றார் சுசீலா.

''மாப்ள, சுந்தர மூர்த்தி...''

''கம்பெனில இருந்து வர்ற நேரந்தாண்ணா!'' என்ற அத்தையிடம்,

''வினய், அத்தை...'' என்று மெல்லிய குரலில் கேட்டாள் ரதி.

''அவன் நேத்து தாம்மா கிளம்பினான். உன்ன ரொம்ப மிஸ் பண்ணினதா சொல்லச் சொன்னான்.''

அத்தையின் வார்த்தைகளில் மனம் பாரமாகி விட்டிருக்க, அதைச் சுசீலாவாலும் புரிந்து கொள்ள முடிந்தது.

''அப்புறம் என்னடாம்மா இப்படி மெலிஞ்சுட்ட?''

அத்தை கேட்க, என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தாள் ரதி.



''அது மட்டுமா, எத்தன பேர ஒரு வழி பண்ணியிருக்கா!'' என்ற ரகுநாத்தின் உணர்ச்சி துடைக்கப்பட்ட வார்த்தைகள் மற்ற இருவரையுமே என்னவோ செய்திருந்தன.

''அப்பா பாசம்! இல்லடாம்மா? அப்புறம் அப்பா கூட இருக்கற ஆச கொஞ்சமாவது குறைஞ்சுடுச்சா?''

............

''என்ன, பேசறதுக்கு என்ன பிரச்சன?'' என்ற தந்தையின் வார்த்தைகளில், ''என்னை மன்னிச்சுடுங்க அத்தை!'' என்றாள்.

சில வினாடிகள் அங்கே அமைதி நிலவியது.

''எப்படி மன்னிக்க முடியும்? மன்னிக்கற அளவுக்கா நீ பண்ணி வெச்சிருக்க?''

''வேண்டாண்ணா. தப்பு ரதி மேல மட்டுமில்ல...''

''அது சரி, உங்க பெருந்தன்மையான குணத்துக்குப் பின்ன நீங்களும் தான் வேறென்ன சொல்லுவீங்க...''

''இல்லண்ணா...'' என்று ஏதோ சொல்வதற்காகச் சுசீலா வாயைத் திறப்பதற்கும், குணசீலனும் சுந்தரமூர்த்தியும் வீட்டிற்குள் வருவதற்கும் சரியாக இருந்தது.

தனது அத்தையைப் போலவே அவர்களும் தனது தந்தையுடன் சகஜமாகப் பேசியதைக் கண்டாள் ரதி.

மாமா சுந்தரமூர்த்தி தன்னிடமும்...

ஆனால் கணவன் இருக்கும் பக்கமாகத் திரும்பக் கூட ரதியால் முடிந்திருக்கவில்லை.

கை, கால்களெல்லாம் சில்லிட்டுப் போயிருக்க, கீழே குனிந்தவாறு பேசாமல் அமர்ந்திருந்தாள்.

கணவனும், தன்னைத் தவிர, மற்ற அனைவரிடமுமே சகஜமாகப் பேசுவது தெரிந்தது.

சரிதான்.

தன்னிடம் எப்படிப் பேசுவான், தான் என்ன அந்த அளவிற்கா நடந்து கொண்டிருக்கிறோம்.

அந்த அளவிற்குத் தந்தையும் மூவரிடமுமே முக்கிய மாகத் தனது மாப்பிள்ளையிடம் பயபக்தியுடன் பேசு வதைக் கண்டாள் ரதி.

அப்படித்தான் ரதிக்குத் தோன்றியது.

இருந்தாலும் இந்த அப்பா இந்த அளவிற்கு வளைந்து கொடுக்க வேண்டாமோ என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''அப்புறம், எப்படிமா இருக்க?'' என்று புன்னகை யுடன் மாமனார் மீண்டும் கேட்க, ''நான் நல்லாக்கேன் மாமா!'' என்று தயக்கத்துடன் என்றாலும் உடனே பதில் சொன்னாள் ரதி.

அருகில் அமர்ந்திருக்கும் கணவன் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறானோ?

எங்கே வெளியே கேட்டு விடுமோ என்று எண்ணு மளவிற்கு நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்ள, என்னவோ தான் மட்டுமே தவறு செய்தாற்போல தனக்கு ஏன் இப்படி இருக்கிறதென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''ம், பேச மாட்டியா? எங்களையெல்லாம் பாக்காம மெலிஞ்சுட்டியா இல்ல உன் வீட்டுக்காரரப் பாக்காத தால மட்டும் தானா?''

மீண்டும் மாமா கேட்க, என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தாள் ரதி.

''ஏன் ரதிம்மா, ஆமாம். அப்படித்தான்னே சொல்லி டேன்!'' என்று சுசீலா சொல்ல, ''எந்த முகத்தை வெச்சுக் கிட்டு இதப்பத்தி பேசறதுன்னு கூட எனக்குத் தெரியல. அவங்கம்மா இருந்து வளக்காதது தான் குறைன்னு நினைக்கறேன். தயவு செஞ்சு நீங்க மன்னிக்க...''



ரகுநாத் சொல்லிக்கூட முடித்திருக்கவில்லை. ''பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்கண்ணா!'' என்று அவரை இடைமறித்திருந்தார் சுசீலா.

''அது சரிதான்,'' என்று தானும் சொன்ன சுந்தரமூர்த்தி, ''போனதையெல்லாம் பேசாம விட்டுடலாம். ஏன் மறந் துடலாம். இல்லையாம்மா?'' என்று ரதியைப் பார்த்துக் கேட்டார்.

ஆமாம் என்பதைப் போல ரதி தலையை ஆட்ட, ''அப்ப எங்க மேலயெல்லாம் உனக்கு இப்பக் கோபம் எதுவுமில்ல, இல்லையா?'' என்று கேட்டார்.

புன்னகையுடன் ரதி பார்க்க, ''உங்க கேள்வியே சரி யில்ல. ஆரம்பத்திலிருந்தே கூட ரதிக்கு நம்ம மேல கோப மில்ல. அவளோட வீட்டுக்காரர் மேல மட்டும் தான?'' என்றார் சுசீலா.

''என்னடாம்மா, அப்படியா?''

மீண்டும் தனது மாமா கேட்க, எதுவும் பேசாமல் பார்த் தாள் ரதி.

''பேசாம இருக்கறதப் பாத்தா அப்ப உனக்கு இன்னும் கோபம் தான்னு...''

''இல்ல மாமா. தப்பெல்லாம் எம்மேல தான். நான் தான் அவசரப்பட்டுத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டுப் பேசிட் டேன். அவரு மேல எந்தத் தப்புமில்ல...'' என்று மெல் லிய குரலில் என்றாலும் சொல்லியே விட்டிருந்தாள் ரதி.

''நடந்ததெல்லாம் எனக்கும் தெரியும்மா. நீ ஒண்ணும் உங்க வீட்டுக்காரருக்காகப் பரிஞ்சு பேசாத...''

''இல்ல அத்தை!'' என்றவளுக்கு அந்த ராஜேஷிடம் கணவன் சொன்னது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது.

''பரவாயில்ல. விடுடாம்மா...''

''அவரோட நல்ல மனசப் புரிஞ்சுக்காம நாந்தான் தப்பா நடந்துக்கிட்டேன்...'' என்ற ரதியால் அதற்கு மேல் பேச முடிந்திருக்கவில்லை.

குரல் கம்மி விட்டிருக்கக் கண்களும் கலங்கி விட்டிருந்தன.

சில வினாடிகளில் தன்னை ஓரளவு சமாளித்துக் கொண்டவள், நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள்.

''என்ன மன்னிச்சுடுங்க...''

மீண்டும் கன்கள் கலங்கி விட்டிருக்க, உதட்டைக் கடித்தபடி வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

கணவனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகம், இருந்த சிறிது நம்பிக்கையையும் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போகச் செய்து விட்டிருந்தது.

கணவன் தங்களுடைய அறைக்கு எழுந்து செல்வது தெரிந்தது.

பெரியவர்கள் மூவரும் தங்களுக்குள் மும்முரமாகப் பேசத் தொடங்கி விட்டிருக்க, சில வினாடிகளில் ரதி தானும் கணவனைத் தொடர்ந்து தங்களுடைய அறைக்கு வந்திருந்தாள்.

பூத்துவாலையால் முகத்தைத் துடைத்தபடி கணவன் குளியலறையிலிருந்து வெளியே வருவது தெரிந்தது.

தயக்கத்துடன் அருகில் சென்றாள்.



என்ன பேசுவதென்று தெரியாமல் சில வினாடிகள் விழித்தவள், பிறகு, ''என்ன மன்னிக்க மாட்டிங்களா?'' என்று கேட்டாள்.

கணவன் பேசாமல் பார்க்க முயன்று வரவழைத்த தைரியத்தில் தன்னால் இயன்ற மட்டும் நிமிர்ந்து பார்த்தாள்.

............

''கஷ்டம். இல்லையா குணா?''

மனைவியின் குரலில் தெரிந்த ஏக்கம் தன்னை என்னவோ செய்திருக்க, அவளுடைய முகத்தையே பார்த்தான்.

''நான்....''

''உன்ன மன்னிக்கற அளவுக்கு எனக்குத் தகுதியிருக்கா?''

திடீரென்று கணவன் அப்படிக் கேட்பானென்று ரதி துளியும் எதிர்பார்க்கவில்லை.

தன்னுடைய காதுகளில் சரியாகத் தான் விழுந்ததா என்பதைப் போலப் பார்த்தாள்.

''இல்ல, அப்படித்தான?''

கணவனின் கேள்வியில் தான் மீண்டும் நடப்பிற்கு வந்திருந்தாள் ரதி.

''ப்ளீஸ் குணா, என்னக் கொல்லாதீங்க...''

அன்றும் இதே போல ஆனால் கோபத்துடன் மனைவி கேட்டது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது குணசீலனுக்கு.

கையை நீட்டியது எவ்வளவு பெரிய பிசகு.

ஆயிரத்து ஓராவது முறையாக வேதனையுடன் நினைத்துப் பார்த்தான் குணசீலன்.

பயம் கலந்த ஏக்கத்துடன் மனைவி தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அன்று கோபத்துடன் மனைவி பேசியது தவறு தான்.

ஆனால் அதை விடப் பெரிய தவறையல்லவா நாம் செய்து விட்டிருக்றோம்.

அப்படியிருக்கத் தானல்லவா மனைவியிடம் இப் பொழுது மன்னிப்புக் கேட்க வேண்டும்.

''என்ன குணா, முடியாதா?''

''உங்க அப்பா ரொம்பவும் கம்பல் பண்ணி உன்ன இங்க அழைச்சட்டு வந்தாரா ரதி?''

கணவனின் கேள்வியில் ரதியின் மனம் மேலும் அதிகமாக வேதனையடைந்திருந்தது என்றால் அது சற்றும் மிகையல்ல.

அது குணசீலனுக்கும் புரியவே செய்தது.

''ஸாரிடாம்மா. மத்தப்படி தப்பு முழுக்க எம்மேல இருக்கும்போது நீ எப்படி மன்னிப்புக் கேட்க முடியும் சொல்லு?''

''அது அப்படியில்ல குணா!'' என்ற ரதி, ''எனக்கும் கொஞ் சம் சுயமா யோசிக்கற புத்தியக் கடவுள் குடுத்திருக்கார்!'' என்றாள்.

என்ன முயன்றும் லேசான கோபம் ரதியின் வார்த்தை களில் எட்டிப் பார்த்து விட்டிருந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

''சில விஷயங்கள்ல நாமதான் ஃபீல் பண்ணணும் குணா. அந்த மாதிரி என் தப்பயும் நானே உணர்ந்தேன். ப்ளீஸ்டா என்னப் புரிஞ்சுக்கோ...!'' என்ற ரதி அடுத்த வினாடி இருந்தது கணவனின் அணைப்பில்.

அதற்கு மேல் அங்கே வார்த்தைகளுக்கு இடமிருக்க வில்லை.